பக்கங்கள் : 20+VIII=28

Registered as a N

# உதயன்

விலை
ரூபா
10.00

www.uthayan

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 சித்திரை 04 ஞாயிற்றுக்கிழமை (17.04.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :

## ராணுவ மேஜரும் 2 கோப்ரல்களும் நுணாவில் முகாமில் சுட்டுக்கொலை!

### லீவு கிடைக்காத விரக்தியில் சிப்பாய் வெறியாட்டம்

தென்மராட்சி,ஏப்.17

தென்மராட்சியில் நுணாவிலில் அமைந்துள்ள 7ஆவது சிங்க றெஜிமென்ட் படைமுகாமில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படை அதிகாரி ஒருவரும் கோப்ரல்கள் இருவரும் உயிரிழந்தனர்.

விடுமுறையில் வீடுசெல்ல அனுமதிக்காததால் ஆத்திரமுற்ற சிப்பாய் ஒருவர் புரிந்த வெறியாட்டத்தின்போதே இவர்கள் மூவரும் அந்தச் சிப்பாயால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

நேற்று முற்பகல் 10.40 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

கண்டி வீதியில் அமைந்துள்ள அந்தப் படைமுகாமின் இரண்டாவது நிலை அதிகாரியான மேஜர் சுஜீவரட்ணவீர என்பவரும், கோப்ரல்களான பி.ஜே.ஜி.அபயசிங்க, ஏ.எம்.எல். பிரேம

(16ஆம் பக்கம் பார்க்க)

## திருக்கோயிலுக்கு விசாரணைக் குழு

திருக்கோயில் பிரதேச செயலர் ஏ.கே.த... ராசா சுட்டுக்கொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணைகளை நடத்த உயர் மட்ட புலனாய்வுத்துறை அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று நேற்று அங்கு சென்றுள்ளது.

அந்தப் பகுதியில் உள்ள பலரது வாக்கு மூலங்களை இக்குழு பதிவுசெய்தது.

இந்தக் கொலைச் சம்பவத்தை வன்மையாகக் கண்டித்து விடுதலைப் புலிகள் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். அரச தகவல் திணைக்களமும் இச்சம்பவத்தைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ளது. (ஜ-3)

# கொழும்பில் தமிழ்ச்செல்வனை சொல்ஹெய்ம் சந்திக்க ஏற்பாடு



டில்லி வந்த பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர் சிங் வரவேற்றபோது...
(செய்தி 3ஆம் பக்கத்தில்)

## அரசியல் குழுவின் வருகை தாமதம் அதனாலேயே இந்த மாற்று ஏற்பாடு

கொழும்பு,ஏப்ரல் 17

**விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும், நோர்வேயின் விசேட ஆலோசகர் எரிக் சொல்ஹெய்முக்கும் இடையில் இந்த வாரம் வன்னியில் நடைபெறவிருந்த சந்திப்பு தமிழ்ச்செல்வன் குழுவினர் தாயகம் திரும்புவதில் ஏற்பட்டிருக்கும் தாமதம் காரணமாகக் கைவிடப்பட்டிருக்கிறது.**

**மாற்று ஏற்பாடாக எதிர்வரும் 20ஆம் திகதி விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினர் கொழும்புக்கு வருகை தரும்போது அங்கு விமான நிலையத்தில் வைத்து எரிக் சொல்ஹெய்மை தமிழ்ச்செல்வன் சந்திப்பதற்கு வசதி செய்யப்படவுள்ளது என்று அரச சமாதானச் செயலகம் தெரிவித்திருக்கின்றது.**

ஐரோப்பிய நாடுகளில் நீண்ட சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளின் உயர்மட்ட அரசியல் குழுவினர் அந்த விஜயத்தை முடித்துக்கொண்டு இன்று கொழும்பு வழியாக வன்னிக்குத் திரும்புவார் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும், அவர்கள் தாயகம் திரும்புவது மேலும் சில தினங்கள் தாமதமாகும் என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து. இன்று கொழும்புக்கு வரவிருக்கும் நோர்வே ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் இந்த வாரம் வன்னி சென்று அரசியல்

(16ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை-இந்திய ஒப்பந்தம் அவசியம் என்கிறார் ஜெயலலிதா

### பிரதமரிடம் அவர் நேரில் வலியுறுத்து

புதுடில்லி,ஏப்.17

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் இன்னமும் தொடர்வதால் இலங்கையுடன் இந்தியா பாதுகாப்பு ஒப்பந்தம் செய்தே ஆகவேண்டும்.

- இவ்வாறு தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா பிரதமர் மன்மோகன் சிங்கிடம் வலியுறுத்தியுள்ளார்.

முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக புதுடில்லி சென்றுள்ள செல்வி ஜெயலலிதா நேற்றுமுன்தினம் பிரதமரைச் சந்தித்துக் கலந்துரையாடினார். அச்சமயமே அவர் இவ்வாறு பிரதமரிடம் வலியுறுத்தினார் என்று இணையத்தளச் செய்தி ஒன்று தெரிவித்தது.

விடுதலைப் புலிகளின் கடந்த காலச் செயற்பாடுகள், தற்போதைய செயற்பாடுகள் தொடர்பான விரிவான அறிக்கை ஒன்றை அவர் பிரதமரிடம் கையளித்தார் என்றும் கூறப்படுகிறது.

அஸாம் தீவிரவாதிகளுடன் இணைந்து விடுதலைப் புலிகள் செயற்படுகின்றனர். பேச்சு மூலம் தீர்வு காண்பதில் அவர்களுக்கு உண்மையில் விருப்பமில்லை. விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களது கூற்றை நம்பி இலங்கையுட

(16ஆம் பக்கம் பார்க்க)


## உள்ளே சூரியகாந்தியில்

- 'கருணா அணி' பெயரில் ஆழ ஊடுருவும் படையணி?
- வீதிகள் விசாலிப்புத் திட்டம்: குழப்பத்தில் நகர மக்கள்!
- சாத்தியமாகுமா இடைக்கால அதிகார சபை?
- இயற்கை அனர்த்தங்களை முன்கூட்டியே அறியும் உயிரினங்கள்...
- இரண்டு தடவைகளுக்கு மேல் ஜனாதிபதிப் பதவியை நாடாத ஜோர்ஜ் வாஷிங்ரன்...
- இவற்றுடன் யாரொடு நோவோம்..., சிறுவர் பொழில், நினைக்க, சிரிக்க, சிந்திக்க..


## கிளாலிக் கடற்பரப்பின் மேலாக 2 தடவை பறந்த மர்ம விமானம்

### விசாரணைக்கு விமானப்படை உத்தரவு

கொழும்பு,ஏப்.17

கிளாலியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின் கடற்கரையோரமாக மர்ம விமானம் ஒன்று பறந்து சென்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக விமானப் படைத் தளபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மர்ம விமானம் ஒன்று பறந்ததை தாங்கள் கண்டதாக கிளாலியில் நிலைகொண்டுள்ள படையினர் தெரிவித்திருக்கின்றனர். இதனையடுத்தே இந்த விடயத்தை இராணுவ அதிகாரிகள் விமானப் படைத் தளபதியின் கவனத்துக்கு

(16ஆம் பக்கம் பார்க்க)

## சொருவில் தாக்குதலில் பலியான மூவர் அடையாளம் காணப்பட்டனர்

கொழும்பு.ஏப்.17

பொலனறுவை மாவட்டம் சொருவில் கிராமத்தில் கருணா குழுவினரும் ஈ.என்.டி.எல்.எவ். உறுப்பினர்களும் தங்கியிருந்த முகாமில் நேற்றுமுன்தினம் உயிரிழந்தவர்களில் மூவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சொருவிலைச் சேர்ந்த தேவதாஸ் தேவேந்திரன் அல்லது குலவன் என்பவரை அவரது மனைவியும் -

சொருவிலைச் சேர்ந்த ஜேம்ஸ் கந்தசாமி விஜயகாந்த் என்பவரை அவரது தாயாரும் -

(16ஆம் பக்கம் பார்க்க)

## மூவர் பயணம் செய்த மோ.சைக்கிளை கடுகதி மினிபஸ் மோதிப் பந்தாடியது!

### இருபாலைச் சந்தியில் கோரவிபத்து! ஒருவர் பலி! பஸ் தீக்கிரை!

யாழ்ப்பாணம்,ஏப்.17

முகமாலையில் இருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு வந்த கடுகதி தனியார் மின்பஸ் ஒன்றும் மூவர் ஒன்றாகப் பயணம் செய்த மோட்டார் சைக்கிளும் மோதியதில் மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவர் உயிரிழந்தார்; மூவர் படுகாயமடைந்திருக்கின்றனர்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் இருபாலைச் சந்தியில் இடம்பெற்றது.

படங்கள் இரண்டாம் பக்கத்தில்

பருத்தித்துறை வீதி வழியாக வந்த மினி பஸ் இருபாலைச் சந்தியைக் கடக்க முயன்ற வேளை, இருபாலை - கோண்டாவில் வீதி வழியாக வந்த மோட்டார் சைக்கிளும் அந்தச் சந்தியைக் கடக்க முற்படவே இரண்டும் மோதுண்டன என்று கூறப்படுகிறது.

(16ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்





வீபத்துக்களில் சம்பந்தப்படும் வாகனங்கள் தீக்கிரையாக்கப்படுவது வழக்கமாகிவருகின்றது. நேற்று இருபாலைச் சந்தியில் மோட்டார் சைக்கிளை மோதிய கடுகதி மினிபஸ் அந்த இடத்தில் வைத்தே தீக்கிரையாக்கப்பட்டது. மினிபஸ் கொளுந்துவிட்டு எரிவதையும் தீயணைப்புப் படையினர் தீயை அணைக்க முயற்சிப்பதையும் முதல் இரு படங்களில் காணலாம். விபத்து நடந்த இடத்தில் யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா விசாரணை நடத்துவதையும் அடுத்துள்ள படத்தில் காணலாம்.
(படங்கள் : பிரபா, இராஜேஸ்வரன்)



# செழிப்பு மிக்க ஒரு பிரதேசமாக நயினாதீவு அபிவிருத்தி செய்யப்படும்

## யாழ். அரச அதிபர் கணேஷ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.17

நயினாதீவுப் பிரதேசத்தை வெகுவிரைவில் ஒரு செழிப்புமிக்க, வளமான கிராமமாக மாற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ்.

அண்மையில் நயினாதீவு சமூக, பொருளாதார, கல்வி, கலாசார அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஆலங்குளம் வீதி புனரமைப்பு ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரச அதிபர் அங்கு உரையாற்றுகையில் இந்த ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் நயினாதீவின் அபிவிருத்திக்கு முக்கிய இடம் வழங்கப்படும். வரலாற்றுச் சிறப்புக்களையும் ஆன்மீக வளர்ச்சியையும் இலக்கியப் பின்னணியையும் கொண்ட நயினாதீவு செழிப்புமிக்க கிராமமாக மாற்றப்படும் - என்றார்.

இந்நிகழ்வில் உள்ளூராட்சித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் க.இராசையா உரையாற்றுகையில், நயினாதீவின் முக்கிய வீதிகள் இந்த ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் திருத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள் ளன என்று தெரிவித்தார்.

(ஐ-202)

# அன்னை பூபதி நினைவாக செவ்வாயன்று சகல கோட்டங்களிலும் உண்ணாநோன்பு

அரியாலை,ஏப்.17

தியாகதீபம் அன்னை பூபதியின் 17ஆம் ஆண்டு நினைவு தினங்களின் இறுதிநாளான எதிர்வரும் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கோட்டரீதியாக அடையாள உண்ணாநோன்பினை அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ்.மாவட்ட செயலாளர் சூ.சிறில் அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் கோட்டமட்டத்தில் உண்ணாநோன்பு இடம்பெறும் இடங்கள் வருமாறு:-

★ வலிகாமம், யாழ்.நல்லூர் கோட்டம் - கேணல் கிட்டு நினைவுப் பூங்கா.

★ தீவகம் - வேலணை கிழக்கு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் முன்றில்.

★ தென்மராட்சி - சங்கத்தானை மாவடிப் பிள்ளையார் கோயில் முன்றில்.

★ வடமராட்சி - மாலுசந்தி முத்துமாரி அம்மன் கோயில் முன்றில்.

மேற்படி இடங்களில் நடைபெறும் உண்ணாநோன்பு நிகழ்வுகளில் தியாகதீபம் பூபதியின் பெரிய அளவிலான திருவுருவப் படம் வைக்கப்பட்டு உரிய வணக்கம் செய்து அஞ்சலி செலுத்தப்படும்.

நிகழ்வுகள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி மாலையில் கலை நிகழ்வுகளுடன் முடிவுறும்.

பொதுச்சுடர் ஏற்றல், தேசியக் கொடி ஏற்றல், அகவணக்கம், ஈகச்சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்தல், பொதுமக்கள் மலர் அஞ்சலி செலுத்துதல், அடையாள உண்ணாநோன்பை ஆரம்பித்து வைத்தல், தலைமையுரை, சிறப்புரை என்ற ஒழுங்கில் நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

இதேவேளை -

கோட்ட ரீதியாக இடம்பெறும் உண்ணாநோன்பில் கலந்துகொள்ளும் மக்களுக்கான போக்குவரத்து வசதிகளும் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை தெரிவித்துள்ளது.

(ஐ-17)

## மாதாந்த உதவிப் பணம் பெறுவோரின் விவரம் மீளாய்வு

வலி.தென்மேற்கு,ஏப்.17

மானிப்பாய் தெற்கு, கட்டுடை ஜே-140 கிராம அலுவலர் பிரிவில் மாதாந்த பொதுசன உதவித் தொகை பெறுபவர்களுக்கான மீளாய்வு நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக்கிழமை கட்டுடை கிராம அலுவலர் பணிமனையில் வலி.தென் மேற்குப் பிரதேச செலயகப் பிரிவு சமூக சேவை உத்தியோகத்தரால் மீளாய்வு மேற்கொள்ளப்படவுள்ளது.

அன்றைய தினம் மாதாந்த உதவித் தொகை அட்டை, குடும்ப அட்டை என்பவற்றுடன் சமுகமளிக்குமாறு சம்பந்தப்பட்டோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை -

ஏற்கனவே ஆனைக்கோட்டை, சுதுமலை, நவாலி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் இடம்பெற்ற மீளாய்வில் மீளாய்வு செய்யத் தவறியவர்கள் வலி.தென்மேற்குப் பிரதேச செயலகத்தில் நேரில் வந்து மீளாய்வு செய்து கொள்ளுமாறு சமூக சேவை உத்தியோகத்தர் கேட்டுள்ளார்.

(ஐ-135-202)

# வடக்குக்கான ரெலிக்கொம் பணிமனை நேற்று வைபவரீதியாகத் திறப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.17

ரெலிக்கொம் நிறுவனத்தின் வடபிராந்திய அலுவலகம் நேற்று யாழ்ப்பாணத்திலுள்ள ரெலிக்கொம் கட்டடத்தில் திறந்துவைக்கப்பட்டது.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நாடாவை வெட்டி வைபவ ரீதியாக அலுவலகத்தைத் திறந்துவைத்தார்.

ரெலிக்கொம் நிறுவனத்தின் வடக்கு - கிழக்கு மாகாண முகாமையாளர் எஸ்.கனகசூரியர் தலைமையில் நடைபெற்ற இந்தத் திறப்பு விழாவைபவத்தில் ரெலிக்கொம் முகாமையாளர் க.சரவணபவன், வடமாகாண அலுவலகப் பொறுப்பதிகாரி எஸ்.யோகேந்திரன் மற்றும் ரெலிக்கொம் நிறுவன உயரதிகாரிகள், இராணுவ உயரதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, திருகோணமலை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கி இந்த அலுவலகத்தின் சேவை அமையவுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-8)

## மாதகல் பகுதியில் நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம்,ஏப்.17

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட மாதகல் உபஅலுவலகப் பிரிவில் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

நாளை திங்கட்கிழமை காலை 9 மணி முதல் 10 மணிவரை இளவாலை கிராமசேவகர் அலுவலகத்திலும் முற்பகல் 10.30 மணிமுதல் 12 மணிவரை பெரியவிளான் புனித அந்தோனியார் சனசமூக நிலையத்திலும் பிற்பகல் ஒரு மணிக்கு இளவாலை புனித அன்னம்மாள் சனசமூக நிலையத்திலும் தடுப்பூசி ஏற்றப்படும்.

நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிமுதல் 10.30 மணிவரை இளவாலை போயிற்றி லூர்து அன்னை சனசமூக நிலையத்திலும் முற்பகல் 10.30 மணிமுதல் 12 மணிவரை இளவாலை சென்யூட் புனித யூதாததேயு சனசமூக நிலையத்திலும் பிற்பகல் ஒரு மணிமுதல் 2.30 மணிவரை மாரீசன்கூடல் புனித பயித்தார் சனசமூக நிலையத்திலும் தடுப்பூசிகள் ஏற்றப்படும்.

எதிர்வரும் 20ஆம் திகதி காலை 9 மணி முதல் 10.30 மணி வரை மாதகல் பிள்ளையார் கோயிலடி இளைஞர் மன்ற சனசமூக நிலையத்திலும் முற்பகல் 10.30 மணிமுதல் 12 மணி வரை மாதகல் புக்கைப்புலோ காந்திஜீ சனசமூக நிலையத்திலும் பிற்பகல் ஒரு மணிமுதல் 2.30 மணிவரை சகாயபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்திலும் தடுப்பூசி ஏற்றப்படும். (ஐ-202)







ரெலிக்கொம் நிறுவனத்தின் வடபிராந்திய அலுவலகம் நேற்றுக்காலை யாழ்.பண்ணைப் பகுதியில் அமைந்துள்ள ரெலிக்கொம் கட்டடத்தில் திறந்துவைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் நாடா வெட்டி அலுவலகத்தினைத் திறந்துவைப்பதையும் உரையாற்றுவதையும் அலுவலகத்தின் பொறுப்பதிகாரி எஸ்.யோகேந்திரன் மற்றும் படை அதிகாரிகள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள் : பிரபா)

# பாகிஸ்தான் அதிபர் முஷாரப்புக்கு இந்தியாவில் மகத்தான வரவேற்பு

புதுடில்லி,ஏப்.17

பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் மூன்று நாள் சுற்றுப் பயணம் மேற்கொண்டு நேற்று இந்தியா வந்து சேர்ந்தார்.

அதிபர் முஷாரப், அவரது மனைவி சேபா, வெளியுறவுத்துறை அமைச்சர் குர்திஷ் மகமூத் கசூரி, தகவல் தொடர்பு அமைச்சர் ஷேக் ரஷீட் அகமது மற்றும் சில மந்திரிகள், உயர் மட்ட அதிகாரிகள் அடங்கிய 50 பேர் கொண்ட குழுவினரை ஏற்றிய விமானம் நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் ஜெய்ப்பூர் விமான நிலையத்தில் தரையிறங்கியது. அங்கு அவர்களுக்கு மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது. முஷாரப்பும் அவரது குடும்பத்தினரும் விமான நிலையத்திலிருந்து ஹெலிமூலம் ஹோக்ரா என்ற இடத்தைச் சென்றடைந்தனர். அங்கிருந்து அவர்கள் கார்களில் அஜ்மீர் தர்காவுக்குச் சென்றனர். அங்குள்ள மகானின் சமாதியில் அவர்கள் 30 நிமிடம் பிரார்த்தனையில் ஈடுபட்டனர். பின்னர் மீண்டும் ஹெலி மூலம் ஜெயப்பூர் சென்ற அவர்கள் அங்கிருந்து விசேட விமானம் மூலம் மாலை 6.20 மணியளவில் டில்லி விமானப் படைத்தளத்தில் தரையிறங்கினார்கள். அங்கிருந்து அனைவரும் தாஜ் மான்சிங் ஹோட்டலுக்குச் சென்று தங்கினார்கள்.

இதன் பின்னர் இரவு 7.30 மணியளவில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர் சிங் அதிபர் முஷாரப்பைச் சந்தித்துப் பேசினார். இதனையடுத்து பிரதமர் மன்மோகன்சிங் முஷாரப்புக்கும் அவருடன் வந்த குழுவினருக்கும் அசோகா ஹோட்டலில் இரவு விருந்தளித்தார்.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கான்பூரில் நடைபெறும் இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான இறுதி ஒரு நாள் கிரிக்கெட் போட்டியை பிரதமர் மன்மோகன்சிங்குடன் சேர்ந்து பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பும் அவருடன் வந்த குழுவினரும் பார்வையிடுவார்கள்.

அதன் பின்னர் ஒரு மணிக்கு அதிபர் முஷாரப் இந்திய ஜனாதிபதி அப்துல்கலாமை அவரது மாளிகையில் சந்தித்துப் பேசுவார். பின்பு மாலை 3.30 மணிக்கு முன்னாள் இந்தியப் பிரதமர் வாஜ்பேயும், எதிர்க்கட்சித்தலைவர் எஸ்.கே.அத்வானியும், 4.15 மணிக்கு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி மற்றும் காங்கிரஸ் கட்சித்தலைவி சோனியா காந்தி ஆகியோர் தாஜ் மான்சிங் ஹோட்டலில் முஷாரப்பைச் சந்தித்துப் பேசுவார்கள்.

இதன் பின்னர் நாளை திங்கட்கிழமை முஷாரப்பும் அவரது குழுவினரும் பிலிப்பைன்ஸ் நாட்டுக்குப் புறப்பட்டுச் செல்கின்றனர். (8)

## பிரான்ஸ் நாட்டு ஹோட்டலில் தீ; 18 பேர் பலியாகினர்

பிரான்ஸ் தலைநகர் பரிசில் உள்ள ஓப்ரா ஹோட்டலில் கடந்த 14 ஆம் திகதி நள்ளிரவு திடீரெனத் தீப்பிடித்தது. ஆறு அடுக்குகள் கொண்ட மாடி முழுவதும் தீ பரவியதால் குழந்தைகள், பெண்கள் உட்பட 18 பேர் பலியாகினர். 50 இற்கு அதிகமானவர்கள் படுகாயமடைந்தனர். தீ விபத்து ஏற்படும் போது இந்த ஹோட்டலில் 76 பேர் இருந்ததாகக் கூறப்படுகின்றது. தீ விபத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. தீ விபத்துக்கான காரணம் தெரியவில்லை. நேற்று முன்தினம் அதிகாலை வரை தீ எரிந்து கொண்டிருந்தது. விபத்து நடந்த இடத்தை உள்துறை அமைச்சர் டோமினிக் பார்வையிட்டார். (8)

## அமெரிக்க – ரஷ்ய வீரர்களுடன் சோயுங் விண்கலம் புறப்பட்டது

பைகானூர்,ஏப்.17

ரஷ்யா அருகே உள்ள கஜகஸ் தான் நாட்டில் உள்ள பைகானூர் ஏவுதளத்தில் இருந்து சோயுங் விண்கலம் நேற்றுமுன்தினம் விண்ணில் செலுத்தப்பட்டது. இதை சோயுங் ராக்கெட் சுமந்து கொண்டு விண்ணில் சீறிப் பாய்ந்தது.

விண்வெளியில் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச விண்வெளி நிலையத்தில் கடந்த 6மாத காலமாகத் தங்கி ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொண்ட விண்வெளி வீரர்களை பூமிக்குத் திரும்ப அழைத்து வரவும் அவர்களுக்கு மாற்றாக புதிதாக ஒரு குழுவை விண்வெளிக்கு அழைத்துச்செல்லவும் சோயுங் விண்கலம் விண்ணில் செலுத்தப்பட்டது.

காலை 6.46 மணிக்கு புகையைக் கக்கியபடி அது விண்ணில் பாய்ந்தது.

இதில் ரஷ்ய விண்வெளி வீரர் செர்ஜி கிரிகலேவ், அமெரிக்க விண்வெளி வீரர் ஜான் பிலிப்ஸ், ஐரோப்பிய வீரர் ராபர்ட்டோ விட்டோரி ஆகியோர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

பூமியில் இருந்து கிளம்பிய 10 நிமிடத்தில் ராக்கெட்டில் இருந்து விண்கலம் தனியாகப் பிரிந்தது. வருகிற ஞாயிற்றுக்கிழமை காலை இது சர்வதேச விண்வெளி நிலையத்துடன் இணையும்.

விட்டோரி 10 நாள்கள் மட்டும் தங்கி பரிசோதனைகளைச் செய்வார். எதிர்வரும் 25 ஆம் திகதி சோயுங் விண்கலம் பூமிக்குத் திரும்பும் போது இவரும் திரும்புவார். (8)

# இந்தியாவுடனான நல்லுறவை பலப்படுத்த அமெரிக்கா விருப்பம்

## அதிபர் புஷ் தெரிவிக்கிறார்

இந்தியாவுடன் உறவை பலப்படுத்த அமெரிக்கா விரும்புகிறது என்று அமெரிக்க ஜனாதிபதி புஷ் கூறியுள்ளார்.

இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் நட்வர்சிங் அமெரிக்கா சென்றுள்ளார். வாஷிங்டன் நகரில் உள்ள வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி புஷ், நட்வர்சிங் சந்திப்பு நடந்தது.

இருவரும் 30 நிமிடம் பேசிக்கொண்டனர். கூட்டம் முடிந்ததும் நிருபர்களிடம் புஷ் கூறியதாவது:-

இந்தியாவுடன் உறவைப் பலப்படுத்த அமெரிக்கா விரும்புகிறது. இதற்கான உயர் மட்ட பேச்சுநடைபெற்று வருகிறது.

இராணுவம் அல்லாத வகையில் அணுசக்தி வளர்ச்சி விஞ்ஞானத்துறை, எரிசக்தி மேம்பாடு ஆகியவற்றில் இரு நாடுகளும் இணைந்து செயற்படும்.

இந்தியா - அமெரிக்கா நல்லுறவு இன்னும் 4 ஆண்டுகளுக்கு தொடர்ந்து நீடிக்கும்.

உலகில் முக்கிய சக்தியாக இந்தியா விளங்குகிறது. உலக சமாதானம், பொருளாதாரம் ஆகியவற்றில் இரு நாடுகளும் இணைந்து செயற்படும்.

எதிர்வரும் ஜூலை மாதத்தில், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் அமெரிக்க பயணத்தை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். நானும் இந்த ஆண்டு இந்தியா செல்வேன். என்றார்.

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கொண்டலீசா ரைசையும் நட்வர்சிங் சந்தித்துப் பேசினார். பின்னர் நிருபர்களிடம் ரைஸ் கூறியதாவது:-

இந்தியா ஒரு வளர்ந்து வரும் நாடு. இந்தியாவுக்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினர் பதவி கிடைக்க அமெரிக்கா ஒரு குறிப்பிட்ட எல்லைவரைதான் ஆதரவு அளிக்கமுடியும்.

இது பற்றி மற்ற உறுப்பினர் நாடுகளிடமும் ஆலோசனை நடத்தி வருகிறோம். என்றார். (8)

---

## யாழ்.பாடசாலைகள் கிரிக்கெட்

# விக்னேஸ்வரா - அமெரிக்கமிசன் அணிகள் கரவெட்டியில் இன்று மோதுகின்றன

வலி.வடக்கு,ஏப்.17

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் இறுதியாட்டத்தில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியும் உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரியும் மோதுகின்றன.

நேற்று நடந்த அரை இறுதி ஆட்டங்களில் வெற்றி பெற்று இவ்விரு அணிகளும் இறுதியாட்டத்தில் சந்திக்கின்றன.

யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்தில் நடந்த அரையிறுதி ஆட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியும் நயினாதீவு மகா வித்தியாலயமும் மோதியதில் உடுப்பிட்டி அ.மி.கல்லூரி வெற்றிபெற்றது.

கனகரத்தினம் ம.வியில் நடந்த மற்றொரு ஆட்டத்தில் யாழ்.இந்துக்கல்லூரியும் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியும் மோதின. ஆட்டம் சமநிலையில் முடிவடைந்ததால் ஓவர்களின் அடிப்படையில் விக்னேஸ்வராக் கல்லூரி வெற்றி ன அறிவிக்கப்பட்டது.

அரையிறுத ஆட்டங்களில் வெற்றிபெற்ற இரு அணிகளும் இறுதியாட்டத்தில் இன்று மோதுகின்றன.

இந்த ஆட்டம் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (3-70)

## வடமராட்சியில் விளையாட்டுப்போட்டி

யாழ்ப்பாணம்,ஏப்.17

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டுத்துறை அமைச்சின் அனுசரணையுடன் வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக் கிடையிலான விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஸ் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் இ.றொகான் இராசசிங்கமும், கௌரவவிருந்தினராக வடமராட்சி அரசியல்துறை பொறுப்பாளர் ந.இன்பனும் கலந்துகொள்வார். (3-78-204-203)

## யாழ்.இந்துவே சம்பியனானது

யாழ்ப்பாணம்,ஏப்.17

யாழ்.இந்துக் கல்லூரி லியோக் கழகம் யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையில் மின்னொளியில் நடத்திய கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் யாழ்.இந்துக்கல்லூரி அணி வெற்றி பெற்றுச்சம்பியனானது.

யாழ்.இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில் யாழ்.இந்துக் கல்லூரி 'பி' அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி 'ஏ' அணி மோதியது.

யாழ்.இந்துக் கல்லூரி அணி 64:55 என்ற புள்ளி அடிப்படையில் சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கிக்கொண்டது. கடந்த 15 ஆம் திகதி உதயனில் இந்தப்போட்டி தொடர்பாக வெளியாகிய செய்தியில் சென்றல் வெற்றி பெற்றது என வெளியான தகவல் தவறானது ஆகும். (3-190)

# பரபரப்பான கிரிக்கெட் மோதல்: டில்லியில் இன்று நடக்கின்றது

புதுடில்லி,ஏப்.17

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான ஆறாவதும் இறுதியுமான ஒருநாள் கிரிக்கெட் ஆட்டம் இன்று டில்லியில் உள்ள பெரோஷா கோட்லா ஸ்ரேடியத்தில் பரபரப்பான சூழலில் இடம்பெறுகின்றது.

இன்று காலை 9 மணிக்கு ஆரம்பிக்கும் இந்த ஆட்டத்தில் இரு அணிகளும் பலப் பரீட்சையில் இறங்கவிருக்கின்றன.

நடந்து முடிந்த ஐந்து ஆட்டங்களில் இந்தியா இரு ஆட்டங்களிலும் பாகிஸ்தான் 3 ஆட்டங்களிலும் வெற்றிபெற்றுள்ளன.

இன்றைய ஆட்டத்தில் இந்தியா வெற்றி பெற்றுத் தொடரை சமப்படுத்துமா அல்லது தொடரின் வெற்றியை பாகிஸ்தானுக்கு வழங்கப்போகின்றதா? என்பதை அறிய ரசிகர்கள் ஆவலாக உள்ளனர்.

இன்று நடைபெறும் ஆட்டத்தைப் பார்வையிடுவதற்காக பாகிஸ்தானில் இருந்து பெரும் எண்ணிக்கையான கிரிக்கெட் ரசிகர்கள் இந்தியா வந்துள்ளனர்.

பாகிஸ்தான் அதிபர் முஷாரப் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் இணைந்து குண்டு துளைக்காத மேடையில் இருந்தவாறு ஆட்டத்தை ரசிக்கப் போகின்றார்.

பாகிஸ்தான் அதிபர் ஆட்டத்தைப் பார்வையிடவுள்ளதால் பாகிஸ்தான் வீரர்கள் மிகவும் உற்சாகத்துடன் ஆடித் தொடரைக் கைப்பற்றுவர் என ரசிகர்கள் கருத்துக் கூறுகின்றனர்.

இரு அணிகளும் மோதும் 101 ஆவது ஆட்டம் இன்றைய ஆட்டமாகும். இதுவரை நடந்த ஆட்டங்களில் இந்தியா 35 ஆட்டங்களிலும் பாகிஸ்தான் 61 ஆட்டங்களிலும் வெற்றிபெற்றுள்ளன. 4 ஆட்டங்கள் வெற்றி தோல்வி இன்றி சமநிலையில் முடிவடைந்தன. (ஐ-3)






# குறைந்த பந்தில் சதமடித்த பாக்.வீரருக்கு சிறப்புப் பரிசு

## அதிபர் முஷாரப் வழங்குகிறார்

இஸ்லாமாபாத்,ஏப்.17

கான்பூரில் நடந்த ஆட்டத்தில் குறைந்த பந்துகளில் சதமடித்த பாகிஸ்தான் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் அப்ரிடிக்கு 5 லட்சம் ரூபா சிறப்புப் பரிசு வழங்கப்படும் என்று பாகிஸ்தான் அதிபர் முஷாரப் அறிவித்துள்ளார்.

அணியின் மேலாளர் சலீமுடன் தொலைபேசியல் உரையாடிய அதிபர் இந்த அறிவிப்பை விடுத்தார். அணி வீரர்களுக்குத் தனது வாழ்த்துக்களையும் அதிபர் தெரிவித்தார்.

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஒருநாள் தொடரை சமன் செய்தமைக்காக அணியின் தலைவர் இன்சமாமுக்கு 10 லட்சம் ரூபா அன்பளிப்பு வழங்கப்படும் என்றும் அதிபர் அறிவித்து[illegible]

(ஐ-3)

# யாழ். மண்ணில் முதன் முதலாக சக்திT.V சக்திFM நடத்தும் மாட்டுவண்டிச் சவாரியும் ஐங்கரன் இசைக்குழுவினரின் இன்னிசை நிகழ்வும்

Shakthi சக்தி FM

Shakthi சக்தி TV

நீண்ட கால இடைவெளியின் பின்னர் யாழ்.மண்ணில் முதன்முதலாக சித்திரைப் புத்தாண்டையொட்டி சக்தி FM,சக்தி TV நடத்தும் மாட்டுவண்டிச் சவாரியும் நடமாடும் இசைமேடையில் இன்னிசை நிகழ்வும் நடைபெறுகின்றன.

**காலம் – இன்று (17.04.2005) ஞாயிற்றுக்கிழமை**

**இடம் – நீர்வேலி சவாரித்திடல்**

**நேரம் – பிற்பகல் 2.00 மணி**

உத்தியோக நாளிதழ்: உதயன்

மேலதிக விவரங்களுக்கு: இல.03, நவீன சந்தை மேல்புறம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (கே.கே.எஸ். மக்கள் வங்கி அருகில்)

அனுசரணையாளர்கள்

**யாழ்.மண்ணில் அச்சுவேலியில் நிக்ஷன் வீடியோ அன்போட்டோ**
மற்றும் நிக்ஷன் பல்பொருள் வாணிபம்
சிறந்த முறையில் அதி தொழில்நுட்பக் கருவிகளைக் கொண்டு கவர்ச்சிகரமான முறையில் வீடியோப்படம் பிடிக்க மற்றும் திருமண மணப்பந்தல்கள், கதிரைகளைப்பெற்றுக் கொள்ளவும்
**நிக்ஷன் வீடியோ அன் போட்டோ மற்றும் நிக்ஷன் பல்பொருள் வாணிபம்.**
அச்சுவேலி பஸ்நிலையம் முன்பாக, அச்சுவேலி.

யாழ். மண்ணில் திருநெல்வேலியில் சகலவிதமான CD, VCD, M.P3, கொமடிCD, DVDகள் Video, Oudio என சகலCD வகைகளையும் பெற்றுக்கொள்ள
**"கஜன் வீடியோ சென்ரர்"**
பலாலி வீதி,
தபாற்கட்டை சந்தி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்

இந்நிகழ்வுக்கு பிரதான அனுசரணை வழங்குகின்றார்கள் யாழ். நகரில் அழகிய திருமணப் பட்டுப்புடைவைகளின் சாம்ராஜ்ஜியமாகத்திகழும்
**கிறீன் பலஸ் எம்போறியம்,**
பலாலி வீதி, திருநெல்வேலிச்சந்தி,
யாழ்ப்பாணம்.

**மிலேனியம் உல்லாசப் பயணிகள் விடுதி மற்றும் உணவகம்**



யாழ். மண்ணில் முற்றிலும் குளிரூட்டப்பட்ட சகல வசதிகளும் கூடிய சொகுசு அரண் மாளிகையே
**மிலேனியம் உல்லாசப்பயணிகள் விடுதி.**
இராமநாதன் வீதி,கலட்டி, யாழ்ப்பாணம்.

(C-42354) (53-11-14)



## ஆறாவது ஆண்டு நினைவு

தோற்றம் 16 – 07 – 1917



மறைவு 23 – 04 – 1999

**வைத்திய கலாநிதி சிவஞானம் கனகரத்தினம்**
(D.A.M. L.M.S. GOLD MEDALLIST)
திதி: சித்திரை பூர்வ பக்க நவமி
ஆண்டுகள் ஆறு ஓடினாலும்
அகலாது தங்கள் நினைவு!

*இரத்தின வைத்தியசாலை, உரும்பிராய்.* (44348)(42-11-14) மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



## மரண அறிவித்தல்

### திருமதி செல்லத்துரை சின்னம்மா

(இளைப்பாறிய ஆசிரியை)

இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை சின்னம்மா (செல்லம்மா, ஆசிரியை) நேற்று (16-04-2005) சனிக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் அமரர் செல்லத்துரை அவர்களின் அன்பு மனைவியும் கருணாகரன், முருகதாசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் தங்கமலர், நிரஞ்சலா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் உஷந்தினி, கார்த்திகா, செமுசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-04-2005) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாமித்திடல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

*"செல்வ வாசா"* தகவல்:
*இடைக்காடு, அச்சுவேலி.* (44347)(24-11-14-42) கருணாகரன் (மகன்).


## ஓட்டோ சங்கத்துக்கு சுன்னாகத்தில் கிளை

யாழ்ப்பாணம்,ஏப்.17

வலிகாமம் வடக்கைச் சேர்ந்த ஓட்டோ உரிமையாளர், சாரதிகள், பொதுமக்கள் நலன் கருதி யாழ்ப்பாணம் தலைமை ஓட்டோச் சங்கம் சுன்னாகத்தில் கிளை ஒன்றினைத் திறந்து வைத்துள்ளது.

கடந்த 11 ஆம் திகதி கிளைத் தலைவர் இ.மதியழகன் மங்கள விளக்கேற்ற சுன்னாகம் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.பா.பவநிதன் ஆரம்பித்துவைத்தார்.

கிளைச் சங்கப் பிரிவுக்குட்பட்ட சகல ஓட்டோ உரிமையாளர்கள் தமது ஓட்டோக்களைப் பதிவு செய்து கட்டுப்பாட்டுடன் சேவையாற்றிப் பயன்பெறுமாறு சகல உரிமையாளர்களையும் தலைமைச் சங்கம் கோரியுள்ளது.

(த-15)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றிநவிலலும்



**அமரர் மாணிக்கம் சிவபாததுரை**

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து மறைந்த
உங்கள் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்

நாங்கள் நல்வாழ்வு வாழ வழிகாட்டிய எங்கள் அன்புத் தெய்வம் வெகு தூரத்தில் எம்மைவிட்டு பிரிந்த வேளையில் நாம் செய்வதறியாது திகைத்து நின்றபோது ஓடோடி வந்து உதவிகள் செய்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்களுக்கு எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (17.04.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனை, வீட்டுக்கிருத்தியம் ஆகிய நிகழ்வுகளில் கலந்துகொள்வதோடு, தொடர்ந்து இடம்பெறுகின்ற மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*அரசடி வீதி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.* - குடும்பத்தினர்.
(44339)(42-11-14)



# Fashion Beauty Corner
## இலவசக் கருத்தரங்கு

இன்று( 17.04.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பிரபல அழகுக்கலை நிபுணர் திருமதி ஜெயவாணி கஜேந்திரன் அவர்களினால் ஒழுங்கு செய்யப்பட்டு ஆஸ்திரேலியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல அழகுக்கலை நிபுணர் திருமதி தர்சினி நிரஞ்சன் அவர்கள் வெளிநாட்டு நவீன முறையிலான முக ஒப்பனைகள், பேஷியல், தலையலங்காரங்கள் பற்றிய புதிய விளக்கங்களை அறிமுகப்படுத்தவுள்ளார். இதில் ஆர்வமுள்ள அனைவரும் கலந்து கொள்ளவும்.

**வகுப்புக்கள் பற்றிய விவரங்கள் கருத்தரங்கில் அறிவிக்கப்படும்.**



(C-42343)(53)

**நடைபெறும் இடம்:**

**இல- 14, வீரமாகாளி அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி 021 -222 6864**


## அங்குரார்ப்பணக் கூட்டம்

தென்மராட்சி,ஏப்.17

தென்மராட்சி கலாசாரப் பேரவை மற்றும் திரைப்படச் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் 25ஆம் திகதி பிற்பகல் 2.45 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் பிரதேசத்தைச் சேர்ந்த இலக்கியம், நாடகம், இசை, நடனம், புதைபொருள், அரும்பொருள், மற்றும் ஓலைச்சுவடி பேணுதல் ஆகிய துறைகளில் ஆர்வமுடைய அனைவரும் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-117-202)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# சொருவில் சம்பவம் நிரூபிக்கும் உண்மை

ஸ்ரீலங்கா அரசின் கட்டுப்பாட்டுப் பகுதியில் 'கருணா குழு' என்ற பெயரில் சில உதிரித் தமிழ்க் குழுக்களின் ஆள்கள் ஒன்றிணைக்கப்பட்டு இயங்கி வருவது பற்றிய தகவல் மீண்டும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

நேற்றுமுன்தினம் அதிகாலை பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள சொருவில் பிரதேசத்தில் கருணா குழுவினர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் அப்பிரதேசத்தில் 'கருணா குழு' என்ற பெயரில் சில உதிரிகள் ஒன்றிணைந்து முகாம் அமைத்துச் செயற்பட்டு வந்தமை உறுதிப்படுத்தியிருக்கின்றது.

பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள சொருவில் பிரதேசத்திற்கும் மன்னம்பிட்டிக்கும் இடைப்பட்ட காட்டுப்பிரதேசத்திலேயே இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தத் தாக்குதலில் 'கருணா குழுவினர்' சிக்கியது பற்றிய தகவல் வெளியானதும், அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் 'கருணா குழு' என்ற பெயரில் கும்பல் இயங்கி வருவது அம்பலமாகப் போகின்றது என எண்ணி அவசரப்பட்ட ஸ்ரீலங்கா அரசுத் தரப்பு, ஆரம்பத்தில் அதைச் சமாளிப்பதற்காக ஒரு புதுக் கதை விட முனைந்தது.

'இந்தத் தாக்குதல் இடம்பெற்ற பிரதேசம் அரசுக் கட்டுப்பாட்டிலும் இல்லை, புலிகளின் கட்டுப்பாட்டிலும் இல்லை. அவற்றுக்கு இடைப்பட்ட பிரதேசத்திலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்ற முகாம் இருந்தது' - என்று கூறி, அதன் மூலம் இந்தக் கும்பல் அரசுக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இயங்கவில்லை என்று காட்ட அரசுத் தரப்பு பகீரத முயற்சி எடுத்தது. ஆனால், அந்த முயற்சியில் அரசுத் தரப்பினரும் இராணுவப்பேச்சாளரும் தோற்றுவிட்டனர்.

தாக்குதல் நடந்த இடத்துக்கு இலங்கை அரசின் பொலீஸார் சென்றுள்ளனர்; நீதிவான் சென்று நேரடியாக விசாரணை நடத்தியுள்ளார்; இராணுவத்தினர் சென்றுள்ளனர்; அங்கு உயிரிழந்தவர்களின் சடலங்களைப் பொலீஸார் மீட்டுள்ளனர். இவற்றையெல்லாம் தொலைக்காட்சி ஊடகங்கள் படம் பிடித்துள்ளன.

தாக்குதல் நடந்த இடம் அரசுக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இல்லாவிட்டால் இவ்வளவும் நடந்தேறியிருக்குமா?

ஏற்கனவே, அரசுக் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள வெலிகந்தை தீவுச்சேனையில் கருணா குழுவின் முகாம் இருப்பதாக ஆங்கில வார இதழ் ஒன்று பரபரப்பான செய்தியை வெளியிட்டதை அடுத்து ஊடகங்களின் பார்வை அந்தப் பக்கம் திரும்பியது. போதாக்குறைக்கு அந்தக் கிராமத்திற்கு நேரடியாகச் சென்று பார்வையிடப்போவதாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு அரசுத் தரப்புக்கு அறிவித்திருந்தது.

அதனையடுத்து, வெலிகந்தை தீவுச்சேனையிலிருந்து அந்த முகாம் திடீரென மாயமாய் மறைந்தது. கண்காணிப்புக் குழுவினர் அங்கு போனபோது முகாம் காணாமற்போயிருந்தது.

ஆகவே, அங்கிருந்து நகர்ந்து, சொருவில் பிரதேசத்தில் திடீரென முளைத்தது என்றும், சொருவில் காட்டில் நேற்றுமுன்தினம் அது வாங்கிக் கட்டிக் கொண்டது என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

கிழக்கில் பதவியாவை அண்டிய பிரதேசத்திலேயே இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முக்கிய முகாம்கள் இயங்குகின்றன. அங்குள்ள அதிகாரிகளுடன் கருணா குழுவினர் எடுத்துக்கொண்ட படங்கள், அவர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்ட சமயம் எடுக்கப்பட்ட படங்கள் என்று முக்கிய ஆவணங்கள் இந்தத் தாக்குதல் நடத்தியோரின் கைகளில் சிக்கியுள்ளன என்றும், அவை ஊடகங்கள் மூலம் விரைவில் அம்பலப்படுத்தப்படும் என்றும்கூடத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான உதிரித் தமிழ்க் குழுக்களைச் சேர்ந்தோரை ஒன்று திரட்டி, 'கருணா குழு' என்ற பெயரில் -

யுத்தநிறுத்த உடன்பாட்டுக்கு மாறான வகையில்-

குழப்பத்தை ஏற்படுத்தும் விதத்தில் -

புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை அரசும், அதன் படைகளும் - குறிப்பாக இராணுவப் புலனாய்வுப் பிரிவும் - மேற்கொண்டு வருகின்றன என்பதை நிரூபிக்கும் சம்பவமாகவே சொருவில் தாக்குதல் அமைந்திருக்கின்றது.

இனிமேலும் இந்த விவகாரங்களில் உண்மை நிலையைச் சர்வதேச சமூகத்துக்கு அரசுத் தரப்பால் மூடி மறைக்க முடியாது என்பது திண்ணம்.

# அரசின் போக்கைக் கண்டித்து தீவகத்தில் வியாழனன்று பேரணி

யாழ்ப்பாணம், ஏப்.17

தமிழ்மக்களின் விடயங்களில் அரசு காட்டிவரும் புறக்கணிப்பை - பேரினவாதப் போக்கைக் கண்டித்து எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை தீவகத்தில் மாபெரும் கண்டனப் பேரணி ஒன்று நடைபெறவிருக்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரத்தை வழங்காமல் இழுத்தடிப்புச் செய்து வருவது, கிழக்கில் இடம்பெற்று வரும் விடுதலைப் புலிப் போராளிகள் மீதான படுகொலைகள், உலர் உணவு நிவாரண வெட்டு, ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கான பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தலில் இழுத்தடிப்பு, மீளக்குடியமர்ந்த மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப முடியாமல், இராணுவ நெருக்கடிகள் தொடர்வது, சுதந்திரமான கடற்றொழிலுக்கு கடற்படையினரின் இடையூறு போன்ற விடயங்கள் தொடர்பாக ஸ்ரீலங்கா ஆட்சியாளர்கள் கடைப்பிடித்து வரும் பேரினவாதப் போக்கைக் கண்டித்து கண்டனப் பேரணி நடத்தப்படவுள்ளது.

தீவகக் கோட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் மற்றும் தீவக மக்கள் அபிவிருத்தி நலன் காப்பகம் என்பவற்றால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கண்டனப் பேரணி காலை 10 மணிக்கு வேலணை துறையூர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் முன்பாக இருந்து ஆரம்பமாகி தீவுப்பகுதி தெற்குப் பிரதேச செயலர் பணிமனையைச் சென்றடையும். அங்கு ஜனாதிபதிக்கான மகஜர் கையளிக்கப்படும்.

தமிழ்மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளைப் புறந்தள்ளி வரும் ஸ்ரீலங்கா ஆட்சியாளர்களைக் கண்டித்து நடைபெறும் இந்த மாபெரும் கண்டனப் பேரணியில் அனைத்து தொழிலாளர்கள், பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள், பொதுமக்கள் அனைவரையும் தவறாது கலந்துகொண்டு எமது நிலைப் பாட்டைச் சர்வதேச சமூகத்திற்குத் தெரியப்படுத்துமாறு தீவகக் கோட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறைகூவல் விடுத்துள்ளது. (த)

# உடுவிலில் உள்ள கொல்களத்தின் கழிவு அகற்றுவதில் அசமந்தம்!

## சுகாதாரச் சீர்கேடு; பயிர்களும் பாதிப்பு

வலி.வடக்கு, ஏப்.17

உடுவில் மல்வம் பகுதியில் உள்ள கொல்களத்தில் இறைச்சிக்காக வெட்டப்படும் மாடுகளின் எச்சங்கள் உரியமுறையில் அகற்றப்படாததால் அப்பகுதியெங்கும் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்பட்டிருக்கின்றன.

ஆடு, மாடுகளின் எச்சங்கள் அப்பகுதிகளில் கண்டபடி வீசப்படுவதால் நாய்கள் அவற்றை எடுத்துச்சென்று தோட்டங்களில் வைத்து அசிங்கப்படுத்துகின்றன.

இதனால் அங்கு துர்நாற்றம் வீசுவதுடன், பெரும் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்பட்டிருக்கின்றன. பயிர்களும் நாய்களால் நாசம் படுத்தப்படுகின்றன.

எச்சங்களில் ஒரு பகுதியை எடுத்துச்செல்லும் காகங்கள் அவற்றைத் தோட்டக்கிணறுகளில் போடுவதால் நீரும் அசுத்தமடைகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

வலி.தெற்குப் பிரதேச சபைக்குச் சொந்தமான இந்தக் கொல்களத்தில் கழிவுகளை உரிய முறையில் அகற்றி அப்பகுதியில் பயிர் அழிவுகளையும் சுகாதாரச் சீர்கேடுகளையும் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி உடுவில் பிரதேச விவசாய சம்மேளனத்தினர் சம்பந்தப்பட்டோரிடம் கேட்டிருக்கின்றனர். (த-86)

## கைத்தொழில் நிறுவனங்களுக்கு சுற்றாடல் பாதுகாப்பு உரிமம்

வலி.வடக்கு பிரதேச சபையில் கைத்தொழில் நிறுவனங்களிற்குச் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவற்றை ஒழுங்குபடுத்தும் குழுக்கள் பிரதேச சபைச் செயலாளர் திருமதி எஸ். மாணிக்கம் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பங்களை வலி. வடக்குபிரதேசசபைக்குட்பட்ட கைத்தொழில் முயற்சியாளர்கள் இப்பிரதேசசபையில் பெற்று அதற்கான உரிமத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த-29)

# தென்மராட்சிப் பிரதேசத்தில் கலை இலக்கியப் பெருவிழா

## சிறப்புற நடத்த விரிவான ஏற்பாடு

தென்மராட்சி, ஏப்.17

தென்மராட்சிப் பிரதேசத்தில் கலை இலக்கியப் பெருவிழாவை நடத்துவதற்குப் பிரதேச செயலகம் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

கலாசார மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சின் அனுசரணையுடன் இவ்விழா நடத்தப்படவுள்ளது.

இவ்விழாவை முன்னிட்டு தென்மராட்சிப் பிரதேசத்திற்குட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த கலைஞர்கள், எழுத்தாளர்கள், பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள் ஆகியவற்றிடையே போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகளுக்குத் தனிநபர்களிடமிருந்து கவிதை, சிறுகதை, சித்திரம், குறுநாடக கையெழுத்துப் பிரதி என்பனவும்-

கலாசாரத் திணைக்களம், மாகாண கலாசாரத் திணைக்களம் என்பவற்றில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களிடமிருந்து சித்திரம், நாட்டுப்புறப்பாட்டு, நடனம் என்பனவும் ஆக்கங்களாகக் கோரப்பட்டிருக்கின்றன.

போட்டியில் பங்குற்ற விரும்பும் மாணவர்கள், தனிநபர்கள், நிறுவனங்கள் பிரதேச செயலகத்தில் உரிய படிவத்தினைப் பெற்று ஆக்கங்களை மே 5 ஆம் திகதிக்கு முன்னர் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கலாமெனவும் -

தபாலில் அனுப்புவோர் கடித உறையின் இடதுபக்க மூலையில் ''தேசிய இலக்கியப் பெருவிழா 2005'' எனக் குறிப்பிட்டு அனுப்பிவைக்குமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (த-117)

# கல்வியியல் கல்லூரியின் ஏற்பாட்டில் ஆசிரியர்களுக்கு விசேட பயிலமர்வு

வலிகாமம், ஏப்.17

பாடசாலை ஆசிரியர்களுக்கான விசேடத்துவம் பொருந்திய கல்விப் பயிற்சிப் பயிர்வுகள் யாழ்.தேசியகல்வியியல் கல்லூரியினால் நடத்தப்படவிருக்கின்றன.

ஆசிரியசேவைப்பிரமாண குறிப்பின் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள வசதியாகவும் பாடசாலைகளில் ஏற்படும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளக்கூடிய முறையிலும் ஐந்து நாள் வதிவிட பயில்வுகள் நடத்தப்படவுள்ளதாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி பா.தனபாலன் தெரிவித்தார்.

ஆரம்பக்கல்வி, ஆங்கிலம், சங்கீதம், நடனம், விசேட கல்வி, நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடநெறிகளுக்கான வதிவிடகால பயில்வுகள் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

நிபுணத்துவம் வாய்ந்த கல்வியிலாளர்கள் இப்பயில்வுகளை நடத்த உள்ளனர்.

இந்த நவீன பயில்வில் கலந்துகொள்ள விரும்பும் ஆசிரியர்கள் தேசிய கல்வியியற் கல்லூரி அலுவலகத்தில் உள்ள மாதிரிப்படிவத்தைப் பார்த்து தமது விண்ணப்பங்களை கல்வியியற் கல்லூரி பீடாதிபதிக்கு உடன் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (த-152)

# நோர்வேத் தூதரகத்தின் நிதியுதவியுடன் குடாநாட்டில் 25 குளங்கள் புனரமைப்பு

## 'நோராட்' திட்ட முகாமையாளர் தகவல்

இலங்கைக்கான நோர்வேத் தூதரகத்தின் நிதி உதவியுடன் 'நோராட்' திட்டத்தின் மூலம் யாழ்.மாவட்டத்தில் 15 குளங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மேலும், 10 குளங்களைப் புனரமைப்புச் செய்வதற்கான திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு 'நோராட்' திட்டமுகாமையாளர் க.ஸ்ரீஸ்கந்தராசா உதயனுக்கு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

நோர்வே நாட்டின் நிதி உதவியுடன் மாநகரசபை எல்லைக்குட்பட்ட குளங்கள், வாய்க்கால்கள் புனரமைத்தல், கூட்டெருஆலைகள் அமைத்தல் போன்ற திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை, வாய்க்கால்கள் புனரமைப்பதற்கான திட்டம் இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இதனைப் புனரமைப்பதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்னர், தூர்ந்து போயுள்ள வாய்க்கால் தூர்வையெடுக்கப்பட்டு, வெள்ளம் வழிந்தோடுவதற்கு ஏற்ற வகையில் சிமெந்தினால் அமைக்கப்படவுள்ளது. இதற்கு மாநகரசபையின் உதவியும் தேவை - என்றார். (த-203-204)

### உதயவாக்கு

ஒரு மனிதனின் வெளித்தோற்றத்தை வைத்து அவன் நல்லவன் என்றோ தீயவன் என்றோ உறுதி செய்து விடாதே. அவனது உள்ளத்தின் பண்பைக் கண்டு முடிவு செய்.

– கிருபானந்த வாரியார்.

### நாளை

*சித்திரை 05*
*திங்கட்கிழமை*
*18.04.2005*
*திதி : நவமி*
*முற்பகல் 11.42வரை*
*நட்சத்திரம் : ஆயிலியம்*
*பின்இரவு 2.39 வரை*
*சுபநேரம் : 12.03 - 01.33*
*ராகுகாலம் : 7.33 - 9.03*
*(யாவும் பழைய நேரப்படி)*

# கொட்டடி, வில்லூன்றி பகுதிகளில் 'நிக்கொட்' உதவியுடன் வீடமைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.17

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் 'நிக்கொட்' நிதி உதவியுடன் கொட்டடி, சூரியவெளி, வில்லூன்றி ஆகிய கிராமங்களில் மீள் குடியமர்ந்த மக்களுக்கான வீடுகளை அமைத்துக்கொடுக்கும் பணிகளை மேற்கொண்டுவருகின்றனர்.

கொட்டடியில் 36 வீடுகளும், வில்லூன்றியில் 29 வீடுகளும், சூரியவெளியில் 65 வீடுகளும் கட்டப்பட்டுவருகின்றன.

இதில் வில்லூன்றி, சூரியவெளி ஆகிய கிராமங்களில் வீடுகளை அமைக்கும் பணிகள் முடிவடைந்துவிட்டன எனவும் கொட்டடிக் கிராமத்தில் 36 வீடுகளில் தற்போது 25 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன என்றும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் தெரிவித்துள்ளனர்.

மிகுதி வீடுகளை அமைக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-203)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சோதிப்பிள்ளை இராசையா

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் தாவடி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோதிப்பிள்ளை இராசையா அவர்கள் நேற்று (16.04.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் இராசையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா, மார்க்கண்டு, விசாலாச்சி மற்றும் பவளம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் தனலட்சுமி, செல்வராணி, செல்வநாயகி ஆகியோரின் அன்புத் தாயாரும் நாகையா, காலஞ்சென்ற வீரசிங்கம் மற்றும் தனபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும் செந்தூர்ச்செல்வன், பன்னீர்ச்செல்வி, தாமரைச்செல்வி, மயூரச்செல்வன், றஜீவன், சஜீவன், அனுஷா, தனுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2005) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகத் தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாவடி தெற்கு,
கொக்குவில்.
(44341)(12-14-26)

தகவல்:
[illegible]
(மருமகன்).

## சின்னத்தம்பி முருகேசன்

நவிண்டிலைப் பிறப்பிடமாகவும் கொழும்பில் நிர்வாக அதிகாரியாக பொலீஸ் திணைக்களம், மீன்பிடித் திணைக்களம் (PSMPA) (TCEO) முதலியவற்றில் பணிபுரிந்தவருமான சின்னத்தம்பி முருகேசன் காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவநேசன், சிவநாதன், சிவபாலன், சிவராஜன், சாந்தா, சிவதாசன், சிவகுமார் ஆகியோரது அன்புத் தந்தையும் சிவபாக்கியம், சிவநேஸ்வரி, சீதாகல்யாணி, சுமதி, சங்கரலிங்கம் (Janasakthi), நிர்மலா ஆகியோரது அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (17-04-2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் (3.30மணிக்கு) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக எல்லாங்குல இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*"சாந்தம்",*
*நவிண்டில்,*
*கரணவாய் மத்தி, கரவெட்டி.*
*(44337)(26-14)*

தகவல்: ந.சங்கரலிங்கம்
(மருமகன் - ஜனசக்தி காப்புறுதிக் கம்பனி விற்பனை அபிவிருத்தி உதவியாளர்).

## வைத்திலிங்கம் நகுலேஸ்வரன்



தச்சந்தோப்பைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் நகுலேஸ்வரன் அவர்கள் 13.04.2005 புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - தெய்வானையின் மகனும் காலஞ்சென்ற முத்துக்கிருஸ்ணர் (மாயவர்) - நேசபூபதி தம்பதிகளின் மருமகனும் தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும் தினேஸ், டிலக்ஸ், கீர்த்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.04.2005 வெள்ளிக்கிழமை சுன்னாகத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கடவைப்புலம்,*
*சுன்னாகம்.*
(சி-42351)(29-14-26)

தகவல்:
வை.சகாதேவன்
(சகோதரன்).

## சகோதரன் அண்ணாமலை பவனவேல்

**(யோவான்)**



சித்தியம்புளியடி, தெல்லிப்பழையைச் சேர்ந்த அண்ணாமலை தம்பதிகளின் புதல்வன் பவனவேல் (யோவான்) 15.04.2005 வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்து மகிமைக்குள் சேர்ந்தார்.

அன்னாரின் அடக்க ஆராதனை இன்று (17.04.2005) ஞாயிற்றுக்கிழமை கானான் ஜெப ஆலயத்தில் (இருபாலை - கோப்பாயில்) பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக இராச வீதியில் அமைந்துள்ள கானான் ஜெப ஆலய சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சித்தியம்புளியடி,*
*தெல்லிப்பழை.*
(44323)(29-14-26)

தகவல்:
அண்ணாமலை உமாசந்திரன்
சகோதரன்.

## திருமதி மகேஸ்வரி சிவஞானம்



யாழ்ப்பாணம், திருநெல்வேலி மேற்கைப் பிறப்பிடமாகவும் சுதுமலை கிழக்கை வதிவிடமாகவும் தற்போது லண்டனில் வசித்தவருமான திருமதி மகேஸ்வரி சிவஞானம் அவர்கள் 29.03.2005 செவ்வாய்க்கிழமை லண்டனில் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் திருநெல்வேலி மேற்கு வேலுப்பிள்ளை - இராசமுத்து தம்பதிகளின் அன்பு மகளும் சுதுமலை கிழக்கு கந்தையா சிவஞானம் (R.A.C., R.A.F., General Clerical) அவர்களின் அன்பு மனைவியும் Dr திருமதி ஞானேஸ்வரி பஞ்சாட்சரம், சிதம்பரநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும் பஞ்சாட்சரம் அவர்களின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற திருமதி பு.சிவசுப்பிரமணியம், திருமதி ர.சின்னப்பா, திருமதி ந.நரசிங்கம், Dr வே.இராசாப்பிள்ளை ஆகியோரின் அருமைச் சகோதரியும் திருஷன், தினேஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுதுமலை கிழக்கு,*
*மானிப்பாய்.* (44325)(29-14-26)

தகவல்:
கந்தையா சரஸ்வதி.

## சமையல் அறைகள் அமைக்கப்படுகின்றன

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் சுனாமியால் பாதிக்கப்பட்ட கர்கோவளம் புனிதநகர், பொற்பதி, மணற்காடு ஆகிய கிராமங்களில் சமையல் அறைகளைக் கட்டுவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. முதற்கட்டமாக மணற்காட்டுப் பிரதேசத்தில் தற்காலிக வீடுகளுக்கான சமையல் அறைக் கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது. இதுவரை 200சமையல் அறைக் கட்டடங்களின் வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. (த-202)

## மாட்டுவண்டிச் சவாரி

புத்தாண்டை முன்னிட்டு சக்தி எப்.எம்., சக்தி ரி.வி. இணைந்து நடத்தும் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நீர்வேலி சவாரித்திடலில் நடைபெறவுள்ளது. போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் இன்று போட்டி நடைபெறும் இடத்திற்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

போட்டி முடிவடைந்ததும் அதே இடத்தில் ஐங்கரன் இசைக்குழுவின் இன்னிசை நிகழ்வும் இடம்பெறும். (த-202)


**THE ROYAL COLLEGE OF JAFFNA**

சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில
By விக்கினேஸ்வரன் ஆச்சாரி, 426(302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம். பிளாக் வீதி, சங்கானை. (44320)(21-14-26)


## தவறிவிட்டது

14-04-2005 அன்று இரவு (7-9மணி) திருநெல்வேலிக்கும் தச்சன்தோப்புக்கும் இடையில் தங்கக் கைச்சங்கிலி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

முகவரி: க.கதிர்றஞ்சன்,
மே.பா.க.சிவம்,
கும்பிளாவளைப் பிள்ளையார் கோயிலடி,
அளவெட்டி. தொ.பே. 077 6054017.
(44344)


## தேவை

எமது உணவகத்துக்கு
☆ உணவு பரிமாறுவோர் ( சப்ளையர்)
☆ சமையல் உதவியாளர்
☆ தொலைபேசி இயக்குநர் (பெண்)
(யாழ்.மாநகர எல்லைக்குட்பட்டவர் விரும்பத்தக்கது).
ஆகியோர் தேவை.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**பாரத் உணவகம்**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். T.P: 021 222 6401
(44324)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் நலன்விரும்பி
கணேஸ்வரன்
*(கண்ணன் - அமெரிக்கா)* அவர்களின்
அன்புத் தந்தை
**தாமோதரம்பிள்ளை வேலாயுதபிள்ளை**
(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

அவர்கள் காலமாகிவிட்டார். அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பழைய மாணவர் சங்கம்,
யா/தாவடி இ.த.க.பாடசாலை,
தாவடி, கொக்குவில்.
(44328)






## இந்து இறையியல் கல்லூரி நல்லூரில்

இளைஞர்களையும் யுவதிகளையும் சமய வாழ்வு வாழச் செய்வதற்கும் சமய போதகர்களாகவும் சமய சொற்பொழிவாளர்களாகவும் வளர்த்தெடுப்பதற்குமாக இந்து இறையியற்கல்லூரி ஒன்று விரைவில் நல்லூரில் உருவாக உள்ளது. சமயச் சொற்பொழிவாளர் ஆறு.திருமுருகன் இறையியல் கல்லூரியை நிறுவுவதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றார்.

அகில இலங்கை இந்து மாமன்றம் நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு அருகில் உள்ள தமது காணியொன்றை இறையியல் கல்லூரியை நிறுவுவதற்கு வழங்கியுள்ளதாக ஆறு.திருமுருகன் தெரிவித்துள்ளார். மன்னார், மட்டக்களப்பு, வன்னி, திருகோணமலை, மலையகம் போன்ற பிரதேசங்களில் இருந்து இளைஞர், யுவதிகள் கல்லூரி பயிற்சிக்கென இணைத்துக் கொள்ளப்பட உள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். இறையியற் கல்லூரிக்கான கட்டட வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. (த-152)


**மீண்டும் ஆரம்பம்**

**ஓட்டோ சப்ளையர்ஸ்**

வாகனச் சொந்தக்காரர்களே உங்கள் சகல விதமான மோட்டார் வாகனங்க்ளுக்கும் மிகவும் சிறந்த கைதேர்ந்த தொழில்நுட்பவியலாளரைக் கொண்டு மிகவும் சிறந்த முறையில் கிறாங் வெட்டியும் றிபோறிங், றிசீலிங், லைன்போறிங், றொட் பிற்றிங் செய்தும் கொடுக்கப்படும் என்பதை எங்கள் வாடிக்கையாளருக்கு அறியத்தருகிறோம். (44338)(42-14-26)

***Auto Suppliers, 266A, Stanley Road, Jaffna.***

**மலிவு விலையில் விற்பனைக்குண்டு**

புதிய சோபா செற்றிகள், சுவர்பான் (Fan), ஸ்ரான் பான் (Fan), பாவித்த குளிர்சாதனப்பெட்டி, தொலைக்காட்சிப் பெட்டி (14'சொனி) பேப்பர் அமத்தும் இயந்திரம், கார் கரியல், கியர் பொக்ஸ், ஜெனரேட்டர்கள் (2½KV மண்ணெண்ணெய், பெற்றோல்) றொபின் வாட்டபம் (3'-மண்ணெண்ணெய்) என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு: த.குமாரசாமி,
352, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(44336)(42-14-26)

**தமிழன்**
பாரம்பரிய தமிழர் உணவகம
තමිළන්
සාම්ප්‍රදායික ද්‍රවිඩ අවන්හල
**THAMILAN**
AUTHENTIC THAMILAR CUISINE
( Air Conditioned)

*காலை – மதிய – இரவு உணவுகள்*

*அறைகள்*
*வைபவங்கள்/கூட்டங்களுக்குப் பொதுக்கூடம்*

AC,TV, *தொலைபேசி, சுடுநீர் வசதியுடன் உல்லாசப் பிரயாணிகள் சபையின் அங்கீகாரம்பெற்ற*

**YARL PAADY RESIDENCY**
51C, AMMAN ROAD, NALLUR, JAFFNA.
0212226868/ 0777276636
BOOKINGS : 372, GALLE ROAD, COL-03.
0777 360353, 4736086/87
(Free Drivers Accommodation)
(44335)


## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
30 - 04 - 1993

மறைவு
04 - 03 - 2005

**செல்வி துளசிகா நாகேந்திரன்**

கல்வியிற் சிறந்து விளங்கி காசினி போற்றிப்புகழ
எல்லோரும் மகிழ வாழ்வாயென்றிருந்த எங்களுக்கு -நீ
பேரிடியைத் தந்துவிட்டு பேரின்பத்தை நாடினாயோ?
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எமது அன்புச் செல்வத்தின் நினைவாக இன்று (17-04-2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகலில் அவரது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.14, B.S. லேன்,
மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
(44331)(26-14)

அன்புடன் அப்பா,
அம்மா, குடும்பத்தினர்.

# தென்னாசிய அமைதி, உறுதிப்பாட்டுக்கு சீன - இந்திய உறவு வழிகோலும்?

சீனப் பிரதமர் வென் ஜியாபாவோ தமது நான்கு நாடுகளுக்கான விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியுள்ளார்.

பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கு வென் மேற்கொண்ட விஜயம் ஒரு மாமூல் பயணம் போல் அமைந்திருந்தாலும் இந்தியாவுக்கான அவரது விஜயம் மிகவும் பயனுள்ளதாகவும் வெற்றிகரமாகவும் அமைந்திருந்ததாகச் சர்வதேச அவதானிகள் கருதுகிறார்கள்.

கடந்த காலங்களில் பாகிஸ்தானுக்குப் பல வகையிலும் உதவியும் ஒத்துழைப்பும் வழங்கி வந்துள்ளது சீனா, இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் உறவுகள் ஓரளவு முன்னேறியிருக்கும் நிலையில் சீனப் பிரதமரின் இந்த விஜயம் இடம்பெற்றிருக்கின்றது.

அமெரிக்காவின் செல்லப்பிள்ளையான பாகிஸ்தானின் ஜனாதிபதி ஜெனரல் பர்வேஷ் முஷாரப் சர்வதேச மட்டங்களில் இந்தியாவின் செல்வாக்கை எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு மட்டந்தட்டிவருவது உலகப் பிரசித்தம். பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கு நிரந்தர இடம் கிடைப்பதை அவர் விரும்பவில்லை. இந்த விடயத்தில் இந்தியாவின் நிலையை இலங்கை ஆதரிப்பதாக அறிவித்திருப்பதையும் கூட அவர் ஆட்சேபித்திருப்பதாகத் தெரிகிறது. இந்த நிலையில் இந்தியா ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினராக இடம்பெறுவதற்குச் செய்துள்ள விண்ணப்பத்தை ஆதரிப்பதாக சீனா அறிவித்திருப்பது பாகிஸ்தானுக்கு அவ்வளவு மகிழ்ச்சியை அளித்திருக்கமுடியாது. அதேவேளை, ஆசிய நாடொன்றின் பிரதிநிதித்துவத்தைச் சீனா ஆதரிக்க முடிவுசெய்திருப்பதைப் பாகிஸ்தான் எதிர்க்கவும் முடியாது.

சீனா ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதாக இந்தியா குற்றஞ்சாட்டி வந்துள்ளது. அதேசமயம், இந்தியா ஆட்சிக்குட்பட்டுள்ள அருணாசல் பிரதேசத்தில் 90,000 சதுர மீற்றர் நிலத்தை இந்தியா ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதாக சீனாவும் குற்றஞ்சாட்டி வந்துள்ளது. இந்த எல்லைப் பகுதிகளில் யுத்தநிறுத்த எல்லைக் கோடு எதுவும் முறையாகச் செய்துகொள்ளப் படாவிட்டாலும் 1993, 1996 ஆகிய ஆண்டுகளில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின் காரணமாக எல்லைகளில் தொடர்ந்து அமைதி நிலவிவருகின்றது. இப்பொழுது இரு நாடுகளுக்குமிடையில் (கடந்த திங்களன்று) செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் எல்லைப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கான ஒரு திட்டத்துக்கு வழிவகுத்திருப்பதாகக் கருதப்படுகின்றது.

எமக்கிடையில் நேர்மையும், சகிப்புத் தன்மையும் இருக்கும்வரை அவைகளை இந்த விடயத்தில் தொடர்ந்து கடைப்பிடிக்கும் வரை இநதிய - சீன எல்லையை அமைதிக்கும் நட்புக்குமான ஓர் உடன்பாடாக எம்மால் கட்டி எழுப்பமுடியும் என்று பிரதமர் வென் பத்திரிகையாளர்களிடம் பேசும்போது கூறினார்.

இமாலயப் பகுதியிலுள்ள மிகச் சிறிய சிக்கிம் மாநிலம் தொடர்பாக சீனா பல வருடங்களாக உரிமை கோரி வந்துள்ளது. "இந்த மாநிலம் இப்பொழுது இரு நாடுகளுக்குமிடையில் ஒரு பிரச்சினையாகவே இல்லை" என்று வென் கூறினார். திபேத் மீதான சீனாவின் இறைமையை இந்தியா ஒப்புக்கொண்டு உறுதிப்படுத்தியிருப்பதால் சிக்கிம் மீதான உரிமையைச் சீனா வலியுறுத்தாமல் விடுவதாகக் கருதப்படுகின்றது.

சிக்கிமுக்கு அருகிலேயே எல்லை வர்த்



சீனப் பிரதமர் வென்ஜியாபாவோ தமது இந்திய விஜயத்தின் போது இந்திய ஆளும் முற்போக்கு அணியினதும் காங்கிரஸ் கட்சியினதும் தலைவர் சோனியா காந்தியைச் சந்தித்து உரையாடினார்.

தாய்வான் விடயத்தில் முன்பு இந்தியா கடைப்பிடித்த கொள்கையானது மக்கள் சீனாவின் பாதுகாப்புச் சபைப் பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்ய உதவியது. சீனாவின் பெயரில் தாய்வான் பாதுகாப்புச் சபையில் இடம்பிடித்திருந்ததை இந்தியாவும் அதைப்போன்று அணிசேராநாடுகளும் எதிர்த்ததுடன் மக்கள் சீனாவுக்கு அந்த இடம் கிடைப்பதை ஆதரித்து நின்றன. ஆரம்பத்தில் "வீட்டோ" அதிகாரத்தைப் பயன்படுத்திய அமெரிக்காவும் அதைவிட்டுக்கொடுத்தது.

தக சந்தையொன்றை உருவாக்க சீனா முயற்சி எடுத்துள்ளது. எல்லை வர்த்தகத்தை இரு நாடுகளும் அபிவிருத்தி செய்யமுடியும். இது எல்லையில் வாழும் மக்களின் நலனுக்குப் பெரிதும் உதவியாக இருக்கும் என்று வென நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தியா - ரஷ்யா - சீனா ஆகிய நாடுகளுககிடையில் முத்தரப்பு ஒத்துழைப்பு ஒன்று உருவாகிவருவதைக் குறிப்பிட்ட பிரதமர் வென், இதை ஏனைய நாடுகளுக்கெதிரான ஒரு கூட்டமைப்பாகக் கருதப்படக்கூடாது என்றார்.

## சீனப் பிரதமரின் 4 நாடுகளுக்கான விஜயம் தந்துள்ள வெற்றி

அந்தவகையில், இன்று சீனா, அணிசேரா நாடு ஒன்றின் சார்பில் தென்னாசியாவிலிருந்து இந்தியா பாதுகாப்புச் சபையில் நிரந்தர இடம் பெறுவதை ஆதரிப்பது முற்றிலும் சரியே - இது இந்தப் பிரதேச நாடுகளுக்கிடையில் ஒருங்கிணைப்பையும் ஒத்துழைப்பையும் மேலும் பலப்படுத்தும் என்று கருதமுடியும்.

தாய்வான் விடயத்தில் எதிர்காலத்தில் சீனா மேற்கொள்ளவிருக்கும் செயற்பாடுகளுக்கும் இந்த நடவடிக்கையால் பயன் ஏற்படக்கூடும்.

சர்வதேச மட்டத்தில் சீன - ரஷ்ய உறவுகள் மேம்பட்டு வருவதும் ரஷ்யாவின் நட்பு நாடான இந்தியாவுடன் சீனா தன் உறவைப் பலப்படுத்திக்கொள்ள முயல்வதும் அவதானிகளால் உன்னிப்பாகக் கவனிக்கப்படும் விடயங்கள்.

சீனப் பிரதமரின் இந்திய விஜயம் "வளமான விளைவுகளை" தந்துள்ளது என்று பிரதமர் வென் ஜியாபாவோ கூறியிருக்கிறார். இது வரலாற்று முக்கியத்துவமான விஜயம் என்பதும் அவரது கணிப்பு.

1962ஆம் ஆண்டு ஒரு குறுகிய கால, ஆனால் மிகக் கொடூரமான எல்லை யுத்தமொன்றில் ஈடுபட்ட இந்த இரு பெரிய நாடுகளும் எல்லைப் பிரச்சினைகளை பேச்சுகள் மூலமே தீர்த்துக்கொள்வதென்ற முடிவுக்கு வநததால எல்லையில் அமைதி நிலவிவருகின்றது.

காஷ்மீர் பகுதியில் 38,000 சதுர கிலோ மீற்றர் (14,670 சதுர மைல்) பிரதேசத்தைச்

வென், புதுடில்லிக்கு விஜயம் செய்ய முன் இந்தியாவின் தொழில்நுட்பத் தலைநகரான பெங்களூருக்கு விஜயம் செய்திருந்தார். அங்கு அவர் கருத்துத் தெரிவிக்கையில் தகவல் தொழில்நுட்பத்தில் ஆசிய சகாப்தம் ஒன்றை இந்தியா - சீன ஒத்துழைப்பின் மூலம் தோற்றுவிக்கமுடியும் என்று கூறினார்.

இந்தியாவின் மென்பொருள் திறமையும் சீனாவின் வன்பொருள் மேன்மையும் ஒன்றுசேர்ந்தால் தொழில்நுட்ப உலகத்தின் அமைப்பையே மாறறிவிடமுடியும் என்று சீனப் பிரதமர் கூறினார்.

இரு நாடுகளுக்குமிடையிலான உறவு 2 கோபுரங்களைப் போன்றவை. ஒன்று மென்பொருள் மற்றது வன்பொருள். இரண்டும் ஒன்றுபட்டால் உலகின் தலைமைத்துவ நிலைக்கு உயரலாம் என்று வென் தெரிவித்தார்.

★ ★ ★

### வீட்டுக்கு வந்துள்ள திருமகள்

பிரிட்டிஷ் இளவரசரின் திருமணம் பற்றியும் அதற்கு அவரது தாயார் தரப்பில் இருந்து வந்த நிலைப்பாடு பற்றியும் பலரும் பலவிதமாகப் பேசி வந்தார்கள். பிரிட்டனில் பத்திரிகைச் சுதந்திரம் கொடிகட்டிப் பறந்ததால், இளவரசரின் திருமணம் பற்றி என்னென்னவோவெல்லாம் பிரிட்டிஷ் பத்திரிகைகள் எழுதி வந்தன. ஒரு பத்திரிகையில் ஒரு கிழவனும் கிழவியும் பிரிட்டிஷ் முறையில் முத்தமிட்டுக்கொள்வதுபோல் கேலிச் சித்திரம் வெளியிட்டிருந்தது. இவையெல்லாம் இளவரசரையும் அவரது

மனைவியையும் மட்டுமல்ல, அரச குடும்பத்தவர் அனைவரையும் வெகுவாகப் புண்படுத்தியிருக்கும்.

திருமணத்திற்குப் பின் நடந்த விருந்தின் போது இளவரசர் (அவர்களின் பாணியில்) தம் தம்ளரை உயர்த்தி பாராட்டு (Cheers) தெரிவித்தபோது, ஊடகத்துறையினருக்கு உறைக்கும்படியாகவே ஒரு 'டோஸ்' கொடுத்தார்.

திருமணம் பற்றிய தகவல் கசிந்த காலத்திலிருந்து ஊடகங்கள் எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு இளவரசருக்கு எரிச்சல் மூட்டி வந்துள்ளன என்பது அவர் வெளியிட்ட சொற்கள் உணர்த்துபவையாக இருந்துள்ளன.

சர்வாதிகாரம் நடக்கும் நாடுகளில் என்றால - ஏன் ஜனநாயகம் பேசப்படும் நம் நாட்டில்கூட இவ்வளவு தூரம் சகித்திருப்பார்கள் என்று சொல்லமுடியாது.

அரசியல் அந்தஸ்தில் உள்ளவர் விமர்சனத்துக்குள்ளாகும்போது ஊடகவியலாளர்கள் என்னவிதமாக நடத்தப்படுவார்கள் - நடத்தப்படுகிறார்கள் என்பது உலகம் அறிந்த விடயம். அவை பற்றிய பட்டியல் போடுவதானால் அது நீண்டுகொண்டேபோகும்.

ஆதரவு உண்டு என்பதை வெளிப்படுத்தும் வகையில், மகாராணியார் உற்சாகமாகவும் கருத்துச் செறிவாகவும் பாசத்தோடும் உரை நிகழ்த்தினார் என்று பத்திரிகைகள் எழுதியிருந்தன.

உலக வலம்

மேனா

தம்பதியரின் திருமணக் கேக்கிற்கு அருகில் நின்றபடி உரை நிகழ்த்திய மகாராணி, எல்லாவிதத் தடங்கல்களையும் கடந்து அவர்கள் வந்துவிட்டார்கள், நான் மிகவும் பெருமைப்

## பிரிட்டிஷ் ஊடகங்களுக்கு சாள்ஸ் இளவரசரின் சூடு

ஆனால், பிரிட்டனில் அரசியல் நாகரிகம் வளர்ந்துள்ள மாண்பு வியக்கத்தக்கது.

இளவரசர் சாள்ஸ் தனது உள்ளக்கிடக்கையின் உணர்ச்சிகளை, எரிச்சல்களை கோபதாபங்களையெல்லாம் மிக நாசூக்காக, மிக நாகரிகமாக நகைச்சுவையோடு வெளியிட்டுத் தீர்த்துக்கொண்டார்.

அப்படி அவர் என்ன சொன்னார் என்றால், (Down with the press) "பத்திரிகைகள் தொலைந்துபோகட்டும்" என்பதுதான். அத்துடன், அவர் கோபம் தீர்ந்துபோயிற்று. பத்திரிகைத் துறையினரும் அதனை நகைச்சுவையோடு எடுத்துக்கொண்டுவிட்டார்கள்.

சாள்ஸ் - கமிலா பாக்கர் திருமணத்தை எலிஸபெத் மகாராணி விரும்பவில்லையென்றவாறு பலவிதமான செய்திகள் பத்திரிகைகளில் வெளிவந்தவண்ணம் இருந்தன. சாள்ஸ - கமிலா திருமணம் வின்சர் மாளிகைக்கு வெளியில் நடந்ததால், அதுவும் ஒரு பொதுத் திருமணமாக நடத்ததால்தான் மகாராணியார் அதில் கலந்துகொள்ளவில்லையென்றும் - அப்படிச் செய்ததால் அந்தத் திருமணத்தை அவர் இன்னுமொருபடி உதாசீனம் செய்துள்ளார் என்றும் பத்திரிகைகள் எழுதியிருந்தன. இது பிரிட்டிஷ் பொதுமக்கள் மத்தியில் மகாராணியார் பற்றிய தப்பான அபிப்பிராயம் பரவும்படி செய்துவிட்டது. உண்மையில் என்ன

படுகிறேன். அவர்கள் நன்றாக இருக்க வாழ்த்துகிறேன். "என் மகன் தான் காதலித்த பெண்ணோடு வீட்டுக்கு வந்திருக்கிறான்" என்று உருக்கமாகக் கூறினார் மகாராணி.

புதுத்தம்பதிகளின் நெருக்கிய நண்பரான எழுத்தாளர் ஜில்லி கூப்பர் மகாராணியாரின் உரையைப்பற்றிக் கூறுகையில், "எல்லாரும் அவருடைய உரையை உன்னிப்பாகக் கேட்டுக கொண்டிருந்தார்கள். மிகவும் பாசம் நிறைந்த பேச்சாக இருந்தது அது" - என்றார்.

'இளவரசரும் மிகப் பொருத்தமான ஓர் உரையை நிகழ்த்தினார் என்று இன்னொரு விருந்தினர் கூறினார். "எனது அன்பிற்குரிய கமிலா, எல்லாவித இடைஞ்சல்களுக்கிடையிலும் என்னோடு சகித்துக்கொண்டு இருந்தார். எல்லாம் நன்மையாக முடியும் என்ற அவருடைய போக்கும் நகைச்சுவையும் என்னைச் சுதாகரித்துக்கொள்ளச் செய்தது" - என்றார்.

தமது பாட்டியார் மகாராணியின் தயார் திருமணததைப் பார்க்க உயிருடன் இல்லாமை குறித்து இளவரசர் கவலைப்பட்டார். தமது தாயாருக்கும் நன்றி கூறினார். "எனது அன்பான அம்மா" என்று விளித்து திருமணத்தின் செலவுகளை அவர் ஏற்றுக்கொண்டதற்காகவும் நன்றி கூறினார். தனது புதல்வர்களுக்கும் நன்றி தெரிவித்த இளவரசர், அவர்களை "என் மகன்மார்" என்று குறிப்பிட்டார். "என் பிள்ளை



பிரிட்டிஷ் இளவரசர் திருமணத்தின் பின்னர் தாயார் எலிஸபெத் மகாராணி (வலம்) கோர்ன்வோல் சீமாட்டி (முன்னர் கமிலா பாக்கர்) ஆகியோருடன் காணப்படுகின்றார்.

நடந்தது என்றால், பிரிட்டிஷ் மகாராணி அரசுக்கு மட்டும் தலைவர் அல்ல, பிரிட்டிஷ் அங்கலிக்கன் பேரலயத்தின் தலைவர் என்பதாலேயே திருமண வைபவத்தில் அவர் கலந்துகொள்ளவில்லையென்றும் பிரிட்டிஷ் சமய கோட்பாடுகளைத் தாம் மீற விரும்பவில்லையென்றும் அவர் கூறியதாகப் பின்பு தெரியவந்தது.

### மகாராணியின் உரை

மகன் திருமணம் செய்துகொண்டதைத் தாம் வெறுக்கவில்லையென்பதை மகாராணியார் திருமண விருந்தின்போது நிகழ்த்திய உருக்கமான உரை மெய்ப்பிப்பதாய் இருந்தது.

அந்தத் திருமணத்துக்குத் தமது பூரண

கள்" என்று கூறினால் அவர்களுக்குக் கோபம் வரும் என்றார்.

ஆரம்பத்திலிருந்து நிகழ்வுகளைப் படமாகவும் செய்தியாகவும் வெளியிட்டுவந்த ஊடகத்துறையினருக்குப் பாராட்டுத் தெரிவிக்கும் வகையில் தம்ளரை உயர்த்திய சாள்ஸ் அவர்களை விமர்சனம் செய்யும் வகையில் "பத்திரிகைகள் தொலைந்து போகட்டும்" - என்றார்.

★ ★ ★

திருமதி பாக்கர் பவல்ஸ் சாள்ஸ் இளவரசரைத் திருமணம் முடித்துக்கொண்டதால் இனிமேல் கோர்ன்வோல் சீமாட்டி (Duchess of Cornwall) என்றே அழைக்கப்படுவார்.

(12 பக்கம் பார்க்க)

## வாழ்த்தி வரவேற்கின்றோம்




கேணல் **எட்வேட் டானியல்** கேணல் **லலிதா டானியல்**

17-04-2005

இரட்சணிய சேனையின் இலங்கை மாகாண பிரதம காரியதரிசியாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட கேணல் எட்வேட் டானியல் அவர்களையும் அவரது பாரியார் கேணல் லலிதா டானியல் அவர்களையும் யாழ்.மாவட்டத்தில் வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

இரட்சணிய சேனை,
யாழ்.மாவட்ட அதிகாரி,
ஊழியர்கள், விசுவாசிகள்.

இரட்சணிய சேனை,
கண்டிவீதி, கைதடி.

(44227)(46-38-17)


# வலிகாமம் கல்விவலய தமிழ்த்தினப் போட்டிகள்

வலி.தெற்கு, ஏப்.17

வலிகாமம் கல்வி வலயத்தில் வலயமட்டதிலான தமிழ்த்தினப் போட்டிகள் எதிர்வரும் மே மாதம் 16 ஆம திகதி தொடக்கம் மே மாதம் 23 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

தமிழ்த்தினப் போட்டிகள் யாவும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

தமிழ்த்தினப் போட்டிகள் நடைபெறும் திகதிகளும், நேரங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

★ 16 ஆம் திகதி திங்கள் காலை 9.00 மணி - வலயமட்ட எழுத்தாக்கப் போட்டிகள் (தரம் 3 தொடக்கம் 11 வரை).

★ 18 ஆம் திகதி புதன் பிற்பகல் 2 மணி - பேச்சு பிரிவு 1 முதல் 5 வரை, பாவோதல் பிரிவு 1 முதல் 5 வரை).

★ 19 ஆம் திகதி வியாழன் - பிற்பகல் 2 மணி - இசையும் அசைவும் பிரிவு I இசை தனிப்பிரிவு - 1 முதல் 5 வரை.

★ 21 ஆம் திகதி சனி காலை 9 மணி இசை, குழு I, II நடனம் தனிப் பிரிவு 1 முதல் 5 வரை மாலை ஒரு மணி நடனம் குழு I, II.

★ 22 ஆம் திகதி ஞாயிறு காலை 9 மணி - நாடகம், வில்லுப்பாட்டு, விவாதம், தமிழ்அறிவு வினாவிடை.

★ 23 ஆம் திகதி திங்கள் - காலை 9.00 மணி - நாட்டுக் கூத்துக்கள். (எ-152)


## LEARN ENGLISH THE BEST WAY - SIGN UP WITH US

NEW BATCHES START ON : 27.04.2005

| | |
|---|---|
| CERTIFICATE IN ENGLISH | 3 MONTHS |
| DIPLOMA IN ENGLISH | 3 MONTHS |
| ENGLISH FOR KIDS[6-12] | ANNUAL PROGRAM |
| SPOKEN ENGLISH (ACD PROGRAM) | 3 MONTHS |




LONDON ENGLISH COLLEGE

NO:105, Arasady Road, Jaffna.
T.P: 021-2225889, 0777252180

BCNS

No: 229A, Mitcham Road,
Tooting, London, SW 17910 UK



## றோயல் தங்கப் புதையல் போட்டி

ஒன்று... இரண்டு...மூன்று ஓட்டப்போட்டியா? இல்லை றோயல் குளுக்கோஸ் தங்கப் புதையல் போட்டியில் பங்குபற்றுவோருக்கு தலா ஒரு பவுண் வீதம் தங்க நாணயங்களை முதலாவது, 2ஆவது, 3ஆவது பரிசுகளாக குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் அதிர்ஷ்டசாலிகளுக்கு வழங்கப்படவிருக்கிறது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான். றோயல் குளுக்கோஸ் (6) வெற்றுப்பெட்டிகளைச் சேகரியுங்கள். றோயல் குளுக்கோஸ் வாங்கும்போது பற்றுச்சீட்டினை நீங்கள் றோயல் குளுக்கோஸ் வாங்கும் வியாபாரியிடம் கேட்டு வாங்கத் தவறாதீர்கள். பின்பு 6 வெற்றுப் பெட்டிகளையும் பற்றுச்சீட்டினையும் இணைத்துப் பின் வரும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள் அல்லது நேரில் கையளியுங்கள்.

**றோயல் தங்கப் புதையல் போட்டி,**
**சிவா நறுமணப் பூங்கா,**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 222-2567

மேற்படி போட்டியில் 31.03.2005 முதல் 31.06.2005 வரை கொள்முதல் செய்யும் பற்றுச்சீட்டுக்கள் மட்டுமே செல்லுபடியாகும்.
றோயல் குளுக்கோஸ் புயல்வேகத்தில் உங்களுக்கு இழந்த சக்தியை மீட்டுத் தருகின்றது.

வட மாகாண ஏக விநியோகஸ்தர்கள்:
**சிவா நறுமணப் பூங்கா,**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 222-2567




இறக்குமதி செய்து பொதி செய்வோர்
றோயல் இன்டஸ்ரீஸ்
கொழும்பு - 12
T.P:- 0777 - 277670, 011-4712439.

றோயல் குளுக்கோஸ்

பிரபல பார்மசிகளிலும், கடைகளிலும் கிடைக்கும்.

(C/41878) (54-



இருபதாவது அகவையைப் பூர்த்தி செய்து தொடர்ந்தும் வீறுநடையுடன்.....

## கலாலயா

**பயிற்சியகம்**

மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

### மகளிருக்கான துரித 3 மாத காலப் பயிற்சிகள்

- **கேக் ஐசிங்** - சகல விதமான ஐஸிங் 22 வகையான கேக் அமைப்புகள், மாச்சீனி மலர்கள் (Suger Crafting) என்பன வெகு சிக்கனமான முறையில் செய்தல்.
- **கூந்தல் அலங்காரம்** - 20 இற்கும் மேற்பட்ட கொண்டைகள் (Hair Styles) போடுதல்.
- ***FABRIC PAINTING*** - கைக்குட்டை, தலையணை உறைகளில் வர்ணந்தீட்டல், EMBOSS PAINTING, Pot PAINTING, மண் PAINTING.
- **உணவுகள் தயாரித்தல்** - மேலைத்தேய, கீழைத்தேய மற்றும் சீன உணவுகள், சிற்றுண்டிகள் தயாரித்தல்.
- **கைவேலை** - கடதாசி அலங்காரம், கழிவுத்துணிவேலை, கிறிஸ்ரல் வேலை, முத்துமாலை கோர்த்தல், றிபன்வேலை.

**பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்**

இத்துடன், அடிப்படை FACIAL அழகுக்கலையும் மணப்பெண் அலங்காரமும் வித்தியாசமான முறைகளில் சேலை அணியும் விதமும் 2நாள் வகுப்புகளாக நடைபெறும்.

6 மாதகால தையல் பயிற்சி பூவேலை வகுப்புகள்

**தையல் பயிற்சி** - குழந்தைகள், சிறுவர், மகளிருக்கான உடைகள் தைத்தல்
**பூவேலை** - கடதாசியினாலும், துணிகளினாலும் 20 வகையான மலர்கள் மற்றும் BOUQUET செய்தல்.

**சனி, ஞாயிறு புதிய வகுப்புகள்ஆரம்பம்: 24.04.2005**
**கிழமை நாள் புதிய வகுப்புகள் ஆரம்பம்: 25.04.2005**

மேலும் விவரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் பி.ப.2.00 மணிவரை அறிந்துகொள்ளலாம்.

- இயக்குநர்.

(அ.42268)(42-38-17)



## CARITAS - HUDEC JAFFNA

# VACANCY

## Project Manager for Income Generating Projects

CARITAS - Hudec is a Humanitarian Organization.
Within the framework of its 2 years program for relief after tsunami disaster, CARITAS - Hudec needs a project manager for income generating activities, in Jaffna.

### Job description

**Project Manager for Income Generating Projects**

Integrated to the "Social Activities" Department and in charge of the implementation of the income generating projects to be set up under the direction of Caritas/ Hudec strategy: selection of projects, financial and administrative follow-up and networking with the other Humanitarian Organizations (local and international) involved in Income Generating Projects.

Requirements

- Experience in micro-finance, micro-credits income generating activities
- Good analytic skills
- Fluency in English
- Ability to work on the field and travel extensively
- Good communication skills
- Good team player
- Computer skills (word, excel, internet, tally...)

Please send your application by Friday the 22nd of April to the director of CARITAS - Hudec:

**Father Jeyakumar**
**CARITAS - Hudec Jaffna.**
14, Mathew's Road, Deogu Street, Jaffna

Please specify the post you apply for in your application.

(44214)(42)



## CARITAS - HUDEC JAFFNA

# VACANCY

## Program Assistant

Within the framework of the Children Program HUDEC needs a program assistant. The Children Program will be implemented in coordination with Hudec relief operation for tsunami disaster.

### Job Summary

The Program Assistant will work closely with the Program Manager during the assessment, the formulation and the implementation of the Children Program to be set up under the direction of Hudec /Caritas strategy.

**Requirements**

- Working knowledge of English
- Good communication skills
- Experience to work in a social environment
- A clear and creative mind
- Good team player
- Computer skills (word, excel, internet...)
- Good Analytical skills
- Notions of local social-cultural context
- Willing to travel extensively

Please send your application by the 22nd of April to the director of Caritas -Hudec:

**Father Jeyakumar**
**Caritas - Hudec Jaffna**
14, Mathew's Road, Deougu Street
Jaffna

PLEASE SPECIFY THE POST YOU APPLY FOR IN YOUR APPLICATION.

# மேற்குலகு தனது தேவைக்கு ஏற்ற வகையில் ஓர் உலகப் போக்கை வடிவமைத்து வருகிறது

ஈழத்தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் இப்போது மிக முக்கியமான கட்டத்துக்கு வந்திருக்கிறது. ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பதுகளில் இருந்து தமிழர்கள் தமது உரிமைகளைப் பெறுவதற்குச் சமஷ்டி முறையை ஒரு உகந்த தீர்வாகக் கருதினர். அதற்காகப் பல அகிம்சைப் போராட்டங்களை நடத்தினர். ஆனால், ஒற்றையாட்சி என்ற வட்டத்துக்கு வெளியே வருவதற்குச் சிங்கள அரசியல் தலைவர்கள் மறுத்தனர். அதனால், தமிழர்களின் விடுதலைப் போராட்டம், ஆயுதப் போராட்டமாக உருவெடுத்தது. இப்போது அவர்கள் பலமான நிலைக்கு வந்துவிட்ட கட்டத்தில், சமஷ்டி ஆட்சி முறையைக் கொண்டுவருவது குறித்துச் சற்றுச் சாதகமாகச் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர் தெற்கின் தலைவர்கள்.



மு.திருநாவுக்கரசு

எனினும், சிங்கள பௌத்த பேரினவாதமோ அதனை எதிர்க்கிறது. ஒற்றையாட்சிக்கும் ஒருமைப்பாட்டுக்கும் வித்தியாசம் காணக்கூடாது என்று கண்ணைக் கட்டிக்கொண்டு கண்டிக்கிறது; எதிர்க்கிறது.

இதேவேளை, தமிழ் மக்களோ, பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை முன்வைக்கும் அரசியல் விழிப்புணர்வையும் வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் அடைந்துள்ளனர்.

அது குறித்துத் தமிழ் மக்கள் அனைவரும் தெரிந்துகொள்ளவேண்டும். சுயநிர்ணய உரிமை குறித்த பூரண அறிவைப் பெறவேண்டும்; விளங்கிக்கொள்ளவேண்டும் என்ற நோக்குடன் -

சிறந்த அரசறிவியலாளரும் அரசியல் ஆய்வாளருமான 'திரு மாஸ்டர்' எனச் செல்லமாக அறியப்படும் மு.திருநாவுக்கரசு எழுதிய 'சமஷ்டியா தனிநாடா' என்ற நூலின் மூன்றாவது அத்தியாயமான 'பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமையும் அதன் வரலாற்று நடைமுறையும்' என்ற பகுதி தொடர் சிறப்புக் கட்டுரையாக உதயனில் வெளியாகி வருகிறது.

**இன்று பிரசுரமாவது அதன் எட்டாவது பகுதி**

பனிப்போர் காலத்தில் இருபெரு வல்லரசு களின் கீழான இரு பெரும் அணிகளும் நீதி, நியாயம், உரிமை, விடுதலை, ஜனநாயகம் போன்ற அடிப்படைகளிலிருந்து எந்தவொரு சர்வதேசப் பிரச்சினையையும் அணுகியதாக இல்லை. அவை தம்மிடையே ஏட்டிக்குப் போட் டியான நிலைப்பாடுகளையே சர்வதேச அரங்கிற்கொண்டன.

அமெரிக்கா உள்ளிட மேற்குலக அரசுகள் எதியோப்பியாவுடனான தமது நல்லுறவின் நிமித்தம் 1950 ஆம் ஆண்டு எதியோப்பியாவுடன் எரித்திரியாவை ஒரு மாநிலமாக இணைத்துவிட்டதன் மூலம் எரித்திரியாவை எதி யோப்பியாவிடம் பலியிட்டனர். 1960 ஆம் ஆண்டு எதியோப்பிய அரசு எரித்திரியாவிற்கிருந்த சமஷ்டி மாநில அந்தஸ்தை இல்லாதொழித்து, எரித்திரியாவை எதியோப்பியாவின் ஒரு நிர்வாகப் பிரிவாக ஆக்கிக்கொண்டது. இவற்றிற்கு எதிரான எரித்தியாவின் போராட்டத்தை மேற்குலகின் அரசியல், பொருளாதார, இராணுவ உதவிகளுடன் எதியோப்பியா கொடூரமாக ஒடுக்கிவந்தது. இதில் அமெரிக்காவும் சோவியத்தும் ஏட்டிக்குப்போட்டியான நிலைப்பாட் டைக்கொண்டன.

1970 களின் மத்தியில் எதியோப்பிய அரசு சோவியத் பக்கம் சாய்ந்தது. பின்பு எரித்திரியரின் நிலை தலைகீழாக மாறியது. இப்பின்னணியில் சோவியத் உதவியுடன் எரித்திரியர்கள் படுமோசமாக இராணுவ ஒடுக்குமுறைக்கு உள்ளாகினர். எரித்திரியாவின் செங்கடலோர அமைவிட முக்கியத்துவமே இதற்கெல்லாம் பிரதான காரணமாய் அமைந்தது. 1989 ஆம் ஆண்டிலிருந்து கொர்பச்சேவ் தலைமையில் சோவியத் யூனியனில் ஏற்படத் தொடங்கிய கொள்கை மாற்றத்தைத் தொடர்ந்து பனிப்போர் முடிவுக்கு வரத்தொடங்கியது. பனிப்போர் முடிவுக்கு வந்தமை, எதியோப்பிய - சோமாலிய யுத்தம், எதியோப்பியாவுள் உள்நாட்டுக் கிளர்ச்சிகள், எதியோப்பிய அரசுக்கு எதிரான பலம் பொருந்திய உள்நாட்டுத் தாக்குதல்கள், அரச இயந்திரம் உள்நாட்டில் முற்றிலும் செயலிழந்தமை ஆகிய அனைத்தின் பின்னணியில் எரித்தியர்களின் வீரம் செறிந்த தாக்குதல்கள் அடுககடுக்காய் வெற்றிகளை ஈட்டின; 1991 ஆம் ஆண்டு எரித்திரிய விடுதலை சாத்தியமானது. மாறிவந்த சர்வதேசச் சூழலை சரிவரப் பயன்படுத்தி அதற்கேற்பத் தமது அரசியல், இராணுவ நடவடிக்கைகளை எரித்திரியப் போராளிகள் ஒருங்கிணைத்ததன் மூலம் இறுதி வெற்றி ஈட்டினர். பனிப்போரின் முடிவு எரித்திரியருக்கு விடிவானது.

தென்சூடானியரின் அன்னிய விடுதலைப் போராட்டத்திலும் இவ்வாறான முன்னுக்குப் பின் முரணான ஒரு நிலைப்பாட்டையே சோவியத் யூனியனும் அமெரிக்காவும் மாறி மாறி எடுத்திருந்தன. பனிப்போரின் பின்பான கிழக்குத் தீமோரின் விடுதலை இங்கு கவனத்திற்குரியது. பனிப்போர்க் காலத்தில் இந்தோனேசியா சம்பந்தமாக அமெரிக்காவிற்கு இருந்த அவசியம பனிப்போரின் பின்பு குறைவடைந்தது. பனிப போரின் பின்பான கிழக்குத் தீமோரின் விடுதலை இங்கு கவனத்திற்குரியது. அவுஸ்திரேலியா தனது நோக்கு நிலையின் பொருட்டு கிழக்குத் தீமோர் பிரிந்து செல்வதை விரும்பியது. இப்பின்னணியில் கிழக்குத் தீமோர் பிரிந்து செல்வதை மேற்குலகம் தந்திரமாக முன் தள்ளியது. இந்தோனோசியாவிற்குள் ஏற்பட்ட உள்நாட்டு அரசியற் கொந்தளிப்புகளும் அரசியல் ஸ்திரமின்மைகளும் இவற்றிற்குப் பக்கபலமாய் அமையவே கிழக்குத் தீமோர் பிரிந்து செலவது சாத்தியப்பட்டது. உள்நாட்டில் போராட்டத்தையும் போராட்ட உணர்வையும் அணையவிடாது பாதுகாத்து வந்த தேசிய இனங்கள், பொருத்தமான சர்வதேச சூழல்களில் விடுதலையடைவது சாத்தியப்பட்டுள்ளன. தமிழீழ விடுதலைப் போராட்டத்திலும் இந்திய உபகண்டச் சூழல், சர்வதேசச் சூழல் ஆகிய இரண்டும் இணைந்து பெரும் தாக்கங்களைப் புரிந்து வருகின்றன. இவ்விவகாரம் பிறிதொரு இடத்தில் நோக்கப்படும்.

### பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமை அதற்கு உலகளாவிய நீண்ட வரலாறு

தேசிய இனங்களின் பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமைக்கான உலகளாவிய வரலாறு நீண்ட ஒரு நூற்றாண்டுகால அனுபவங்களைக் கொண்டதாய் உள்ளது. இவ்விவகாரத்தில் சர்வதேசப் பரிமாணமானது, எப்போதும் முக்கிய அம்சங்களுள் ஒன்றாய் இருந்துள்ளதைக் காணலாம். பனிப்போர் முடிவடைந்த பின்னான பூகோள மயமாதலின் பின்னணியிலேதான் சர்வதேச அரசியலை விளங்கிக்கொள்ளலாம். ஆதலினால் இந்நூலின் தேவைக்கு ஏற்ற அளவில் இக்கால பூகோளமயமாதலைச் சிறிது நோக்குதல் அவசியம். பனிப்போர் முடிவடைந்ததும் அமெரிக்காவும் அதன் கூட்டாளி நாடுகளும் பூகோளமயமாதலை முற்றிலும் தம்கைகளில் எடுத்துக்கொண்டன. பூகோளமயமாதல் என்பது ஓர் இயல்பான வளர்ச்சி என்பதற்குப் பதிலாக அது அமெரிக்காவின் தேவைக்கான ஒரு கொள்கையாகிவிட்டது. இதனை "ஏகாதிபத்தியத்தின உலக மயமாதல்" என்று ஃபிடல் காஸ்ரோ சரியாகவே வர்ணிக்கின்றார்.

**பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமையும் அதன் வரலாற்று நடைமுறையும்**

**தொடர் சிறப்புக் கட்டுரை 8**

மனிதகுலம் பூகோளமயமாவது வரலாற்றில் தவிர்க்கமுடியாத ஒன்று; ஆனால் இங்குள்ள பிரச்சினை என்னவெனில், அத்தகைய பூகோள மயமாதல் எவ்வாறு நிகழ்கின்றது அது யாருக்கு சேவை செய்யக்கூடியதாய் இருக்கின்றது என்பது தான்.

உலகளாவியமுறைமைக் கோட்பாட்டாளர்களின் கருத்துக்களை ஒட்டி நோக்குகையில், கடந்த ஐந்து நூற்றாண்டு கால உலக அரசியல் உறவென்பது காலனித்துவம் உட்பட்ட முதலாளித்துவ வழிமுறையைக் கொண்டதாகவே உள்ளது. அதாவது, இதுவரை பூகோள மயமாதற் போக்கை நிர்ணயித்தது காலனித்துவம், முதலாளித்துவம், ஏகாதிபத்தியம் ஆகிய மூன்றையும் கொண்ட ஒருபொதுப் போக்குத்தான். இதற்கு அப்பால் பூகோள மயமாதல் பற்றிய இலட்சியத்தையும் சிந்தனையையும் மதங்கள் கொண்டுள்ளன; மாக்ஸிஸம் கொண்டுள்ளது. பூகோள மயமாதல் பற்றிய ஃபிடல் காஸ்ட்ரோவின் கருத்துக்கள் மிகவும் இலகுவானவை. அவற்றை மிகச் சுருக்கமாகத் தொகுத்து நோக்குவோம். "உலகமய மாதல் என்பது மாற்றமுடியாத ஒரு வழிமுறை" என்று நான் நம்புகிறேன். பிரச்சினை உலகமயம் பறறியதல்ல ஆயின், அதன் வழிமுறைகள் மற்றும் நடைமுறைகள் பற்றியதே" "இந்தப் பிரபஞ்சம் தழுவிய உலகமயத்தைத் தவிர வேறு வழியில்லை என்றே நான் கருதுகின்றேன்." இன்றையதினம் எந்தவொரு நாடும் தாங்களாகவே அவர்களின் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளமுடியாது என்பதை அனைவரும் அறிவோம். இதுதான் உலக மயமாக்கப்பட்ட புவியின் யதார்த்த நிலையாகும். 'நாம் அனைவருமே மீட்சி பெறுவோம் அல்லது சேர்ந்தே மூழ்குவோம்' என்று நாங்கள் கூறுவதுண்டு". "அவர்கள் உலகை மாபெரும் கட்டற்ற வர்த்தக மண்டலமாகக முயற்சி செய்துவருகிறார்கள்". "தாராளமயம் அனைத்து நாடுகளையும்... தனிச சொத்தாக்கவே விரும்புகிறது" "ஏற்கனவே உலகின் நிதியாதாரங்களைப் பெருமளவில் கொண்டிருக்கக்கூடிய செல்வந்த நாடாக ஐக்கிய நாடுகள் (அமெரிக்கா) திகழ்ந்து வந்தது. மேலும் உலகின் ஒட்டுமொத்தத் தங்க இருப்பில் 80 விழுக்காட்டை அது கொண்டிருந்தது. தங்கத்தை அடிப்படையாகக் கொண்ட நாணய பரிவர்த்தனை முறை உருவாக்கப்பட்டது. இது தங்கம் - டாலர் என்பதாக இருந்தது. தங்கத்தின் விலையை அடிப்படையாகக் கொண்டு ஐக்கிய நாடுகளில் டாலர் வெளியிடப்பட்டது. இது சர்வதேச இருப்பு நாணயமாக விளங்கியது. இவ்வாறு டாலர் சர்வதேச பரிவர்த்தனைக்குரிய நாணயமாக மாற்றங்கண்டதால் ஐக்கிய நாடுகள் உயரிய நிலை பெற்றதோடு, ஒப்பற்ற சக்தியாகவும் திகழ்ந்தது. இந்த ஆதாயத்தைத் தொடர்ந்து தனது நலனுக்கேற்ற வகையில் அவர்கள் பயன்படுத்தி வந்தனர். இத்தகைய அளப்பரிய சக்தி பெற்ற அவர்கள். தங்கள் நலனுக்கேற்றபடி உலகப் பொருளாதாரத்தில், சூதான செயல்முறைகளைக் கையாண்டனர். மேலும், சர்வதேச நிதி அமைப்பின் விதிமுறைகளைத் தங்களுக்கேற்றபடி உருவாக்கி, பேராதிக்க நிலையைப் பெற்றனர். ....நிதி அமைப்பின் நடவடிக்கைகளில் சட்ட திட்டங்களை அது உருவாக்குவது மட்டுமன்றி கிட்டத்தட்ட அதன் உரிமையாளராகவே இருந்து வருகிறது. இறுதி முடிவெடுக்கும் அதிகாரத்தைப் பெற்றிருப்பதோடு உலகெங்கிலும் ஒரு புதிய பொருளாதாரமுறையை அது திணித்து வருகின்றது. நமது இன்றைய அவலங்களுக்கெல்லாம் இதுவே பிரதான காரணமாகும்.

காஸ்ட்ரோ சுட்டிக் காட்டுவது போல யுத்த செலவினங்கள் போன்றவற்றால் அமெரிக்க பொருளாதாரத்திற் சரிவேற்பட்டபோது அப்படிச் சரியும் தொகையை ஈடுசெய்வதற்காகத் "டாலருக்கு இணையாக தங்கத்தைப் கொண்டிருப்பது உடனடியாக நிறுத்தப்படுவதாக "ஜனாதிபதியாய் இருந்த நிக்ஸன் அறிவித்தது போன்ற நடவடிக்கைகளால் உலக நாடுகள் பலவற்றின் பொருளாதாரம் நெருக்கடிக்கு உள்ளாகியமை போன்ற நிலைமைகள் இன்னொரு ரகம்.

## உலகளாவிய ரீதியில் மக்களை அடக்கி ஒடுக்கியும் நசுக்கியும் கசக்கிப் பிழிந்தும் தனது எண்ணத்தை எய்த முனைகிறது

### மேற்குலகம் திணிக்கவிரும்பும் உலகமயமாக்கல் எத்தகையது

நிதி ஆதிக்கம் பற்றி அவர் தொடர்ந்து கூறுகையில் "சர்வதேச நிதி அமைப்பின்... நிதி உதவி என்பது பிசாசின் முத்தம் என்று சொல்வதே சரியாக இருக்கும்" என்று வர்ணித்தார். தொடர்ந்து அவர் கூறிய இன்னும் சிலவற்றை நோக்குவோம். "உலகெங்கிலும் மூலதனத்தின் கட்டற்ற நடமாட்டத்தையும் அதேபோன்று பொருள்களின் தங்குதடையற்ற போக்கினையும் அவர்கள் திணிக்கிறார்கள். மூன்றாம் உலக நாடுகளின் 'மனிதர்கள் என்ற பெயரிலுள்ள சரக்குகளுக்கு' இதிலிருந்து விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது. மூன்றாம் உலக நாடுகளின் உழைப்பாளிகள் நவீன பண்ணை அடிமைகளாகவே கருதப்பட்டு வருகின்றனர். இப்புவியில் மிக மலிவான உழைப்புச் சக்தி கொண்டவர்களாக அவர்கள் உள்ளனர். அந்தந்த நாட்டின் கட்டற்ற வர்த்தக மண்டலங்களில் மிதமாகவே இந்த உழைப்பாளிகள் கிடைக்கிறார்கள்... இது போன்ற புவியெங்கிலும் பரவி நிற்கக்கூடிய உலக மயத்தையே அவர்கள் திணிக்க விரும்புகிறார்கள்."

"நான் இரண்டறக் கலப்பது பற்றி நினைத்துப் பார்க்கவில்லை. அனைத்துக் கலாசாரங்களின் சுதந்திரமான ஒற்றுமை குறித்தே நான் அக்கறை கொண்டுள்ளேன். இதுபோன்ற உலகிலேதான் ஒரு விதமான உலக மயத்தை அமுல்படுத்துவது சாத்தியமாக இருக்க முடியும். இதனைத்தான் தன் வாழ்நாளில் கால் மாக்ஸ் கூறிவந்தார்."

ஏறகனவே கூறியுள்ளது போல கடந்த ஐந்து நூற்றாண்டு கால உலகமயமாதல் என்பது ஒரு பொதுப் போக்கின்படியே நிகழ்ந்து வருகின்றது. அது காலனித்துவம், முதலாளித்துவம், ஏகாதிபத்தியம் என்பவற்றிற்கூடான ஒரு பொதுப் போக்கே, உலகளாவிய ஒடுக்குமுறை வரலாற்றிற்கூடாகவே இப்போக்கு நிகழ்ந்து வருகின்றது.

மேற்குலகம் தனது போக்கிற்குத் தேவையான வகையில் உலகளாவிய மக்களை அடக்கியும், ஒடுக்கியும், நசித்தும், கசக்கிப் பிழிந்தும் தனக்கான ஓர் உலகப் போக்கை வடிவமைத்து வருகின்றது. தேசியவாதம், ஜனநாயகம், சோஷலிசம் போன்றனவும் உலகமயமாக்கத்துக்குள் அடங்கும் விடயங்களாயினும் அவை அதிகம் அரசியற் பரிமாணம் கொண்டவைகளாக இருக்கின்றனவே தவிர நிர்ணயகரமான அரசியற் பொருளாதார அர்த்தத்திலும் கலாசார அர்த்தத்திலும் உலகமயமாதலின் பொதுப் போக்கை முதலாளித்துவத் திசைவழியே நிர்ணயித்து வருகின்றது.

பூமியில் சோஷலிச அரசுகள் இருந்தபோதிலும் அவற்றால் ஒரு சோஷலிச உலக ஒழுங்கை உருவாக்க முடியவில்லை. மாறாக சோஷலிச நாடுகளுக்கிடையேயான உறவிலும் முதலாளித்துவ உலக ஒழுங்குப் பண்பே பொதுவாக இருந்துள்ளது. நான்கு சோஷலிச அகிலங்களும் தோல்வியில் முடிந்தன. சோஷலிசம் ஓர் உலகமயமாதலை ஸ்தாபிக்கத்தவறிய வெற்றிடத்தில் முதலாளித்துவம் தனது கொடிய கால்களால், உலகை அடியளப்பது சாத்தியமாகியது. காலனித்துவ ஆதிக்கமானது பீரங்கிகளினாலும் துப்பாக்கிகளினாலும் கண்டங்களைத் துளைத்தெடுத்து உலகளாவ ஊடுருவியது. கண்டங்கடந்த பெரும் மனிதப்படுகொலைக்கூடாக ஐரோப்பாவுடன் அமெரிக்கக் கண்டங்கள் இணைக்கப்பட்டன; அவுஸ்திரேலியாவும் அவ்வாறே. பெரும்மக்கள் தொகையைக் கொண்ட ஆசியாவும் பீரங்கிக் குழல்களால் ஐரோப்பாவுடன் இணைக்கப்பட்டது. குறிப்பாக ஆபிரிக்காவில் மக்கள் அடியோடு பெயர்த்தெடுக்கப்பட்டுக் கண்டம் விட்டுக் கண்டம் கலக்கப்பட்டனர். இதுதான் முதலாம் சுற்று உலக மயமாக்கலின் துயரமான போக்கு. இப்படி முதலாம் சுற்று உலகமயமாக்கல் பீரங்கிகளினாலும் துப்பாக்கிகளினாலும் மிகவும் மிருகத்தனமான வழியில் நிகழ்ந்தது.

### உலகமயமாதல் என்பது அமெரிக்க மயமாதலே

முதலாவது சுற்று உலகமயமாதல் 16ஆம் நூற்றாண்டைத் தொடர்ந்து பீரங்கிகளினாலும் துப்பாக்கிகளினாலும் நிகழ்ந்தது போலத் தற்போது நிகழ்ந்து கொண்டிருக்கும் உலகமயமாதல் கட்டற்ற மூலதன நடமாட்டம், சுதந்திரப்பண்ட நகர்வு, நிதியுதவி - நிதியாதிக்கம் அறிவியற் கலாசாரச் சுரண்டல், தகவலாதிக்கம் என்ற மிகக் கூரியதும், மிக மெருதுவானதுமான ஆயுதங்களுக்கூடாய் நிகழ்ந்து வருகின்றது.

"தாராளமயமாதல், ஜனநாயகமயமாதல்" எனும் கோஷம்தான் தற்போதைய உலகமயமாதலின் சித்தாந்தம். இவை மேற்கூறிய கூரிய வாள்களின் உறைகளே தவிர வேறில்லை.

புவியின் பரந்த மக்களை ஓர் அலகாய் உலகமயப்படுத்துவதற்கு முதலாளித்துவத் திசை வழி கடந்த ஐந்து நூற்றாண்டுகளாய் இடைவிடாது செயற்பட்டு வருகின்றது. சோஷலிச அரசுகளின் ஸ்தாபிதத்தைத் தொடர்ந்து இதிற் சில இடையீடுகள் இருந்தாலும் அவற்றையுந்தாண்டி முதலாளித்துவத் திசை வழி உலக மயமாதலை முற்றிலும் தன் கையில் எடுத்துக்கொண்டது. பனிப்போரின் முடிவுடன் முதலாளித்துவத் திசைவழியான உலக மயமாதல் முழுச்சுதந்திரத்துடன் செயற்பட்டு வருகின்றது.

தற்போது உலகமயமாதல் என்பது அமெரிக்க மயமாதல்தான். அதாவது அமெரிக்காவின் நலன்களுக்குச் சேவை செய்யக்கூடிய வகையில் எப்படி உலகளாவிய மக்களையும், பூமியின் வளங்களையும் பூமிக்கு வெளியேயான இயற்கையின் நலன்களையும் வழிப்படுத்துவதென்பதுதான். இன்னும் சுருக்கமாகச் சொன்னால் மேற்படி நலன்களின் பொருட்டான புவியோரலகுக் கோட்பாடுதான் உலகமயமாதல் என்பது.

பனிப்போரின் முடிவைத்தொடர்ந்து உலகளாவிய அரசு திரட்சி பெறுவதற்கேற்ற பிற்புலம் தோன்றியுள்ளது. எப்படி அரச நிறுவனத்தின் தோற்றம் ஒரு நீண்ட வரலாற்று வளர்ச்சிப் போக்கைக் கொண்டதோ அப்படியே உலகளாவிய பேரரசிற்கான வளர்ச்சிப் போக்கும் நீண்ட தொடரைக் கொண்டது.

உ

## ஏழாலை

## ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்

## ஆன்மீக வழிகாட்டல் வகுப்பு

**இராஜயோக நிலையம் நடத்தும் வகுப்புகள்**

20-04-2005 காலை 8மணி - 10 மணி வரை
21-04-2005 காலை 8 மணி - 10 மணி வரை
23-04-2005 காலை 8 மணி - 10 மணி வரை

இந்த வகுப்புகளில் கலந்துகொள்வதன் மூலம் நாம் பாவங்களிலிருந்து விடுபட்டு மன அமைதி, மன நிம்மதி, மனச்சாந்தி என்பன பெற்று மெய்வாழ்வு வாழலாம்.

களபாவோடை, ஏழாலை தெற்கு. (44183)(26-14-45) - தேவஸ்தானத்தினர்.

# WANTED

## Exclusive Distributors for Power Tools

Experience in Selling and Servicing Power tools is preferred but not essential.

Please apply within 14 days with your detailed company profile to.

**c/o Ad. Ref. No. 2556, uthayan.**

(44130)(26-14-45)

## காணி விற்பனைக்கு

காங்கேசன்துறை வீதி, தாவடி கொக்குவிலில் கிணற்றுடனும் சுற்றுமதிலுடனும் கூடிய 11 பரப்புக் காணியும் (இரண்டு பக்கமும் வீதிகளைக் கொண்டது), கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு அருகில் (காளிகோயிலடி) 3பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

**தொடர்பு: 077 9059840.**

## ராகவன் கல்வி நிலையம்

பழைய தபாற்கந்தோர் வீதி,
சங்கானை கிழக்கு

### A/L 2007 கலை வர்த்தக வகுப்புகள் ஆரம்பம்

திகதி: 18-04-2005 நேரம்: 8.00 (ப.நே)

தமிழ் - திரு V.M.S. அமரசிவம்
இந்துநாகரிகம் - திரு .P.சந்திரன்
புவியியல் - திரு . K.கிரிதரன்
அளவையியல் - திரு. N .ஜெயசுரேஸ்
அரசறிவியல் - திரு .பொன் சந்துரு
நாடகமும் அரங்கியலும் - திரு . சிறீஸ்கந்தவேள்
பொருளியல் - திரு. M.C. சுதாகரன்
வர்த்தகம் - திரு. உதயமோகன்
கணக்கீடு - திரு. K. பார்த்தீபன்
ஆங்கிலம் - பிரபல ஆசிரியர்.

(44228)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணிலே 03 - 05 - 1945

விண்ணிலே 28 - 04 - 2004

## அமரர் செல்வம் அன்னலிங்கம்

திதி: 17-04-2005

ஆண்டு ஒன்று கழிந்தாலும் ஆறுமோ எங்கள் மனம்?
மீண்டும் வந்து ஆற்றுவீரோ ஆறுதலடைய?
கள்ளக்காலனவன் கவர்ந்தெடுத்தாலும் - எங்கள்
உள்ளக் கோயிலில் உத்தமனாயிருப்பீர் எப்பொழுதும்!

கோட்டைக்காடு, மல்லாகம். (44288)(26-14-45) - குடும்பத்தினர்.

## 6 ஆம் ஆண்டு நெஞ்சகலா நினைவஞ்சலி

மலராக மடியில் 08 - 09 - 1980



விதையாக மண்ணில் 17 - 04 - 1999

## செல்வி மேனகா சின்னத்துரை

(மதி)

ஆறாண்டுகள் சென்றதம்மா!
ஆறுமோ எம் துயரம்?
எம் வாழ்வு முடியும்வரை
உன் நினைவில் வாழ்ந்திடுவோம்!

என்றும் உன் நினைவுடன்:
அப்பா, அம்மா, தம்பி, தங்கை, உறவினர்கள்.

அரியாலை, யாழ்ப்பாணம். (44259)(26-14-45)

## இனிய தமிழ் சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

ஆங்கிலம் கற்க வேண்டுமா?

## இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழி E.L.I. யின் தபால் மூலம் பாடநெறிகள்

இலவச Dialog G.S.M. தொடர்பை வெல்லுங்கள்

* இலவச Dialog Gsm தொடர்பு
* தொலைபேசி பதிவை உள்ளடக்கிய கிடெக் ஒன்று

இலவச 30 day's Easy Way English புத்தகம்
என்பன அனைத்து மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும்




மேலதிக விபரங்களுக்கு .5.00 பெறுமதியான 3 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.

## THE ENGLISH LANGUAGE INSTITUTE

P.O. BOX 83, KANDY. Tel: 0777-220002, 802849

## 324, Palaly Road, Jaffna. தகவல் தொழில்நுட்பம்

MCS MOBILE NET COMPUTER SERVICES

## BIT



கொழும்பு பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப்படிப்பு

## விஞ்ஞானமாணி-தகவல் தொழில்நுட்பம்

- கற்கை நெறிகள் MCS நிறுவனத்தில் நடைபெறும்.
- பரீட்சைகள் யாவும் கொழும்பு பல்கலைக்கழகத்தினால் யாழ் பல்கலைக்கழகத்தில் நடாத்தப்படும்.
- விண்ணப்பிப்போர் O/Lஇல் கணிதபாடத்தில் தேகைமையுடன் A/Lஇல் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
  - (O/Lஇல் தேகைமை பெறாதோர் A/Lஇல் Maths அல்லது Bio பிரிவுகளில் அல்லது பின்வரும் பாடங்களில் ஏதேனும் ஒன்றில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். Economics, Logic, Commerce, Accounts, Business Statistics, Geography)
  - (2005இல் A/Lபரீட்சைக்கு தோற்றும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம். ஆயினும் பெறுபேறுகளின் போது மேற்குறித்த தகைமையை கொண்டிருத்தல் வேண்டும்)
- கற்கை நெறிக்கான மாணவர்கள் தெரிவுப்பரீட்சை ஒன்றின் மூலமே தெரிவு செய்யப்படுவர்.
- தெரிவுப் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புக்கள் MCS நிறுவனத்தில் இலவசமாக நடாத்தப்படும்.
- கற்கை நெறியில் முதல் ஆண்டைப் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு கொழும்பு பல்கலைக்கழகத்தின் சான்றிதழ் வழங்கப்படும். *(Certificate in Information Technology)*
- கற்கைநெறி முழுவதனையும் பூர்த்தி செய்வதன் மூலம் நீங்களும் ஒரு கணனிப் பட்டதாரியாகலாம்.
- எந்தவொரு பல்கலைக்கழக மாணவர்களும் BIT கற்கைநெறியை பயில்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.
- BIT கற்கைநெறியின் 1ம் ஆண்டினை MCSஇல் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு கனடிய பல்கலைக்கழகங்களில் கற்கைநெறியினை தொடர்வதற்கான அனுமதி.

**விண்ணப்ப முடிவுத் திகதி : 30-04-2005**
**விண்ணப்பப் படிவங்களிற்கும் மேலதிக விபரங்களிற்கும், MCS, 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**

Supported by United Nation Development Project/Jaffna Rehabilitation & Resettlement Project

# UNIT

இந்தியாவில் கணனிப் பொறியியல் துறைப் பட்டம் பெற்றவர்களும், இந்தியாவில் இரண்டு தசாப்த காலமாக கணனியில் பல்வேறு துறைகளில் பணிபுரிந்து அனுபவம் பெற்று பெயரெடுத்தவர்களாகிய நாங்கள் தாயக மண்ணில் அதியுயர் தொழில் நுட்பத்தை வழங்கி வருகின்றோம். கணனித் துறையில் எமது அனுபவம் மற்றும் தனித்தன்மையும் கொண்டு முதல் படியாக சகல கணனி உதிரிப் பாகங்களையும் உற்பத்தியாளர்களிடமே நேரடியாக இறக்குமதி செய்து குறைந்த விலைக்கேயுரிய சேவையுடன் இலங்கையில் எங்கும் இல்லாதவாறு 3வருட முழு உத்தரவாதத்துடன் வழங்குகின்றோம்.

## கொழும்பு விலையில் 3 வருட முழு உத்தரவாதம்

**எமது சேவைகள் பல அவற்றுள் சில :**

விற்பனை

- உலகத்தரம் வாய்ந்த பிரத்தியேக உதிரிப்பாகங்களை தெரிவு செய்து இணைத்து முழுக் கணனியாகவும் மற்றும் உதிரிகளாகவும் வழங்குதல்.
- கணனி தயாரிப்பில் முன்னணி நிறுவனங்களான Compaq, DELL, IBM மற்றும் HP நிறுவனங்களில் தயாரிப்புக்களை மிகமிகக் குறைந்த விலையில் தரம் மாறாமல் வழங்குதல்
- உலகத்தரம் மற்றும் முன்னணி தயாரிப்பு நிறுவனங்களான Perx & Asrock தயாரிப்புக்களின் ஏக விநியோகம்
- வலைப்பின்னலமைப்பில் முன்னணி நிறுவனமான Cisco தயாரிப்புகள் மற்றும் சேவைகளை மிகமிகக் குறைந்த விலையில் வழங்குதல்

## New Year Offer

நாங்கள் வழங்கும் ஒவ்வொரு கணனியுடனும்

**Inkjet Printer/2400 DPI Scanner/ Computer Table/600VA UPS**

மற்றும் *Screen Filter, Mouse pad & Dust Cover Totally Free*

Hybrid Boost, Hypher Thread, Dual Monitor வசதிகளுடன்

புதிய Multimedia Pentium IV கணனிகள்
மூன்று வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சேவைகள்

**An Indian Engineer's Centre**

**We are entirely different from others**

நிபந்தனைக்குட்பட்டது. இச்சலுகை சில தினங்கள் மட்டுமே

## Universal Network of Information Technology

347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna, Sri Lanka.

## சாவகச்சேரியில் விபத்து; இருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம்,ஏப்.17

சாவகச்சேரி மட்டுவில் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற ஓட்டோ - மாட்டு வண்டி விபத்தில் ஓட்டோ தடம்புரண்டது. அதில் பயணம் செய்த இருவர் படுகாயமடைந்தனர்.

இரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் மட்டுவில் பகுதியைச் சேர்ந்தவர்களான செல்லையா சுரேந்திரன் (வயது 22), செல்வராஜா துஷிகரன் (வயது 25) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

மாட்டுவண்டியில் சென்றவர் சிறுகாயங்களுக்குள்ளானார்.

காயமடைந்தவர்கள் உடனடியாகச் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். இருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டனர். ஓட்டோவில் கொண்டுவரப்பட்ட ரி.வி., டெக் என்பனவும் ஓட்டோவும் சேதமடைந்தன. (த-12)

## குறும்படங்களின் தொகுப்பு இன்று காண்பிக்கப்படும்

யாழ்ப்பாணம்,ஏப்.17

யாழ்.பல்கலைக்கழக திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் உலகப் புகழ்பெற்ற ஜப்பானிய நெறியாளர் அகிரா குரோசாவின் 'கனவுகள்' என்னும் குறும்படங்களின் தொகுப்பு ஆங்கிலத் துணைத் தலைப்புக்களுடன் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது. (த-204)

# உடுத்துறை, வத்திராயன் கிராமங்களில் வீடமைப்புத் திட்டத்துக்குக் காணி தெரிவு

யாழ்ப்பாணம்,ஏப்.17

உடுத்துறை, வத்திராயன் ஆகிய கிராமங்களில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கடற்கரையில் இருந்து 300 மீற்றருக்கு அப்பால் நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான காணிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன என்று யாழ்.மாவட்ட உதவிக் காணி ஆணையாளர் கு.ஞானசேகரம் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் துரைதோட்டம் என்றும் நாகப்பர் தோட்டம் என றும் அழைக்கப்படும் 200 ஏக்கர் அளவிலான காணி வீடமைப்பதற்கென தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தக் காணிகளுக்கான உரிமையாளர்களைச் சந்திப்பதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

எனவே, இந்தக்காணிகளின் உரிமையாளர்கள் உரிய ஆவணங்களுடன் பிரதேச உதவி அரச அதிபருடனோ அல்லது கிராம சேவகருடனோ தொடர்புகொள்ளலாம்.

உரிமையாளர்கள் இனங்காணப்படுமிடத்து அவர்களின் காணிக்குப் பெறுமதியான தொகை அவர்களிடம் வழங்கப்பட்டு அந்தக்காணிகளை அரசு பெற்றுக்கொள்ளும் - என்றார்.

இந்தக்காணிகளை இனங்காண்பதற்கான கலந்துரையாடல் கடந்த 11 ஆம்திகதி மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கிராமிய புனர்வாழ்வுக் குழு அங்கத்தவர்கள், கிராம சேவகர்கள், தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், கடற்புலிகளின் நிர்வாகத் துறையினர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (த-203-204)

## கோயிற்குடியிருப்புப் பகுதியில் இலவச மருத்துவ நிலையம் திறப்பு

தென்மராட்சி,ஏப்.17

சாவகச்சேரி கோவில் குடியிருப்புப் பகுதியில் இலவச வைத்திய சிகிச்சை நிலையம் ஒன்று புத்தாண்டு தினத்தன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

லண்டன் தமிழ் மருத்துவ சங்கத்தின் அனுசரணையுடன் இந்த நிலையம் செயற்படவுள்ளது.

இந்த நிலையம் மூன்று மாதங்களுக்கு திங்கள்; புதன், வெள்ளி ஆகிய தினங்களில் காலை 10 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை செயற்படுமெனவும் -

மூன்று மாதங்களின் பின்னர் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் மாணவர்களுக்கு இந்த நிலையத்தில் பயிற்சி வழங்கப்படுமெனவும், அவ்வேளையில் 24 மணித்தியாலமும் இந்த நிலையம் செயற்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி நகர நலன்புரி நிலையத்தினால் இந்த வைத்திய நிலையம் நடத்தப்படவுள்ளது.

இந்த நிலையத்தின் செயற்பாட்டுக்கு லண்டனில் வதியும் சாவகச்சேரிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் நிதி உதவி வழங்க முன்வந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

நலன்புரி நிலையத் தலைவர் க.குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் லண்டனிலிருந்து வருகை தந்துள்ள டாக்டர் சிவாணந்தம், டாக்டர் பூலோகநாதன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிலையத் தேவைகளுக்கென லண்டனில் உள்ள ஒருவர் எட்டு லட்சம் ரூபா வழங்கியுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (த-117)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.17

சப்ரகமுவ பல்கலைக்கழக அனைத்துப் பீடங்களுக்கும் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (த-202)

## சிங்களப் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம்,ஏப்.17

யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் அரச அலுவலர்களுக்கான அடிப்படை சிங்களப் பயிற்சி நெறி நாளை பிற்பகல் 2 .45 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேச சபையில் 10 அலுவலர்கள் மேற்படி அடிப்படை சிங்களப் பயிற்சி நெறிக்குத் தெரிவாகியுள்ளனர்.

மேற்படி அடிப்படை சிங்களப் பயிற்சி நெறி தொடர்ந்து 6 மாதங்கள் இடம்பெற்று, பரீட்சையின் பின்னர் சான்றிதழ் வழங்கப்படும்.(த-185)

## தோழர் சின்னத்தம்பியின் நினைவுதினம் இன்று

வடபுலத்து இடதுசாரி இயக்கத்தின் இரண்டாவது தலைமுறையைச் சேர்ந்த அமரர் தோழர் வி.சின்னத்தம்பியின் 4ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4மணிக்கு நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வங்கி ஊழியர் சங்கத்தைச் சேர்ந்தவரான சொ.சிவபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் 'இலங்கையின் அரச உடமைகளைத் தனியார் மயமாக்கல்' என்னும் தலைப்பில் தெணியான், ஏ.சி.ஜோர்ஜ், உதயன் பிரதம ஆசிரியர் வ.கானமயில்நாதன் ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளனர்.

ஆர்வலர்கள் அனைவரையும் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (த-203)

# திரையரங்கில் முண்டியடித்த ரசிகர்களிடம் பணம் திருட்டு

### புத்தாண்டுத் தினத்தன்று கைவரிசை

யாழ்ப்பாணம்,ஏப்.17

சித்திரைப் புத்தாண்டு தினமான கடந்த 14 ஆம் திகதி யாழ்நகரப் பகுதியில் உள்ள திரையரங்கு ஒன்றில் படம் பார்ப்பதற்காகச் சென்றவர்களில் பலரிடமிருந்து 'பேர்ஸ்' மற்றும் பணம் என்பன திருடர்களால் அபகரிக்கப்பட்டுள்ளன.

சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று குறித்த திரையரங்கில் புதிய தமிழ்ச் சினிமாத் திரைப்படம் ஒன்று திரையிடப்பட்டது.

இதனைப் பார்ப்பதற்காகக் குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்து ஏராளமான ரசிகர்கள் வந்திருந்தனர்.

திரையரங்கினுள் நுழைவதற்கான அனுமதிச் சீட்டைகளைப் பெறுவதற்காக நீண்ட வரிசையில் ரசிகர்கள் முண்டியடித்து நின்றனர்.

இந்த நெரிசலைப் பயன்படுத்தி பெண்கள் மற்றும் ஆண்களுடைய கைப் "பேர்ஸ்கள்", பணம என்பனவற்றைத் திருடர்கள் அபகரித்துள்ளனர் என்று கூறப்பட்டது.

இது தொடர்பாகப் பணத்தையும் பேர்ஸுகளையும் பறிகொடுத்தவர்கள் யாழ்.பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து வருகின்றனர் என்று பொலீஸார் தெரிவித்தனர். (த-7)



தென்மராட்சிப் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட தையல் கண்காட்சியினை பிரதேசசெயலக உதவிப் பிரதேசசெயலர் ய.பரந்தாமன், நிர்வாக அலுவலர் ச.வீரசிங்கம், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சீ.குணாளசிங்கம், கிராம அபிவிருத்தி அலுவலர் சி.உமாபாலன், தென்மராட்சிக் கோட்ட அரசியல் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன் ஆகியோர் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம். *(படம்:தென்மராட்சி செய்தியாளர்)*

## அவரது குரலின் வழி நடப்போம்!

### ஞாயிறு நற்பிரசாதம்

நல்ல ஆயன் நானே. நல்ல ஆயன் ஆடுகளுக்காகத் தன் உயிரைக் கொடுப்பவர் (யோவான் - 10:11)

தம் மந்தைகளை மீட்டெடுத்து நல்வழி காட்டிட இயேசு என்னும் நல்ல ஆயன் உலகிற்கு வந்தார். ஆடுகளாகிய எமது விடுதலைக்காக - மேம்பாட்டிற்காக - தம் உயிரையே விலையாகக் கொடுத்தார்.

நீரோடை சார்ந்த பசும்புல் வெளிக்கு எம்மை வழிநடத்திச்சென்று எமக்குப் பாதுகாப்பும், அரணுமாக இருப்பவரே இந்த ஆயன் இயேசு.

இன்றைய சமுதாயம் பல்வேறு தலைமைத்துவத்தின் வழிகாட்டுதல்களுக்குள் சிக்கியுள்ளது. அர்ப்பணிப்பு மிக்க தலைவர்களும் உண்டு; சுயநலம் நிறைந்த வழிகாட்டிகளும் உண்டு.

ஒருவன் ஓர் ஆட்டுமந்தையைக் கூலிக்கு மேய்த்து வந்தான். ஒருநாள் காட்டு விலங்குகள் வந்து ஆடுகளைக் கொன்று தின்றன. எஞ்சிய ஆடுகளைத் திருடர்கள் பிடித்துச் சென்றனர். ஆனால், கூலிக்கு நின்ற மேய்ப்பன் அந்த மந்தையைக் காப்பாற்ற எதிரிகளுடன் போராடவில்லை. தனது உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு தப்பி ஓடிவிட்டான். ஆடுகள் அழிந்து போயின. இவ்வாறான பொறுப்பற்ற மேய்ப்பர்களும் இன்று எம்மிடையே உள்ளனர்.

மாறாக, உண்மையான அக்கறையுள்ள ஆயன் தன்னுயிரைத் துச்சமென மதித்து ஆடுகளுக்காகத் தன் ஆவியைக் கையளித்துப் போராடி மடிவான். தனது சொந்த ஆடுகளைப் பெயர் சொல்லி அழைத்து மேய்ச்சல் நிலத்திற்குக் கூட்டிச் செல்வான். ஆடுகளும் அவனது குரலுக்குச் செவிசாய்க்கும். அந்த நம்பிக்கையான ஆயனின் வாயில் வழியாக அவை பரலோகப் புல்வெளிக்குச் சென்று நிலை வாழ்வைப்பெறும். அவரே ஆயன் இயேசு.

எம்மை நல்வழிப்படுத்த சரியான பாதைகாட்ட இன்று அனேக சந்தர்ப்பங்களும் அழைப்புக்களும் கிடைக்கின்றன. இவற்றை நாம் சரியான முறையில் பயன்படுத்துகின்றோமா? தீயவழிகளைக் காட்டுவோர் பின்சென்று வரண்ட நிலத்தில் உணவின்றி, நீரின்றித் தவிக்கும் நிலையில் உள்ளோமா?

எம்மை அன்பு செய்யும் இறைவன் என்றும் எம்மோடு அருகிருந்து நல்வழி நடத்துகிறார் என்பதை நம்புவோம். எமக்கு என்னென்ன, எப்போது தேவை என்பதை இறைவன் அறிந்து அவ்வப்போது வழங்குவார் என நம்புவோம். தறிகெட்ட வாழ்வில் தடுமாறும் நிலைகளில் இருந்து விடுபட்டு அவரது குரலுக்குச் செவி சாய்க்கும் நல் மந்தைகளாகப் பயணிப்போம்.

- எஸ்.யேசுதாஸ்
கொழும்புத்துறை




### நோர்வேயின் நிதியுதவியுடன்

# சுற்றுச்சூழல் முகாமைத்துவப்பிரிவு யாழ்.நகரில் நாளை திறந்து வைப்பு

யாழ்பாணம்,ஏப்.17

யாழ்.மாநகரசபை பழைய அமைவிடத்துக்கு அருகில் நோர்வே நாட்டின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டுள்ள சுற்றுச்சூழல் முகாமைத்துவப்பிரிவு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்குத் திறந்துவைக்கப்படவுள்ளது.

இதனைத்திறந்து வைப்பதற்கு இலங்கைக்கான நோர்வே நாட்டுத் தூதரக அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது.

இந்தக்குழுவில் நோர்வேத் தூதரகத்தின் உளவளத்துணையாளர் ரி.குப்பெருட், பிரதம ஆலோசகர் எல்.விஜயநாதன், புனர்வாழ்வு அமைச்சு, அபிவிருத்தி மேலதிக செயலாளர் ரி.குமாரதாசன் ஆகியோர் அடங்குவர்.

இவர்கள் மேற்படி பிரிவைத் திறந்து வைப்பதுடன், நோர்வேயின் நிதியுதவியுடன் 'நோராட்' திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் திட்டங்களையும் பார்வையிடுவர்.

அத்துடன், மேற்படி சுற்றுச்சூழல் முகாமைத்துவப்பிரிவு ஒன்றைக் காக்கைதீவிலும் அமைப்பதற்கான திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர் எனவும் இவை தொடர்பாக யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸுடன் கலந்துரையாடுவர் என்றும் நோராட் திட்ட முகாமையாளர் க.ஸ்ரீஸ்கந்தராசா தெரிவித்தார். (த-203-204)

# குருநகரில் விறகு வியாபாரத்தால் போக்குவரத்துக்குப் பெரும் இடையூறு

குருநகர்,ஏப்.17

குருநகர் பகுதிகளிலுள்ள சில வீதிகளில் சிலரால் மேற்கொள்ளப்பட்டுவரும் விறகு வியாபாரம் காரணமாக இவ்வீதிகளூடாகப் பயணிப்போர் மிகுந்த போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகிறார்கள்.

விறகு வியாபாரத்தை மேற்கொண்டுள்ளவர்கள் தமது வளவுகளில் விறகுகளை வைப்பதற்கு இடநெருக்கடி காரணமாக வீதியில் ஒரு பகுதியை மறித்து விறகுகளை வைத்துள்ளதுடன் கழிவு நீர் செல்லும் வாய்க்கால்களின் மேலாகவும் இவைகளை வைத்துவிடுகிறார்கள்.

மாதக்கணக்கில் விற்கமுடியாமல் கிடக்கும் இந்த விறகுக்குற்றிகளால் வீதியால் பயணிப்போர் மிகுந்த சிரமங்களை அனுபவிக்கின்றனர்.

கழிவு நீர் வடிகால்களை துப்பரவு செய்வதற்கு நாளாந்தம் வரும் யாழ்மாநகர சுத்திகரிப்பாளர்களும் வடிகால்களைத் துப்பரவு செய்ய முடியாமல் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதனால் சுகாதார சீர்கேடுகள் உருவாகும் நிலை தோன்றியிருப்பதாகப் பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (த-51)

September 2005 Intake
STUDY IN LONDON
UNIVERSITY OF EAST LONDON
STUDY AT A TOP BRITISH UNIVERSITY
Undergraduate & Postgraduate
Architecture
Finance Money & Banking
Art, Fashion & Design
Electronic & Electrical Eng.
Manufacturing System Eng.
Internet Engineering
Bio - Sciences
Bio Medical Sciences
E.Commerce
Sports Sciences
Business Studies
PG Diploma
Civil Engineering
Accounting & Finance
Media & Communication
Software Engineering
Computer Forensics
Computer Networks
LLM LLB
B.A. B.Sc. M.A. M.Sc M.B.A. MPhil / PhD
OVER 1000 COURSES AVAILABLE
Affordable Tuition Free Consultation No Charges Visa Guidence
Immediate Offers Made to Genuine
For Appoinments Contact :
Mr. Loho Gunesekara - Lohos Group
Official Representative & Education Adviser
Tel No's : 0777-917929 / 0714-124446
E-mail : loho@dialogsl.net web : www: uel.ac.uk
Office : Lucky Plaza Building
SH2, 6th Floor,
St. Anthony's Mw., Colombo 03:
(Weekdays by appoinment only 8 a.m. - 2 p.m.)
தமிழ் தொடர்புகளுக்கு :- Call Doctor INDRANI - 2862376

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

தரமான நிலையில் உள்ள 200 - xxxx முச்சக்கர வண்டி (ஓட்டோ) மஞ்சள் கலர் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: மூர்த்தி ரயர் வேக்ஸ், நீர்வேலி தெற்கு, நீர்வேலி.(44274)

சன் ரீ.வி., ஜெயா ரீ.வி. உட்பட 5 தமிழ் சனல்கள் மற்றும் 70 சனல்களும் பார்க்கக் கூடிய வகையில் பாவனையில் உள்ள 4.6' Dish மற்றும் Digital Receiver விற்பனைக்குண்டு. விலை 20,000/- மட்டுமே தொடர்பு 0713055832.(44317)

## காணி விற்பனைக்கு

கொடிகாமத்தில், கண்டி வீதியில் இருந்து 250 யார் தூரத்திலும் கச்சாய் வீதியாலும் போகக்கூடிய மின்சார வசதியும் தென்னை வரும்படியும் உள்ள 50 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: V.N. சோமசுந்தரம் இல.393/17, கோயில் வீதி, நல்லூர். T.P 021 222 6461 (44293)

சாவகச்சேரி, டச்சுறோட்டில் அருள்வாசா நிலப்பரப்பு 8 பரப்பு 11.12 (குளி) கல்வீட்டுடனும பயன்தரு மரங்களுடனும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 021-222 6970 (திங்கள் முதல் சனி வரை காலை 10.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை). (44058)

## வீடுவளவு விற்பனைக்கு

பழைய பூங்கா வீதியிலுள்ள Old Park ராஜசிங்க ரோட்டில் சகல வசதிகளும் உடைய வீட்டுடன் கூடிய 9 பரப்பு வளவு விற்பனைக்கு உண்டு. வீட்டைச் சுற்றி சகல பிரயோசனங்களும் உண்டு. தொடர்புகளுக்கு* 021 222 6970 (சி/42301)

## கார் விற்பனைக்கு

சொந்தப் பாவனையில் உள்ள 13ஸ்ரீ XXX தொடரிலக்கமுடைய Nissan Sunny Hb 310 குளிரூட்டப்பட்ட கார் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 375, நாவலர் றோட், (இலுப்பையடிச் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம். T.P. 077 6559896, 0777 064467 (44291)

## கடைகள் விற்பனைக்கு

இல.409, மானிப்பாய் வீதியில் (ஐந்து சந்திக்கு அருகில்) இரு கடைகள் விற்பனைக்குண்டு. (பார்மசி, ஹோட்டல், சில்லறை வியாபாரம் செய்வதற்கு உகந்த இடம்) தொடர்பு: 011 272 9997, 0714 896711. (தரகர் தேவையில்லை). (44299)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

Great Dane நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை முத்திரைச்சந்தையடி, நல்லூர். (44329)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர் 1Kg 170/-. சுத்தம் செய்தது 1Kg 255/- மற்றும் புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தொடர்பிற்கு NEW R.S.K. FARM - மான்ஸ் பாடசாலை வீதி உடுவில், NEW R.S.K. FARM மானிப்பாய் றோட் பெரியமதவடி, உடுவில். (44126)

புறொயிலர் இறைச்சிக்கோழிகளும், விறாத்துக் குஞ்சுகளும், கலப்பின சேவல்கோழிகளும விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: S.சிவகுமாரன், கல்வியங்காட்டுச் சந்தி, பெற்றோல்செற் அருகிலுள்ள புலவனார் வீதி. (44270)

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு சுகாதார முறைபடி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம். (Electronic நிறுவை). தொடர்பு: நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.(44153)

## கோழிக்குஞ்சு விநியோகம்

நம்பர் - 1, பகிரா, பிறிமா, புறொயிலர் குஞ்சுகளும் Prima சிவப்பு, வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகளும் 20.04.05 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். தொடர்புகளுக்கு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி தாரகை முதலாம் கட்டை, பருத்தித்துறை, றஞ்சித் 517, ஸ்ரான்லி வீதி, மதுரா 221, ஆஸ்பத்திரி வீதி, ஹறிஸ் ஸ்ரோர்ஸ் தொல்புரம் P.ரவி, சாவகச்சேரி பிரதேச சபைக் கட்டடத் தொகுதி, வடக்கம்பரை. (44264)

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட, Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 25.04.05 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும்,. சுட்டிபாம் - வட்டுக்கோட்டை,. சன்நிதிபாம் - தொண்டைமானாறு,. ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி,. முருகன - சாவகச்சேரி,. நல்லூர் பாம் சென்ரர் - நல்லூர். (44267)

## திருமண சேவை

சீதனம் இல்லாமல் திருமணம் செய்யாதிருப்பவர்கள், கொடுத்துச் செய்யக்கூடியவர்கள், சீதனம் கொடுக்க வசதியில்லாது திருமணஞ் செய்யாதிருக்கும் பெண்களை மனம் விரும்பி ஏற்கும் ஆண்கள் எங்களிடம் வெளிநாட்டு ஜாதகங்கள் உள்ளன. நேரிலோ, தபால் மூலமோ தொடர்புகொள்ளவும். ஸ்ரீ நாகபூசணி அம்மன் திருமண மாலை, இல.289A, பட்டாணிச்சூர், மன்னார் றோட், வவுனியா. T.P.: 024 4588410, 0776 630207 (43302)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்ப, 1964 ஆம் ஆண்டு ரேவதி நட்சத்திரம், 8இல் செவ்வாய் உள்ள மணமகளுக்கு (SRI LANKAN SCHOOL IN OMAN) ஆசிரியைக்கு இலங்கையில் பட்டதாரி அல்லது DOCTOR, ENGINEER மணமகன் தேவை. தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் பின்வீதி, சாவகச்சேரி. (44205)

இந்து கௌரவ குடும்பம், 1969ஆம் ஆண்டு உதயச் செவ்வாய் உத்தரம் 3ஆம் பாதம், உள்ள மணமகளுக்கு உள்ளூரில் அரச உத்தியோகம் அல்லது வெளிநாட்டில் உள்ள மணமகன் தேவை. தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் பின்வீதி, சாவகச்சேரி. (44203)

## மணமகள் தேவை

கௌரவ குடும்ப, 1976ஆம் ஆண்டு மிருகசீரிடம் முதலாம் பாதம் உள்ள U.K இல் உள்ள மணமகனுக்கு, றோமன் கத்தோலிக்க, படித்த, அழகான மணமகள் தேவை. தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் பின்வீதி, சாவகச்சேரி. (44204)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1977இல் பிறந்த, பாவங்கள் குறைந்த (ஒரே மகன்) சொந்தத் தொழில் செய்பவருக்கு படித்த, அழகிய மணமகள் தேவை. தொடர்பு: T.P.: 021 4590227 (44253)

இந்து கௌரவ குடும்பம், 1969ஆம் ஆண்டு பிறந்த மகம் நட்சத்திரம் 8இல் செவ்வாய் கிரகபாவம் 93 பிரான்சில் PR உடைய மணமகனுக்கு அழகிய கல்வியறிவுடைய மணமகள் உடன் தேவை. ஜாதக விவரங்களுடன் தொடர்பு: மே/பா உதயன் விளம்பர இல. 2559 யாழ்ப்பாணம். (சி/42346)

## வாடகைக்கு

பால் பண்ணை வீதி, திருநெல்வேலியில் வேலை செய்யும் இரு பெண்கள் அல்லது மாணவிகள் இருவருக்கு ஓர் அறை வாடகைக்குண்டு. ரெலிக்கொம் தொலைபேசி வசதியும் உண்டு. தொடர்பிற்கு 021 222 7879, 0777 489409, 0714849643 (44232)

## கடை வாடகைக்கு

மணிக்கூண்டு வீதி, (வெலிங்டன் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணத்தில் ஒரு கடை வாடகைக்குண்டு. தொடர்புகளுக்கு இல.54, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (44279)

### கோயிலில் வேலை செய்ய ஆள் தேவை

பருத்தித்துறையிலுள்ள ஒரு கோயிலில் சகல வேலைகளும் செய்யக்கூடிய ஓர் ஆள் தேவை. சகல வசதிகளும் செய்து தரப்படும

தொடர்பு: **சிவா** T.P. 077 7561341 (44276) (21-11-17)

## தவறிவிட்டது

09.04.2005 இல் மட்டுவிலுக்கும் நவாலிக்கும் இடையே தங்கச்சங்கிலி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகளுக்கு: பரமு தர்மலிங்கம், மட்டுவில் வடக்கு, பிலிப்ஸ் றோட், சாவகச்சேரி. சன்மானம் வழங்கப்படும். (44304)

இலக்கம் HV.1223 உடைய மோட்டார் சைக்கிளின் புத்தகம் மற்றும் ஆவணங்கள் கல்வயலுக்கும் துர்க்கையம்மன் வீதி, நுணாவில சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத தவர்கள் 'முருகன் களஞ்சியம்' சாவகச்சேரி என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம வழங்கப்படும். T.P. 0777 111395. (44316)

## தேவை

கடலட்டை, சுறாச்செட்டை தேவை. தொடர்பு: S.Sathi No 9/6, St. Sebestion Street, Colombo - 12. T.P No. 077 3134151 (43315)

## காணவில்லை

இரண்டு வயது நிரம்பிய வெள்ளை நிற பொமேரியன் நாயைக் காணவில்லை. கண்டு பிடித்து தருபவர்களிற்கு சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: க.ஏகாம்பரம், No.2 புறுடி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். T.P No. 0777 756905. (43321)

### சிறுகுறிஞ்சாப் பவுடர்

சிறுகுறிஞ்சா இலையிலிருந்து தயாரிக்கப்பட்ட பவுடர் விற்பனைக்குண்டு. இது நீரிழிவு கர்ப்பப்பை நோயாளர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் சிறந்த மூலிகையாகும். இதில் விற்றமின் A,C உடன் கல்சியம், இரும்பு போன்ற தாதுப்பொருள்களும் அடங்கும். தொடர்பு

**BIO TEC INTERNATIONAL**

இல.131/2, பலாலி வீதி (விவசாயப் பண்ணைக்கு எதிராக OPPOSITE FARM SCHOOL)
திருநெல்வேலி. T.P.: 021-4590907.
(43770)

### பிரத்தியேக வகுப்புகள்

தரம் 5,6,7,8,9,10,11 வகுப்புகளுக்கும்
(கணிதம், விஞ்ஞானம்)
மற்றும்
**A/L** 2007 இணைந்த கணிதம் பாடங்கள்
வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.
விவரங்களுக்கு:
**T.P. 077 9010580, 021 4590271**
(44308) (21-11-17)

### ஆங்கில வகுப்புகள்

2005 Dec. G.C.E (O/L) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தி அடைவதற்கான வகுப்புகள் ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியரினால் கற்பிக்கப்படும். வீடுகளுக்கும் வந்து கற்பிக்கப்படும்.

*33, பலாலி வீதி. இலுப்பையடிச் சந்தி.*
*(தெற்கு) யாழ்ப்பாணம்.*
(44256) (21-11-17)

### தொலைபேசி இயக்குநர் அச்சக வேலையாள் தேவை

யாழ்.நகரில் இயங்கிவரும் தொலைத் தொடர்பு நிலையத்திற்கு தொலைபேசி இயக்குநர் (பெண்) தேவை. முன் அனுபவம் உள்ளவர்களும் அச்சகத்தில் (Press) வேலை செய்தவர்களும் விரும்பத்தக்கது. பயிலுநர்களும் தொடர்பு கொள்ளலாம். திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
077 6577488
021 222 7638
**ஸ்ரான்லி வீதி**
(பெற்றோல் நிலையம் அருகில்)
(44318)(21-11-17)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## அமரர் இராசமாணிக்கம் சிவச்செல்வம்

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமானவரே!
ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (17.04.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு இன்பர்சிட்டி கடற்கரை மடத்தில் நடைபெறவுள்ளது.

ஆகவே, அந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் சபிண்டீகரண நிகழ்வுகளிலும் கலந்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

\- குடும்பத்தினர்.

*இன்பர்சிட்டி.*
*பருத்தித்துறை.* (சி/42336) (42-24-11-17)

## கண்டாமணி அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.17

கைதடிப் பிள்ளையார் ஆலயத்திற்கு 30 லட்சம் ரூபா பெறுமதியான கண்டாமணி அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

நாவற்குழியைச் சேர்ந்த மாணிக்கம் என்பவரின் புதல்வர்கள் லண்டனில் இருந்து இதனை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

கைதடி பிள்ளையார் ஆலயத்தில் கலையம்சங்கள் பொருத்தியதாக கருங்கற்களை கொண்டு புனருத்தாரண வேலைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (கு-185)

### கணித வகுப்புகள்

G.C.E.(O/L) 05 ஆண்டுகள் 10, 9 கணிதப்பாடம் அடிப்படையிலிருந்து முழுப பாடத்திட்டமும் அடங்கலாக. திறமைச் சித்திக்கு உத்தரவாதம் அளித்துக் கணிதம் கற்பிக்கப்படும்.

ஆசிரியர்: **க.பராசசேகரன்.** 8A. பீளர்ச்சஸ் ஒழுங்கை. கண்டுக்குளி மகளிர் கல்லூரிக்குப் பின் ஒழுங்கை. கண்டுக்குளி. T.P.: 222 5217.

## தென்னாசிய அமைதி....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

### ரயிலின் முன் மண்டியிட்டவர் உயிர் தப்பினார்

ஓடிக்கொண்டிருந்த புகையிரதத்தின் முன்னால் மண்டியிட்டு இருந்தவர் புகையிரதம் கடந்து சென்றதன் பின் எழுந்து ஒன்றும் நடக் காதது போல் உடைகளைத் தட்டிவிட்டுக் கொண்டு வீடு நோக்கிச் சென்றார்.

இங்கிலாந்தில் எசெக்ஸ் பகுதியில் ஒரு ரயில் நிலையத்தில் 80 மைல் வேகத்தில் லண்டன் நோக்கி வந்துகொண்டிருந்த புகையிரதத்தின் முன்னால் ஒரு நடுத்தர வயது மனிதன் பாய்ந்து மண்டியிட்டு அமர்ந்தபோது ரயில் நிலைய மேடைகளில் நின்ற பிரயாணிகள் கூக்குரலிட்டுக் கத்தினார்கள். ரயில் அவரை மோதி நசுக்குவதற்குச் சில வினாடி கள் இருக்கும்போது அவர் சடுதியாக நெடுஞ்சாலைக் கிடையாக வீழ்ந்து படுத்துவிட்டார். ரயில் அவரைக் கடந்து சென்று நின்றது. அந்த மனிதர் எழுந்து உடையில் இருந்த அழுக்கைத் தட்டிவிட்டுக்கொண்டு தன்பாட்டில் போய்ச்சேர்ந்து விட்டார். அந்த மனிதனைக் கண்டுபிடிக்கப் பொலீஸார் பெரும் பிரயத்தனம் செய்துகொண்டிருந்தார்கள்.

அவர் அடிபடாமல் தப்பியிருப்பது பெரிய அதிசயம் என்று பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஓம்
ஸ்ரீராம ஜெயம்

### யாழ்ப்பாணம்- வண்ணை
### ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்
### ஸ்ரீ ராம நவமி உற்சவம்

நிகழும் பார்த்திப வருடம் சித்திரைத் திங்கள் 04 ஆம் நாள் இன்று (17.04.2005) ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு ஆலயத்தில் ஸ்ரீராம நவமி உற்சவம் நடைபெறும்.

அடியார்கள் அனைவரும் இந்த உற்சவத்தில் பங்கு கொண்டு ஸ்ரீமந் நாராயணனை வழிபட்டு அருள்பெற்று, ஸ்ரீ மகாலக்ஷ்மி விலாச சம்பன்னராக வாழ்வீர்களாக.

பொருமாள் கோயில்,
யாழ்ப்பாணம். (42339) (39-21-11-17) ஆதீன மகாசபை.

# பார்த்திப வருடப் பலன்கள்

## கும்பம்

கும்ப ராசி அன்பர்களே! கடந்த சில மாதங்களாக நீங்கள் கண்ட இன்னல்கள் மறையும். இன்னும் சில மாதங்களில் நீங்கள் பல்வேறு முன்னேற்றங்களைக் காணப்போகிறீர்கள். ஆண்டின் தொடக்கம் சுமாராக இருந்தாலும் கவலை கொள்ளவேண்டாம். ராகு உங்கள் ராசிக்கு 2 ஆம் இடத்தில் ஆண்டு முழுவதும் இருப்பதால் அவர் பொருளாதாரப் பிரச்சினையை ஏற்படுத்துவார். கேது 8 ஆம் இடத்தில் இருப்பதால் உங்கள் முயற்சியில் தோல்வியைச் சந்திக்கலாம். சனி பகவான் தற்போது 5 ஆம் இடத்தில் இருக்கிறார்.

அவர் குடும்பத்தில் பிரச்சினையை உருவாக்கலாம். அப்படிப்பட்ட சனி வருகிற ஜூன் மாதம் 26 ஆம் திகதி 6 ஆம் இடத்திற்குச் செல்கிறார். இது சிறப்பான இடம். அதன்பின் உங்கள் வாழ்க்கை வளர்ச்சிப் பாதையை நோக்கி நகரும். பொருளாதார வளம் மேம்படும். குருபகவான் தற்போது 8 ஆம் இடத்தில் இருப்பதால் பொருளாதார சரிவைக் கண்டு வரலாம். அவர் செப்ரெம்பர் 19 ஆம் திகதி 9 ஆம் இடத்திற்கு மாறுகிறார். அதன்பின் அவர் பல்வேறு சுபங்களை நிகழ்த்துவார்.

மேற்கண்ட நிலையில் இருந்து பார்க்கும்போது ஆண்டின் தொடக்கத்தில் முக்கிய கிரகங்கள் எதுவுமே சாதகமாக இல்லைத்தான். ஆனாலும், செப்ரெம்பர் வரை குருவின் 7 ஆம் இடத்துப் பார்வை உங்கள் ராசிக்கும் 2 இல் விழுகிறது. இதன்மூலம் எந்தப் பிரச்சினையையும் முறியடித்து வெற்றி காண்பீர்கள். மேலும் சூரியன், செவ்வாய், சுக்கிரன், புதன், சந்திரன் ஆகிய கிரகங்கள் அவ்வப்போது நற்பலனைக் கொடுப்பார்கள். இனி விரிவான பலனைக் காணலாம்.

ஆண்டின் தொடக்கத்தில் உங்கள் முயற்சியில் சிற்சில தடைகள் வரத்தான் செய்யும். அதை பொருட்படுத்தாமல் காரியத்தில் கண்ணாக இருந்தால் வெற்றி பெறலாம். ஜூன் மாதத்தில் இருந்து காரிய அனுகூலம் எளிதாகும். பணப்புழக்கம் அதிகரிக்கும். தேவையான பொருள்களை வாங்கிக் குவிக்கலாம் வாழ்க்கையில் வசந்தம் வீசும், மதிப்பு, மரியாதை கௌரவம் மேம்படும். உங்களைச் சுற்றி இருப்பவர்கள் 'ஓகோ' என்று உங்களைப் புகழ்வார்கள்.

குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். கணவன், மனைவி இடையே பிரச்சினைகள் அகன்று ஒற்றுமை ஏற்படும். ஜூன் மாதத்திற்குப் பிறகு பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். உறவினர்கள் மத்தியில் அன்னியோன்னியம் இருக்கும். திருமணம் போன்ற சுப நிகழ்ச்சி நடக்கும். பல ஆண்டுகளாக தடைப்பட்டுவந்த திருமணம் செப்ரெம்பருக்குப் பிறகு கண்டிப்பாகக் கைகூடும். அது நல்லவரனாக அமையும் புதிய வீடு, சொத்து போன்றவற்றை வாங்கலாம். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும் பெண்கள் மூலம் அதிக பலனை எதிர்பார்க்கலாம்.

உத்தியோகம் பார்ப்பவர்கள் முன்னேற்றப் பாதையில் செல்வர். ஆனால், ஆண்டின் தொடக்கத்தில் அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும். மேல் அதிகாரிகளிடம் அனுசரித்து போகவும். செப்ரெம்பருக்குப் பிறகு பிற்போக்கான நிலை மாறும். ஆற்றல் மேம்படும். அதன்மூலம நல்ல பதவி கிடைக்கும் வருமானத்திற்கு குறை இருக்காது. புகழோடு பெருமையும் கிடைக்கும. விரும்பிய இடத்திற்கு மாற்றம் பெறலாம். வேலை நிமித்தமாக குடும்பத்தை விட்டுப் பிரிந்தவர்கள இனி ஒன்றுசேருவர்.

வியாபாரிகள் தற்போது இருந்து வந்த பின்தங்கிய நிலையில் இருந்து விடுபடுவர். ஜூன் மாதத்திற்குப் பிறகு தொழிலில் விழிப்புணர்ச்சி காண்பர். லாபம் அதிகரிக்கும். புதிய வியாபாரம் நல்ல அனுகூலத்தைக் கொடுக்கும். வியாபாரதை விரிவுபடுத்த நல்ல காலம் வேலை இன்றி இருப்பவர்கள் புதிய தொழிலை துணிந்து தொடங்கலாம். கேதுவால் எதிரிகள் இடையூறு அவ்வப்போதுவரும். ஆனால் அதை முறியடித்து இருக்கும் இடம்தெரியாமல் ஆக்கி விடுவீர்கள். கூட்டாளிகளிடையே ஒற்றுமை ஏற்படும்.

கலைஞர்கள் நல்ல பணப்புழக்கத்தோடு இருந்தாலும் ஒருவித மனநெருடல் இருந்திருக்கும். புதிய ஒப்பந்தங்கள் கிடைத்து வந்தாலும் புகழ், பாராட்டு இல்லையே என்ற வேதனை மனதில் புதைந்து இருக்கும். செப்ரெம்பருக்கு பிறகு புகழ், பாராட்டு போன்றவை கிடைக்கும். சிலர் அரசிடமிருந்து விருதினைப் பெறலாம் அரசியல்வாதிகள், பொதுநல சேவகர்கள் ஆண்டின் பிற்பகுதியில் மேன்மை காண்பர்.

மாணவர்கள் அதிக சிரத்தை எடுத்துப் படிக்க வேண்டி இருக்கும் ஆனாலும் உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்கும். அடுத்த கல்வி ஆண்டு உங்களுக்கு மிகவும் சிறப்பாக இருக்கும். சிலர் வெளிநாடு சென்று படிக்கும் வாய்ப்பை பெறுவர். விரும்பிய பாடம் கிடைக்கும்.

விவசாயிகள் தற்போது நல்ல வளத்தோடு காணப்படுகிறீர்கள். புதிய சொத்து வாங்க வாய்ப்பு உண்டு. சிலர் நவீன விவசாயத்தைப் பயன்படுத்தி முன்னேற்றம் காண்பர். கால்நடைகள் நல்ல வளத்தைத் தரும் கூலிவேலை செய்பவர்கள் சுயதொழிலில் இறங்கும் காலம் உருவாகும்.

பெண்கள் திருப்திகரமாக இருப்பர். ஜூன் மாதம் வரை விட்டுக்கொடுத்து போகவும், அதன்பின் வாழ்க்கையில் குதூகலம் ஏற்படும். குடும்பத்தில் உங்களுக்குத் தனிக் கௌரவம் உண்டாகும் பிள்ளைகளால் பெருமை கிடைக்கும் பிறந்த வீட்டில் இருந்து பொன் பொருள்கள் வந்து சேரும். வேலை செய்யும் பெண்கள், வியாபாரம் செய்யும் பெண்கள் நல்ல வளத்தைக் காண்பர்.

உடல்நலத்தைப் பொறுத்தவரை சுமாராகவே இருக்கும். கேது சாதகமற்ற இடத்தில் இருப்பதால், பித்தம், மயக்கம், சளி போன்ற இடர்பாடுகள் வரலாம். உங்களிடம் இருந்து வந்த மந்த நிலை செப்ரெம்பருக்குப் பிறகு மறையும்.

ராகு கேதுவுக்குப் பரிகாரம் செய்யுங்கள் பாம்புப் புற்றுள்ள கோவிலுக்குச் சென்று வாருங்கள். கணவரை இழந்து வாடும் மூதாட்டிகளுக்கு இயன்ற உதவி செய்யுங்கள். செப்ரெம்பர் வரை தட்சணாமூர்த்திக்கு அர்ச்சனை செய்யுங்கள்.

## மீனம்

மீனராசி அன்பர்களே! உங்கள் ராசி நாதன் குருபகவான் சாதகமாக இருக்கும் நிலையில் இந்த ஆண்டு தொடங்குகிறது. அவர் 7ஆம் இடத்திலிருந்து பல்வேறு நன்மைகளைத் தந்து கொண்டிருக்கிறார். பொருளாதார வளத்தையும் சுபங்களையும் தருகிறார். குருவினால் இந்த நன்மைகள் செப்ரெம்பர் 19ஆம் திகதி வரை நீடிக்கும். அதன்பின் அவர் 8ஆம் இடமான துலாம் ராசிக்குச் செல்கிறார். இது சிறப்பான இடம் அல்ல. அதன்பின் அவர் பொருளாதாரச் சரிவை உருவாக்கலாம். அதே நேரம் அவரது 7ஆம் இடத்துப் பார்வை சிறப்பாக அமையும் என்பதால் பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்படமாட்டீர்கள். சனி பகவானை எடுத்துக் கொண்டால் தற்போது அர்த்தாஷ்டமம் என்னும் 4 ஆம் இடத்தில் இருப்பதால் நல்ல பலனைக் கொடுக்கமாட்டார். அவரால் வீண் அலைச்சலை உருவாக்கலாம். அப்படிப் பட்ட சனி வருகிற ஜூன் மாதம் 19ஆம் திகதி 5 ஆம் இடத்திற்குச் செல்கிறார். இதுவும் அவ்வளவு உகந்தது இல்லைத்தான். ஆனாலும், அர்த்தாஷ்டம நிலையில் இருந்துகொடுத்த இன்னலை அவர் தரமாட்டார்கள். நிழல் கிரகங்களான ராகுவும் கேதுவும் இந்த ஆண்டு முழுவதும் நன்மை தரமாட்டார்கள். ராகு உங்கள் ராசியில் இருந்து அதிக அலைச்சலைத் தருவார். கேது 7ஆம் இடத்தில் இருந்து குடும்பத்தில் சிற்சில பிரச்சினையைத் தரலாம்.

மேற்கண்ட நிலையில் இருந்து பார்க்கும்போது குருபகவான் உங்களுக்கு உறுதுணையாக இருப்பது புரியும். இது தவிர சூரியன், புதன், செவ்வாய், சுக்கிரன், சந்திரன் ஆகிய கிரகங்கள் அவ்வப்போது நன்மைதர தவறமாட்டார்கள். இனி விரிவான பலனைக் காணலாம்.

நீங்கள் எடுத்த காரியத்தைச் சிறப்பாகச் செய்துமுடிக்கலாம். பொதுவாக முக்கிய திட்டங்களை ஆண்டின் முற்பகுதியில் தொடங்குங்கள். அது வெற்றிகரமாக முடியும். செப்ரெம்பர் மாதத்துக்குப் பிறகு எதையும் ஒன்றுக்குப் பத்துமுறை சிந்தித்துச் செயற்படுத்துங்கள். பெரியோர்களின் ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் கேட்டுப் பெறுங்கள். மதிப்பு, மரியாதை சிறப்பாகவே இருக்கும். தேவைகள் பூர்த்தி ஆகும். ஆண்டின் தொடக்கத்தில் புது வீடு கட்டுதல், நிலம் வாங்குதல் போன்ற காரியங்களைச் செய்து முடியுங்கள்.

குடும்பத்தில் மகிழ்ச்சிக்குக் குறை இருக்காது. திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். சிலருக்குக் குழந்தைப் பாக்கியம் கிடைக்க வாய்ப்பு உண்டு. 4ஆம் இடத்தில் இருக்கும் சனியால் சிற்சில பின்னடைவுகள் ஏற்படலாம். குடும்பத்தில் வீண் குழப்பங்கள் உருவாகலாம். ஜூன் மாதத்திற்குப் பிறகு நிலையை சீராகும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். அதேநேரம் கேது சாதகமற்ற இடத்தில் இருப்பதால் மனைவி வகையில் சிற்சில பிரச்சினை வந்து மறையும். உறவினர்கள் வகையில் அநாவசிய பேச்சைத் தவிர்க்கவும்.

உத்தியோகம் பார்ப்பதவர்கள் சிறப்பான நிலையில் இருப்பர். விரும்பிய இடத்திற்கு மாற்றம், பதவி உயர்வு, மேல் அதிகாரிகளின் ஆதரவு, ஆலோசனையும் கிடைக்கும் சக ஊழியர்கள் உதவிகரமாக இருப்பர். ஆண்டின் பிற்பகுதியில் எதிர்பார்த்த பலனைக்காண முடியாது. ஆனால், எதிர்வரும் பிரச்சினைகளை முறியடிக்கும் வல்லமையைப் பெறுவீர்கள்.

வியாபாரம் சிறப்பாக இருக்கும். ஆனால், மிகவும் சிரத்தை எடுத்து உழைக்க வேண்டி இருக்கும். பொருளாதார வளம் அதிகரிக்கும். ஆண்டின் பிற்பகுதியில் வீண் விரயம் ஏற்படலாம். எனவே, சிக்கனம் தேவை. சிலர் தொழில் ரீதியாக இருப்பிடத்தை மாற்றவேண்டி வரலாம். புதிய தொழில் தொடங்குதல், வியாபாரத்தை விரிவுபடுத்துதல் போன்றவற்றை ஆண்டின் தொடக்கத்தில் செய்யவும். ஆனால், எதிலும் அதிக முதலீடு போடாமல் உங்கள் அறிவைப் பயன்படுத்தி முன்னேறுங்கள்.

கலைஞர்கள் சிறப்பான நிலையில் இருப்பர். புகழ், பாராட்டு போன்றவை வந்துசேரும். அரசியல்வாதிகள், பொதுநல சேவகர்கள் சிறப்பான நிலையில் இருப்பர். செப்ரெம்பர் மாதத்துக்குப் பிறகு எதிர்பார்த்த புகழ் கிடைக்காது. அரசியல்வாதிகளும் ஆண்டின் முற்பகுதியில் சிறப்பைக் காண்பர்.

மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவர். நல்ல மதிப்பெண்கள் கிடைக்கும் பலருக்கு வெற்றிக்கு உத்தரவாதம் கொடுக்கலாம். அடுத்த கல்வி ஆண்டு இப்போது போல் இருக்காது. அதிகமாகப் பாடுபட வேண்டியிருக்கும். விவசாயிகள் சிறப்பான நிலையில் இருப்பர். புதிய சொத்து வாங்கலாம். வழக்கு விவகாரங்கள் சாதகமாக இருக்கும். ஆனால், புதிய வழக்குகள் எதிலும் சிக்கவேண்டாம்.

பெண்கள் ஆண்டின் முற்பகுதியில் நல்ல பலனைக் காணலாம். குறிப்பாக வேலைக்குச் செல்லும் பெண்கள் செல்வாக்கோடு இருப்பர். ஆண்டின் பிற்பகுதியில் அதிக உழைப்பையும், பளுவையும் சுமக்க வேண்டி இருக்கும் குடும்பத்தைப் பெறுத்தவரை விட்டுகொடுத்து போவது நல்லது.

உடல்நலம் சுமாராக இருக்கும். தாயின் உடல்நலம் தேறும். கேதுவால் உங்களுக்கு சிறுசிறு உபாதைகள் வரலாம். நெருப்பு தொடர்பான வேலையில் இருப்பவர்களுக்குச் சற்று கவனம் தேவை. சனிக்கிழமை தோறும் சனிபகவானுக்கு நல்லெண்ணெய் தீபம் ஏற்றுங்கள். ஊனமுற்றவர்களுக்கு இயன்ற உதவி செய்யுங்கள். பத்திரகாளி அம்மனை வழிபடுங்கள். ராகு கால பூஜையில் கலந்துகொள்ளுங்கள்.

*(நன்றி: மாலைமலர்)*

# வசதியீனங்களும் வளப்பற்றாக்குறைகளும் வன்னிப் பாடசாலைகளில் தொடர்கின்றன



**வன்னிப் பெருநிலப்பரப்பில் கடந்த கால யுத்தங்களினால் மிகவும் பாதிக்கப்பட்ட - பின்தங்கிய துறைகளில் ஒன்று கல்வி.**

**யுத்தத்தின் சத்தங்களுக்கும் - இடப்பெயர்வுகளுக்கும் - மத்தியில் வளப்பற்றாக்குறைகளுடன் பல பாடசாலைகள் இயங்கிவந்தன.**

**இத்தகைய பாடசாலைகளில் கற்சிலை மடு அ.த.க.பாடசாலையும் ஒன்றாகும். இப்பாடசாலையின் கடந்த கால - இன்றைய நிலைமைகள் குறித்து அதிபர் பொ.அருமைச்சந்திரன் தெரிவித்த கருத்துக்களை இங்கு தருகிறோம்.**

❑ கே. கற்சிலை மடு பாடசாலையின் கடந்த கால நிலைபற்றி.......?

● ப. கற்சிலைமடு அரசினர் தமிழ்கலவன் பாடசாலைக்கு 1986 ஆம் ஆண்டு பட்டதாரி ஆசிரியராக வந்தேன். அப்போது இப்பாடசாலை ஜி.சீ.ஈ. சாதாரணதர வகுப்பு வரை உடைய பாடசாலையாக இருந்தது.

மாணவர்கள் 400 பேர் கற்றுக்கொண்டிருந்தார்கள். பாடசாலையின் கல்விப் பெறுபேறுகள் நல்லநிலையில் இருந்தன. சாதாரண தரத்தில் அப்போது தோற்றிய மாணவர்களில் 7 மாணவர்களுக்கு மேல் க.பொ.த. உயர்தரம் கற்கத் தகுதி பெற்றிருந்தார்கள்.

இடைப்பட்ட காலத்தில் நாட்டு நிலைமைகளினால் பாடசாலையின் பெறுபேறுகள் சற்று வீழச்சியடைந்தன.

1987 - 1988 - 1989 காலப்பகுதிகளில் இங்கு சுமுகமான நிலைமைகள் இருக்கவில்லை. பாடசாலையின் பெறுபேறுகள் குறைந்தே இருந்தன.

கட்டடங்கள், தளபாடங்கள் போன்ற பௌதிக வளங்கள் வழங்கப்படுவதிலும் பின்னடைவு இருந்தது. இதனால், இப்பாடசாலையில் வீழ்ச்சிப்போக்குக் காணப்பட்டது.

### யுத்த அழிவுகள்

❑ கே. இராணுவ நடவடிக்கையால் கடந்த காலங்களில் ஏற்பட்ட இழப்புகள் பற்றி...?

● ப.1997 காலப்பகுதியில் ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை சிறிலங்கா அரசினால் நடத்தப்பட்டது. அந்தநேரத்தில் இப்பகுதியில் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. எம்மால் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டுகளை செய்ய முடியாமலிருந்தது.

இத்தாக்குதல்கள் காரணமாக இறப்புக்கள், இழப்புக்கள் ஏற்பட்டதால் இப்பிரதேச மக்கள் இடம்பெயரத் தொடங்கினர். அதனால், நாமும் சற்றுத்தொலைவில் உள்ள முத்தையன்கட்டுப் பகுதிக்குப் பாடசாலையை நகர்த்தவேண்டிய தேவை ஏற்பட்டது.

அப்பகுதியில் இயங்கியபோது மாணவர்கள் தொகை மிகவும் குறைந்தே காணப்பட்டது.

மீண்டும் 1997 இன் பிற்பாடு எமது பாடசாலைக்கு வந்து நடத்தக்கூடிய நிலை இருந்தமையால் மீளப்பாடசாலையை ஆரம்பித்தோம்.

### கட்டடவசதிகள் இல்லை; மரங்களின் கீழ் மாணவர்கள்

❑ கே:- அப்போதைய நிலையில் தளபாடம் கட்டடம் மற்றும் ஏனையவசதிகள் எப்படி இருந்தன?

● ப:- அப்போது மட்டுமல்ல இன்றுவரை கட்டட வசதிகள் குறைவாகத்தான் உள்ளன தளபாடங்களும் நீண்டகாலமாக தரப்படாதிருந்தன. மாணவர்கள் மரங்களின் கீழ் நிலத்திலேதான் இருந்து கற்று வருவதுடன் மேல் வகுப்பு மாணவர்கள் மிகவும் நெருக்கமாக இருந்து கற்றார்கள்.

கட்டட வசதிகள் இல்லாததால் சிலவகுப்புக்களை மரங்களின்கீழ் நடத்திவந்தோம். அத்துடன், சுகாதாரப்பிரச்சினை பாரிய பிரச்சினையாக இருந்தது.

மலசலகூடங்கள் தற்காலிகமாக எங்களால் அமைக்கப்பட்டிருந்தன குடிதண்ணீருக்கு கிணறு மட்டும் இருந்தது. ஆனால், குழாய் வசதிகள் எதுவும் இருக்கவில்லை அந்த நிலையிலும் நாம் கற்பித்தல் செயற்பாடுகளைக் கைவிடவில்லை.

❑ கே: பாடசாலையின் தற்போதைய நிலை பற்றிக் கூறுங்கள்?

● ப:- 1998 ஆண்டு டிசெம்பர் 5ஆம்திகதி 'ரிவிபல' இராணுவ நடவடிக்கை என்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதனால் இப்பகுதியில் மிகவும் பதற்றநிலை ஏற்பட்டிருந்தது. இராணுவம் ஒட்டுசுட்டானுக்கு வந்ததால் மக்கள் எல்லோரும் இடம்பெயர்ந்தனர்.

இதனையடுத்து, எமது முல்லைதீவு திணைக்களத்தின் ஆலோசனைப்படி புதுக்குடியிருப்பில் சிறு கொட்டகை அமைத்து எமது கற்றல் செயற்பாடுகளை நடத்திவந்தோம். எமது பிள்ளைகள் உட்பட வேறு பாடசாலைப் பிள்ளைகளும் சேர்ந்து சுமார் 500 இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு கல்வி கற்பித்தோம்.

### மரநிழலின் கீழ் கல்வி கற்கும் அவலம் மாணவர்களுக்கு இனியும் வேண்டாம்

இடம்பெயர்ந்து அல்லல் உற்றபோதும் மாணவர்களுக்கு கல்வி வழங்குவதில் அக்கறையாக இருந்தோம். அப்போதும் சாதாரண தர பெறுபேறு வீழ்ச்சியடையாமல் இருந்தது.

கல்வித்திணைக்களத்தினதும் அரசசார்பற்ற நிறுவனங்களினதும் அனுசரணையினால் நாம் பாடசாலையைத் தொடர்ந்து நடத்த வாய்ப்பு ஏற்பட்டது. அதன் பின்பு 2000ஆம் ஆண்டு சித்திரை மாதம் மீண்டும் நாம் எமது சொந்த இடத்திற்கு சென்றிருந்தசமயம் பாடசாலைக் கட்டடத்தின் கூரைகள் அகற்றப்பட்டிருந்தன. தளபாடங்கள் இல்லாதிருந்தது. பாடசாலை நிலம் மட்டும் இருந்தது. என்னுடைய காரியாலயக் கட்டடம் இன்னொரு கட்டடம் என்பவற்றில் மட்டும் கல்விச் செயற்பாடு நடத்தக்கூடியதாக இருந்தது.

இதனால் பெற்றோர், பழைய மாணவர்கள் நாங்கள் யாவரும் சேர்ந்து 100 அடிக் கொட்டகை ஒன்றினை அமைத்து, கற்சிலைமடு பிரதேசத்திலிருந்து மீண்டும் மாணவர்களைச் சேர்த்து பாடசாலையை நடத்திவந்தோம்.

தற்போது 600 பிள்ளைகள் கல்வி கற்கின்றார்கள். பாடசாலை க.பொ.த உயர்தர கலைப் பிரிவு வரை உயர்ந்திருக்கின்றது.

### வளப்பற்றாக்குறை இப்போதும் தொடர்கிறது

புரிந்துணர்வு ஒப்பந்தம் வந்ததின் பிற்பாடு பல்வேறு நிறுவனங்களும் உதவிசெய்ய முன்வந்தன. ஆனாலும், இப்போதும் வளப்பற்றாக்குறை தொடர்கிறது.

ஆரம்பக்கல்வியைப் பொறுத்தவரையில் 10 ஆசிரியர்கள் இருக்கவேண்டிய நிலையில் ஐவர் மட்டுமே கடமையாற்றுகிறார்கள்.

அந்த இடைவெளியை இந்தப் பிரதேசத்தில் கல்விகற்ற மாணவிகள் தொண்டர் ஆசிரியர்களாகக் கற்பித்து வருகிறார்கள். தற்போது கல்விகற்கின்ற ஆசிரியர்கள், தொண்டர் உட்பட 23 பேர் இருக்கிறார்கள். இதில் ஆரம்பக் கல்வியில் பற்றாக்குறை இருக்கின்றது. இடைநிலையில் உடற்கல்வி போன்ற பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லை. கணித, விஞ்ஞான, ஆங்கில பாடங்களுக்கும் ஆசிரியர் பற்றாக்குறை இருக்கின்றது.

செவ்வி: இ.தனபாலசிங்கம்
(ஒட்டுசுட்டான் செய்தியாளர்)

க.பொ.த. உயர்தரத்திற்கு இந்து நாகரிகத்திற்கும் ஆசிரியர் இல்லை.

இத்தகைய ஆசிரியர் பற்றாக்குறையினால் இங்கு கல்வி மற்றும் விளையாட்டுத் துறைகளை மேலும் முன்னேற்ற முடியாத நிலை இருக்கிறது கட்டட மற்றும் தளபாட வசதிகளும் போதியளவு வழங்கப்பட்டால், எமது பாடசாலை மாணவர்களும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று சித்தியடைவார்கள். ★

# தொழில்சார் கல்விக்கு வழிகாட்டும் பயிற்சிகள்

வடமாகாணத்திலுள்ள மாணவர்கள் தமது ஆற்றல்களை வெளிப்படுத்தித் தம் தொழில் மற்றும் கல்வித் துறைகளைத் தெளிவாக நிர்ணயித்துக் கொள்வதற்கான வழிமுறைகளை எடுத்துக்கூறும் நோக்குடன் பயிற்சிப்பட்டறைகள் நடத்தப்படவுள்ளன. மொரட்டுவப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கிய மன்றம் இதற்கான முதற்கட்ட பட்டறைகளை வவுனியா, கிளிநொச்சி, மல்லாவி மற்றும் புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களில் நிறைவுசெய்துள்ளது.

இதன் அடுத்தகட்டமாக யாழ்ப்பாணத்தில் நடத்தப்படுகிறது. நேற்று யாழ். மத்திய கல்லூரியில் இப்பட்டறைகள் நடைபெற்றன. இன்று ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் நாளை திங்கட்கிழமை யாழ். இராமநாதன் கல்லூரியிலும், சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

இப்பட்டறையில் கல்வி வழிகாட்டல், தொழில்சார் கற்கை நெறி சம்பந்தமான விளக்கமும் ஆற்றல் மேம்படுத்துகை (Skill Development) மற்றும் 'சுனாமி' பற்றிய அறிமுக விளக்கமும் இடம்பெறவுள்ளது.

மாணவர்கள் 'உயர்தரப் பரீட்சையில் தேறினால் மட்டுமே மேற்படிப்பு' என்ற நிலைப்பாடே எம் மாணவ சமுதாயத்தில் காணப்படுகிறது. இந்த நிலை மாறி சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய பின்னர் மாணவர்கள் அவர்களின் ஆற்றல்களுக்கு ஏற்றவகையில் தொழில்துறைகளைத் தேடுவதற்கான கற்கை நெறிகளை அறிமுகப்படுத்தப்படவுள்ளன. இதில முகாமைத்துவக் கற்கை நெறிகள், தகவல் தொழில்நுட்பக் கற்கை நெறிகள், பல்கலைக்

**தமிழ் இலக்கிய மன்றம்**
**மொரட்டுவ பல்கலைக்கழகம்**

கழகக் கற்கை நெறிகள், தொழில்நுட்பக் கற்கை நெறிகள், வெளிநாட்டுப் பட்டப்படிப்புகள மற்றும் ஆங்கிலக் கற்கை நெறிகள் சம்பந்தமாகப் போதிக்கப்படவுள்ளது. இக்கற்கை நெறிகள் மூலம், மாணவர்களது எதிர்காலத் திட்டம் பற்றிய அறிவுரைகள் அதனால் ஏற்படும் நன்மைகள் பற்றியும் போதிக்கப்படவுள்ளன.

இன்றைய கால கட்டத்தில் முகாமைத்துவக் கற்கை நெறிகள் மற்றும் தகவல் தொழில்நுட்பக் கற்கை நெறிகளுக்குக் கேள்விகள் அதிகரித்துக் காணப்படுவதுடன், கூடிய வருவாயை ஏற்படுத்திக் கொடுக்கும் மூலகமாகவும காணப்படுகின்றது. இக்கற்கை நெறிகளைக் கற்பதற்கு மாணவர்கள் மத்தியில் மிகுந்த போட்டியும் காணப்படுகின்றது.

மேலும் பல்கலைக்கழகக் கற்கை நெறிகளைப் பொறுத்தவரையில் மாணவர்கள் மத்தியில் தெளிவற்ற நிலை காணப்படுகின்றது. எந்தப் பல்கலைக்கழகத்தைத் தெரிவு செய்வது எவ்வாறான பட்டப்படிப்பை மேற்கொள்வது என்பது அவர்களது எதிர்காலத் திட்டம் நோக்கியதாக இருத்தல் வேண்டும். இவ்வாறான குழப்பங்களைத் தவிர்ப்பதற்காக பல்கலைக்கழகக் கற்கை நெறிகள் சம்பந்தமாகப் போதிக்கப்படவுள்ளது. இதனுடன் பல்கலைக்கழக கற்கை நெறிகள் அல்லாத தொழில்நுட்பக் கற்கைகள் சம்பந்தமாகவும் அறிவுறுத்தப்பட இருக்கின்றன. வெளிநாட்டில் பயிலக்கூடிய கற்கை நெறிகள், அதற்கு தேவையான தகைமைகள் மற்றும் ஆங்கில கற்கை நெறிகள் என்பனவும் போதிக்கப்படவுள்ளன.

மாணவர்கள் சமுதாயத்தில் உயர்நிலையை அடைவதற்குக் கல்வி அறிவு மட்டுமல்லாத வேறு பல ஆற்றல்களும் இப்பட்டறையில் ஆற்றல் மேம்படுத்துகை (Skill Development) என்னும் தொனிப்பொருளில் தெளிவுற விளங்கப்படுத்துகின்றன. ஆற்றல் மேம்படுத்துகை என்பது தனி மனிதனிடத்தில் காணப்படவேண்டிய தொடர்பாடல் தகைமைகள், பூரண ஆங்கில அறிவு, தலைமைத்துவம், முயற்சி, குழுவாக வேலை செய்யும் பண்பு மற்றும் பரீட்சையை எதிர்கொள்ளும் முறைமைகளைப் பற்றியதாக உள்ளது.

இன்று எம்மத்தியில் காணப்படுவது 'சுனாமி' பற்றிய அனுபவமே தவிர அறிவியல் சம்பந்தமானதன்று. எனவே, 'சுனாமி' பற்றிய அறிவு எம்மத்தியில் தேவையானதொன்றாகக் காணப்படுகின்றது. எனவே, இப்பட்டறையில் 'சுனாமி' பற்றிய ஒரு சிறிய விளக்கமும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இப்பட்டறையானது உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய, தோற்றவிருக்கும் மாணவர்களுக்காகவும் பெற்றோர்களுக்காகவும் மற்றும் ஆவலர்களுக்காகவும் இலவசமாக மொரட்டுவப் பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்களால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.


உ

## ஸ்ரீ துர்க்கா ஜோதிட நிலையம்





இந்தியாவிலிருந்து வந்துள்ள

**ராமகிருஸ்ண சாஸ்திரிகள்**

கல்வி, வியாபாரம், திருமணப் பொருத்தம், கணவன்-மனைவி உறவு, அரசியல் பிரச்சினைகள், வீடு - கடை வாஸ்து, வெளிநாட்டுப் பிரயாணம், பிள்ளைகள் பாக்கியம், ஆயுள் ரேகை, எண்கணிதம், கைரேகை மூலம் அறிந்து கொள்ள நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது:

**அறை எண் 5, பிள்ளையார் இன்,**
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
**Room No.5, Pillaiyar Inn**
31, Manipay Road, Jaffna.
Phone: 021 222 2839 Mobile: 0776 923623

(44349) (26-16-24)


## கண்ணீர் அஞ்சலி

சைவவித்தியா விருத்திச்சங்கத்தின் உறுப்பினராக இருந்து சேவையாற்றிய

**நவரட்ணம் ஜெயதிலகன்**

அவர்களின் திடீர் மறைவு எமக்கு அதிர்ச்சியும் மன வேதனையும் அளிக்கின்றது. அவரது மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*சைவவித்தியா விருத்திச்சங்கம்,*
*கலாசாலை வீதி,*
*திருநெல்வேலி.* (சி.42358)(35-33-16-18)

பணிப்பாளர் சபையும் பணியாளர்களும்.

## மரண அறிவித்தல்கள்

### செல்வி வசந்தமலா சொர்ணலிங்கம் (வசந்தி)



இணுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வி வசந்தமாலா சொர்ணலிங்கம் நேற்று (16.04.2005) சனிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சொர்ணலிங்கம் மற்றும் சிவநேசம் ஆகியோரின் அன்பு மகளும் திருமதி சிவசொர்ணகௌரி கந்தராஜ் (ஆசிரியை, யாழ். மத்திய கல்லூரி), பாஸ்கரமூர்த்தி (சுவிற்ஸர்லாந்து), பிரபாகரன் (கனடா), பிரதீபன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கந்தசாமி கந்தராஜ் அவர்களின் மைத்துனியும் சுரபினியின் பாசமிகு சித்தியும் காலஞ்சென்றவர்களான தம்பையா சின்னப்பிள்ளை, தம்பிப்பிள்ளை, முத்துப்பிள்ளை ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-04-2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகக் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'கதிர்காமவசந்தம்'*
*இணுவில் கிழக்கு,*
*இணுவில்.* (44345)(24-33-16-18)

தகவல்:
சிவநேசம் (தாய்).

### நடராசா செல்வரத்தினம்

*(முன்னாள் தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர்)*

யாழ்ப்பாணம், ஆனைப்பந்தி, இல.240, நாவலர் வீதியைச் சேர்ந்த நடராசா செல்வரத்தினம் (முன்னாள் தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர்) 15.04.2005 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*240,நாவலர் வீதி,*
*ஆனைப்பந்தி,*
*யாழ்ப்பாணம்.* (44353)(35-)

தகவல்:
ச.குமரகுரு
(நண்பன்).

## ஆலோசனைக் கூட்டம்

சங்கானை,ஏப்.17

தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கு சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெறுவது தொடர்பான அறிமுகமும் ஆலோசனைக் கூட்டமும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வலி. வடக்கு பிரதேச சபைச் செயலர் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் தொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(த-29-203)


## விற்பனைக்கு

பாவித்த சீற், பனைமரங்கள், கொங்கிறீற் கற்கள், கதவுகள், நிலைகள் என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு:-
ரவிதா ஸ்ரோர்ஸ்
இல. 377, மணிக்கூண்டு வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.223221

(44354)


**மகேசன் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்**

- முதலாம் பரிசு இல. - 3891
- 2ஆம் பரிசு இல. - 4483
- 3ஆம் பரிசு இல. - 851

ஆறுதல் பரிசு இலக்கங்கள்:
884, 713, 1632, 2514, 4249, 675, 2326, 4365, 4359, 4235

பரிசுகளை றீகல் றைக்கோடிங் பாரில் பெற்றுக்கொள்ளலாம்.

*கரவெட்டி மத்தி,* **மகேசன் வி.க.** (42355) (24-)

## மரண அறிவித்தல்கள்

### ஆபிரகாம் செல்வச்சந்திரன் (சந்திரன்)



*(முன்னாள் ஊழியர் சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை)*

பாரதி வீதி, நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஆபிரகாம் செல்வச்சந்திரன் (சந்திரன்) அவர்கள் நேற்று (16.04.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆபிரகாம் மற்றும் யோகம்மா தம்பதியினரின் அன்பு மகனும் செல்வமணியின் அன்புக் கணவரும் சதீஸ்குமாரின் (சூட்டி) அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சின்னப்பு - சின்னம்மா தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற மார்க்கண்டு பரமேஸ்வரி மற்றும் கனகேஸ்வரி, காலஞ்சென்ற பஞ்சம் மற்றும் ஜெகநாதன் (நாதன்), ஜீவானந்தம் (ரவி), தேவிகாராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற மார்க்கண்டு மற்றும் சதாசிவம், தவமணி, அருந்தவம், செல்வராஜா, செல்லம்மா,கனகம்மா, சண்முகராஜா, பொன்னுத்துரை காலஞ்சென்ற பரஞ்சோதி, காலஞ்சென்ற தியாகலட்சுமி மற்றும் நடராஜா, பாலச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2005) ஞாயிற்றுக்கிழமை இல.11, ராணி வீதியில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.11, ராணி வீதி,*
*செம்மணி றோட், நாயன்மார்கட்டு.* (44351)(35-33-16-18)

தகவல்:
மனைவி.

### சாமித்தம்பி மனோகரன்



குடத்தனை வடக்கு, குடத்தனையைப் பிறப்பிடமாகவும் புத்தளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சாமித்தம்பி மனோகரன் நேற்று (16.04.2005) சனிக்கிழமை புத்தளத்தில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.04.2005) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் கல்லூரி வீதி, பருத்தித்துறையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*கல்லூரி வீதி,*
*பருத்தித்துறை.* (44357)(35-33-16-18)

தகவல்:
தகப்பன் - சாமித்தம்பி,
மனைவி - வசந்தி,பிள்ளைகள்.

## முக்கிய அறிவித்தல்

**இலங்கை வங்கியின்**
**யாழ்ப்பாணம் மேற்றரக்கிளை,**
**யாழ்ப்பாணம் இரண்டாம் கிளை,**
**திருநெல்வேலிக்கிளை**
**ஆகியவற்றின்**

# வாடிக்கையாளர்களுக்கு

மேற்குறிப்பிட்ட இலங்கை வங்கிக் கிளைகள் மூன்றும் நவீன வசதிகளுடனான தரம்கூடிய புதிய கணனிமுறை ஒன்றுக்கு எதிர்வரும் - 25-04-2005 திங்கட்கிழமை முதல் மாற்றஞ்செய்யப்படவுள்ளதால் சேமிப்புக் கணக்குகளை (சகலவிதமான சேமிப்புக் கணக்குகளும்) வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் தங்களது சேமிப்புப் புத்தகத்தை - நாளை (18-04-2005) திங்கட்கிழமை முதல் வங்கியில் சமர்ப்பித்து, அவற்றைப் பதிந்து நிலுவையைச் சரிபார்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

**இலங்கை வங்கி,**
**ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.** (சி-42356)(26-33-16-18)

**உதவிப் பொதுமுகாமையாளர்**
**(வட பிராந்தியம்).**

### கலந்துரையாடல்

வலி.வடக்கு, ஏப்.17

மே தினக் கூட்டம் சம்பந்தமான விரிவான கலந்துரையாடல் எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் மேதின ஊர்வல ஏற்பாடுகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக ஆராயப்படவுள்ளன.

இக்கலந்துரையாடலில் அனைத்துத தொழிற்சங்கங்களினதும் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின தலைவர், செயலாளர்கள் மற்றும் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் உட்பட அனைவரையும் கலந்துகொள்ளும் படி மேதின ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுள்ளனர்.

(த-86)

# அமெ. படை அதிகாரிகள் குழு குடாநாட்டுக்கு வந்து திரும்பியது

பலாலி,ஏப்.17

அமெரிக்கப் படையின் உயர் அதிகாரி அட்மிரல் வில்லியம் ஜே. பல்லோன் தலைமையிலான குழுவினர் கடந்த செவ்வாய்க்கிழமை குடாநாட்டுக்கு வந்து திரும்பினர்.

பலாலியில் செயற்படும் பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் இத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

அட்மிரல் வில்லியம் ஜே. பல்லோன் தலைமையிலான குழுவில் லெப்.கேணல் ரிச்சாட் எஸ்.கிர்வன், லெப்.கேணல் ஜக் பிளச்சர், லெப் கேணல் கிரிஸ் புஜியக், றொம் மொக்லர், ரவிக் குசோ ஆகியோர் இடம்பெற்றனர்.

இக் குழுவினர் கடந்த செவ்வாய்க்கிழமை காலை கொழும்பிலிருந்து விமானம் மூலம் யாழ்ப்பாணம் வந்தனர். யாழ். பாதுகாப்புப் படைத்தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.டி.தென்னகோன் அவர்களை வரவேற்றார்.

தற்போதைய பாதுகாப்பு நடவடிக்கைகள், சுனாமியினால் குடாநாட்டில் ஏற்பட்ட உயிர் மற்றும் பொருள் இழப்புகள் ஆகியவை குறித்து அமெரிக்கக் குழுவினருக்கு விளக்கமளிக்கப்பட்டது. தமது வருகையை நினைவுபடுத்தும் முகமாக மாங்கன்று ஒன்றை அமெரிக்கக் குழுவினர் நட்டனர்.

பின்னர் ஹெலிகொப்டர் மூலம் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு அவர்கள் வடபிராந்திய கடற்படைத் தளபதி றியல் அட்மிரல் வசந்த தென்னகோனைச் சந்தித்துப் பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றிக் கேட்டறிந்தனர்.

அதன் பின்னர் முகமாலை சோதனைச் சாவடியைப் பார்வையிட்ட அமெரிக்கக் குழுவினர் பிற்பகல் விமானம் மூலம் கொழும்பு சென்றனர்.

# சுகாதார நிறுவனங்களை கண்காணிக்க குழு நியமனம்

யாழ்ப்பாணம்,ஏப்.17

சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் சகல நிறுவனங்களிலும் விசாரணைகளையும், திடீர் பரிசோதனைகளையும் நடத்துவதற்கு அரசினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

45 பரிசோதகர்களைக் கொண்ட இக் குழுவுக்கு பயிலுநர் பட்டதாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நாடு முழுவதும் அமைச்சின் கீழ் இயங்கும் சகல நிறுவனங்களினதும் செயற்பாடுகளையும் இக்குழு திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தும். அத்துடன், பொதுமக்களினாலும், ஊழியர்களினாலும் கொடுக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளையும் இக் குழுவினர் மேற்கொள்வார்கள்.

ஊழியர்கள் கடமைக்கு நேரத்திற்கு சமுகமளித்தல், கடமைக்குரிய இடங்களில் சமுகமளித்திருத்தல் ஆகிய விடயங்களிலும் இக் குழு கவனஞ்செலுத்தும்.

இவர்களுக்கு வேண்டிய ஒத்துழைப்பை வழங்குமாறு சகல நிறுவனத் தலைவர்களையும், ஊழியர்களையும் அமைச்சு கேட்டுள்ளது.

இதற்கான சுற்றறிக்கை அமைச்சின் கீழ் இயங்கும் சகல நிறுவனங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஐ-15)

## உரும்பிராய் முன்பள்ளி விளையாட்டுப் போட்டி

உரும்பிராய் தெற்கு, யோகபுரம் அண்ணா சனசமூக நிலைய சின்னமருது முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 3 மணிக்கு அண்ணா சனசமூக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ்பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர். (3)

## பாவனைக் காலம் முடிவடைந்த பொருள்கள் அழிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.17

தென்மராட்சிப் பகுதியில் காலாவதியான உணவுப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

அண்மையில் தென்மராட்சிப் பிரதேசத்தின் கொடிகாமம், சாவகச்சேரி, கைதடி ஆகிய இடங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் விலைக்கட்டுப்பாட்டுப் பகுதியின் யாழ். மாவட்டப் பிரிவு மேற்கொண்ட திடீர் சோதனையின் போதே காலாவதியான பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

சுகாதாரப் பரிசோதகர்களின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட இத்திடீர் சோதனையின் போது சோடா வகைகள், பிஸ்கட் வகைகள், இனிப்பு வகைகள் மற்றும் போத்தலில் அடைக்கப்பட்ட தண்ணீர் போன்ற பொருள்களே பாவனைக்காலம் கடந்த பின்னரும் விற்பனை செய்யப்படுவது கண்டுபிடிக்கப்பட்டு அப்பொருள்கள் அழிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-202)




நாதன்ஸ் சினிமா ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.

தாவடிமைந்தன் ஜெய் ஆகாஷ், பிரணதி, நாசர், தாமு, வையாபுரி நடிக்க

குருதேவா



நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

ரஜனி, நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல் நடித்த

சந்திரமுகி

காட்சிகள் 11.00. 3.0 7.00 (பு.நே) விசேட காட்சிகள்: 10.00. 1.00. (பு.நே.)

லக்‌ஷ்மி இணுவில்

ஸ்ரீகாந், மீராஜஸ்மின், விவேக் நடித்த

ஜூட் (ரீமஸ்)

காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00, (பு.நே.)



ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு கமலஹாசன், மனிஷா கொய்ராலா, நாசர் நடித்த

மும்பை X பிரஸ் (ரீமஸ்)

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.



மனோகரா யாழ்ப்பாணம்

விஜய், ஹரினி, வடிவேல் நடித்த

சச்சின்

காட்சி நேரம்: 10.30 a.m., 2.30.p.m.,6.30p.m.,9.30 p.m.

நிறைஞ்சனாஸ் சங்கானை

சரத்குமார், நமிதா, வடிவேல் நடித்த

ஏய்

கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)


## கண்ணீர் அஞ்சலி



திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகத் தலைவரும் இளைப்பாறிய வங்கியாளருமான

**நவரட்ணம் ஜெயத்திலகன்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

*இல.16, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.* (44363)(33-16-18)

*அப்பலோ வைத்திய நிலையம். (கண் சிகிச்சைப் பிரிவு)*

## கண்ணீர் அஞ்சலி



15.04.2005 அன்று காலமான, ஓய்வுபெற்ற இலங்கை வங்கி உத்தியோகத்தர்

**நவரட்ணம் ஜெயத்திலகன்**

அவர்களின் மறைவினால் துயர் அடைவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

*இலங்கை வங்கி, திருநெல்வேலி.* (சி-42360)(33-16-18)

*முகாமையாளரும், ஊழியர்களும்.*


யாழ்ப்பாணத்தில் விமான ரிக்கெற்றுக்களுக்கும் விடுதி வசதிகளுக்கும் } விசேட கழிவுகள்



குறைந்த கட்டணத்தில் விமானச்சீட்டுக்கள்

உங்கள் விமானப் பயணங்களைத் தனித்துவமாகக் கையாள்கின்றோம்.

1. உள்நாட்டு, வெளிநாட்டு விமான ரிக்கெற்றுக்களுக்கும் அதன் முன்கூட்டிய பதிவுகளுக்கும்
2. விசா சம்பந்தப்பட்ட ஆவணங்கள்
3. விமானப் பயணிகளின் காப்புறுதி விவரங்கள்
4. ஐரோப்பிய நாடுகளிடையே புகையிரதங்களில் பயணிப்பதற்கான புகையிரதப் பயணச் சீட்டுக்கள்
5. விமான நிலையத்தில் போக்குவரத்து வசதிகள்
6. பயணிகள் காசோலை பற்றிய விவரங்கள்
7. உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பயண ஏற்பாடுகள்
8. யாழ். கிளையால் மேற்கொள்ளப்படும் யாழ்ப்பாணத்துக்குள்ளேயான உல்லாசப் பயண வசதிகள்.



அனைத்துக்கும் உடனே நாடுங்கள்:

AITKEN SPENCE OVERSEAS TRAVEL SERVICES (PVT) LTD

56/15, STANLEY ROAD, JAFFNA.

☎ 021 222 3771 Mobile: 0777 915824. E.mail - aitkenspencejf @ sltnet.lk.

Head Office Colombo: 305, Vauxhall Street, Colombo - 02

Tel. 230 8308, 2300913

(சி-42344)(33-16-18)


## இசை வகுப்பு ஆரம்பம்

வலி.தெற்கு,ஏப்.17

தெல்லிப்பழை காசி விநாயகர் ஆலயத்தில் இயங்கிவரும் பால் ஞானோதய சபையினரால் புதுவருடத் தினத்தன்று இலவச இசை வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை ஞானோதய சபையின் 60 ஆவது ஆண்டினை முன்னிட்டு மேற்படி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

சங்கீதம், நடனம், மிருதங்கம், பண்ணிசை போன்ற இசை வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருவதாக பிரம்மஸ்ரீ எஸ். வரதராச சர்மா தெரிவித்தார்.

(எ-152)

## மரண அறிவித்தல்கள்

### வீரகத்தி குலா ஆனந்தன் (நயினாதீவு)



(சிரேஷ்ட திடீர் பரிசோதகர் வடபிராந்திய போக்குவரத்துச் சபை, கோண்டாவில்)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கொட்டடியை வசிப்பிடமாகவும கொண்ட வீரகத்தி குலா ஆனந்தன் நேற்று (16.04.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*30/4, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.* (44361)(33-16-18)

தகவல்: கு.கஜநீதன் (மகன்), நா.கோபாலகிருஷ்ணன் (சகலன்).

### லயன் நவரட்ணம் ஜெயத்திலகன் (Bankar)



(இளைப்பாறிய வங்கியாளர் – இலங்கை வங்கி, செலான் வங்கி, இந்து வாலிபர் சங்க செயலாளர், அரசடி ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள ஆலய பொருளாளர், யாழ் திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகத் தலைவர்)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நவரட்ணம் ஜெயத்திலகன் 15.04.2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரட்ணம் - புனிதவதி தம்பதியின் அன்பு மகனும் விசாலாட்சியின் அன்புக் கணவரும் ஜெயதீசன் (லண்டன்), ஜெயசீலன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் குலேபா (லண்டன்), டொலி (லண்டன்), சத்தியநாதன் (ஆஸ்திரேலியா), Dr.இராசமுத்தையா (லண்டன்), காலஞ்சென்ற ரஞ்சிதபூரணி (மக்கள் வங்கி), கதிர்காமநாதன் (கொழும்பு), ஆயுள்வேத Dr.நளாயினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சேயோன் (லண்டன்), சப்ரீனா (லண்டன்) ஆகியோரின் பெரியப்பாவும் கோபாலகிருஷ்ணனின் (இளைப்பாறிய மக்கள் வங்கி முகாமையாளர்) சகலனும் கோபிகிருஷ்ணனின் (ஆசிரியர், பரியோவான் கல்லூரி), சித்தப்பாவும் துஷ்யந்தி (கனடா), துர்க்காயினி (ஆஸ்திரேலியா), றூபினி (ஆஸ்திரேலியா), றூபன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.92, பலாலி வீதி, திருநெல்வேலி.*
T.P.: 021 222 3113 (44360)(33-16-18)

தகவல்: மனைவி விசாலாட்சி.

## கண்ணீர் அஞ்சலி



**நவரட்ணம் ஜெயத்திலகன்**

திருநெல்வேலி அரசடி ஸ்ரீ சிவகாம சுந்தரி அம்பாள் ஆலய பரிபாலன சபையின் செயலாளராக, பொருளாளராகப் பதவிகளை வகித்து ஆலயத்தின் வளர்ச்சிக்கு சேவையாற்றிய **நவரட்ணம் ஜெயத்திலகன்** அவர்களின் திடீர் மறைவு எமக்கு அதிர்ச்சியையும் மன வேதனையையும் அளிக்கின்றது. அவரது மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*திருநெல்வேலி. அரசடி ஸ்ரீ சிவகாம சுந்தரி அம்பாள் ஆலயம்.* (44359)(33-16-18)

– பரிபாலனசபை.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மின்சார சபை விவகாரங்கள்:

# உரிய முடிவுகளை விரைந்து எடுக்க நிதி அமைச்சருக்கு ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு.ஏப்.17

பெற்றோலியக் கூட்டுத்தாபன பங்குகளை விற்பனை செய்தல் மற்றும் மின்சார சபையை மறுசிரமைத்தல் ஆகியன தொடர்பாக எதிர் வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் முடிவு காண நடவடிக்கை எடுக்கும்படி ஜனாதிபதி நிதிய மைச்சர் சரத் அமுனுகமவைப் பணித்துள்ளார்.

இவ்விரு விடயங்களுக்கும் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்பாக முடிவு ஒன்று எட்டப்பட வேண்டும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கை அரசுக்கு காலக்கெடு விதித்துள்ளது.

இக்காலக்கெடுக்குள் இலங்கை உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் மானியங்களை இலங்கை இழக்க நேரிடும்.

இந்நிலைமையைத் தவிர்க்க எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக உரிய முடிவுகளை எடுக்கும்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிதியமைச்சருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

தற்சமயம் பிரான்ஸில் நடைபெறும் மாநாடு ஒன்றில் பங்கேற்பதற்காக நிதியமைச்சர் அங்கு தங்கியுள்ளார். இந்த மாநாடு இரு தினங்கள் நடைபெறவிருக்கின்றது. அதன்பின் 15 தினங்கள் அங்கு அவர் தங்குவதாகத் திட்டமிட்டிருந்தார். எனினும் மாநாடு முடிந்த கையோடு கொழும்பு திரும்பி, அடுத்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து முடிவு செய்யும்படி நிதியமைச்சருக்கு ஜனாதிபதி அறிவித்துள்ளார். (ஐ-3)

## யாழ். ஆஸ்பத்திரியில் சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்.ஏப்.17

ஊர்காவற்றுறைக் கடற்கரையில் இருந்து மிகவும் அழுகியநிலையில் சடலம் ஒன்று நேற்றுமாலை யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறைப் பொலீஸாரால் மீட்கப்பட்ட இந்தச் சடலம் அடையாளம் காணும் பொருட்டு யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (3-13)

## கிளாலிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுவந்துள்ளனர்.

புலிகளின் பகுதியில் உள்ள கடற்பரப்புக்கு மேலாக இரு தடவைகள் இந்த விமானம் பறந்ததைத் தாங்கள் கண்டனர் என்றும் -

எனினும், அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அந்த விமானம் பிரவேசிக்கவில்லை என்றும்-

கிளாலிப்படை அதிகாரிகள் விமானப்படைத் தளபதிக்கு தகவல் அனுப்பியுள்ளனர்.

இது தொடர்பாக விசாரணை நடத்தும்படி விமானப்படைத் தளபதி உத்தரவு பிறப்பித்துள்ளார் என்று கொழும்பு செய்திகள் தெரிவித்தன. (ஐ-3)

## வண்டில் - ஓட்டோ விபத்தில் ஒருவர் காயம்

சாவகச்சேரி.ஏப்.17

மாட்டு வண்டிலும் ஓட்டோவும் நேருக்கு நேர் மோதிக்கொண்டன. இச் சம்பவம் நேற்று முன்தினமிரவு 7 மணியளவில் சாவகச்சேரி பெருங்குளம் பிள்ளையார் கோவிலடியில் இடம்பெற்றது.

இவ்விபத்தில் ஓட்டோ தடம் புரண்டது. இதனால், ஓட்டோவில் ஏற்றிச்செல்லப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டி ஒன்று உடைந்து சேதமானது.

இவ்விபத்தில் ஓட்டோ சாரதியான பிறேம் என்பவர் காயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (3-31)

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனுடன் மேற்கொள்ளவிருந்த முக்கிய சந்திப்பும் ரத்துச் செய்யப்பட்டிருப்பதாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறை வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின அரசியல் விவகாரக் குழுவினர் தாயகம் திரும்புவது தாமதமாகி இருப்பினும் அவர்கள் நோர்வே ஆலோசகர் எரிக் சொல்ஹெய்மை கொழும்பில் சந்திப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெரும்பாலும் எதிர்வரும் 20ஆம் திகதி புலிகளின் அரசியல் குழுவினர் கொழும்பு திரும்புவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அவ்வாறு அவர்கள் கொழும்பு திரும்பியதும் அன்றைய தினமே விமான நிலையத்தில் வைத்து எரிக் சொல்ஹெய்மைச் சந்திப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன.

அரச சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால இதனை நேற்றிரவு ஊர்ஜிதம் செய்தார்.

ஆழிப்பேரலை அனர்த்த மீள்கட்டுமானத்துக்கான பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக இடம்பெற்றுவரும் தகவல் பரிமாற்றங்களில் ஒரு கட்டமாகவே எரிக் சொல்ஹெய்ம் தமிழ்ச்செல்வனைச் சந்திக்கின்றார் என்று ஒரு தகவல் தெரிவித்தது. (ஐ-3)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னான பாதுகாப்பு ஒப்பந்தத்தை கைவிட்டு விடவேண்டாம் என்று ஜெயலலிதா பிரதமரிடம் தெரிவித்தார்.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படும் சம்பவங்களைத் தடுத்து நிறுத்த மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கோரினார். (ஐ-3)

## சொருவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெலிகந்தவைச் சேர்ந்த கந்தையா கிருஷ்ண பிள்ளை என்பவரை அவரது தந்தையும் நேற்று அடையாளம் காட்டினர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்து பொலனறுவை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள இருவர் கண்காணிப்புக் குழுவுக்கு வாக்குமூலம் வழங்க மறுத்துவிட்டனர். தமது பெயர் விவரங்களையும் வெளியிட அவர்கள் மறுத்துள்ளனர்.

இதேவேளை -

தாக்குதலின்போது தப்பி ஓடிய 3 பேர் மீண்டும் முகாம் பகுதிக்குத் திரும்பியுள்ளனர் என்றும் -

அவர்கள் கண்காணிப்புக் குழுவுக்கு வாக்குமூலம் வழங்கியுள்ளனர் என்றும் -

தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## நவமி உற்சவம்

குடத்தனை.ஏப்.17

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் ஸ்ரீ இராம நவமி உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு 1008 சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. தொடர்ந்து மாலை விசேட சொற்பொழிவுகள் இடம்பெறும். (3-78)

## ராணுவ மேஜரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குமார ஆகியோருமே சுட்டுக்கொல்லப்பட்டனர்.

நேற்றுக்காலை அதிகாரியான மேஜர் ரட்ணவீர தமது அலுவலகத்தில் இருந்து அருகே உள்ள கனனி அறைக்கு வந்த சமயம் பிரஸ்தாப சிப்பாய் முதலில் அவரை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தார் என்றும் -

சக சிப்பாய்களான கோப்ரல்கள் இருவரும் அவரைத் தடுக்க முற்படவே அவர்களையும் சுட்டுக்கொன்றார் என்றும் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி நீதிவான் பா.சுப்பிரமணியம் சம்பவ இடத்துக்குச் சென்று சடலங்களைப் பார்வையிட்டார்.

சடலங்களை கொழும்பு சட்டவைத்திய அதிகாரியின் மூலம் பிரேத பரிசோதனை நடத்தி உறவினர்களிடம் கையளிக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

மரண விசாரணை நாளை சாவகச்சேரி நீதிமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட சிப்பாய் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. பிரஸ்தாப சிப்பாய் புத்தாண்டு பண்டிகைக்காக வீடுசெல்ல விடுமுறை வழங்குமாறு கேட்டிருந்தார் என்றும் -

விடுமுறை வழங்கப்படாததையடுத்தே ஆத்திரத்தால் உயர் அதிகாரியைச் சுட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி ஒருவார காலத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ். படைகளின் தளபதிக்கு இராணுவத் தளபதி உத்தரவிட்டிருக்கின்றார். (ஐ-3)

## மூவர் பயணம் செய்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோட்டார் சைக்கிள் வேகமாக சந்திக்கு வருவதைக் கண்ட சாரதி நிலைதடுமாறியபோது மினிபஸ் கட்டுப்பாட்டை இழந்தது என்று கூறப்படுகிறது.

கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் விசாரணை ஒன்றுக்காகச் சென்றுவிட்டுத் திரும்பிய மூவர் பயணம் செய்த மோட்டார் சைக்கிளே மினிபஸ்ஸுடன் மோதுண்டது. அதில் பயணம் செய்தவர்களில் ஒருவரான தேவராசா உதயகுமார்(வயது 26) என்பவர் மினிபஸ்ஸின் சக்கரங்களுக்குள் சிக்கிப் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்ட வழியில் உயிரிழந்தார். இவர் இருபாலை வி.எச்.லேனைச் சேர்ந்தவர். மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற - இவரது சகோதரரான - தேவராசா ஜெயராசா (வயது 31) என்பவரும், இறந்தவருக்குப் பின்னால் அமர்ந்திருந்து பயணம் செய்த மூன்றாவது நபரான செல்லையா ரஞ்சித் (வயது 28) என்பவரும் படுகாயங்களுக்கு உள்ளாகினர்.

இந்த விபத்தின் போது வீதியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த வழிப்போக்கர் ஒருவரும் காயமடைய நேர்ந்தது. இருபாலையைச் சேர்ந்த ஆறுமுகம் முத்துக்குமாரசாமி (வயது 50) என்பவரே காயமடைந்தவராவார். இவரும் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்.

விபத்தை அடுத்து, மினி பஸ்ஸில் இருந்த பயணிகள் இறங்கிக்கொண்டனர். அதன் சாரதி இறங்கித் தப்பி ஓடித் தலைமறைவானார். அங்கு திரண்ட பொதுமக்கள் ஆத்திரமடைந்து மினி பஸ்ஸுக்குப் பெற்றோல் ஊற்றி தீ வைத்தனர். தகவல் அறிந்தவுடன் கோப்பாய் பொலீஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர். விடுதலைப் புலிகளின் கோப்பாய்க் கோட்ட அரசியல் துறை உறுப்பினர்களும் அவ்விடத்துக்கு வந்து சேர்ந்தனர். அப்பகுதியில் அசம்பாவித சம்பவங்கள் நிகழாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

யாழ். மாநகர தீயணைப்புப் பிரிவினர் சிறிது நேரத்தில் வந்து தீயை அணைக்க முயன்றனர். எனினும் மினிபஸ் முற்றாக எரிந்து காணப்பட்டது.

கலகம் அடக்கும் பொலீஸ் குழு ஒன்று அங்கு வந்து சேர்ந்தபோதும் அவர்களின் பணி அவசியமில்லை என்று தெரிவிக்கப்பட்டதை அடுத்து அவர்கள் திரும்பிச் சென்றனர்.

யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்டார். பலரது வாக்குமூலங்கள் பெறப்பட்டன.

இருபாலைச் சந்தியில் இந்த விபத்து ஏற்பட்டதால் பருத்தித்துறை வீதி வழியான போக்குவரத்துகள் சிறிதுநேரம் பாதிக்கப்பட்டன. (ஐ-7-180-72)


யாழ். நகரில் O/L DAY CLASS வகுப்பிற்கு நிபுணத்துவம் வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்ட ஒரே நிறுவனம்.
நாவலர் இன்ஸ்ரிரியூட்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
O/L DAY CLASS
பிரிவு -I ஆரம்பமாகிவிட்டன.
பிரிவு -II ஆரம்பம் 20.04.2005, புதன் - 8.30 - 2.30
குறிப்பு: ★ கணித வகுப்பு மாதத்தில் 30 மணித்தியாலங்கள் நடைபெறும்.
★ கணித பாடம் சித்தியடையாதவர்களுக்கு சனி, ஞாயிறு தினங்களில் மேலதிக இலவச வகுப்பு.
(44362) (15-18)

SKY COMPUTERS (PVT) LTD
Affiliated with Irish International University (U.K.)
No.89, Kandy Road, Chundikuli, Jaffna.
Tel: 021- 4590325 Fax: 021 - 4590325
MS OFFICE - 3 MONTHS
MS-WORD - 1 MONTH
MS - EXCEL - 1 MONTH
MS - ACCESS - 1 MONTH
MS - POWER POINT - 1 MONTH
MS-Office 2000/=
DTP 3000/= 3 MONTHS
DESK TOP PUBLISHING - 3 MONTHS
ADOBE PHOTO SHOP - 1 MONTH
ADOBE PAGE MAKER - 1 MONTH
COREL DRAW - 1 MONTH
KIDS PROGRAM சிறுவர்களுக்கான பயிற்சி நெறி
Tally - 6.3
Complete Bussness Solution (EES)
Extended Enterprice System
அனைத்துப் பாடத்திற்குமான புதிய பிரிவுகள் ஆரம்பிக்கவுள்ளது. குறுகியகாலத்திற்குள் நீங்கள் விரும்பிய பாடநெறியினைக் கற்றுத்தேற உடன் விரையுங்கள்.
E - mail : sky com@wow.lk
(கச்சேரிக்கு அருகில்)
Today you learn Tomorrow you lead

SKY COMPUTER S YSTEM
No.109, Kandy Road, Chundikuli, Jaffna.
Hot-line: 0777 222478
விற்பனைக்குண்டு
Pentium III 500 MHZ IBM Computer, With Multimedia
10 GB Hard Disk
128 MB RAM
25,500/=
ஒருவருட உத்தரவாதத்துடன்
Unlimited soft ware & free dust cover
15" Monitor - 6,500/=
அரசாங்க ஊழியர்களுக்கு தவணைமுறையில் பெற்றுக்கொள்ளும் விசேட சலுகை உண்டு.
(சி-42348) (15-16) கச்சேரிக்கு அருகில்.

NEW SCIENCE CENTRE
யாழ்.நகர்
A/L 2006 ORGANIC
ஆரம்பம்: 18.04.2005 Mon. 10 a.m.
INORGANIC - பிரிவு III
Mon., Wed. 3.00 - 4.00 p.m..
INORGANIC PAPER
Fri. 3.00 - 5.00 p.m.
★ A/L 2007 புதிய பிரிவு விரைவில் ஆரம்பம்.
★ A/L 2005 இற்குரிய 18ஆவது கருத்தரங்கு Tue. 8.30 நடைபெறும்.
By: அன்பழகன் B.Sc.

சமய சந்தர்ப்பங்கள் எப்போதும் கிட்டுவதில்லை
UNIT
விபரம் 10ஆம் பக்கம் பார்க்கவும்

கற்பகம் கல்வி நிறுவனம்
நாவலர் வீதி, யாழ்.
O/L DAY CLASS
ஆரம்பம்: 18.04.2005
காலை 8.00 - 1.30
(44358) (15-18)

EXPOAIR எக்ஸ்போ ஏயார்
your friend in the skies... வானத்தில் உங்கள் நண்பன்...


தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.04.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## தேவை
### சந்தைப்படுத்தல் அதிகாரி
### Marketing Executive

இயற்கை மூலிகைகளிலிருந்து தயாரிக்கப்பட்ட பொருள்களை விநியோகிப்பதற்கும், அறிமுகஞ் செய்வதற்கும் தகுதியான உத்தியோகத்தர்கள் யாழ். மாவட்டத்தில் வேலை செய்வதற்குத் தேவை.

ஆயுர்வேதம், சித்தமருத்துவம், ஹோமியோபதி போன்ற இயற்கை வைத்தியம் பற்றிய அறிவுடையவர்களும் பேச்சுத்திறமைஉடையவர்களும் விரும்பத்தக்கது.

**தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்**

விண்ணப்பிக்கவும்: (சி-42324) (24-14)

**Piccaso Ads,**
**#30, 1/1 St.Benedict's Mw, Colombo - 13.**


# சைவப்புலவர் சங்கப் பட்டமளிப்பு விழா

வலி.தெற்கு,ஏப்.17

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடத்திய சைவப்புலவர் பரீட்சை, இளம் சைவப்புலவர் பரீட்சை ஆகியவற்றில் சித்தியடைந்தவர்களுக்கான பட்டமளிப்பும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இம்மாதம் 30 ஆம் திகதி நடைபெறவுள்ளன.

வண்ணார்பண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடத்திய புராண படனப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களும் இந்நிகழ்வின்போது வழங்கப்படும். (த-152)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**அகவை அறுபதின் நிறைவில்**
**பிறந்தநாள் வாழ்த்து**



34 வருடம் வடபிராந்திய போக்குவரத்துச் சேவையில் அளப்பரிய சேவை செய்து யாழ். பேருந்து நிலையப் பொறுப்பதிகாரியாக இருந்து 17.04.2005 ஞாயிற்றுக் கிழமை அகவை அறுபதை நிறைவுசெய்து பிறந்த நாள் கொண்டாடும் **திரு.நல்லையா லோகநாதனும்** அவரது குடும்பமும் பல்லாண்டுகாலம் நலமுடன் வாழ நயினாதீவு ஸ்ரீநாகபூசனி அம்பிகை அருள் பாலிக்க வேண்டி வாழ்த்துகின்றோம்.

**வடபிராந்திய போக்குவரத்து ஊழியர்களும்**
**தேசிய ஊழியர் சங்கமும்.**

(44164) (24-14)



## FOR SALE

ஓவ் செற் பிரின்டிங் மெசின் விற்பனைக்கு

HAMDA 662 CD

டபிள் யூனிட், 4 நிறம் அச்சடிக்கக் கூடியது

MADE IN JAPAN AUTOMATIC மெசின்

தொடர்பு:- **திருமதி அருளானந்தம்**
அல்லது **திரு.வசந்தன்**
**இலக்கம் 108/5, பெல்மன் வீதி,**
**புதுக்கடை, கொழும்பு- 12.**
**தொலைபேசி இலக்கம் - 2448232**

(44307) (39-14-24)



## பிறைற்றின் கல்வி நிலையம்

சங்கத்தானை, சாவகச்சேரி

**A/L 2007**

கலை, வர்த்தக வகுப்புகள்
ஆரம்பம்: **18-04-2005, 4.30** p.m.

**O/L DAY CLASS**

ஆரம்பம்: **18-04-2005, 9.00** a.m.
"கடந்த வருடப் பெறுபேறுகள்
எமது திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டு"

(44314) (24-14)



# Vacancies

**Applications** are invited for the following posts in Jaffna Social Action Centre.

01. Project officers:
02. Accounts Assistant

**Required qualifications: -**

**General**

A) Above advance level of Education.
B) Knowledge of English language (Read, write and converse).
C) Literacy of computer is essential (Ms Word and MsExcel)
D) Should be creative and enthusiastic person.

***Project officers***

- He/She should be fit to travel within Jaffna peninsula holding valid motorbike driving licence.

***Accounts Assistant***

- Experience in accounting capacity will be considered added qualification.

Salary negotiable.

Application with C.V should reach 'The co-ordinator', Jaffna Social Action Centre, 159, 4th cross street, Jaffna on or before 26.04.2005

Only candidates with stipulated qualification will be called for the interview.

Co-ordinator
JSAC
(C/42323) (24)

Jaffna Social Action Centre
Tel: 021 222 3699
E-mail: jsacjaffna(@ gmail.com



# கண்ணீர் அஞ்சலி

## கலாநிதி
## செல்லையா சிவசாமி ஜே.பி.

(C.சிவசாமி அன் கொம்பனி
உரிமையாளர்)

அவர்களின் மறைவையிட்டு
எமது ஆழ்ந்த கவலையையும்,
அனுதாபத்தையும் அன்னாரின்
குடும்பத்தவர்களுக்குத்
தெரிவிப்பதுடன்,
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-42345) (39-24-14)

9, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

எஸ்.ஜே.எலக்ரிக்கல்ஸ்
உரிமையாளரும், ஊழியர்களும்.


## மோ.சைக்கிள் ஆவணங்கள் கண்டெடுப்பு

தென்மராட்சி,ஏப்.17

மட்டுவில் பகுதியில் மோட்டார் சைக்கிள் வாகன ஆவணப்பத்திரங்கள் அடங்கிய பை நேற்று முன்தினம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த சிங்கராசா ஞானஉதயசங்கர் என்பவரின் பெயரில் இந்த ஆவணங்கள் காணப்படுகின்றன.

இப்பத்திரங்களைத் தவறவிட்டவர் தென்மராட்சி கல்வி வலய நிர்வாக அலுவலரிடம் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.(த-117)

## பெண்ணுக்கு எரிகாயம்

தென்மராட்சி,ஏப்.17

மேசைமீது வைக்கப்பட்டிருந்த குப்பி விளக்கு சரிந்து வீழ்ந்ததில் மேசையின் கீழ் படுத்திருந்த பெண் எரிகாயங்களுக்கு இலக்கானார்.

கடந்த 12ஆம் திகதி இரவு மட்டுவில் வடக்கில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த புண்ணியசிங்கம் லதா (வயது 28) என்பவர் முகம், தலை, கை ஆகிய இடங்களில் எரிகாயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-117)

## தமிழீழ மாவட்ட நீதிமன்று - கிளிநொச்சி

வழ. இல:235/04
தன்மை: பணம்
பெறுமதி: 21,01095/-

வழக்காளி: **01) திரு.வே.யோகேஸ்வரன்**
**02) வே.மகேஸ்வரன்**
**மே/பா. ப.சிறியானந்தராசா,**
**2ஆம் கட்டை, முல்லை வீதி,**
**முரசுமோட்டை, பரந்தன்.**

- எதிர் -

எதிராளி: **இ.இராசேந்திரம்,**
வல்லிபுரம் பாரியாரியார் வீதி,
**புலோலி கிழக்கு, பருத்தித்துறை.**

மேற்படி எதிராளிக்கு:

### *இடைக்காலத்தீர்வை தொடர்பான பகிரங்க அறிவித்தல்*

மேலே பெயர் முகவரியிடப்பட்ட எதிராளியாகிய உமக்கு எதிராக வழக்காளிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கில் எதிராளியாகிய நீர் வழக்கு நடவடிக்கைகளுக்கு முதல் தோற்றமளவில் சமுகம் கொடுத்து அதன்பொருட்டு விடையப்பெறுமதியில் 3.50000/- ரூபாவைச் செலுத்திய பின் மிகுதிப் பிணக்குத் தொடர்பில் முடிவுறுத்தக்கூடிய தகுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளாது பல தவணைகளுக்குத் தகுதியான எக்காரணமுமின்றி மன்றுக்குச் சமுகம் கொடுக்காமையினால் உமக்கு எதிராக ஒருமுகவிளக்கம் இடம்பெற்று அதன் அடிப்படையிலான தீர்ப்பும் மன்றின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது. அத்தீப்புக்கான இடைக்காலத் தீர்வையும் இத்துடன். பிரசுரிக்கப்படுகின்றது. இதில் ஏதும் ஆட்சேபனைகள் இருப்பின் இப்பிரசுரம் பிரசுரிக்கப்பட்டு 21 நாள்களுக்குள் மன்றில் தோன்றி நடவடிக்கை எடுக்குமாறும் தவறின் இவ்விடைக்காலத் தீர்வை முற்றான தீர்வையாக்கப்படும் என்பதனை இதன் மூலம் அறியத்தருகின்றோம்.

"மன்றின் கட்டளைப்படி"

வரைவு: வழ/சட்டத்தரணி,
சீ.க.அமல் நிக்சன் – சட்டத்தரணி,
மாவட்ட மேல், மேன்முறையீட்டு மன்று,
கிளிநொச்சி.

**பதிவாளர்,**
**மாவட்ட நீதிமன்று,**
**கிளிநொச்சி.**

(சி-42327)(24-14)


# சித்திரையில் புதிய பிரிவுகள் ஆரம்பம்



**IELTS**
by Top Lecturer
May 7ஆரம்பம்

## சிறுவர்களுக்கான ஆங்கிலப் பாட நெறிகள்

Pre - Foundation
Level I,II,II,IV

**அடுத்தவாரம் ஆரம்பம்**

ஆங்கில மொழி மூலமான பாலர் பாடசாலைகள்
ஏப்பிரல் 25 ஆரம்பம்

**அனுமதிக்கு முந்துங்கள்**

## BRITISH BUSINESS SCHOOL

யாழ்ப்பாணம்: இல:140, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
இல:174, Psi வீதி, யாழ்ப்பாணம்.

வடமராட்சி: பருத்தித்துறை சாலை,
கிராமக் கோட்டடி, புலோலி.

**HOT LINE : 021-222-5796**

British BUSINESS SCHOOL
Where Students Come First



## கண்ணீர் அஞ்சலி

எமது இலங்கை வங்கிக் கிளையின்
நிறைவேற்றதிகாரியாக இருந்து ஓய்வுபெற்ற

**நவரட்ணம் ஜெயதிலகன்**

அவர்கள் காலமானதை அறிந்து மிகவும் மனம் வருந்துகிறோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது துணைவியாருக்கும் மற்றும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

**முகாமையாளரும் ஊழியர்களும்**
**இலங்கை வங்கி, கண்ணாகம்.**

(44306)(26-14)

## படங்காட்டும் இயந்திரம் விற்பனைக்கு
## CINEMA PROJECTOR & ACCESSORIES

எம்மிடம் நல்ல நிலையிலுள்ள சினிமாப்படம் காட்டும் (Projector) இயந்திரமும் அதன் உதிரிப்பாகங்களும் விற்பனைக்கு உண்டு.

முழு விவரங்களுக்கு:-
PEARL CINEMA,
20/3, COLLEGE ROAD, CHILAW.
T.P. 032 222 2362.

(44286)(38-14-45-26)

## தமிழீழ மாவட்ட மன்று - கிளிநொச்சி

வழ. இல: 235/04
தன்மை: பணம்
பெறுமதி: 21,01095/-

வழக்காளி: 01) திரு.வே.யோகேஸ்வரன்
02) வே.மகேஸ்வரன்
மே/பா.ப.சிறியானந்தராசா,
2ஆம் கட்டை, முல்லை வீதி,
முரசுமோட்டை, பரந்தன்.

- எதிர் -

எதிராளி: த.சி.இராசேந்திரம்,
வல்லிபுரம் பாரியாரியார் வீதி,
புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

### இடைக்காலத்தீர்வை

இந்த 2005ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29ஆம் நாள் இவ்வழக்கு இம்மன்றில் நீதியாளர் செல்வி சாதனா அவர்கள் முன்னிலையில் கூப்பிடப் பட்டபோது எதிராளி இதற்கு முன்னைய பல தவணைகளுக்குத் தகுதியான எக்காரணத்தையும் மன்றுக்கு வெளிப்படுத்தாது இருந்ததையிட்டு இவ்வழக்கு ஒருமுக விளக்கத்திற்கு எடுத்ததின் அடிப்படையில். அதாவது வழக்காளி தரப்பால் முன்வைத்த வழக்கு அறிக்கையின் முதலாம். இரண்டாம் உரிமைக் கோரிக்கையின் பிரகாரம் வழக்காளிகளால் இணைத்த வ-01. வ-02 எனும் ஆவணங்களின் அடிப்படையிலும் எதிராளியானவர் வழக்காளிகளுக்கு மன்றின் ஊடாகச் செலுத்திய 3.50000/- ரூபாவை மொத்தப் பெறுமதியான 21.01095/- வில் கழித்து மிகுதியான 1.751095/- ரூபாவையும் செலுத்த வேண்டுமென்பதுடன் இவ்வழக்கினால் வழக்காளிகளுக்கு ஏற்பட்ட வழக்குச் செலவையும் இறுக்குமாறு ஒருமுகத் தீர்ப்பு வழங்கப்பட்டதன் பிரகாரம் இவ்விடைக் காலத்தீர்வை பதியப்படுகின்றது.

*2005ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5ஆம் நாள்*

வரைவு: வழ/சட்டத்தரணி,
சீ.க.அமல் நிக்சன், சட்டத்தரணி, மாவட்ட மேல், மேன்முறையீட்டு மன்று,
கிளிநொச்சி.

**நீதியாளர்,**
**மாவட்ட நீதிமன்று,**
**கிளிநொச்சி.**

(சி-42327)(26-14-45)

## JAFFNA INFORMATION TECHNOLOGY PARK

Under the purview of the Ministry of Agricultural Marketing Development, Co operative Development, Hindu Affairs and Assisting Education & Vocational Training,

MPCS Building,
127, K.K.S.Road, Jaffna, SriLanka

Office : 021 222 3641
Fax No : 021 222 3642

**தகவல் தொழில்நுட்பத் துறையில் பின்வரும் கற்கை நெறிகளுக்கும், பயிற்சிகளுக்கும் புதிதாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

1) **Certificate In Computer Application (CICA)**

Course contents:- MS-Office, Awareness, and one of the following area: DTP/ Programming/ Hardware/ Accounting Package

(a) For working people during weekends duration of 6 months. (96 hours with sufficient Practical)
(b) For Non working people during weekdays duration of 3 months. (96 hours with sufficient Practical.)

**Registration fees- 250/ Course Fee – 4000/-**

2) **Certificate in General Information Technology (CGIT)**

For G.C.E (A/L) Students 2 hours per day 2 days a week. (80 hours with sufficient Practical.)

**Course Fee – 1750/-**

2) **Training Programmes in one of the following:**

Computer Networking, Maintenance of Personal Coumputer Systems, Software Design and Development, Desktop Publishing, Webpage Designing.

Duration 50 hours ( Full day programme- 7 days in 7 Weeks), for Officers/ Teachers/ Youths seeking employment)

**Course Fee – 3000/-**

Note: (1) Applications forms and prospects can be obtained from the IT Park Office, on payment of Rs. 30/-
(2) Date of commencement of the courses / programmes 02nd May 2005.

*-Executive Officer, Administration*


## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஏப்.17

கொக்குவில் மாத்தனைக் கந்தசுவாமி கோயில் புனராவர்த்தன பிரதிஷ்டா நவகுண்ட பக்ஷ மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 8.10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வை முன்னிட்டு நாளை திங்கட் கிழமை தொடக்கம் ஹோமம், விசேட பூசைகள் ஆரம்பமாகி நடைபெறும்.

21ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6 மணி தொடக்கம் எண்ணெய்க் காப்பு சாத்துதல் நடைபெறும். 22ஆம் திகதி காலை 5.30 மணி தொடக்கம் விசேட பூசைகள், அபிஷேகம் என்பன இடம் பெறும். மாலை 5 மணிக்கு விசேட பூசைகள் நடைபெற்று எம்பெருமான் திருவீதியுலா வரும் நிகழ்வும் இடம்பெறும். (து-204)

## அக்குறஸ்ஸ, தெவியகலவில் இரு இளைஞர்கள் கொலை

மாத்தறை மாவட்டம் அக்குறஸ்ஸ, தெவியகல மற்றும் மலிதுவ ஆகிய பிரதேசங்களில் நேற்றுமுன்தினம் இரவு இரண்டு இளைஞர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர் என அக்குறஸ்ஸ பொலீஸார் தெரிவித்தனர்.

தனிப்பட்ட காரணங்களுக்காகவே இந்தக் கொலைகள் இடம்பெற்றுள்ளன என்று தங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளது என்றும் பொலீஸார் கூறினார்.

இந்தக் கொலைகளுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் தப்பிச்சென்றுள்ளனர் என்று தெரிவிக்கும் பொலீஸார், அவர்களைக் கைது செய்வதற்குத் தனிக்குழுவொன்று நியமிக்கப் பட்டுள்ளது என்றும் தெரிவித்தனர். (து-க)

## ஆசிய அபிவிருத்தி வங்கி 19 கோடி டொலர் உதவி

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கையில் மீள்கட்டுமான நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கென இரண்டு பிரதான திட்டங்களுக்காக 19 கோடி 70 லட்சம் டொலர்களை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி தீர்மானித்துள்ளது.

இதன்படி, ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சமூக உட்கட்டமைப்பு மேம்பாடு, சமூக நலன்புரிச் செயற்பாடுகள் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டம், பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளமைக்கும் திட்டம் என்பவற்றிற்கு 15 கோடி டொலர் நிதி மானியமாகவும், 70 லட்சம் டொலர்கள் இலகு கடனாகவும் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்படவுள்ளன.

வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கான நிக்கொட் திட்டத்திற்கு ஒரு கோடி 40 லட்சம் டொலர்களை மானியமாகவும், 2 கோடி 60 லட்சம் டொலர்களை கடனாகவும் வழங்குவதற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கி தீர்மானித்துள்ளது. (து-க)


## SUBRA (14)
சித்தன்கேணி

O/L DAY CLASS

இன்று நேற்று அல்ல
என்றும் என்றென்றும் மாணவர் மனதில்
கல்விக்கு என இடம்பெற்ற
ஒரே நிறுவனம் SUBRA சரியானதைத்
தெரிவுசெய்யுங்கள்!
வெற்றி பெறுங்கள்!!

விஞ். - இரா.செல்வவடிவேல்
கணி. - மகேந்திரன்
சமூ. - ஐங்கரன்
தமிழ். - S.P.சாந்தன்
சமயம் - ராஜி
ஆங்கிலம் - உங்கள் ஆசிரியர்

▲ கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு
▲ மாதாந்தம் பயிற்சிப் பரீட்சை
▲ மீட்டலும் கடந்தகால வினாப் பயிற்சிகளும்
▲ தினமும் காலை 7-12 மணி வரை.

**A/L 2007 புதிய பிரிவு**
**நாளை அனுமதிகள்**

Eco. ஜெயகுமார்
B.St. நந்திஸ்
Acc. சுபேஸ்
தவா

Bio. கஜன்
தயாபரன்
C.mat. பிரதீபன்
Phy. வர்ணன்

Eng. BRITTO
C.G.N. தவசேகர்

Tam. காந்தன்
H.C. சிறிஸ்
P.Sc. அசோக்
His. வாகிஸ்
Hisi. கெங்கா

Log. E.S.பவன்
Dra. கணேஸ்
Geo. ஐங்கரன்
Cri. யூட்
B.St. தவசேகர்

எம்முடன் இணைந்தோர் உயர்கல்வி
பெறுவது உறுதி
என்றும் தரமான ஆசிரியர்கள் மட்டுமல்ல
நிரந்தரமான ஆசிரியர்களும் இங்கு மட்டுமே

**நாளை ஆரம்பம்:**
**18-04-2005 மாலை 4.00**

(சி-42342)(26-14-45)


## முதலாம் ஆண்டு நீங்காத நினைவில்...



தோற்றம்
16 - 04 - 1922

மறைவு
27 - 04 - 2004

### திருமதி வேலுப்பிள்ளை கௌரியம்மா

அன்புக்கோர் அணிகலனாய்
பாசத்தின் இருப்பிடமாய்
பண்பின் பிறப்பிடமாய்த் திகழும்
எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே!
ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்
உமது நினைவு என்றென்றும்
மறையவே மறையாது!!

*16/2, லோட்டஸ் றோட்,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

**பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(44297)(38-14-45-26)

## ஆறாத் துயரத்துடன்
## எம் ஓராண்டு நினைவஞ்சலி



01 - 06 - 1959

30 - 03 - 2004

### ஸ்ரீமான் அருளம்பலம் கிருஷ்ணமோகன்

திதி: 17-04-2005

காணாத் தெய்வத்தின் அருளாளனே வந்த
எம் கண்கண்ட தெய்வமே; எம்
இதயக் கோயிலில் தங்களை நாளும்
பூசித்து தங்கள் விண்ணக வாழ்வு
சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்
தங்களைத் திரியாக்கி எமக்காக வாழ்ந்தவரே;
தங்களைப் போல் ஒருவரைத் தரணியில்
நாம் கண்டதில்லை!

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

இருபாலைச் சந்தி,
கோப்பாய்.

**பாசமுள்ள பிள்ளைகள்,**
**மனைவி, தாயார்,**
**உடன்பிறப்பினர்.**

(44278)(46-14-45-26)

## மரண அறிவித்தல்

### திருமதி
### பராசக்தி வேலுப்பிள்ளை



நெடுந்தீவு கிழக்கு, 12ஆம் வட்டாரத்தினைப் பிறப்பிடமாகவும் 61, மருதடி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி வேலுப்பிள்ளை அவர்கள் 13-04-2005 புதன் கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராமநாதர் (கிளியர் விதானையார்) - மீனாட்சிப்பிள்ளை தம்பதியினரின் ஏக புத்திரியும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை (ஸ்தாபக அதிபர், யா/நெடுந்தீவு ஸ்ரீஸ்கந்தா வித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும் சங்கீத பூஷணம் சுந்தரலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), ராஜலிங்கம் (கலாநிதி, கணனித்துறை - லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம், கனகசபை, குமாரசாமி, முருகேசு கந்தையா மற்றும் சபாபதிப்பிள்ளை (நெடுந்தீவு), சோமசுந்தரம், கார்த்திகேசு ஆகியோரின் அன்புச் சகோதரியும் சரஸ்வதி (ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர் - யாழ்.போதனா வைத்தியசாலை) அவர்களின் அன்பு மாமியாரும் பாமினி, குமுதினி, தமிழ்மாறன், பன்னீர்ச்செல்வன் (ஆசிரியர், யா/மண்கும்பான் அ.த.க.பாடசாலை, வேலணை), சாந்தினி, செல்வா, கரன், நீனா, பிறவின், கிருஷ்ணா ஆகியோரின் பேர்த்தியாரும் அபிரா, மயூரா, மதிரா, அஸ்வினி, கபீன், கலைவாணன், அஞ்சலி, லிலியா, லினோஷ் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-04-2005) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, செம்மணி இந்துமயானத்துக்குப் பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.


தகவல்:
வே.சுந்தரலிங்கம (மகன்),
சு.பன்னீர்ச்செல்வன் (பேரன் - (ஆசிரியர் யா/மண்கும்பான் அ.த.க.பாடசாலை).

*61, மருதடி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(44295)(26-14-45)

# தொழிலில் முன்னேற நிதி முக்கியமல்ல முயற்சியும் உண்மையுமே அத்தியாவசியம்

## தொழில் வல்லுநர் விருது பெற்ற பாலமுருகன் கூறுகின்றார்



அல்பா மிக்சர் நிறுவனத்தின் உரிமையாளர் ப.பாலமுருகன் யாழ்.றோட்டறிக் கழகத்தால் 'தொழில்திறன் விருது' வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.
தமது தொழிலில் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்து உதயன் தொழில்வளம் பகுதிக்கு அவர் வழங்கிய செவ்வி இது.

❑ கே. உங்கள் தொழிலின் ஆரம்பம் பற்றிக் கூறுவீர்களா?

◗ ப. நான் எனது மிக்சர் தொழிலை பரமேஸ்வராச் சந்தியில் ஒரு சிறிய கடையுடனேயே ஆரம்பித்தேன். அப்போது தொழிற்சாலை அரியாலைப் பகுதியில் இருந்தது. ஆரம்பத்தில் பெரியளவில் வியாபாரம் நடைபெறுவதில்லை. ஆயினும், மனம் தளராமல் எமது விடாமுயற்சியின் மூலமே நாம் முன்னேற்றமடையக் கூடியதாக இருந்தது.

❑ கே. நீங்கள் மிக்சர் தொழிலைத் தேர்ந்தெடுத்ததற்குரிய காரணம்..........?

◗ ப. நான் ஆரம்பத்தில் ரயர்கடையொன்றில் வேலைபார்த்தேன். காலப்போக்கில் நானே சொந்தமாக ரயர்கடை ஒன்றை மானிப்பாய்ப் பகுதியில் நடத்தினேன். 1995 ஆம் ஆண்டு இடம்பெற்ற இடப்பெயர்வு காரணமாக கடை முற்றாக அழிந்துவிட்டது. பின்னர், 1996 ஆம் ஆண்டு மீண்டும் யாழ்ப்பாணம் வந்து மிக்சர் கடையை ஆரம்பித்தேன். எனது உறவினர்கள் மிக்சர் கடை நடத்தியதுண்டு. அதனால்தான் இதனைத் தேர்ந்தெடுத்தேன். கோயில்களிலும் மிக்சர் கடை போடுவதுண்டு.

❑ கே. உங்கள் தொழிலில் ஏற்பட்ட முன்னேற்றம் பற்றி......?

◗ ப. ஆரம்பத்தில் மந்தகதியில் இடம்பெற்ற எமது தொழில் படிப்படியாகத்தான் முன்னேற்றம் அடைந்தது. நாங்கள் தொழிலை ஆரம்பித்த காலப்பகுதியில் யாழ்.குடாநாட்டில் மிக்சரைப் பற்றி மக்கள் சரியாக அறிந்திருக்கவில்லை. அதாவது, மக்கள் மத்தியில் மிக்சர் பிரபல்யமான பொருளாக அறிமுகமாகவில்லை. நாங்கள் கடைகள் எல்லாம் ஏறி இறங்கி உங்கள் கடைகளில் இதனைப் போட்டுப் பாருங்கள் என வற்புறுத்திக் கொடுத்த காலமும் உண்டு. சில நேரங்களில் பெருமளவில் எமக்கே திரும்பி வந்ததுண்டு. அவ்வாறு ஏற்பட்டபோதும் அதனை நாம் பொருட்படுத்தாமல் எமது தொழிலை முன்னெடுத்துச் சென்றோம். நான் எனது தொழிலை ஆரம்பிக்கும்போது எனது தந்தையும் மூன்று சகோதரர்களும் உதவினார்கள். நான் வேறு எவரையும் வேலைக்கு வைத்திருக்கவில்லை. இவ்வளவு பேருக்கு மத்தியில் ஒரு சைக்கிள் வண்டி மட்டுமே எமது போக்குவரத்துக்குப் பயன்பட்டது.

❑ கே. உங்கள் தொழில் முயற்சியில் வியந்து கூறவேண்டிய விடயம் ஏதாவது உண்டா?

◗ ப. ஒரு விடயத்தைக் கூறவேண்டும். ஆரம்பத்தில் பஸ் ஏறி பருத்தித்துறைக்கு 20 கிலோ மிக்சரைக் கொண்டு சென்றால் 15 கிலோ மீண்டும் எமக்கு திரும்பியதுண்டு. ஆனால், இப்போது 50 கிலோ மிக்சர் கேட்கும் இடத்தில் 20 கிலோ மிக்சர் கொடுக்கும் நிலையுள்ளது. அந்தளவிற்கு எமது மிக்சர் பிரபல்யம் அடைந்துள்ளது. திருமண வைபவங்கள், பிறந்ததின வைபவங்கள் என்பவனவற்றில் மிக்சரைப் பயன்படுத்துவது பற்றி பிரபல்யமாக நாமே அறிமுகப்படுத்தினோம்.

❑ கே. தற்போது உங்கள் தொழில் நிறுவனங்கள் எங்கே அமைந்துள்ளன என்று கூறுங்கள்?

◗ ப. இரண்டு இடங்களில் எமது மிக்சர் கடைகள் அமைந்துள்ளன. பரமேஸ்வராச் சந்திப் பகுதியில் சொந்தக் கட்டடத்திலும் சங்கானைப் பகுதியில் வாடகைக் கட்டடத்திலும் இயங்குகின்றன. தற்போது எனது நிறுவனங்களில் 34 பேர் தொழில் புரிகின்றனர். அதனை நினைக்கும்போது எனக்கு வியப்பாகவே இருக்கும்.

❑ கே. உங்கள் தொழில் முயற்சியில் உங்களுக்குக் கிடைத்த பின்னடைவுகள் பற்றிக் கூறுங்களேன்?

◗ ப.நான் இந்த மிக்சர் தொழிலை ஆரம்பித்த காலத்தில் இருந்தே எனக்குப் போட்டிகள் நிறையவே இருந்தன. இவற்றை எல்லாம்




தாண்டியே முன்னேறவேண்டிய நிலை ஏற்பட்டது. ஆயினும், 2000 ஆம் ஆண்டு இடப்பெயர்வு எமது தொழில் முயற்சியைப் பெரிதும் பாதித்தது. அதில் மிக்சர் உற்பத்தி உபகரணங்கள் யாவும் திருட்டுப் போயின.

❑ கே.வாடிக்கையாளர் மத்தியில் நீங்கள் மிக்சர் துறையில் தனி இடம்பெற்றுள்ளீர்கள். அந்த முன்னேற்றத்திற்கு ஏதாவது காரணம் உண்டா?

◗ ப.எந்தளவிற்குத் தரமானதாகத் தயாரிக்க முடியமோ அந்தளவிற்கு முயற்சி எடுத்து தயாரித்து வருகின்றோம். அத்தோடு, வாடிக்கையாளரின் குறைநிறைகளைக் கேட்டறிந்து அதற்கு ஏற்றவாறு தயாரித்தலை மேற்கொள்கின்றோம்.

❑ கே.உங்களுக்கு 'தொழில் வல்லுநர்' விருது கிடைத்தமை பற்றி....?

◗ ப. அதை எண்ணும்போது எனக்கு மிகவும் பெருமையாக உள்ளது. இந்த விருது எனது தொழில் முயற்சியை மேலும் வளர்க்க வேண்டிய உத்வேகத்தை என்னில் ஏற்படுத்தியுள்ளது.

❑ கே.உங்களுக்கு யாழ்ப்பாணத்தைவிட வேறு இடங்களில் தொழில் முயற்சியை மேற்கொள்ளும் எண்ணம் உள்ளதா?

◗ ப.வன்னி மண்ணிலும் எனது தொழில் முயற்சியை முன்னெடுக்க எண்ணியுள்ளேன். சந்தர்ப்பம் வரும்போது அங்கும் எனது பணி தொடரும்.

❑ கே. நீங்கள் உங்கள் வாடிக்கையாளருக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?

◗ ப.முன்னேறுவதற்குப் பணம்தான் முக்கியம் என்பது அல்ல. முயற்சிதான் முக்கியம். முயற்சியுடன் உண்மையும் சேர்ந்து நின்றால் உயர்வு தானாகவே வந்து சேரும் என்பதையே கூறிக்கொள்ள விரும்புகிறேன். ★

**செவ்வி : பகீர்**

# நான்காம் ஆண்டில் கால்பதிக்கும் எற்கின் ஸ்பென் ரவல்ஸ் நிறுவனம்

இலங்கையில் 1868 ஆம் ஆண்டு எற்கின், ஸ்பென் என்ற இரண்டு பிரித்தானியர்களால் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனமே எற்கின்ஸ்பென் கம்பனி லிமிட்டெட். இலங்கையின் முதல்தர கம்பனிகளில் ஒன்றான எற்கின் ஸ்பென்ஸ் தொகுதிக் கம்பனியின் ஓர் அங்கமாகச் செயற்படுவது



எற்கின்ஸ் ஸ்பென் ரவல் நிறுவனத்தின் யாழ். மாவட்டச் செயற்பாட்டுக்குப் பொறுப்பான நிறைவேற்று அதிகாரி சி.டி. மோகன்ராஜ் (நடுவில்), யாழ்.நிறைவேற்று அதிகாரிகளான வீ.சுரேஷ்குமார், ஏ.டீன்ஸ்ராஜ் ஆகியோருடன் காணப்படுகின்றார்.

தான் எற்கின் ஸ்பென்ஸ் ஓவர் சீஸ் ரவல் சேவிஸ் பிறைவேற் லிமிட்டெட்.

எற்கின் ஸ்பென்ஸ் ஓவர் சீஸ் ரவல் சேவிஸ் பிறைவேற் லிமிடெட் தனது கிளையை நீண்டகால இடைவெளியின் பின்னர் முதல்முறையாக யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து உலகளாவிய பிரயாண சேவையை வழங்கி வருகின்றது. எமது நிறுவனத்தின் ஊடாக எந்த நாட்டிற்கு எந்த விமானம் மூலம் எப்போ செல்ல வேண்டுமோ அதற்கேற்ப விமானப் பயணச்சீட்டைப் பெற்றுத் தர முடியும். பாஸ்போட், வீசா இருந்தால் நேரடியாகச் சொந்த மண்ணிலேயே எம்மூலம் விமானப் பயணச் சீட்டுக்கான ஆசனத்தைப் பதிவு செய்து உறுதிப்படுத்திக்கொள்ளமுடியும்.

மேலும், வெளிநாடுகளில் இருந்து வரும் உங்கள் உறவினர்கள், நண்பர்கள் விமானச் சீட்டை உறுதிப்படுத்தவும் திகதி மாற்றம் செய்யவும் எமது நிறுவனத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் உங்கள் தேவையைப் பூர்த்திசெய்து கொள்ளலாம். அத்துடன், யாழ். - கொழும்பு, யாழ். செல்வதற்கான எல்லா விமானச்சீட்டையும் பெற்றுக்கொள்வதுடன் உலகின் எப்பாகத்திலும் தங்குமிட வசதியையும் இலங்கையில் எமது நட்சத்திர விடுதி உட்பட உங்கள் தேவைக்கேற்ப சலுகைகள் செய்து தரப்படும்.

**ஐரோப்பிய ரயில் சேவை**

ஐரோப்பிய நாடுகளுக்கான ரயில் ஆசனங்களையும் பயணச்சீட்டுக்களையும் வழங்கி வரும் எமது நிறுவனம் தற்போது யுரோஸ்ரார் (**Euro star**) எனும் ரயில் சேவைக்கும் பயணச்சீட்டு வழங்கி வருகிறது. இதன் சிறப்பு அம்சம் என்னவெனில், பாரீஸ் - லண்டன், லண்டன் - பரிஸ், பெல்ஜியம் - லண்டன், லண்டன் - பெல்ஜியம் போன்ற நாடுகளுக்கிடையயே 3 மணித்தியாலம் பயணிக்க கூடியது. அத்துடன், ஐரோப்பிய நாடுகளுக்கு ரயில் பயணசீட்டைப் பெற்றால் புரோஸ்ரார் ரயில் பயணச்சீட்டைக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**பயண காசோலை**

மேலும் வெளிநாடு செல்லும்போது காசாக 500 அமெரிக்க டொலர் மட்டுமே கொண்டு செல்ல முடியும். எனவே, உங்கள் பணத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு மிகுதிப் பணத்தைப் பயணக் காசோலையாக (**Travel chq.**) கொண்டு செல் லலாம் இதற்கான காசோலையை எமது கொழும்பு தலைமை அலுவலகத்திலேயே பெற்றுக்கொள்ளக்கூடிய வசதி செய்யப்பட்டுள்ளது.

**காப்புறுதி**

இக்காப்புறுதியானது இரண்டு வகையாக உள்ளன. ஒன்று நீங்கள் வியாபார நோக்கம் அல்லது சுற்றுலாப் பயணியாகச் செல்வதாயின் பிரயாண காப்புறுதியை செய்வதன் ஊடாக உங்களுக்கு அந்த நாடுகளில் ஏற்படும் அசௌகரியங்களுக்கும், மருத்துவ செலவுகளுக்கும் இக்காப்புறுதி பெரிதும் உதவுகிறது. அத்துடன் பிரான்ஸ், ஜேர்மனி, நெதர்லாந்து, இத்தாலி போன்ற நாடுகளுக்கு செல்வதற்கு வீசா எடுப்பதாயின் இவ்வகை காப்புறுதி கட்டாயமாக அமைகிறது. எனவே இந்த வகையான காப்புறுதியை எமது நிறுவனத்திலேயே பெற்றுக்கொள்ள கூடிய வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

இரண்டாவது வகை காப்புறுதியானது வேலை வாய்ப்புக்காக வெளிநாடு செல்வதற்கு உதவும். குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்பவர்களுக்கு இவ்வகை காப்புறுதி மேற்கொள்ள வேண்டியுள்ளது. இது அவருடைய தொழில், தொழிலுக்கேற்ற வருமானம் போன்ற அடிப்படையிலேயே அமைகிறது. இக் காப்புறுதி எமது நிறுவனத்தினால் வழங்கப்படுகின்றது. இதற்கான ஆலோசனையை பெற்றுக் கொள்ளலாம்.

மேலும், இந்தியாவுக்கு செல்வதற்கான ஜெற் எயார், சஹாரா எயர் ஆகிய விமானங்களுக்கான பயணச்சீட்டை உடனுக்குடன் எமது யாழ். அலுவலகத்திலேயே வழங்குவது குறிப்பிடத்தக்க விடயம். எமது நிறுவனத்தின் யாழ்ப்பாணக்கிளை யாழ்.மக்களுக்கு பருவகால விடுமுறை பொதி ஒன்றினை இந்த ஆண்டு முதல் அறிமுகப்படுத்தியுள்ளது. இதனடிப்படையில் நீங்கள் எந்த நாட்டுக்கு எந்த இடத்தை சுற்றிப் பார்த்து உங்கள் விடுமுறையை கழிக்க விரும்புகிறீர்களா? என்பதை அறிந்து நாங்கள் உங்களுக்கு தங்குமிட வசதி, உணவு போன்ற அனைத்து வசதிகளையும் செய்து தர உள்ளோம்.

**வி.சுரேஷ்குமார்**

இவ்வகையான அனைத்து சேவைகளையும் ஒரே கூரையின் கீழ் யாழ்.மக்கள் பெற்றுக் கொள்ள கூடிய வசதியை எற்கின்ஸ்பென்ஸ் கம்பனி லிமிடெட் வழங்கியுள்ளது. ★

# சுனாமி நிவாரணப் பணிகளில் ரி.என்.ரி. கூரியர் சேவை நிறுவனம்

உலகளாவிய ரீதியில் துரித தபால் மற்றும் பொதி விநியோக சேவையில் வரலாறு படைக்கும் ரி.என்.ரி. கூரியர் சேவை நிறுவனமானது (**T.N.T - Thomas Nationwide Transport**) ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட அனைத்து நாட்டு மக்களுக்கும் மனிதாபிமான ரீதியில் நிவாரணப பணிகளை மேற்கொள்ள முன்வந்துள்ளது இந் நிவாரணப் பணிகள் அனைத்தையும உலக உணவு நிகழ்ச்சித்திட்ட அமைப்புடன் (**WFP - World Food Programme**) இணைந்து செயற்படுத்தவுள்ளது. ஏற்கனவே இந்த அமைப்புடன் இணைந்து போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவூட்டல் என்னும் செயற்றிட்டத்தைச செயற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




முல்லைத்தீவில் சுனாமி நிவாரண விநியோகப்பணிகளில் ஈடுபட்டுள்ள கூரியர்சேவை, உலக உணவு நிகழ்ச்சித்திட்ட அமைப்பு போன்றவற்றின் நிறைவேறு அதிகாரிகளைப் படத்தில் காணலாம்.

சுனாமி நிவாரணப்பணிக்கென ரி.என்.ரி. யின் நெதர்லாந்துத் தலைமை அலுவலகம் 2.3 மில்லியன் யூரோ டொலர்களை நிதியாக ஒதுக்கியுள்ளது. இந்நிதியினைப் பயன்படுத்தி ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அனைத்து ஆசிய நாட்டு மக்களுக்கும் பல்வேறு நிவாரணப்பணிகள் முழுமூச்சுடன் மேற்கொள்ளப்படவுள்ளன. அழிவுகளின் தன்மைக்கு ஏற்ப இந்நிதி நாடுகளிடையே பகிர்ந்தளிக்கப்படவுள்ளன. முதற்கட்டமாக இலங்கையில் நிவாரணப்பணிகளை மேற்கொள்ள ரி.என்ரி. யின் இலங்கைப் பிரிவிற்கு 6 மில்லியன் ரூபாவை வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.

ரி.என்.ரியின் இலங்கைப்பிரிவும் உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் இலங்கைப் பிரிவும் ஒன்றிணைந்து சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்ட மக்களுக்கும் உலர் உணவு வழங்கும் செயற்றிட்டத்தை ஒவ்வொரு மாவட்ட அரச அதிபரின் உதவியுடன் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. உலக உணவு நிகழ்ச்சித்திட்ட நிறுவனமானது அதன் உணவுக் களஞ்சியத்தில் இருந்து ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு உலர் உணவு வகைகளைக் கொண்டுசென்று விநியோக்கும் பணிக்கென 11 கினொ 'ட்ரக்' வண்டிகளை (**Hino 4 Wheelers Truck**) ஏற்பாடுசெய்துள்ளது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை மாவட்டங்களுக்கு தலா ஒரு 'ட்ரக்' வண்டியும், மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கு மூன்று 'ட்ரக்' வணடிகளும் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மற்றும் சுனாமி பாதித்த ஏனைய மாவட்டங்களில் நிவாரண விநியோகப் பணிகளை கொழும்பிலிருந்து மேற்கொள்ள ஐந்து 'ட்ரக்' வண்டிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த விநியோகத்துக்கான செலவுகளான வாகன ஓட்டுநர், நடத்துநர் சம்பளம், எரிபொருள் செலவு, வாகன பழுதுபார்த்தல் செலவு போன்ற அனைத்துச் செலவுகளையும் ரி.என்ரி. பொறுப்பேற்கவுள்ளது. இச்செயற்றிட்டத்தை 6 மாத காலத்திற்கு முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதேபோன்று மேலும் பல நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளில் ஈடுபடுவதற்கு ரி.என்.ரி. தீர்மானித்துள்ளது.

**ஆ.டீன்ஸ்ராஜ்**

ரி.என்.ரியின் சரக்கு விமானம் ஒன்று கட்டணம் எதுவுமின்றி உலக உணவு நிகழ்ச்சித் திட்ட அமைப்பின் நிவாரணப் பொருள்களை நெதர்லாந்திலிருந்து இலங்கைக்குக் கொண்டு வந்து சேர்த்ததும் ஒரு தொகுதி வெளிநாட்டு நிவாரணப் பொருள்களை கட்டுநாயக்க விமான நிலைய களஞ்சியசாலையில் இருந்து விரைவாக அகற்ற (**Cargo Clearance**) உதவியதும் இலங்கையில் சுனாமி அழிவுக்கான ரி.என்.ரியின் உடனடி மனிதாபிமானப்பணிகள் என்பது குறிப்பிடத்தக்கது. ★

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும் மக்கள் வங்கியின் யாழ்.மாவட்ட உதவிப் பிரதேச முகாமையாளருமான

## உயர்திரு. க.ஆனந்தராஜா

அவர்களுக்கு இலங்கை வங்கியாளர் நிலையத்தினால் சிறந்த வங்கியாளருக்கான (Fellow Ship) விருது அண்மையில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

எமது கல்லூரிக்குப் பெருமை தேடித்தந்த பெருமகனைப் பாராட்டி வாழ்த்துவதோடு எதிர்காலத்தில் மேலும் பல பட்டங்களைப் பெற்று பதவி உயர்வு பெறவேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/அத்தியார் இந்துக் கல்லூரி,
நீர்வேலி.

**கல்லூரிச் சமூகம்.**

(44235)(42-11-17)

# சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் மூன்று மாதங்களில் 30 ஆயிரம் பேருக்குச் சிகிச்சை

தென்மராட்சி,ஏப்.17

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் கடந்த மூன்று மாதங்களில் 30 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் சிகிச்சை பெற்றுள்ளனர் என புள்ளி விவரங்கள் மூலம் தெரியவருகிறது.

கடந்த மூன்று மாதங்களில் வெளிநோயாளர் பிரிவில் 24 ஆயிரத்து 181 பேரும் வார்டுகளில் ஆயிரத்து 730 பேரும், ஆஸ்பத்திரியில் நடத்தப்படும் கிளினிக்குகளில் 3 ஆயிரத்து 120 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவற்றினை விட பிரசவவிடுதி, பற்சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றிலும் நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர். (த-117)

# இலங்கை வங்கியின் சாவகச்சேரி கிளையில் நகை அடகு சேவை

தென்மராட்சி,ஏப்.17

சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளையில் நகை அடகு பிடிக்கும் பணி புத்தாண்டு தினத்தன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இலங்கை வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் க.பாலசுப்பிரமணியம் இந்த நிகழ்வினை ஆரம்பித்துவைத்தார். சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் க.இராசகோபால் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழவில் செயறபாட்டு முகாமையாளர் பீ.ஏ.அருமைநாயகம், மாவட்ட முகாமையாளர் சி.நடராசலிங்கம் உட்பட பலர் கலந்துகொண்டனர். (த-117)

# சனசமூக நிலையக் கட்டடம் திறப்பு

தென்மராட்சி,ஏப்.17

தாவளை, இயற்றாலைப் பகுதியில் நிக்கொட் நிறுவனத்தினரால் புனரமைக்கப்பட்ட மருதடி சன சமூக நிலையக் கட்டடம் பொது மக்களின் பாவனைக்குத் திறந்து விடப்பட்டுள்ளது.

இக் கட்டடத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

இந்த நிறுவனத்தினரால் அப்பகுதியில் அமைக்கபட்டு வரும் வீதி வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளது.

இக் கிராமத்திற்கு 'நிக்கொட்' உதவியுடன் மின்சாரம் வழங்கப்படவுள்ளதாகவும் இதற்காக மின்கம்பங்கள் பறிக்கும் பணிகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-117)


## யாழ்.நகரில் M.M.C.C

**3 மாத கால நேரடி அறிவிப்பாளர் பயிற்சிநெறி**

வானொலி, தொலைக்காட்சிகளில் பணிபுரிவதற்கு இப்பயிற்சி நெறியில் இணைந்து கொள்ளுங்கள். இப்பயிற்சி நெறியில் இணைவதற்கு நீங்கள் O/L சித்தியடைந்திருத்தல் போதுமானது.

புதிய பிரிவு ஆரம்பம்
பிரிவு I 30.04.2005
பிரிவு II 07.05.2005.

பயிற்சி நெறியின் முடிவில் குரல் வளப் பரீட்சையுடன் சான்றிதழ் வழங்கப்படும்.

அனுமதிகளை திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாள்களில் காலை 10 மணியிலிருந்து 4 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக தொடர்புகளுக்கு:
**0776910612**
**0776193181**

**M.M.C.C**
இல.328, Stanly Road
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(44284)(42-11-17)

## மார்க்பொன் தொழிலகம்

எமது தொழிலகமானது நாற்பது ஆண்டுகளை நிறைவு செய்து நாற்பத்தோராவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியை அன்பர்கள், ஆதரவாளர்களுக்கு அறியத் தந்து எமது மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

◆ சிமெந்தால் உருவாக்கப்பட்ட பலவகை அலங்காரப் பொருள்கள்
◆ நிலத்தில் பதிக்கின்ற பூக்கற்கள்
◆ கம்பித் தூண்கள்
◆ கொங்கிறீற் கற்கள்
◆ பூச்சாடிகள்





அத்தனையும் நியாய விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். கிடைக்கும் இடம்

**மார்க்பொன் கம்பனி பிறைவேற் லிமிட்டெட்,**
நீதிமன்ற வீதி, மல்லாகம்.

கிளைகள்
❐ **கே.கே.எஸ். றோட்,** கோண்டாவில் சந்தி (பிள்ளையார் கோயில் பின் வீதி). கோண்டாவில்.
❐ **செல்வம் ஸ்ரோர்ஸ்,** மானிப்பாய் ஆஸ்பத்திரி முன்பாக, மானிப்பாய்.
❐ **கே.கே.எஸ். வீதி,** (நாகம்ஸ் தியேட்டர் அருகில்) சுன்னாகம்.

(44287)(42-11-17)

## யாழ்.பிரதான வீதியில் புதியதோர் உதயம்....



# 5 ஸ்டார் கிறீம் ஹவுஸ்

கோடைவெயிலா...... இல்லைக் குளிர்நிலவா....?
அதிசயிக்க வைக்கும் அபார கூடம்!!

❐ நாவிற்கினிய ஐஸ்கிறீம் வகைகள்...
❐ சர்பத் வகைகள்...
❐ நெல்லிக்கிரஸ்...

மாத்திரமல்ல சுத்தமாகவும் சுகாதார முறைப்படியும் தயாரிக்கப்பட்ட உடல் ஆரோக்கியத்திற்குகந்த சிற்றுண்டி வகைகள், கேக், பிஸ்கட் வகைகள்....... இன்னும் இன்னோரன்ன சகல வித பலகார வகைகள் வேண்டிய வகையில் உங்கள் வைபவங்களுக்கு ஓடருக்குப் பெற்றுக்கொள்ள விரையுங்கள்.

உங்களைக் குளிர்ச்சிக் கடலில் மூழ்கடிக்கும்



# 5 ஸ்டார் கிறீம் ஹவுஸ்

131, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
உரிமையாளர். A. ஜெயக்குமாரன்.

(கி.42351)(42-17-11)


## யா/கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்
யாழ்ப்பாணம்

**க.பொ.த.உயர்தரம் அனுமதி – 2007**

மேற்படி உயர்தர கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான வகுப்புகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை காரியாலயத்தில் பெற்று விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவு திகதி: **26.04.2005**

வி.மாணிக்கம்,
அதிபர்.

(கி.42338)(42-11-17)

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

அன்னையின் மடியில் 04 – 11 – 1997



அநியாயப் பிடியில் 17 – 04 – 2003

## செல்வன் நடனபாதம் திலக்ஷன்

ஆண்டு இரண்டு ஆகிவிட்டால் ஆறிடுமா எம் துயரம்?
பூத்த உன் முகம் எங்கே?
புன்னகைக்கும் உன் சிரிப்பு எங்கே?
உன் துடிப்பு மிக்க செயல் எங்கே?
அப்பா, அம்மா, அக்காவுடன் கூடிக் குதூகலித்த நாள் எங்கே?
பேசாமல் நீ சென்றாய் பெற்ற மனம் வேகுதடா!
கூசாமல் உன்னுயிரைக் காலனவன் பறித்தானே!
உன்பாச முகம் பார்த்து ஆண்டு இரண்டு ஆனதடா!
உன்செயல் அத்தனையும் நினைத்து நினைத்து
நித்தம் மனம் கலங்குதே **திலக்ஷா!**
உன் நினைவுகள் என்றும் எம் நெஞ்சம் இருக்கும்
வரை நிலைத்திருக்கும்!

கேராலிவத்தை லேன்,
நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

உன் பிரிவால்துயருறும்
அப்பா, அம்மா,
பவிதா, யசோதா (அக்காமார்)

(44176)(42-11-17)

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 B யின் யாழ்.மாவட்ட தொழில்வழிகாட்டல் கல்விப் பிரிவின் ஏற்பாட்டுடன் யாழ்.மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்பின் அனுசரணையுடன்

**மொறட்டுவைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கிய மன்றம் வழங்கும்**

தொழில்சார் கற்கைநெறி வழிகாட்டல்
ஆற்றல் மேம்படுத்துகை மற்றும் கணனியில்

# கருத்தரங்கு

உயர்தரப் பரீட்சைக்கு பின் பல்கலைக்கழக அனுமதி பெறாதவர்களின் நிலை என்ன? நட்டாற்றில் விடப்பட்டவர்களாய் திக்குத் திசை தெரியாமல் தள்ளாடுகின்றோம். தகைமைகள் இருந்தும் உயர்கல்வித் தெரிவுகளில் தவறவிடப்படுகின்றோம். காரணம் என்ன? அடுத்த நகர்வைப் பற்றி மாணவர் மத்தியில் தெரியவில்லை. தொழில் வாய்ப்பிற்கு ஏற்றவகையில் சூழ்நிலை தொழில் சார்கற்கை நெறிகளைத் தேர்ந்தெடுக்கத்தெரியவில்லை.

மாணவர் மத்தியில் இருக்கும் தெரிவின்மையை நீக்கி புதிய உலகை நோக்கி வழிகாட்டும் முகமாக வடக்குப் பகுதிகளில் பல கருத்தரங்குகளை நடத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில்

**சூழ்நிலை தொழில்சார் கற்கைநெறி வழிகாட்டல்**
**(Career Guidence)**
**சூழ்நிலை கணனியியல் கருத்தரங்கு**
**(Group discussion of Computing)**
**ஆற்றல் மேம்படுத்துகை விவாதம்**
**(Skill development programme)**

என்பன உள்ளடங்கும்.

| | | |
|---|---|---|
| வடமராட்சி | யா/நெல்லியடி மத்திய கல்லூரி | 17.04.2005 |
| சாவகச்சேரி | யா/இந்துக் கல்லூரி | 18.04.2005 |
| வலிகாமம் | யா/இராமநாதன் கல்லூரி | 18.04.2005 |

**நேரம் 8.30 - 4.30**

**பிரவேசம் இலவசம்**

இளைஞர்களின் எதிர்காலத் திட்டமிடலை இலகுவாக்கும் இந்நிகழ்வில் பங்குபற்றிப் பயன்பெறுமாறு மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**தமிழ் இலக்கிய மன்றம்**
**மொறட்டுவைப் பல்கலைக்கழகம்.**

(42-11-17) (44222)

உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்
17.04.2005

# 'கருணா அணி' என்ற போர்வையில் ஆழ ஊடுருவித் தாக்கும் பிரிவு?

## கருணா அணிக்கு இப்போது திருமலையில் தளம்?

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு முன்னர்- யுத்த காலத்தில் - தமிழ் ஆயுதக் குழுக்களின் ஆதரவுடன் விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஆழ ஊடுருவித் தாக்கும் பிரிவு ஒன்றை ஸ்ரீலங்கா இராணுவம் அமைத்துச் செயற்பட்டுவந்தது தெரிந்ததே. இப்போது அதே பாணியில் மீண்டும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் ஊடுருவி முக்கியஸ்தர்களைத் தீர்த்துக் கட்டும் நோக்கில் புலனாய்வுப் பிரிவும் படையினரும் இணைந்து ரகசியக் குழு ஒன்றை ஏற்படுத்தியுள்ளர்களா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

அண்மைக் காலத்தில் இடம்பெற்றுள்ள சில சம்பவங்கள் இவ்வாறான சந்தேகத்தை தமிழர் தரப்பு வட்டாரங்களில் ஏற்படுத்தி உள்ளன.

கண்டியில் 'மிலேனியம் சிற்றி' என அழைக்கப்படும் ஒரு மறைவிடத்தில் ரகசியப் படைப்பிரிவு ஒன்றை உருவாக்கி உயர் அதிகாரி ஒருவர் தலைமையில் அதனை இயக்கிவந்தமை பழைய கதை. 'ஆழ ஊடுருவும் படையணி' என்று அழைக்கப்பட்ட இக்குழுவில் முன்னாள் தமிழ்க் குழுக்களைச் சேர்ந்தவர்களும் மோகன் குழு, ராசிக் குழு போன்ற தமிழ் ஆயுதக்குழுக்களைச் சேர்ந்த உறுப்பினர்களும் இணைந்து செயற்பட்டு வந்தனர் என்ற தகவல்கள் அப்போது அடிபட்டு வந்தன.

இக் கொலைக்குழு வன்னியிலும், கிழக்கிலும் விடுதலைப் புலிகளின் பிரதேசங்களுக்குள் ஆழ ஊடுருவி நடத்திய தாக்குதல்களில் விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகள் சிலர் உயிரிழந்தமை தெரிந்ததே. அதன் பின்னர் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு போர் ஓய்ந்து சமாதானச் சூழல் உருவான பின்னர் நாட்டில் ஆட்சி மாறிய பிறகு இந்த இரகசியப்படைப் பிரிவின் செயற்பாடுகள் அம்பலத்துக்கு வந்தன. அத்துடன் அந்தப் பிரிவு செயலிழந்து போனதாக பாதுகாப்பு ஆய்வாளர்கள் தெரிவித்திருந்தனர்.

இப்போது போர் நிறுத்த உடன்படிக்கை நடைமுறைக்கு வந்து நான்கு ஆண்டுகளை எட்டும் இந்தக் கட்டத்தில் - அந்த உடன்பாடு பெரும் நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் நிலையில் - மீண்டும் புலிகளின் பிரதேசங்களுக்குள் ஊடுருவி தாக்குதல்களைத் தொடுக்கும் ரகசியப் படைப்பிரிவு ஒன்றை அரசின் ஆசீர்வாதத்துடன் படையினரில் ஒரு பிரிவினர் ஆரம்பித்துள்ளனர் என்ற சந்தேகம் எழுப்பப்படுகின்றது.


மட்டக்களப்பில் கருணா அணியின் பிளவு காரணமாக ஏற்பட்ட நெருக்கடி நிலையை அரசியல், இராணுவ ரீதியான நகர்வுகள் மூலம் தோற்கடித்த புலிகள், அங்கு - தமது செயற்பாடுகளை விஸ்தரித்து கட்டமைப்புகளைச் சீர்செய்து செயற்பட்டுவருகின்றனர். இந்த நிலைமையைக் குழப்புவதற்கும் 'கருணா அணி' என்ற போர்வையில் புலிகளுக்குத் தொடர்ந்து தலையிடி கொடுத்து நெருக்கடி ஏற்படுத்துவதற்காகவும் தாக்குதல்களை அடிக்கடி நடத்த இந்தப் படைப்பிரிவு திட்டமிட்டு செயற்படுகிறது என்று சந்தேகம் எழுந்துள்ளது.

வடக்குடன் ஒப்பிடுகையில் கிழக்கில் புலிகளின் பிரதேசத்துக்குள் ஊடுருவுவது சுலமானது. எனவே இந்த ஊடுருவும் அணி மூலம் புலிகளின் பொறுப்பாளர்கள், தலைவர்களை இலக்கு வைத்து தாக்குதல்களை நடத்த அங்கு வாய்ப்புகள் அதிகம்.

துணைப் படைகளின் உதவியோடு இத்தகைய தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்திவிட்டு பொறுப்பைத் 'கருணா அணி' யின் பெயரில் போட்டு தப்பித்து விட முடியும் என்பது ஸ்ரீலங்கா படைத்தரப்பின் கணிப்பு.

ஆழ ஊடுருவும் படையணியின் தாக்குதல்களை ஒத்த வேறு தாக்குதல்களை புலிகள் கூட இப்போது எதிர்பார்த்துள்ளனர் என்பது தெரிகிறது.

சமாதானத்தை விரும்பாது தமது சுயநலத்தில் அக்கறை கொண்ட படை அதிகாரிகளில் ஒரு பகுதியினர், விடுதலைப் புலிகளுக்கு எதிராக யுத்தம் ஒன்றை வலிந்து திணிப்பதற்காக, தமது நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் தீவிரம் காட்டியுள்ளனர்.



ஈ.பி.டி.பி., ராசிக் குழு, புளொட் மோகன் குழு போன்ற ஆயுதக் குழுக்களுக்கு சுகபோகம் அளித்து அவர்களுக்கு முழுப்பாதுகாப்புக் கொடுத்து, தம்முடன் சேர்த்துவைத்து ஒரு கோப்பையில் உண்டு குலாவி வந்த படை அதிகாரிகள் அந்தப் பட்டியலில் இப்போது கருணா குழுவையும் இணைத்துக் கொண்டுள்ளனர்.

"கருணா குழு என்று ஒன்று இல்லை. அப்படியான குழு ஒன்றுக்கு படையினர் ஆதரவு கொடுக்கவுமில்லை. படையினருடன் இணைந்து அப்படி எந்தக் குழுவும் செயற்படவும் இல்லை" என்று அரசும் பாதுகாப்புப் படைத் தலைமையும் திரும்பத்திரும்ப அடித்துக் கூறிவந்தன.

இந்நிலையில், படையினரின் ஆசீர்வாதத்துடன், அவர்களின் முழுப் பாதுகாப்புடன் கருணா குழு வெலிகந்தப் பகுதியில் தீவுச்சேனை என்னும் இடத்தில் முகாம் அமைத்துச் செயற்படுகின்றது என்ற தகவலை ஆதாரங்களுடன் தெற்கு சிங்கள ஊடகவியலாளர் ஒருவர் வெளியிட்டார். அந்தத் தகவலுக்குப் பின்னரும் அதை மறுப்பதற்கு அரசுத்தரப்பு பின் நிற்கவில்லை.

"அரசின் ஆதரவுடன் செயற்படும் ஆயுதக் குழுக்களும் படையினரின் புலனாய்வுப் பிரிவினருமே கிழக்கின் தாக்குதல்களுக்கு மூல காரணமானவர்கள். போர் நிறுத்த உடன் படிக்கைக்கு ஏற்ப ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட்டிருக்க வேண்டும். இன்னமும் அரசு ஆயுதங்களைக் களையவில்லை. இதனால், போர் நிறுத்த உடன்படிக்கை சிக்கலுக்கு உள்ளாகியுள்ளது. புலிகள் மீது தாக்குதல் தொடுப்பதில் அரசும் படைகளும் தீவிரம் காட்டுகின்றன. யுத்தம் எம் மீது திணிக்கப்பட்டால் எதிர் கொள்ளவேண்டிய இக்கட்டில் நாம் சிக்கியுள்ளோம்" - என்று விடுதலைப் புலிகள் இலங்கை அரசுக்கும் சர்வதேச சமுகத்துக்கும் எச்சரிக்கை விடுக்கத் தொடங்கிவிட்டனர்.

விடுதலைப் புலிகள் தெரிவிக்கும் குற்றச்சாட்டின் உண்மைத் தன்மையை அண்மைக் காலமாக மட்டக்களப்பு போர் நிறுத்தக் கண்கானிப்புக் குழுவின் உப தலைவர் பி.ஆர்.ஸ்மின் வெளியிட்டுவரும் கருத்துக்கள் நிரூபித்துள்ளன.

விடுதலைப் புலிகள் அமைப்பின் போராளிகள் கொல்லப்படும் 'கொலைக் களமாக' விளங்கும் வெலிகந்தப் பிரதேசத்துக்கு போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அதிகாரி நோரடியாகச் சென்றார். தீவுச் சேனையில் கருணா குழுவைச் சேர்ந்தவர்களைச் சந்தித்தார். அவர்களுடன் கலந்துரையாடினார். அவர்கள் வசம் ஆயுதங்கள் இருப்பதை நேரில் கண்டார். இராணுவ முகாம் சூழவுள்ள பிரதேசத்தில் அந்த முகாம் அமைக்கப்பட்டிருப்பதையும் உணர்ந்தார்.

அங்கிருந்து திரும்பியதும் தான் கண்டவற்றையும் கலந்து உரையாடியதையும் தனது தலைமையகத்துக்கு அறிக்கை வடிவில் அனுப்பினார். ஆயுதங்களுடன் ஒரு குழு செயற்படுவது யுத்தநிறுத்த மீறல் என்றும் அவர் கருத்து வெளியிட்டார். தாம் கண்டவற்றையும் கேட்டவற்றையும் கடந்த வாரம் மட்டக்களப்பில் கூடிய, ஜனாதிபதி ஆணைக்குழு முன் புட்டுவைத்தார்.

சிங்கள ஊடகவியலாளர் வெளியிட்ட தகவலை மறுத்த இலங்கை அரசு, கண்காணிப்புக் குழு அதிகாரி வெளியிட்ட தகவலை மறுத்துரைக்க முடியவில்லை. அங்கு கருணா குழுவே செயற்படுகின்றது என்று மொட்டையாக தவவல் ஒன்றை அரசு வெளிப்படுத்தியது. விடுதலைப் புலிகள் சர்வதேசத்துக்கு விடுத்த செய்தியை மறுக்கும் நோக்குடன் திட்டங்களை வகுத்தன அரசும், படைத்தரப்பும்.

இறுதியில் தீவுச்சேனையில் இயங்கிய கருணா குழுவுக்கு இப்போது புதிய மறைவிடம் ஒன்றை ஒழுங்கு செய்து, அங்கு அவர்களை அமர்த்தியிருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் மட்டக்களப்புக்கு விரைந்த படை உயர் அதிகாரி ஒருவர் கண்காணிப்புக்குழு அதிகாரிகளை தீவுச் சேனைக்கு அழைத்துச் சென்றார். அங்கு கருணா முகாம் என்று ஒன்று இல்லை என்று காட்டி மார்தட்டினார்.

அந்தப் பிரதேசத்துக்கு நேரில் சென்று முகாமைப் பார்வையிட்டு வந்த கண்காணிப்புக்குழு அதிகாரியின் கண்ணுக்குள் மண்தூவுவதற்கு அந்த அதிகாரி முயன்றார்.

கூடுதலாக தாக்குதல் இடம்பெறும் வெலிகந்த, செவனப்பிட்டிய போன்ற பகுதிகளில் தனது உப அலுவலகம் ஒன்றை அமைக்க கண்காணிப்புக் குழு முயன்றது. இடம் கூடத் தெரிவு செய்தது. படைத் தரப்பினரும் ஜே.பி.வி.போன்ற இனவாதிகளும் தமது செல்வாக்கைப் பிரயோகித்ததால், உப அலுவலகம் அமைக்கும் முயற்சி கைகூடவில்லை. மாற்று ஏற்பாடாக வாரத்தில் இரு தினங்கள் தமது வாகனத்துடன் அந்தப்பகுதியில் தரித்திருப்பது என்று கண்காணிப்புக்குழு முடிவு செய்துள்ளது.

### கருணா குழுவினர் திருமலைக்கு நகர்வு

மட்டக்களப்பில் கருணா குழு செயற்படுவதற்கு சிக்கல்கள் தோன்றியுள்ளதால், அவர்களை திருகோணமலைப் பகுதிக்கு படையினர் நகர்த்தியுள்ளனர் என்ற சந்தேகம் தற்சமயம் உருவாகியுள்ளது.

'கடந்த வாரம் கருணா குழுவைச்சேர்ந்த ஒன்பது பேர் திருமலைக்குள் வந்துள்ளார்கள். அவர்கள் எம் மீது தாக்குதல் தொடுக்கலாம்' என்ற எச்சரிக்கைத் தகவலை திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் எழிலன் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு அதிகாரிக்கு ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

எழிலன் இந்த தகவலைத் தெரிவித்த, இரு தினங்களில் பூநகரில் உள்ள விடுதலைப் புலிகளின் காவலரண் ஒன்று தாக்கப்பட்டது. திருகோணமலையில் நடந்த முதலாவது தாக்குதல் சம்பவம் இதுவாகும். இத்தாக்குதலில் துணைப் படைவீரர் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் காயம் அடைந்தார்.

இத்தாக்குதலில் ஈடுபட்டவர்களில் இருவர் சிங்கள மொழியில் பேசினார்கள் என்று தகவல் வெளியாகியுள்ளது. சிங்கள மொழியில் உரையாடியதன் மூலம் படையினரும் இந்தத் தாக்குதலில் சம்பந்தப்பட்டிருக்கின்றனர் என்ற ஊகம் எழுந்துள்ளது.

மட்டக்களப்பில் இருந்து கருணா அணி என்ற பெயரில் தமது தாக்குதல் பிரிவை திருமலைக்கு நகர்த்தியுள்ள படைத்தரப்பு, தமது கட்டுப்பாட்டில் உள்ள வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளுக்கும் அவர்களைக் கொண்டு வருமா என்ற சந்தேகம் தற்சமயம் பலமாக எழுந்துள்ளது.

இந் நிலையில் விடுதலைப் புலிகள் அடுத்து என்ன செய்யப்போகின்றனர் என்ற கேள்வி எழுகின்றது.

மட்டக்களப்பில் இருந்து திருகோணமலைக்கு நகர்த்தியது போல கருணா குழு என்ற பூச்சாண்டியை ஏனைய பிரதேசங்களுக்கும் நகர்த்த புலிகள் இடமளிப்பார்களா என்ற கேள்வியும் எழுப்பப்படுகின்றது.

ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்ட விடுதலைப் புலிகளின் உயர் மட்ட அரசியல் குழு இன்று வன்னி திரும்புகின்றது.

நாளை 18ஆம் திகதி இலங்கை வரும் நோர்வே அனுசரணைக்குழுவின் விசேட ஆலோசகர் எரிக்சொல்ஹெய்ம் மறுநாள் மட்டக்களப்புக்குச் சென்று அன்றே வன்னிக்குப் புறப்படுவார். மறுநாள் தமிழ்ச்செல்வனுடன் பேச்சுநடத்துவார்.

தற்போதுள்ள களநிலைமை குறித்தும் தமது நிலைப்பாடுகள் பற்றியும் தமிழ்ச்செல்வன் சொல்ஹெய்முக்கு எடுத்துக் கூறுவார்.

பொறுமை காக்கும் தமது உபாயத்தை விடுதலைப் புலிகள் தொடர்ந்து பேணுவார்களா? கடும்போக்கான முடிவுகளை எடுப்பார்களா?

இந்தக் கேள்விகளுக்கு சொல்ஹெய்ம் - தமிழ்ச் செல்வன் சந்திப்புக்குப்பின் பதில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

குகா

# வீதிகள் விசாலிப்புத் திட்டம்; குழப்பத்தில் நகர மக்கள்



யாழ்ப்பாணத்தில் பிரதான வீதியோரங்களில் வசிப்போர் கடந்த சில நாள்களாகவே கதிகலங்கிப்போய் உள்ளனர்.

எதையோ பெரிதாகப் பறிகொடுக்கப்போகிறோம் என்ற ஏக்கமும் அதிருப்தியும் அவர்களிடம் தெரிகின்றன.

யாழ்ப்பாணத்தின் பிரதான வீதிகளை விஸ்தரிக்கும் பாரிய அபிவிருத்தித் திட்டம் பற்றிய அறிவிப்பு வெளிவந்திருப்பதை அடுத்தே இந்தப் பதகளிப்பு பலரிடமும் ஏற்பட்டிருக்கின்றது.

வீதிகளை அகலமாக்கும் இவ்வாறான ஒரு திட்டம் பற்றிய பேச்சு நீண்ட பலகாலமாகவே இருந்து வந்திருப்பினும் அது ஒரு போதும் செயல்வடிவத்துக்கு வரவே வராது என்ற பலமான நம்பிக்கையும் கூடவே இருந்தது. ஆனால், இப்போது இந்தத் திட்டத்தைத் தொடக்க வேண்டிய வேளை வந்துவிட்டதாக நகரத்திட்டமிடலாளர்களும், துறைசார்ந்த அதிகாரிகளும் கூறியிருக்கின்றனர்.

யாழ். நகரில் இருந்து பல முனைகளிலும் கிளம்பும் ஆறு பிரதான வீதிகளை அவற்றின் தற்போதைய அகலத்தைப்போல் இன்னொரு மடங்கு அகலத்துக்கு விஸ்தரிப்பது என்ற நீண்ட - பெரும் நிதிச் செலவிலான - திட்டத்தின் தொடக்கம் பற்றி யாழ். மாவட்ட அரச அதிபர் உத்தியோகபூர்வமாக அறிவித்ததை தொடர்ந்து நகர மக்கள் தங்கள் தங்கள் எல்லைகளுக்கு ஆபத்து நெருங்கிவிட்டதாக உணர்கின்றனர்.

வீதிகளை அண்டிக் கட்டடங்கள் தம்பாட்டில் கட்டி எழுப்பப்பட்டதால் உருவாகியதே யாழ். நகரம். எந்தத் திட்டமிடலும் இன்றி வீதிகளின் விளிம்பு வரை தங்கள் நில எல்லையை விஸ்தரித்துக் கொண்டவர்கள் நகரவாசிகள். நகரப் பகுதியில் மட்டுமன்றி நகருக்கு வெளியிலும் வீதி ஆக்கிரமிப்பு அப்பட்டமாகவே நடந்து வந்திருக்கிறது. வீதியை நோககிக் கட்டடங்கள் முளைத்த போது வீதிகள் ஒடுங்கிப்போயின. வெவ்வேறு வளைவுகளையும், வடிவங்களையும் எடுத்தன. பல உயிர்களைக் காவுகொண்ட விபத்துக்களுக்கு நெற்றிமுட்டான வீதித் திருப்பங்கள் காரணமாயிருந்து வந்துள்ளன.

யாழ்.ஆஸ்பத்திரியை மையமாகக் கொண்ட நகரின் விரிவாக்கம் இனி எந்த விஸ்தரிப்புக்களையும் செய்ய முடியாதபடி குழப்பமான நகர அமைப்பாக மாறிவிட்டது. யாழ்.நகரில் -'நகருக்குள் நுழையும் ஒருவழிப்பாதையாக விளங்கும் - கே.கே.எஸ். வீதியை எடுத்துக் கொண்டால் அதன் இரு மருங்கும் எழுந்து நிற்கும் கட்டடங்கள் தான் கண்முன் தோன்றும் . ஒடுக்கமான அந்த வீதியை விசாலிப்பது என்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாகவே தெரியும். இதுபோன்றே நகரின் எல்லா வீதிகளும் நெருக்கமான கட்டடங்களை எல்லைகளாகக் கொண்டவை.

வீதியை விஸ்தரித்து போக்குவரத்து நவீனமடைந்தால்தான் ஒரு நகரம் அடிப்படையில் வளர்ச்சி காணும். இந்த அறிவியல் யதார்த்தத்தை யாழ்ப்பாணத்தவர்களும் ஏற்றுக் கொள்ளவேண்டிய நிலைமை வந்திருக்கின்றது.

தங்களின் ஆட்சிக்காலத்தில் அந்நியர்கள் அமைத்த நெடுஞ்சாலைகளும் புகையிரதப் பாதைகளுமே இன்று வரை இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தன என்பது மறுக்கமுடியாது.

யாழ். நகரமயமாக்கம், அடிப்படையில் பெரிய மாறுதல்களுடன் முன்னெடுக்கப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது.

## விஸ்தரிக்கப்படவுள்ள வீதிகள்

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை வீதி, யாழ்ப்பாணம் - பலாலி வீதி, யாழ்ப்பாணம் - மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் - கண்டி வீதி(ஏ-9) ஆகிய ஆறு வீதிகளையே வெளிநாட்டு நிதி உதவியுடன் விஸ்தரித்து அகலமாக்குவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்த வீதிகளை நகரப்பகுதியில் இருந்து விஸ்தரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. வீதியின் இருபுறங்களிலும் குறிக்கப்பட்ட தூரத்துக்கு நிலத்தைச் சுவீகரித்து வீதிகளை விரிவாக்கி இருவழிப்பாதைகளாக மாற்றும்போது நகரில் போக்குவரத்துச் சீராகும். நகரின் அடிப்படைக் கட்டுமானம் உருவாகும். ஆனால், இங்கேதான் நினைத்துப் பார்க்க முடியாத பெரும் சிக்கல் எழுந்திருக்கிறது. வீதியோரம் நிலங்களைச் சுவீகரிக்க அரசு அங்கீகாரம் அளித்துவிட்டது. இது அரசமைப்பின் பிரகாரம் சட்டரீதியாக வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்படுகிறது. எதிர்த்தோ, ஆட்சேபித்தோ எவரும் சட்ட உதவியை நாடமுடியாது. நீதிமன்றங்களில் போய் முறையிடவும் முடியாது. வீதி விஸ்தரிப்புக்கு இடைஞ்சலாக உள்ள கட்டடங்களைத் துடைத்து அழித்து அப்புறப்ப டுத்தும் அதிகாரம் துறைசார்ந்த அதிகாரிகள் வசம் வழங்கப்பட்டிருக்கிறது. சட்டப்படி கட்டப்பட்ட கட்டடங்களை அப்புறப்படுத்த வேண்டி வந்தால் அவற்றுக்கு நஷ்ட ஈடு சிபாரிசு செய்யப்படலாம். ஏனைய எல்லாக் கட்டடங்களும் தயவு தாட்சண்யம் இன்றியே அப்புறப்படுத்தப்படலாம்.

யாழ். நகரையும் அதனை அண்டிய பகுதிகளையும் எடுத்துக் கொண்டால் மிக அண்மையில் கட்டப்பட்ட சில கட்டடங்களைத் தவிர தொண்ணூறு சதவீதமான கட்டடங்கள் சட்டத்துக்கு முரணாகவே நிறுவப்பட்டவை என்று துணிந்து கூறலாம். வீடுகள், தலைவாசல்கள், கடைகள், கடைத்தொகுதிகள், கிணறுகள், மலசல கூடங்கள், கோவில்கள் என்று பலவும் வீதியின் விளிம்புகளில் நிறைந்து நிற்கின்றன. வீதிகளை அகலமாக்கும் திட்டத்தை முறைப்படி அமுல் செய்வதானால் இவற்றை எல்லாம் துடைத்து அழித்தால் தான் சாத்தியமாகலாம்.இந்த நடவடிக்கை நகரின் அரைவாசியைக் குண்டு வீசி அழிப்பதற்கு ஒப்பாக அமையலாம்.

## வாதப் பிரதிவாதங்கள்

இங்கேதான் இந்தத்திட்டம் தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் கிளம்புகின்றன. வீதி விஸ்தரிப்பு யாழ்ப்பாண குடிமனை அமைப்புக்குப் பொருத்தமானது தானா என்ற கேள்வியை ஒருசாரார் எழுப்புகிறார்கள்.

இந்தச் சமாதான சூழலில் அபிவிருத்திக்கான அடிக் கட்டுமானங்களை உறுதியாக அமைத்துக் கொள்ள வாய்ப்புக் கிட்டியிருப்பதால் இந்த வாய்ப்பை நழுவ விடாமல் நவீன வீதிக் கட்டமைப்பை உருவாக்கிக்கொள்வதே நல்லது. அதற்காக சில இழப்புக்களைச் சந்திக்கத்தான் வேண்டும் என்று இந்தத் திட்டத்தை வரவேற்று வலியுறுத்துவோரும் உள்ளனர்.

கிணறு, மலகூடத்தையும், வீட்டு முகப்புகளையும், பெட்டிக்கடைகளையும் இழக்கும் ஆதங்கத்தில் வாயில் வந்தபடி இந்தத் திட்டத்தை விமர்சிப்பவர்கள்தான் ஏராளம் பேர். இவர்கள் தான் மாபெரும் மக்கள் சக்தியாகவும் உள்ளவர்கள். எனவே இந்தத்திட்டத்தை செயற்படுத்தும் எந்தச் சக்திகளும் இந்த மக்கள் சக்தியின் மாபெரும் வெறுப்பைச் சந்திக்காமல் இருக்க முடியாது. அதேநேரம் பொதுநோக்கில் - நீண்ட கால வாக்கில் - இந்தத் திட்டத்தின் பலாபலன்கள் சிறப்பாகவே அமையும். இதனை இந்த மக்களுக்கு உணர்த்துவதற்கு முதலில் திட்டமிட வேண்டும்.

நகரில் வீதியோரம் காணிகளை வைத்திருப்போர் அவற்றை அவசரப்பட்டு அறாவிலைக்கு விற்றுவிட முயற்சிக்கும் சம்பவங்கள் பற்றியும் கேள்விப்படமுடிகிறது. இந்தளவுக்கு வீதி விஸ்தரிப்புப் பயம் மக்களை ஆட்டிப்படைக்கத் தொடங்கியுள்ளது.

போர் ஓய்வுக்குப் பின்னர் யாழ்.நகரம் நாட்டின் பெரும் சந்தைகளில் ஒன்றாக விரைந்து வளர்ச்சி கண்டுவிட்டது. படு'பிஸி'யான வியாபாரம் நடக்கும் மையமாக மாறிவரும் நகரம், அடிப்படையில் எந்த வளர்ச்சியையும் எட்டவில்லை என்பது நிஜம். திறந்த சந்தைப் பொருளாதாரம் யாழ்ப்பாணத்துக்குள் வேகமாக நுழைந்துவிட்டது.கடந்த புதுவருட தினத்தன்று நகர திரையரங்குகளில் கூ ய கூட்டம் காண்போருக்கு வியப்பையே தந்திருக்கும் . நாங்கள் எ ங்கே நிற்கிறோம் என்று ஒரு கணம் சிந்திக்கவும் வைத்திருக்கும்.

சென்னையிலும் மும்பையிலும் தலைநகர் கொழும்புலும் ரிலீஸான புத்தாண்டு தமிழ் சினிமாப் படங்கள் இங்கே யாழ்ப்பாணத்திலும் சமகாலத்தில் ஒரே நாளில் திரையிடப்பட்டன.




மும்மை எக்ஸ்பிரஸ், சச்சின், சந்திரமுகி, குருதேவா என்று புதிய சினிமாப் படங்களைப் பார்ப்பதற்காக அலங்கரிக்கப்பட்ட திரையரங்குளில் கூட்டம் அலை மோதியது.

அண்மைக்கால யாழ்ப்பாணத்தின் வரலாற்றில் இது ஒரு புதிய காட்சி.

எங்கள் நகரம் வளர்ச்சி காண்கிறது என்று பெருமைப்பட்டுக்கொள்ள இவற்றைத்தான் நம்பி இருக்கவேண்டி உள்ளதா?

நடைபாதைக் கடைகளின் பெருக்கத்தை வைத்துக்கொண்டா அல்லது வீதிகளின் விசாலத்தை வைத்துக்கொண்டா நகரின் வளர்ச்சியைக் கணிப்பீடுவது?

இந்தப் பின்னணியில் நின்றே நகரின் அடிப்படைக் கட்டமைப்பு வளர்ச்சிக்கான திட்டங்களை நோக்கவேண்டும்.வீதிகளை விசாலிக்கும் திட்டத்தை ஆதரிப்போமா? எதிர்ப்போமா?

- குமரன்

படங்கள் :- கவி

# சிறுவர் பொழில்

## புத்திசாலி மீனவன்



முன்னொரு காலத்தில் பாரசீக நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அவனுக்கு மீன் என்றால் உயிர். ஒரு நாள் மீனவன் ஒருவன் மிகவும் அழகான பெரிய மீன் ஒன்றை அரசவைக்குக் கொண்டு வந்து அரசனிடம் தந்தான். அந்த மீனைக் கண்டு மகிழ்ந்த அரசன் மீனவனுக்கு உடனே 100 பொற்காசுகளை பரிசளிக்குமாறு கட்டளை இட்டான். அருகில் அமர்ந்திருந்த அரசிக்கு இந்தச் செயல் பிடிக்கவில்லை.

அரசனைப் பார்த்து "நாளைக்கே நம் வீரர்கள் யாரேனும் செயற்கரிய வீரச் செயல் செய்து வந்தால் நீங்கள் வழக்கம் போல் 100 பொற்காசுகளைப் பரிசளிப்பீர்கள். ஆனால், பரிசு பெறுபவன், ஒரு மீனவனுக்குக் கொடுத்ததைத் தானே அரசர் நமக்கும் தந்துள்ளார் என்று நினைப்பான். அதனால், அந்த மீனவனுக்குக் கொடுத்த பரிசை ஏதேனும் சொல்லித் திரும்ப வாங்கிக் கொள்ளுங்கள்" என்றாள்.

"நீ சொல்வது சரிதான் ஆனால், கொடுத்த பரிசை மற்றவர் குறை சொல்லாதபடி எப்படித் திரும்ப வாங்குவது" என்று கேட்டான் அரசன்.

"அந்த மீன் ஆணா? பெண்ணா? என்று கேளுங்கள். அவன் ஆண் என்று சொன்னால் பெண் மீன் வேண்டும் என்று மீனைத் திருப்பித் தந்துவிடுங்கள். பெண் என்று சொன்னால் ஆண் மீன் வேண்டும் என்று சொல்லுங்கள்" என்றாள்.

அரசனுக்கு தன் மனைவியின் அறிவுரை நல்லதாகப்பட்டது.

மீனவனைப் பார்த்து " நீ கொண்டு வந்த மீன் ஆண் மீனா? பெண் மீனா?" என்று கேட்டான். அதற்கு மீனவன் பணிவாக "அரசே! இது ஆணுமல்ல, பெண்ணுமல்ல, அலி மீன்" என்றான்.

மீனவனிடமிருந்து தான் சற்றும் எதிர்பாராத பதில் வந்ததைக் கண்டு அரசன் பெரிதும் மகிழ்ந்தான். அந்த மகிழ்ச்சியில் அவனுக்கு 100 பொற்காசுகளைத் தரும்படி கட்டளையிட்டான்.

"ஐயோ! 100 பொற்காசுகள் கொடுத்ததே அதிகம். அதைத் திரும்ப வாங்குங்கள் என்றால் மேலும், 100 பொற்காசுகள் தந்து விட்டீர்களே..." என்று கோபத்துடன் கத்தினாள் அரசி.

"நான் மகிழ்ச்சி அடையும் போதெல்லாம் பொற்காசுகள் தருவது வழக்கம். இப்போது அவன் சொன்ன பதிலால் மகிழ்ச்சியடைந்து அவனுக்கு பரிசு தந்தேன். என்ன செய்வது" என்று கேட்டான் அரசன்.

இரண்டு பொற்காசுப் பைகளையும் பெற்றுக்கொண்ட மீனவன் அரசனை வணங்கி விடை பெற்றான். பையில் ஓட்டை இருந்ததால் திரும்பிச் செல்லும் போது ஒரு பொற்காசு கீழே விழுந்தது. இதைப் பார்த்த மீனவன் அந்தக் காசைத் தேடிக் கண்டுபிடித்து எடுத்தான். இதை அரசனும் அரசியும் பார்த்துக் கொண்டிருந்தனர். உடனே அரசி, "நீங்கள் அவனுக்கு 200 பொற்காசுகள் பரிசு தந்தீர்கள். ஒரு பொற்காசு கீழே விழுந்ததால் தான் என்ன? எவ்வளவு பேராசை அவனுக்கு. இதையே காரணமாகக் காட்டிக் கொடுத்த பரிசை திரும்பப் பெற்றுக்கொள்ளுங்கள்" என்றாள்.

உடனே அரசன் மீனவனை அழைத்து "கீழே விழுந்த ஒரே ஒரு காசை ஏன் அவ்வளவு கஷ்டப்பட்டுத் தேடினாய். 200 பொற்காசுகள் கொடுத்தும் போதவில்லையா?" என்று கோபத்துடன் கேட்டான். மீனவன் அரசனைப் பார்த்து "அரசே! அந்தப் பொற்காசு கிடைக்கவேண்டும் என்ற பேரசையால் நான் தேடவில்லை. இந்தக் காசின் ஒரு பக்கத்தில் தங்கள் உருவமும் மற்றொரு பக்கத்தில் அரசியின் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளன. யார் காலிலேனும் இந்தக் காசு பட்டுவிட்டால் தங்களை அவமதித்ததாகுமே என்பதற்காகத் தான் தேடினேன்" என்றான்.

இந்தப் பதிலைக் கேட்ட அரசன் மேலும் அவனுக்கு 100 பொற்காசுகள் பரிசளித்தான்.

இதைக் கண்ட அரசி, மேலும் இதற்கு மேல் யோசனை கூறினால், மேலும் பல பொற்காசுகளை இழக்க வேண்டியிருக்கும் என்று எண்ணி வாயை மூடிக் கொண்டாள்.

# அமெரிக்கா முதலில் அணுகுண்டு தயாரித்த கதை......

அமெரிக்காவில் நியூயோர்க் நகரின் பிரதான பகுதியானது மான்ஹட்டன் எனப்படும் சிறிய தீவில் அமைந்துள்ளது. மான்ஹட்டன் தீவுக்கும் அணுகுண்டுக்கும் பெரிய தொடர்பு எதுவும் கிடையாது. ஆனால், 1942ஆம் ஆண்டில் அமெரிக்க அரசு அணுகுண்டு தயாரிப்பில் மும்முரமாக ஈடுபட்டபோது அணுகுண்டு தயாரிப்புத் திட்டம் மிக இரகசியமாக இருக்கவேண்டும் என்று விரும்பி அத்திட்டத்துக்கு மான்ஹட்டன் திட்டம் என்று பெயர் வைத்தது.

அணுகுண்டுத் தயாரிப்புத் திட்டம் பற்றிய இரகசியம் உண்மையில் கடைசி வரை மிக நன்றாகவே காப்பாற்றப்பட்டது என்று சொல்லவேண்டும். அமெரிக்காவில் அணுகுண்டு தயாரிக்கப்படுவது அமெரிக்கா வின் துணை அதிபருக்கே தெரியாமல் இருந்தது.

அமெரிக்காவில் அப்போது ரூஸ்வெல்ட் அதிபராக இருந்தார். ட்ரூமன் துணை அதிபர். இரண்டாம் உலகப் போர் மும்முரமாக நடந்து கொண்டிருந்த போது ரூஸ்வெல்ட் திடீரென 1945 ஏப்ரல் 12ஆம் திகதி காலமானார். துணை அதிபர் ட்ரூமன் உடனே அதிபராகப் பொறுப்பேற்றார். அவர் பதவியேற்ற 24 மணி நேரத்துக்குப் பிறகு அமெரிக்கப் போர் அமைச்சர், புதிய அதிபர் ட்ரூமனை சந்தித்து அமெரிக்க அரசு, அணுகுண்டு தயாரிக்கிற விடயத்தைச் சுருக்கமாக எடுத்துக் கூறினார். ட்ரூமனுக்கு அப்போது தான் அணுகுண்டு பற்றிய விடயம் தெரியவந்தது. அது வரை அவருக்கு அது பற்றித் தெரியாது.

ஒரு கட்டத்தில் அணுகுண்டு தயாரிக்கும் திட்டத்தில் 1,20,000 பேர் ஈடுபட்டிருந்தனர். ஆனால், விஞ்ஞானிகள் அணுகுண்டுத் திட்டத்தில் நேரடியாக ஈடுபட்டிருந்த உயர் இராணுவ அதிகாரிகள் உட்பட விரல் விட்டு எண்ணக் கூடிய சிலருக்கே அணுகுண்டுத் தயாரிக்கப்படுவது பற்றித் தெரிந்திருந்தது. அவர்களும் சரி, தங்களுக்கு இடையே பேசுகையில் அணுகுண்டு என்ற சொல்லைப் பயன்படுத்தியதே கிடையாது. அணுகுண்டை அவர்கள் 'கருவி' அல்லது 'அது' என்று தான் குறிப்பிட்டு வந்தனர்.

சிக்காகோ நகரில் பெர்மி 1942 டிசெம்பரில் அமைந்த பரீட்சார்த்த அணுஉலை வெற்றிகரமாகச் செயற்பட ஆரம்பித்ததும் ஒரு விஞ்ஞானி அது பற்றி வாஷிங்டனில் உள்ள இன்னொரு விஞ்ஞானிக்குத் தொலைபேசியில் தெரிவித்த போது 'இத்தாலிக்காரர் அமெரிக்காவில் வந்து இறங்கிவிட்டார்' என்று அடையாள மொழியில் தான் தகவல் கூறினார். வாஷிங்கடனில் இருந்த விஞ்ஞானியும் விஷயம் என்ன என்பதைப் புரிந்து கொண்டு விட்டார்.

அணுகுண்டுத் தயாரிப்பது தொடர்பான பணிகள் வெவ்வேறான 13 மாநிலங்களில் மொத்தம் 37 இடங்களில் நடந்தன. அணுகுண்டுத் தயாரிப்பு வேலைகளுக்கென இரு புதிய நகரங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இந்த பணியில் சாதாரணத் தொழிலாளர்கள் மட்டுமின்றி எண்ணற்ற பொறியியலாளர்கள், தொழில்நுட்ப நிபுணர்கள் மற்றும் ஏராள்மான விஞ்ஞானிகள் ஈடுபட்டிருந்தனர். இந்த விஞ்ஞானிகளில் 12பேர் நோபல் பரிசு பெற்றவர்கள்.

யுரேனியத்திலிருந்து யுரேனியம் 235 என்ற அணுக்களை மட்டும் தனியே பிரிப்பதற்காக டென்னசி மாகாணத்தில் ஓக் ரிட்ஜ் என்னுமிடத்தில் அமைக்கப்பட்ட ஆலை பிரம்மாண்டமானது. அந்த ஆலைக்கு மிக ஏராளமான அளவுக்கு மின்சாரம் தேவைப்பட்டது. யுரேனியக் கட்டியில் பெரும்பாலான அணுக்கள் யுரேனியம் 238 என்ற வகை அணுக்களாகும். அதாவது இந்த வகை அணுவின் மையக் கருவில் 92 புரோட்டோன்களும் 146 நியூற்ரோன்களும் இருக்கும். எனவே, இதன் பெயர் சுருக்கமாக 'யு 238' என்று குறிப்பிடப்படுகிறது. 'யு235' என்ற அணுவில் அதே எண்ணிக்கையில் 92 புரோட்டோன்களும் 143 நியூற்ரோன்களும் இருக்கும். இந்த வகை அணுக்கள் 'யு 235' என்று குறிப்பிடப்படுகின்றன. எந்த ஒரு யுரேனியக் கட்டியிலும் 0.7 சதவிகித அளவுக்குத் தான் 'யு235' அணுக்கள் இருக்கும். எனவே அவற்றைப் பிரித்து எடுப்பது மிகக் கடினம்.

யுரேனிய உலோகத்தை ஆவியாக்கி அந்த ஆவியை பல குழாய்களின் வழியே செலுத்தும் போது எடை அதிகமான 'யு238' அணுக்கள் பின் தங்கும். எடை குறைந்த 'யு 235' அணுக்கள் வேகமாக ஓடும் ஓட்டப்பந்தயத்தில் குண்டான நபர்களால் வேகமாக ஓட முடியாது என்பதைப் போலத்தான் இதுவும். இவ்விதமாக 'யு 235' அணுக்கள் தனியே பிரிக்கப்பட்டன.

அணுகுண்டு தயாரிப்புக்கு யோசனை கூறியது, அது தொடர்பான பல ஆராய்ச்சிகளில் ஈடுபட்டது, அணுகுண்டை வடிவமைத்து உருவாக்கியது என எல்லாமே விஞ்ஞானிகள் தான் செய்தனர் என்றாலும் மான்ஹட்டன் திட்டத்துக்கு அமெரிக்க இராணுவ உயர் அதிகாரிதான் தலைவராக நியமிக்கப்பட்டார்.

அணுகுண்டு தயாரிப்பதில் அடங்கிய பல்வேறு பணிகளை ஒருங்கிணைத்து செயற்படுத்த நிர்வாகத் திறன் கொண்ட ஒருவர் தேவையாக இருந்ததால் மான்ஹட்டன் திட்டத்தின் தலைவர் பதவி இராணுவ அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டது. கர்னல் குரோவ்ஸ் என்ற அதிகாரி இப்பதவிக்கு நியமிக்கப்பட்டார். அவர்தான் அணுகுண்டுத் திட்டத்தின் சர்வாதிகாரியாகத் திகழ்ந்தார். பல விடயங்களிலும் அவர் வைத்தது தான் சட்டமாக இருந்தது. உலகப் பிரசித்தி பெற்ற என்ரிக்கோ பெர்மி, ஓப்பன்ஹைமர், எட்வர்ட்டெல்லர் போன்ற பல விஞ்ஞானிகள் அவருக்கு அடியில் தான் பணியாற்றினர். எனினும், அணுகுண்டு வடிவமைத்து அதைத் தயாரிக்கும் குழுவுக்கு பிரபல விஞ்ஞானி ராபர்ட் ஓப்பன்ஹைமர் டைரக்டராக இருந்தார். அணு உலைகளில் சாதாரண யுரேனியத்தை நியூற்ரோன் தாக்குதலுக்கு உள்ளாக்கி அதன் மூலம் பெறப்பட்ட புளூட்டோனியம் மற்றும் யுரேனியம் 235 ஆகியவற்றைக் கொண்டு அணுகுண்டை வடிவமைப்பதற்கு அவ்வளவாக மனித சஞ்சாரமற்ற மெக்சிகோ பாலைவனப் பகுதிக்கு அருகே ஓரிடம் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கு விஞ்ஞானிகளும் உதவியாளர்களும் தங்குவதற்கு கொட்டடில்களும் மற்றும் மிக நவீன சோதனைக் கூடங்களும், தொழில்கூடங்களும் நிர்மாணிக்கப்பட்டன. அப்பிரதேசத்தில் யாரும் நுழையாத படி முட்கம்பி வேலி அமைக்கப்பட்டு பலத்த பாதுகாப்புப் போடப்பட்டது.

அங்கு விஞ்ஞானிகள் பல்வேறான வசதிக் குறைவுகளை எல்லாம் பொருட்படுத்தாமல் இரவு பகல் பாராமல் கடுமையாக உழைத்தனர். அவர்களது ஒரே குறி ஜேர்மன் சர்வாதிகாரி ஹிட்லர் முந்திக் கொண்டு அணுகுண்டைத் தயாரிப்பதற்குள் அணுகுண்டைத் தயாரித்துவிட வேண்டும் என்பதாக இருந்தது.

# விடா முயற்சி



ரிச்சர்ட் பிரிட் என்பவர் தன் இளம் வயதிலேயே பெரும் கண்டுபிடிப்புகளை மேற்கொள்ள வேண்டும் என்று பயணம் புறப்பட்டார். வடதுருவத்திற்குச் செல்லும் முதல் மனிதராக நான் தான் இருப்பேன் என்று இவர் தன் 12ஆவது வயதில் டயரியில் எழுதி வைத்தார்.

அதனால், அந்த வயதிலேயே கடும் குளிரைத்தாங்கும் வகையில் தன் உடலைத் தயார்படுத்தத் தொடங்கினார். ஆனால், ஒரு விபத்தில் காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது.

அதனால், ஊனமானார். எனினும் அவர் மன உறுதி குறையவில்லை. விமானத்தில் பறக்கும் பயிற்சியை மேற்கொண்டார். அப்போதும் பல விபத்துகளைச் சந்தித்தார்.

விமானியாகத் தேர்வு பெற்றார். எனினும் கால் ஊனமாக இருந்ததால் அவருக்கு வேலை மறுக்கப்பட்டது. கடைசியாக வட துருவத்திற்கு தனிப்பட்ட முறையில் பறந்து செல்ல நிதி திரட்டினார். 1926ஆம் ஆண்டு வெற்றிகரமாக வட துருவத்திற்குப் பறந்து சென்றார். 1929 ஆம் ஆண்டு தென் துருவத்தைச் சுற்றி வட்டமடித்து இன்னொரு சாதனையும் படைத்தார். அமெரிக்கா திரும்பிய அவருக்கு 'அட்மிரல்' என்ற கௌரவப் பட்டம் கொடுக்கப்பட்டது. 'தனியாக' என்ற தன் வாழ்க்கை குறிப்பு புத்தகத்தை அவர் பின்னர் எழுதினார்.



# ஆபிரிக்க யானைகளுக்கு பெரிய காதுகள்...



ஆபிரிக்காவில் வாழும் யானைகள் பாலைவனப் பகுதியில் வாழ்கின்றன. அங்கே ஒதுங்குவதற்குக் கூட நிழல் கிடையாது. எனவே, இந்த யானைகளின் காதுகளில் இருந்து நிறைய வெப்பம் வெளியேறி உடம்பைக் குளுகுளு என வைத்துக் கொள்ள உதவுகிறது. யானையின் காதுகளில் உள்ள ரத்த நாளங்கள் இந்தச் சூட்டை வெளியேற்ற உதவுகிறது. எனவே, இவற்றின் காதுகள் பெரிதாக உள்ளன.

இந்தியாவில் உள்ள காடுகளில் வாழும் யானைகளின் காதுகள், இங்குள்ள தட்பவெட்ப நிலைமைக்கு ஏற்ப நடுத்தர அளவில் உள்ளது. குளிர் பகுதிகளில் வாழும் மாமூத் என அழைக்கப்படும் யானைகளின் காதுகள், அந்த இடத்திற்கேற்ப மிகச் சிறியதாகவும், நிறைய முழகளுடனும் காணப்படுகின்றன. இறைவனின் படைப்பை என்னவென்பது!

# பாப்பரசரின் காவல் படை



ரோமன் கத்தோலிக்க மதத் தலைவர் போப் ஆண்டவரை பாதுகாக்கும் படை வீரர்கள் சுவிற்ஸர்லாந்து நாட்டைச் சேர்ந்தவர்களாக மட்டுமே இருக்கவேண்டும்!

சரி! கடந்த 1506ஆம் ஆண்டு 'சுவிஸ்கார்ட்' பாதுகாப்பு படை உருவாக்கப்பட்டது.

100 அதிரடிப்படைவீரர்கள் இதில் உள்ளனர். வெளிநாட்டில் பணியாற்ற அனுமதிக்கப்பட்டுள்ள சுவிஸ் இராணுவப் படைப்பிரிவு இது மட்டுமே. உலகின் மிகச்சிறிய இராணுவமான வாடிகன் இராணுவத்தில் ஒரு பகுதியாக இந்த பிரிவு செயற்படுகிறது.

# இரண்டு தடவைகளுக்கு மேல் ஜனாதிபதிப் பதவியை நாடாத ஜோர்ஜ் வாஷிங்ரன்...



இனது பதவிக்கான சீருடையில் அந்த இராணுவ அதிகாரி கம்பீரமாகக் காட்சியளித்தான். திடகாத்திரமான கட்டுடல் கொண்ட அவனைக் கண்ட, மாத்திரத்திலேயே அவள் அவனிடம் தன் மனதைப் பறிகொடுத்துவிட்டாள். தன்னை விட வயதில் இளையவனாக இருந்தபோதிலும் அவ் வயது வித்தியாசத்தை அவள் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. அந்த இராணுவ அதிகாரியின் அருகில் சென்ற அவள் தானாகவே அவனிடம் பேச்சுக் கொடுத்தாள். எப்படியாவது அவனுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கு அவள் மிகுந்த ஆவல் காட்டினாள். "நீங்கள் எங்கே சேவையாற்றுகிறீர்கள்?" மார்த்தா என்ற அப்பெண் கட்டழகு கொண்ட இராணுவ அதிகாரியிடம் வினாவினாள்.

'முதலில் பிரான்ஸ் நாட்டில் பிரித்தானிய யுத்த முனையில்; பின்னர் இந்தியாவிலும் யுத்த முனையில் கடமையாற்ற நேர்ந்தது.' முகத்தில் புன்முறுவல் தவழ அந்த இராணுவ அதிகாரி அப்பெண்ணின் கேள்விக்குப் பதிலளித்தான்.

"அப்படியானால் உங்களுக்கு யுத்தத்தில் நிறைய அனுபவம் கிட்டியிருக்குமல்லவா?" பதிலுக்குப் புன்முறுவலுடன் அவளது கேள்விக்குத் தலையசைப்பின் மூலம் ஆமோதித்துப் பதிலளித்தான் அந்த இராணுவ அதிகாரி.

அவர்களிடையேயான உரையாடல் அத்தோடு முடிவடைவதாய்க் காணோம்; உரையாடலைத் தொடர்வதில் மார்த்தா ஆவல் காட்டினாள்.

"நாம் இவ்வாறு உரையாட முடிந்தாலும் ஒருவரை ஒருவர் அறிமுகப்படுத்திக் கொள்ளவில்லையே!" மார்த்தா அந்த இளைஞனின் அருகில் நெருங்கிச் சென்று கூறினாள்.

"எனது பெயர் மார்த்தா..." அதே புன்சிரிப்பு மாறாது அவனும் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டான்.

"ஜோர்ஜ் வாஷிங்ரன் என்பது எனது பெயர்...." அடுத்த சில நிமிடங்களில் அவர்கள் ஒருவரோடொருவர் மிக நெருங்கிய நண்பர்களாகிவிட்டனர்; தமது மன உணர்வுகளைப் பரஸ்பரம் பரிமாறிக் கொண்டனர். இந்த முதல் சந்திப்பிலேயே அவர்கள் இருவரது மனங்களும் ஒருவர்பால் மற்றொருவரது மனது ஈடுபாடு கொள்ள ஆரம்பித்து விட்டது. அவர்கள் எவ்வித கூச்சமுமின்றித் தமது மனஈடுபாடு குறித்து ஒருவரோடொருவர் மனம் திறந்து பேசிக்கொண்டனர். கண்டதும் காதல் என்பது இதனைத்தானோ? இத்தனைக்கும் மார்த்தா அந்தவேளையில் திருமணமாகிக் கணவனை இழந்த நிலையில் உள்ள விதவைப்பெண்; அது மட்டுமன்றி, இரு பிள்ளைகளின் தாய்; அந்த இளம் வயதிலேயே அந்த அபலைப் பெண்ணை விதவையாக்கி வேடிக்கை பார்த்தது விதி. ஆனாலும், அவள் கட்டழகு மிக்க - பார்த்த மாத்திரத்திலேயே மனதைக் கவரும் கவர்ச்சி மிக்க யுவதியாய் தோற்றமளித்தாள்.

அவள் தன்னைவிட இருபது வயது மூத்த பெரும் நிலச்சுவாந்தார் ஒருவரை முதலில் திருமணம் செய்து கொண்டிருந்தாள். ஆனாலும், அவளது கணவன் பெரும் தனவந்தனாய் இருந்ததோடு வயதானவனான போதிலும் கட்டுமஸ்தான கட்டுடல் கொண்டிருந்தான். 17 ஆயிரம் ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட பரந்த விவசாய பூமிக்குச் சொந்தக்காரனான அவன், தனது அழகிய இளம் மனைவி மீது மாறாத பற்றும் பாசமும் வைத்திருந்தான். இதனால், மார்த்தாவின் குடும்ப வாழ்க்கை ஆனந்த மயமாகவே கழிந்தது. அவர்களது அன்னியோன்ய வாழ்க்கையின் பயனாக இரு பிள்ளைகளுக்குப் பெற்றோராகி மகிழ்வான வாழ்க்கையை மேற்கொண்டிருந்தனர். ஆனால், மார்த்தாவுக்கு 26 வயதான வேளையில் 46 வயது நிரம்பிய அவளது கணவன் டானியல் மரணமுற்றதையடுத்து மார்த்தாவின் வாழ்க்கையில் நிலவிய மகிழ்வும் அமைதியும் அவளை விட்டகன்றன; விதி இவ்வாறு தன்னைச் சோதித்து விட்டதே என மார்த்தா மனமுடைந்து போனாலும், காலப்போக்கில் தன்னை ஒருவாறு தேற்றிக்கொண்டாள். டானியலின் மரணத்தையடுத்து, அவனது சொத்துகள் யாவும் மனைவி மார்த்தாவுக்குச் சேர்ந்தமையால் பொருளாதார ரீதியில் அவளுக்குச் சிரமமேதும் நிலவாத போதிலும் அந்த அபலையின் மனது அன்புக்காக ஏங்கியது.

இந்தவேளையிலேயே அவள் எதிர்பாராத வகையில் ஜோர்ஜ் வாஷிங்ரனைச் சந்திக்க நேர்ந்தது. அவர்களது அச்சந்திப்பு தெய்வச் சித்தம் போன்றமைந்தது. நாளுக்கு நாள் அவர்களது நட்பு நெருக்கமடைந்து கடைசியில் அவர்கள் இருவரதும் திருமணத்தில் போய் முடிந்தது. மார்த்தாவை திருமணம் செய்து கொண்டதன் மூலம் அவளது சொத்துக்கும் உரிமையாளரான ஜோர்ஜ் வாஷிங்ரன் பிரபலமிக்க விவசாயியாக பரிணமித்தார். என்னதான் வாய்ப்பு வசதிகள் வாய்த்தபோதிலும் அவர் மிக எளிமையான வாழ்க்கையிலேயே நாட்டம் கொண்டிருந்தார். மனைவி மார்த்தா மீது அளவில்லா அன்பு காட்டியதோடு, முதல் திருமணத்தின் மூலம் அவளுக்கு வாய்த்த இரு பிள்ளைகள் மீதும் தனது பிள்ளைகள் போன்று அன்பும் ஆதரவும் காட்டிவந்தார். அத்தோடு குடியேற்றங்களுக்கான இராணுவத்தில் கட்டளை அதிகாரிப் பதவியும் அவரைத் தேடிவந்தது. இந்த நிலையில் 1775 ஆம் ஆண்டின் குளிர்காலப் பருவகாலம் ஆரம்பமான வேளையில் அவர் கேம்பிரிட்ஜ்ஜுக்கு செல்லும் வாய்ப்புக் கிட்டியது. மனைவி மார்த்தாவுடனும் இரு பிள்ளைகளுடனும் இரு வாரகாலம் பயணம் செய்து கேம்பிரிட்ஜ்சை அடைய நேர்ந்தது. அவ்வாண்டின் நத்தார் கொண்டாட்டத்தைக் குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாகக் கொண்டாடிய ஜோர்ஜ் வாஷிங்டன் அடுத்த சில நாள்களில் நோய் வாய்ப்பட நேர்ந்தது. அந்தவேளையில் மார்த்தா அவரை கண்ணின் இமைபோல உடனிருந்து கவனித்துக்கொண்டாள். ஒரு மனைவி போலன்றித் தாதிபோன்று உடனிருந்து மார்த்தா கவனித்துக் கொண்டமையால் ஜோர்ஜ் வாஷிங்ரன் விரைவில் குணமடைய முடிந்தது. இச் சம்பவத்தால் கணவன் மனைவிக்கிடையேயான பாசப் பிணைப்பு முன்னரை விடப் பன்மடங்கு நெருக்கமடைய நேர்ந்தது. தனது ஒவ்வொரு தேவைகளையும் அறிந்து உடனுக்குடன் அன்புடன் உதவும் மார்த்தாவின் மேல் ஜோர்ஜ் வாஷிங்ரன் அளவில்லா அன்பும் ஆதரவும் காட்டத் தலைப்பட்டார். அதேவேளை, கணவனின் தேவைகளை நிறைவேற்றி அவரது வெற்றிகளுக்கும் முயற்சிகளுக்கும் தானும் உடனிருந்து உதவுவதன் மூலம் திருப்தியும் மகிழ்ச்சியும் கிட்டுவதாக 'மார்த்தா' கருதலானாள்.

1780 ஆம் ஆண்டில் யுத்தம் முடிவுக்கு வந்தது. இராணுவ சேவையில் இணைந்து பலதரப்பட்ட யுத்த முனைகளில் கடமையாற்றிய அனுபவங்களுடன் தமது குடும்பத்தினருடன் இணைந்து கொள்வதற்காக செனோான் மலைப்பகுதிக்குத் திரும்பிச்செல்லும் வாய்ப்பு ஜோர்ஜ் வாஷிங்ரனுக்குக் கிட்டியது.

ஆனால், தாம் விரும்பிய விதத்தில் மலைப்பாங்கான பிரதேசத்தில் அமைந்திருந்த தமது விவசாயப் பூமியில் தமது அன்பு மனைவியுடனும் பிள்ளைகளுடனும் அமைதியான வாழ்க்கையை மேற்கொள்ளும் வாய்ப்பு நீண்ட நாள்களுக்கு நிலைக்கவில்லை. அமெரிக்க நாட்டை ஐக்கிய குடியரசாகப் பிரகடனப்படுத்தும் வகையிலான அரசமைப்பு சட்டமூலம் அந்த வேளையிலேயே நிறைவேற்றப்பட்டது. பலதரப்பட்ட கருத்து வேறுபாடுகளின் மத்தியில் உருவாக்கப்பட்ட அவ் அரசமைப்பு உருவாக்கத்துக்கு ஜோர்ஜ் வாஷிங்ரனும் குறிப்பிடத்தக்க அளவு பங்களிப்பு வழங்கியிருந்தார். அதனால் 1789 ஆம் ஆண்டில் புதிய அரசமைப்பின் அடிப்படையில் ஜனாதிபதியாக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் முதலாவது ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெருமையும் ஜோர்ஜ் வாஷிங்ரனுக்கு வாய்க்கப்பெற்றது.

உண்மையில், ஜோர்ஜ் வாஷிங்ரனுக்கு ஜனாதிபதியாகும் வாய்ப்புக் கிட்டியமையால் அளவில்லா ஆனந்தம் அடைந்தவர் அவரது அன்புக்குரிய மனைவி மார்த்தா தான். அதே விதத்தில் தமது நாட்டுக்குச் சிறந்ததொரு நிர்வாகி ஜனாதிபதியானமையையிட்டு அமெரிக்கப் பொது மக்களும் பெரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

ஐக்கிய அமெரிக்க குடியரசின் புதிய தலைநகராக நியூயோர்க் நகரம் ஆக்கப்பட்டமையால் ஜோர்ஜ் வாஷிங்ரன் நியூயோர்க்கில் வசிக்க வேண்டியதாயிற்று. மார்த்தா அவரை நிழல்போல் தொடர்ந்து அவருக்குப் பணிவிடை செய்யும் அன்பு மனையாளாய் உதவினாள். குடும்பத்தின் பிரத்தியேக வேலைகள் யாவற்றையும் தானே பொறுப்பேற்று சிறப்பாக உரிய முறையில் நிறைவேற்றித் தன் கணவரின் செயற்பாடுகளுக்கு உதவியதன் மூலம் ஜோர்ஜ் வாஷிங்ரனின் நிழலாக மட்டுமன்றி மார்த்தா அவரை இயக்கும் சக்தியாகவும் செயற்பட்டாள்.

அமெரிக்க ஜனாதிபதிப் பதவி அரசமைப்பின் மூலம் நான்கு ஆண்டுகளுக்கு மட்டுமே உருத்துடையதாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆயினும் இரண்டாவது தடவையும் தொடர்ந்து ஜனாதிபதிப் பதவியை வகிக்கும் அதிர்ஷ்டம் ஜோர்ஜ் வாஷிங்ரனுக்கு வாய்க்கப்பெற்றது. போட்டி எதுவுமின்றி ஏகமனதாக அவர் இரண்டாவது தடவையாகவும் ஜனாதிபதியாகத் தெரிவானார்.

இந்தக் காலகட்டத்திலேயே பிரித்தானியாவுக்கும் பிரான்ஸ்ஸுக்கும் இடையே யுத்தம் மீண்டும் ஆரம்பமாக நேர்ந்தது. இவற்றில் எந்தவொரு தரப்புக்கும் ஆதரவளிக்காது நடுநிலை வகிக்க ஜோர்ஜ் வாஷிங்ரன் விரும்பினார். ஆயினும், பொது மக்களில் பெரும்பாலானோர் அமெரிக்கா பிரான்ஸ்ஸுக்கு ஆதரவளிக்க வேண்டுமென

## நாகரிக அரசியலின் வரலாற்று உதாரணங்கள்

விரும்பினர். இவ்வித பலதரப்பட்ட அபிப்பிராயங்களின் மத்தியில் அந்தவேளையில் ஐக்கிய அமெரிக்க குடியரசு என்ற கப்பலைச் செலுத்திய மாலுமி போன்று செயற்பட்ட ஜோர்ஜ் வாஷிங்ரன் 1797ஆம் ஆண்டில் தமது இரண்டாவது ஜனாதிபதிப் பதவிக்காலம் முடிவடைந்த காரணத்தால் ஜனாதிபதிப் பதவியினின்றும் நீங்கி ஜனாதிபதி மாளிகை வாசத்தை பூர்த்தி செய்து மீண்டும் தமது மனதுக்கு இதமளிக்கும் மலைப் பகுதி விவசாயப் பண்ணைக்குப் பயணமானார். தமதுப் மலைப் பகுதி விவசாயப் பண்ணையில் மீண்டும் தமது அமைதியான வாழ்க்கையை ஆரம்பித்த ஜோர்ஜ் வாஷிங்டன் தமது 67வது பிறந்த நாளையும் திருமண நினைவு நாளையும் வெகு உற்சாகமாகக் கொண்டாடி மகிழ்ந்தார். பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் ஆகியோரின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட அக்கொண்டாட்டம் ஜோர்ஜ் வாஷிங்ரன் - மார்த்தா தம்பதிகளின் ஈடு இணையில்லாக் காதல் வாழ்க்கைக்குச் சாட்சியாக அமைந்தது. மனிதாபிமானமும் இரக்க சுபாவமும் கொண்ட ஜோர்ஜ் வாஷிங்ரனின் மனிதத் தன்மைக்கும் அன்புக்கும் அன்றைய தினம் அவருக்குப் பல பரிசில்கள் கிட்டின. அந்த நாள் அவருக்குப் பேரானந்தமும் மன அமைதியும் அளித்த நாளாக அமைந்தது.

இதற்கு இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் வந்த குளிர்காலப் பருவத்தில் ஒரு நாள் ஜோர்ஜ் வாஷிங்ரன் திடீரென நோய் வாய்ப்பட்டார். அவர் தங்கியிருந்த மலைப் பகுதி விவசாயப் பண்ணையில் அன்றைய தினமே அவர் மரணமடைய நேர்ந்தது.

அவரது திடீர் மறைவு மார்த்தாவை நிலை குலைய வைத்துவிட்டது. அவருடன் தான் வாழ்ந்த இனிய நாள்கள் அவளது மனத்திரையில் நிழலாடின. தனது முதற் கணவர் இறந்தவேளையில் அவளைத் துன்பம் இவ்வளவு தூரம் வாட்டி வதைக்கவில்லை. உண்மையில் ஜோர்ஜ் வாஷிங்ரன் தன்மீது காட்டிய தூய அன்பு அவளை அவர் மீது அளவற்ற பாசம் கொள்ளச்



செய்து விட்டிருந்தது. அவரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டபோது அவள் அவரது உயிரற்ற உடல் மீது வீழ்ந்து கதறி அழுதாள்; கண்ணீர் சிந்தினாள். ஆனால், அவளது அந்த உண்மையான பாசத்தால் ஜோர்ஜ் வாஷிங்ரனை அவளிடம் மீண்டும் கொண்டுவந்து ஒப்படைக்க இயலாது போயிற்று.

அவரது மறைவின் பின்னர் தனது வாழ்நாளைக் கவலையும் கண்ணீருமாகக் கழித்த மார்த்தா மூன்று ஆண்டுகள் மட்டுமே உயிர் வாழ்ந்தாள். தனது அன்புக்குரிய ஜோர்ஜ் வாஷிங்ரனை மீண்டும் ஒரு தடவை சந்திக்கும் நோக்கில் அவர் சென்றடைந்த உலகத்துக்கே மார்த்தா என்ற அந்த நல்லாளும் ஒரு நாள் பயணப்பட்டுச் செல்ல நேர்ந்தது.

பழைய வரலாற்றைத் தூசி தட்டிப்புரட்டிப் பார்க்கும் வேளையில் எமக்கு இன்றைய யதார்த்த வாழ்க்கையின் அவலங்களும் நினைவுக்கு வருவது தவிர்க்க முடியாததே.

நாட்டுக்கு - நாட்டு மக்களுக்கு சேவைசெய்யும் அரிய நோக்குடன் பதவியை ஏற்ற அன்றைய அரசியல் தலைவர்கள் தமது பதவிக்காலம் முழுவதும் நாட்டின் முன்னேற்றத்துக்காகவே அக்கறையுடன் உழைத்தனர். ஈற்றில் தமது பதவிக் காலம் முடிவடைந்த வேளையில் புதியவர்களுக்கு வாய்ப்பளித்து தாம் பதவியிலிருந்து ஒதுங்கி வழிவிட்டு வரலாற்றில் நற்பெயர் ஈட்டி உயர்ந்தனர். அவ்வாறான தலைவர்கள் மறைந்து பல ஆண்டுகள் கடந்தாலும் ஆண்டாண்டு காலமாக அவர்கள் அந்த நாட்டின் பொதுமக்கள் மனங்களினின்றும் மறைந்து விடுவதில்லை.

ஆனால், இன்று நமது நாட்டின் யதார்த்த நிலை எம்மையெல்லாம் தலை குனிய வைக்கிறது. இரண்டு தடவைகள் அதுவும் நீண்டதொரு கால இடைவெளிக்கு ஜனாதிபதிப் பதவியினால் கிட்டிய வசதி வாய்ப்புகள் சுகபோகங்களை அனுபவித்தது போதாதென்று, தற்போது தொடர்ந்து அரசியலில் நிலைத்திருப்பதற்கான வழிவகைகளைக் கண்டறிய - பிரயோகித்து வெற்றிபெற இன்றைய இந் நாட்டு ஜனாதிபதி வீம்புப் பிடியாகச் செயற்படமுயல்வது உலகத்தின் மத்தியில் எம்மை வெட்கித் தலைகுனிய வைக்கிறதல்லவா?

ஜோர்ஜ் வாஷிங்ரன் - மார்த்தா என்ற

தொகுப்பு : பொன்வேளன்

இளம் விதவை மீது கொண்ட அனுதாபமே பின்னர் எல்லையற்ற காதலாக மாறி அவர்கள் வாழ்வில் இணைசேரக் காரணமாய் அமைந்ததென வாதிடுவோரும் ஒரு சிலர் இருக்கவே செய்கின்றனர். ஆனால், அவர் மார்த்தா மீது கொண்ட காதல் அவர்கள் உயிரிழக்கும் வரை இணை பிரியா தெய்வீகக் காதலாக விளங்கியமைக்கு வரலாறு சாட்சி பகரும்.

ஆனால், இன்று பிரித்தானிய அரச குடும்பத்தின் கௌரவத்துக்கு இழுக்கு ஏற்படத்தக்க வகையில் தாம் முன்னர் காதலித்துக் கரம் பிடித்த டயானா என்ற அழகியுடன் வாழ்க்கையில் ஒத்துப்போகாத தன்மையால் விவாகரத்துப் பெற்று, அமைதியையும் சந்தோஷத்தையும்

(V பக்கம் பார்க்க)

# சாத்தியமாகுமா இடைக்கால அதிகாரசபை?

அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையுடன் கலகலப்பாகத் தொடங்கிய சமாதானப் பேச்சுகள் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரக் கட்டமைப்பில் தடைப்பட்டுப் போயின. பல சுற்றுகளாக மேற்கொள்ளப்பட்டு வந்த பேச்சுகள் முடிவெதுவுமின்றி - வெறுமனே காலங்கடத்தும் முயற்சியாகத் தொடர்ந்து கொண்டிருந்தன.

### இழுத்தடிப்புக்கு முற்றுப்புள்ளி

அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி



அரசினுடைய 'இழுத்தடிப்பில்' அதிருப்தியடைந்த விடுதலைப் புலிகள் அந்த இழுத்தடிப்புக்கு வைத்த முற்றுப்புள்ளி தான் 'இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் கோரிக்கை'

அப்போது அரசு ஐ.தே.கவின் கைகளில் இருந்தாலும் அரசின் தலைவியாக- எந்தமுடிவையும் தான் விரும்பியது போல எடுத்துக்கொள்ளக்கூடிய நிலையில் - பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவிதான் இருந்தார்.

இதனால், அவரை மீறி எந்த முடிவையும் எடுக்கத் திராணியற்ற நிலையில் ஐ.தே.க. இருந்தது.

இதனால், விடுதலைப் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை விடயத்தில் ஐ.தே.க தனது பங்கிற்கு புலிகளிடமும், சர்வதேசத்திடமும் நிலைமையைத் தெளிவுபடுத்திவிட்டு அமைதியாக இருந்துவிட்டது.

இப்போது நிலைமை முற்றிலும் மாறுபட்டுப்போய்க் கிடக்கிறது. ஐ.தே.க அரசை வீட்டுக்கு அனுப்பிய ஜனாதிபதி ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சியைப் பிடித்தார்.

தெற்கு அரசியலில் இந்த ஆட்சி மாற்றம் நிகழ்ந்த பின்னரும் சமாதானப் பேச்சுகள் தொடர்பான தமது நிலைப்பாட்டில் மாற்றங்கள் எதனையும் செய்யாது பழைய நிலைப்பாட்டினையே புலிகளின் தலைமை கொண்டிருந்தது. அதாவது, சுயநிர்ணய உரிமையுடன் கூடிய இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை பற்றிப் பேசிய பின்னரே - அதில் ஒரு முடிவு எட்டப்பட்ட பிறகே - ஏனைய விடயங்கள் குறித்தும் பேசலாம் என்பதில் புலிகள் உறுதியாக இருந்தனர்.

### ஜே.வி.பியின் நிலைப்பாடு

முதலில் இடைக்கால நிர்வாகம் குறித்தே பேசவேண்டும் என்ற புலிகளின் நிலைப்பாட்டின் எதிரொலி தெற்கு அரசியலில் பல்வேறு கோணங்களில் அடிபடத் தொடங்கியிருந்தது.

குறிப்பாக, அரசின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பி இடைக்கால நிர்வாகம் குறித்த பேச்சுக்கே இடமில்லை என்ற நிலைப்பாட்டில் இருக்கிறது.

'விடுதலைப் புலிகளோடு இடைக்கால நிர்வாக சபை அடிப்படையில் பேசுவது என்ற பேச்சுக்கே இடமில்லை. அப்படிப் புலிகளுடன் பேசுவதற்கு ஜனாதிபதியோ சுதந்திரக்கட்சியோ முயற்சித்தால் அரசைக் கவிழ்த்து விடுவோம்' என்று ஜே.வி.பி. தலைவர்கள் திட்டவட்டமாகப் பகிரங்கமாகத் தெரிவித்துவிட்டார்கள்.

இந்த நிலையில், சமாதானப் பேச்சுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு விடுதலைப் புலிகள் முன்வைத்திருக்கின்ற பிரதானமான - அவசியமான நிபந்தனையும் (இடைக்கால நிர்வாகம் குறித்தே முதலில் பேச்சு)

அதே சமாதான முயற்சிகளைத் தொடங்குவதற்கு அரசின் பங்காளிக்கட்சியான - அரசினாலோ, ஜனாதிபதியினாலோ ஒதுக்கித் தள்ளிவிடப்பட முடியாத - அலட்சியப்படுத்தி விட முடியாத சக்தியான - ஜே.வி.பி. முன்வைத்திருக்கும் நிபந்தனைகளும் ஒன்றுக்கொன்று முற்றிலும் வேறுபட்டவை, இணைத்துப் பார்க்கவே முடியாதவை.

விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையில் இதுவரைகால சமாதான முயற்சிகளை தாங்கள், உயர்ந்த பட்ச விட்டுக் கொடுப்புகள் - நெகிழ்ந்து போதல்கள் என்பவற்றுடனேயே நகர்த்தி வந்திருக்கின்றார்கள் என்றும்-

இதற்கு மேல் இம்மியளவும் கீழிறங்க - விட்டுக் கொடுக்க முடியாது என்றும் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்திருக்கிறார்.

இதற்குமேலும் நெகிழ்வுப் போக்கை கடைப்பிடிப்பது தமிழினத்தின் எதிர்காலத்தைப் பாதிக்கும் - கேள்விக் குறிக்குள் தள்ளிவிடும் - என்பதே புலிகளின் நிலைப்பாடு.

இந்த நிலையில் ஜே.வி.பி தனது நிலைப்பாட்டை மாற்றி - இனவாதப் போக்கைக் கைவிட்டு - சமாதான முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்குமா என்ற கேள்வி எழுகிறது.


அண்மைக் காலங்களில் ஜே.வி.பி. தலைவர்களான சோமவன்ஸ அமரசிங்க, விமல்வீரவன்ஸ போன்றோர் தெற்கில் நடத்துகின்ற கூட்டங்களில் புலிகளுக்கு இடைக்கால தன்னாட்சி வழங்கப்படுவதை ஒருபோதும் தமது கட்சி ஏற்றுக்கொள்ளாது என்றும்- அப்படி ஒரு நிலைப்பாட்டை ஜனாதிபதியோ அரச உயர் பீடமோ எடுக்குமானால் அரசிலிருந்து ஜே.வி.பி. பிரிந்து விடும் என்றும் கூறி வருகின்றார்கள்.

தமது கட்சியின் இந்த நிலைப்பாட்டுக்கு மறுபேச்சுக்கு - மாற்றத்துக்கு இடமே இல்லை என்று அவர்கள் பிடிவாதம் பிடிக்கிறார்கள்.

### ஜனாதிபதி சந்திரிகாவின் இரண்டும் கெட்டான் நிலை

இது விடயத்தில் ஜனாதிபதியின் நிலைப்பாடு இரண்டும் கெட்டான் நிலையில் இருக்கிறது.

சர்வதேச உதவிகளை கையேந்திப் பெற்று வருகின்ற ஜனாதிபதி சந்திரிகா உதவும் நாடுகள் சிலவற்றின் கோரிக்கைக்கு - வற்புறுத்தலுக்கு - எடுபட்டு அவர்களை திருப்திப்படுத்துவதற்காகவேனும் புலிகளுடன் பேச்சைத் தொடங்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்.



எனினும், ஆட்சிக்கு முண்டு கொடுக்கும் ஜே.வி.பி. சமாதானப் பேச்சுக்கு முட்டுக்கட்டை போட்டிருப்பதால் பேச்சைத் தொடங்க முடியாத இக்கட்டும் ஜனாதிபதிக்கு இருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தைத் தனது நிறைவேற்று அதிகாரத்தினால் தான் விரும்பியவாறு ஆட்டிப்படைத்தவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. அப்படி ஆட்டிப்படைத்தவர் இப்போது தனது கட்சி ஆட்சியில் இருக்கும் அதே நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்த முடியாமல், தான் விரும்பியபடி முடிவுகளை எடுக்கமுடியாமல் திண்டாடுகிறார்.

எப்படியாவது ஆட்சியைப் பிடித்துவிட வேண்டும் என்று ஐ.தே.க அரசைக் கலைத்தவர் ஜனாதிபதி. எனவே, இப்போது ஜே.வி.பியைப் பகைத்து அதன்மூலம் தனது கட்சியின் ஆட்சி கவிழ்வதை அவர் விரும்பவில்லை.

இந்தப் பின்னணியில் நோக்குகின்ற போது இரண்டும் கெட்டான் நிலையில் இருதலைக்கொள்ளி எறும்பாக இருக்கவேண்டிய நிலை ஜனாதிபதிக்கு.

எனவே, புலிகள் - ஜே.வி.பியினர் - ஜனாதிபதி ஆகியோரது நிலைப்பாடுகளைக் கூர்மையாக நோக்குகின்றபோது இப்போதைய நிலையில் சமாதானப் பேச்சுகளோ, அதன் வழியிலான இடைக்கால நிர்வாகமோ சாத்தியமில்லை என்றே கூறலாம்.

### இழுபறியில் பொதுக்கட்டமைப்பு

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு, இனப்பிரச்சினைத் தீர்வு என்பன வெல்லாம் சாத்தியப்படாத நிலையில் அவை அப்படியே இருக்கஇப்போது ஆழிப்பேரலை அனர்த்தம் பொதுக்கட்டமைப்பு என்ற விடயம் அரங்கிற்கு வந்திருக்கின்றது.

'சுனாமி' அனர்த்தம் இடம்பெற்று மூன்றரை மாதங்கள் கடந்துவிட்டன.

வடக்கு - கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்கள் நலன்புரி நிலையங்களில் பெரும் கஷ்ரங்களின் மத்தியில் காலத்தைக் கடத்திவிட்டு இப்போது இடைத்தங்கல் முகாம்களில் தஞ்சமடைந்திருக்கிறார்கள்.

தொழில் வாய்ப்புகளையும் அடிப்படை வளங்களையும் இழந்த அந்த மக்களுக்கு உதவிகள் காலம் தாழ்த்தாது - அவசர அவசரமாக வழங்கப்பட வேண்டியது அவசியம்.

இதனை உதவும் நாடுகளும் நிறுவனங்களும் கூட நன்கறியும். அதனால்தான் அவர்கள் தமது சுனாமி நிவாரண உதவிகளை இலங்கை அரசிற்கு வாரி வழங்கி விட்டிருக்கின்றார்கள்.

ஆனால், அந்த உதவிகளைக் கொண்டு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கான பொதுக்கட்டமைப்பு இன்னமும் ஏற்படுத்தப்படவில்லை.

அதிலும் புலிகள் - ஜே.வி.பி. - ஜனாதிபதி என்ற மூன்று தரப்புகளுக்கிடையே பனிப்போர் நடந்துகொண்டேயிருக்கின்றது.

வடக்கு - கிழக்கில் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணக் கட்டமைப்பிலேயே புலிகளுக்கு இடம் வழங்கப்படுவதை ஏற்றுக்கொள்ளாத ஜே.வி.பியினர் இடைக் காலத் தன்னாட்சி அதிகாரசபை புலிகளிடம் கையளிக்கப்படுவதை எந்தக் கால கட்டத்திலும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் - எதிர்த்தே நிற்பார்கள் என்பதே வெளிப்படையான உண்மையாகும்.

ஜே.வி.பியினரின் கருத்துக்களை - கூச்சல்களைப் புறந்தள்ளிவிட்டு சமாதான முயற்சிகளைத் தாம் மீண்டும் தொடங்கப்போகிறார் என ஜனாதிபதி அண்மையில் சில கூட்டங்களின் போது



மறைமுகமாகத் தெரிவித்து வருகின்றார்.

ஆனால், வெளியில் அவர் அப்படிக் கூறிவந்தாலும் உள்ளுக்குள் -ஜே.வி.பியினருடன் நட்புடன் உறவாடுகின்றார். அவர்களின் நிபந்தனைகளுக்கும் அழுத்தங்களுக்கும் பணிந்துபோகிறார்.

எனவே, இன்றைய சமாதான முயற்சிகளை இந்தப் புற நிலைகளுக்கு ஊடாக நோக்குகின்றபோது இடைக்கால நிர்வாகசபை அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுகளைத் தொடங்க தென்னிலங்கை அரசியல் இடம்கொடுக்காது என்பது புலனாகும்.

அப்படி மீண்டும் பேச்சுகள் தொடங்குவதாக இருந்தால் தெற்கில் மீண்டும் அரசியல் மாற்றம் ஏற்படவேண்டும். ஜே.வி.பியின் கூச்சல் குழப்பங்களை ஓரங்கட்டிவிட்டு துணிச்சலுடன் - நேர்மையுடன்- உளத்தூய்மையுடன் ஜனாதிபதி செயலில் இறங்கவேண்டும்.

இந்த மாற்றங்கள் கூட காலம் தாழ்த்தி நிகழ்ந்தால் சிலவேளைகளில் அந்த மாற்றத்தால் எந்த விதப்பலனும் இல்லாமல் கூடப் போகலாம்.

**அலங்காரன்**

## இரண்டு தடவைகளுக்குமேல்....

(IV பக்கத் தொடர்ச்சி...)

தொலைத்துவிட்டு நடைப்பிணம்போல் மனக்குழப்பத்தில் வாழ்ந்த பிரித்தானிய முடிக்குரிய இளவரசார் சார்ள்ஸ், போயும் போயும் ஏற்கனவே, திருமணம் செய்து இரு பிள்ளைகளுக்குத் தாயுமான பின்னர், கணவருடன் வாழ்க்கையில் ஒத்துப்போகாது விவாகரத்துப் பெற்றுக் கொண்ட கமிலா பார்க்கர் என்ற பெண் மீது மீண்டும் காதல்கொண்டு மணம் செய்து கொள்ளவேண்டுமா? இத் திருமண உறவு கூட எத்தனை நாள்களுக்கு நீடிக்கும் என்பதை எவராலாவது அறுதியிட்டுக் கூறமுடியுமா?

இவை குறித்து ஆராயும் வேளையிலேயே எமக்குப் பழைய அரசியல் சம்பவங்களும் சம்பிரதாயங்களும் எவ்வாறு சிறப்பான, நியாயமான வகையில் கைக்கொள்ளப்பட்டன. தத்தமது நாட்டுக்கு உருத்தான கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்கள் அந்த நாளில் எவ்வளவு தூரம் மதிப்போடும், கௌரவத்தோடும் பேணிப் பாதுகாக்கப்பட்டன என்பவை நினைவில் நிழலாடுகின்றன. இதனால்தான் பெரியவர்கள் 'ஓல்ட் இஸ் கோல்ட்' (Old is Gold) என்று சொல்லி வைத்திருப்பார்களோ?

# இயற்கை அனர்த்தங்களை முன்கூட்டியே அறியும் உயிரினங்கள்...



மனிதனை விட மிருகங்களும் பறவைகளும் புத்திசாலித்தனம் கூடியவையா? நடக்கப்போவதை முன்கூட்டியே உணரக்கூடிய உடலமைப்பும் அறிவும் உள்ளவையா? ஆறாவது உணரும் சக்தி அவைக்குண்டா? வாய்விட்டு மனிதனைப்போல், தங்கள் மொழி மூலமும் பதட்டத்தை வெளிக்காட்டுவது மூலமும் எச்சரிக்கை விடுகிற தன்மை அவைக்குண்டா? எதனால் அவை அவ்விதம் செயற்படுகின்றன?

அண்மையில் நடந்த சுனாமி அனர்த்தத்தினால் மிருகங்களும் பறவைகளும் மிகக் குறைந்த அளவு இறந்துள்ளன என்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.மேற்படி கேள்விகள் அக்காரணத்தால் பலர் மனதில் தோன்றியுள்ளது.

பண்டைய கால்ங்களில் இருந்து பூகம்பங்கள் உலகநாடுகளில் நடக்கும் போது, பூமியின் அதிர்வுகளை நுண்ணியமாக உணர்ந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத் தப்பிஓடும் சூழலை மிருகங்களும் பறவைகளும் உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. இது வாழையடி வாழையாக வந்த குணாதிசயம் என்றாலும் தவறில்லை. மனிதன் அவைகளின் விசித்திரமான போக்கினை, உணர்ச்சிகளை கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. அதற்குக் காரணம் தன்னை விட - அதுவும் விஞ்ஞானத்தை நம்பி வாழும் தன்னை விட மிருகங்களும் பறவைகளும் எவ்விதத்தில் உயர்ந்தன என்ற நோக்காகும். 'சிறு துரும்பும் பல் குத்த உதவும்' என்பது போல் அவைகளின் செயற்பாட்டைப் பாவித்து பூகம்பம் வரப்போவதை முற்கூட்டியே சொல்லக் கூடியதாக இருப்பதை அவர்கள் உணரவேண்டும்.



மிருகங்களில் புலி, நரி, யானை, நாய், பூனை, குரங்கு போன்ற மிருகங்கள் சாதுரியமானவை. புத்திசாலித்தனமாகச் செயற்படக்கூடியவை. தம்மை எப்படிப் பாதுகாத்துக்கொள்வது என்பது அவைக்குத் தெரியும். தமக்கு வேண்டிய உணவைத் தேடிக்கொள்வதில் கூட தங்களது புத்திசாலித்தனத்தைப் பாவித்தே செயற்படுகின்றன. இவை போல் டொல்பின், திமிங்கிலம் போன்ற நீர் வாழ் உயிரினங்கள் கூட புத்திக்கூர்மை அதிகம் உள்ளவை. அதனைத் தங்களது செயல் முறைகள் மூலம் வெளிப்படுத்துகின்றன. திமிங்கிலங்கள் குடும்பமாய் வாழும் குணமுடையவை. நோய் வாய்ப்பட்ட திமிங்கிலத்திற்கு துணைபோபவை. டொல்பின்கள் மனிதர்களைக் கடலில் காப்பாற்றி இருப்பதாகப் பல சம்பவங்கள் கேள்விப்பட்டுள்ளோம். மிருகக் காட்சி சாலையில் டொல்பின்களின் புத்திசாலித்தனமான சாகசங்களைப் பார்த்து மெய்மறந்தவர்கள் பலர். வீட்டில் செல்லப்பிராணியாக வளரும் நாய், பூனை, கிளி போன்றவை கூட தமது புத்திசாலித் தனத்தைப் பாவித்து வளர்ப்போரின் அனுதாபத்தையும் ஆதரவையும் பெறக் கூடியவை. பன்றிகள் புத்திசாலித்தனம் உள்ள மிருகங்களில் நாலாவது இடத்தைப் பெறுகின்றன. தேனீக்களைப் பாவித்து நிலக் கண்ணியைக் கண்டுபிடிக்க முடியும்.



இவ்வாறு மிருகங்களினதும் பறவைகளினதும் போக்கினை வைத்துப் பூகம்பம் எப்போது ஏற்படும் என்பதை முற்கூட்டியே கணிக்க முடியும் என்பதை சீனாவில் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். 1966ஆம் ஆண்டு Hsingtai பகுதியில் நடந்த 6.8 ரிச்டர் அளவு உடைய பூகம்பத்தின் மையத்துக்கு அருகே வாழ்ந்த நாய்கள் கூண்டுகளில் இருந்து வெளியேறித் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஓடிவிட்டன. இவ்வாறே 1969 ஆம் ஆண்டு ஜூலை 18ஆம் திகதி Pohai கடலில் 7.4 ரிச்டர் அளவுகோலில் நடந்த பூகம்பத்தின் போது கடற்பறவைகள், சுறா மீன்கள் மேலும் ஐந்து மீன் இனங்கள் புதுமையான விதத்தில் தங்களது செயற்பாட்டினை வெளிக்காட்டின என்பதை அவதானித்தார்கள். Tientsin பூங்காவில் உள்ள மிருகக்காட்சிசாலையில் இருந்த மான்கள், புலிகள் மற்றும் மிருக இனங்கள் எல்லாம் பதட்டநிலையில் அங்கும் இங்கும் ஓடிப் பரபரப்பு அடைந்து இரண்டு மணித்தியாலங்களுக்கு முன்னரே எச்சரிக்கை விட்டன. புற்றுக்குள் பதுங்கியிருந்த பாம்புகள், எலிகள் மற்றும் ஊர்வன வட பூமியின் அதிர்வுகளை முன் கூட்டியே உணர்ந்து வெளியே வந்து விசித்திரமான முறையில் நடப்பதை அறிந்து பூகம்பம் வரப்போவதை முன்கூட்டியே எச்சரிக்கை செய்யக்கூடியதாயிருந்தது சீன நாட்டில்.

1976 ஆம் ஆண்டு Tangshan யில் இருந்து 40 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள குதிரைப்பண்ணை ஒன்றில் அதன் உரிமையாளர் குதிரைகளுக்கு உணவு கொடுக்கும் வேளையில் அவை உண்ண மறுத்தன. பதட்டமடைந்து துள்ளிக் குதித்து கட்டுக்கடங்காமல் வெளியேறத் துடிதுடித்தன. பின்னர் கட்டுக்களை அவிழ்த்துக் கொண்டு வெளியே ஓடின. சில வினாடிகளில் 7.8 ரிச்டர் அளவு கோலின்படி பூகம்பம் அப்பகுதியில் ஏற்பட்டது.




## யால சரணாலயத்தில் மிருகங்கள் உயிர் தப்பியது எவ்வாறு?

### கிரிந்தவில் நடந்தது.

சிறிலங்காவின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள சரித்திர வரலாறு படைத்த கடலோரக் கிராமம் கிரிந்த. இக்கிராமத்தில்தான் விகாரமாதேவி தோணியில் வந்து விகாரை இருந்த இடத்துக்குப் பக்கத்தில் கரை ஒதுங்கியதாக மகாவம்சம் கூறுகிறது. இக்கிராமத்தை அடுத்தே யால எனப்படும் பிரபல்யமான வன விலங்குகள் பாதுகாப்பு வனமுண்டு. வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் விரும்பிப் போகும் இடமிது. சுனாமி இப்பகுதியைத் தாக்கிய போது பல சுற்றுலாப் பயணிகள் இறந்தார்கள். அவர்கள் தங்கிய விடுதிகள் அழிந்தன. ஆனால், ஒரு மிருகம்கூடப் பாதிக்கப்படவில்லை என்கிறார்கள் வனவிலங்கு பாதுகாப்பு இலாகா அதிகாரிகள். அவையெல்லாம் ஓடி மறைந்து விட்டனவாம். முன்கூட்டியே பேரலைகள் வரப்போகிறது என்பதை தெற்கே, 1,600 கிலோமீற்றர் தூரத்திற்கு அப்பால் சுமாத்திராவுக்கு அருகே இந்துமகா சமுத்திரத்தில் ஏற்பட்ட 9.2 ரிச்டர் அளவுகோல் உடைய பூகம்பத்தின் அதிர்வுகளை அம்மிருகங்கள் உணர்ந்துவிட்டனவாம். ஓர் இறந்த மிருகத்தினது உடலையாவது அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லையாம். இதே போன்று தாய்லாந்தின் Phang Nag என்ற பகுதியில், அங்குவரும் உல்லாசப் பயணிகள் சவாரி செய்வதற்காகச் சில யானைகளை வளர்த்து வந்தனர். பூகம்பம் ஏற்பட்டவுடன் அந்த யானைகள் பயங்கரமாகப் பிளிரத் தொடங்கினவாம். அவை எதையோ உணர்ந்துவிட்டதை அவ்வூர் மக்களால் உணரமுடியவில்லை. ஆனால், சுனாமி அவ்விடத்தைத் தாக்க முன்னர் திரும்பவும் பிளிறியவாறு தம் முதுகில் சவாரி செய்வதற்காக அமர்ந்திருந்தவர்களை ஏற்றிக் கொண்டு உயரமான நிலப்பரப்பை நோக்கிப் பாதுகாப்புத் தேடி ஓடினவாம். மற்றைய யானைகள் தமது கால்களில் கட்டப்பட்டிருந்த சங்கிலிகளை அறுத்தெறிந்துவிட்டு ஓடித்தப்பினவாம். இது போன்றே சுனாமி தாக்க முன்னர் அந்தமான், நிக்கோபார் தீவுகளில் வாழும் பூர்வீகக் குடிமக்கள், மிருகங்களினதும் பறவைகளினதும் நடத்தையை அவதானித்துச் சுனாமி வரப்போவதை முன்கூட்டியே அறிந்து உயரமான இடங்களுக்குத் தப்பிச் சென்றார்களாம்.

சீனாவில் பாம்புகளினதும் புறாக்களினதும் ஆறாவது அறிவினைப்பற்றி ஆராய்ச்சி செய்து வருகிறார்களாம். ஆறாம் அறிவை விட வேறு எக்காரணத்தால் மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் அவ்வளவு தூரத்தில் அதிர்வுகளை உணரக்கூடிய சக்தி இருக்கிறது என்ற புதிருக்கு விளக்கம் காண்பதில் ஈடுபட்டுள்ளனர். மனிதனால் கேட்க முடியாத மிகக் குறைந்த அதிர்வெண்களைக் கொண்ட ஓசையின் அலைகளை யானைகளால் உணரமுடிகிறது. அவ்வதிர்வுகளின் தோற்றம் அருகே இருக்கத் தேவையில்லை. வெகுதூரத்தில் அவ்வதிர்வுகள் தோன்றினாலும் யானையால் உணரமுடியுமாம்.






'திமிங்கிலங்களின் தற்கொலைகளும் பூகம்பமும்' என்ற தலைப்பில் அருணாச்சலம் குமார் என்ற பேராசிரியர் எழுதிய கட்டுரையில் பல சமுத்திரங்களில் திமிங்கிலங்களும் டொல்பின்களும் தற்கொலை செய்து கரை ஒதுங்குவதற்கும் பூகம்பம் உருவாகுவதற்கும் தொடர்புண்டு என எழுதியுள்ளார். இவர் சுமாத்திரா தீவுக்கு அருகே ஏற்பட்ட பூகம்பத்தை இரு கிழமைக்கு முன்பாகப் பூகம்பம் ஏற்படலாம் எனச் சொன்னராம்.



நிலப்பரப்பின் தட்டுக்கள் ஒன்றை ஒன்று உராய்வதால், பூகம்பங்கள் ஏற்படுவதால் பூமியின் மின்காந்த அலைகளின் அமைப்பில் மாற்றங்கள் ஏற்படுவதை அவைகளால் உணரக் கூடியதாக இருக்கிறதாம். அதனால், அவைகளின் கேட்கும் சக்தி பாதிக்கப்பட்டோ அல்லது மூளையினைத் தாக்குவதால் பதட்டம் அடைந்து சிந்திக்கும் திறமையை இழந்திருக்கலாம் என்கிறார் அவர். சில மிருகங்களில் உள்ள இலத்திரன்களின் அமைப்பு இவ்வலைகளின் மாற்றங்களை உணரும் சக்தியை அவைக்கு கொடுக்கின்றது என்கிறார் ஒரு விஞ்ஞானி.



1885 Lord Rayleigh என்பவர் கணிதவியலைப் பாவித்து பூகம்பங்கள் ஏற்படும் போது உருவாகும் அலைகளின் குணாதிசயங்களைக் கண்டுபிடித்தார். இவ்வலைகளுக்கு ரெலி அலைகள் எனப் பெயரிடப்பட்டன. இவ்வலைகள் நீரில் அலைகள் உருண்டோடுவது போல் பூமியின் மேற்பரப்பில் உருண்டோடுகிறது. இவ்வலை உருண்டு செல்வதினால் பூமியை மேலும் கீழுமாகவும், பக்கம் பக்கமாகவும் அசையச் செய்கிறது. பூகம்பத்தில் ஏற்படும் குலுக்கலும் ஆட்டமும் இதனால் ஏற்படுகிறது. ஒரு கட்டடத்தை இருதிசைகளிலும் அசையச்செய்யும் அலைகளினால் கட்டடம் சிதைய ஏதுவாகிறது. இவ்வலைகள் ஒலியின்வேகத்திலும் பார்க்க 10 மடங்கு அதிக வேகத்தில் செல்கிறது. ஆகவே இவ்வலை சுனாமி சிறிலங்காவின் கடற்கரையினைத் தாக்குவதற்குப் பல நிமிடங்களுக்கு முன்னரே தீவைப்போய் அடைந்ததினால் மிருகங்கள் குறைந்த அதிர்வெண் உடைய அவ்வலைகளை உணரக் கூடியதாக இருந்திருக்கிறது. ஆகவே, அவை அவ்வலையை உணர்ந்தவுடன் நடக்கப்போவதை உணர்ந்து ஓடித்தப்பியிருக்கலாமல்லவா?




மிருகங்கள், பறவைகள், பூச்சிகள், சிலந்திள் என்பவற்றுக்கு இவ் அலையை உணரும் தன்மையுண்டு.

தங்களது உடலானது இவ் அலைகளால் ஒரு கட்டடத்தைப் போல் அதிர்வுக்கு உள்ளாக்கப்படுவதை உணர்கின்றன. அதுவே பதட்ட நிலைக்கு காரணமாகிறது. காலம்காலமாக அவற்றின் முன்னைய ஜீவராசிகள் இதை உணர்ந்து செயல்பட்டிருப்பதினால் அக் குணாதிசயத்தை தமது வாரிசுகளின் குருதியில் ஊறச் செய்திருக்கலாம் அல்லவா. உதாரணத்துக்கு கண்ணுக்குள் யாராவது குத்த முயலும் போது கண் மூடிக் கொள்வது போல்.

உலகில் உயிர் வாழ் இனங்கள் ஒவ்வொன்றும் ஓர் இரகசியத்தைத் தம்முள் புதைத்து வைத்துள்ளன. அவை இயற்கையில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏதுவாகத் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள உதவுகிறது. மனிதன் அதனைக் கண்டுபிடித்து பூகம்பத்தினால் ஏற்படும் ஆபத்தில் இருந்து தன்னைப் பாதுகாத்து கொள்ள முயலவேண்டும்.

– மைத்திரேயி



# வெகுஜன அரங்கியலாகப் பரிணமித்த “குருதி கழுவிய குவலயம்”

யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றம் வருடந்தோறும் ‘இயேசுவின் திருப்பாடுகளின் காட்சியை’ தவறாது மேடையேற்றி வருகிறது. இந்நாடக ஆற்றுகையானது கத்தோலிக்கர்களின் பக்தி முயற்சியாக தொடக்கம் பெற்றிருப்பினும் இன்று கிறிஸ்தவர்கள் என்று சொல்லப்படக் கூடியவர்கள் மட்டுமல்லாமல் மத, இன, மொழி, கலாசார, பண்பாடு என்ற பேதங்கள் இன்றி அனைவருமே பார்த்து ரசிக்கும் ஒரு வெகுஜன அரங்கியல் நிகழ்வாக பரிணமித்திருக்கின்றது.

இந்த வருடத்திற்கான திருப்பாடுகளின் காட்சி ‘குருதி கழுவிய குவலயம்’ எனும் பெயரில் அண்மையில் மேடையேறியது. சிறுவர்கள், இளைஞர்கள், பெரியவர்கள் என எல்லா வயதினரும் பங்கேற்கும் இந்த ஆற்றுகையில் இம்முறை 164 கலைஞர்கள் அரங்கிலும், அரங்கச் செயற்பாட்டுப் பின்னணியில் 60 கலைஞர்களும் பங்கேற்றிருந்தனர். சாதாரண படச்சட்டமேடை போன்று இல்லாமல் குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டங்களைப் பார்வையாளர் பார்க்கும்போது அந்தக் காலத்தில் தாமும் வாழ்வது போல உணரும் வகையில் ஒவ்வொரு காட்சிக்குமுரிய அரங்கவிதானிப்புப் பன்முகப்படுத்தப் பட்ட ஒருமைத் தன்மையில் அமைந்திருந்தது சிறப்பானதாகும். நடிகர்களுக்குரிய வேடஉடை, ஒப்பனைகள் வெகுநேர்த்தியாக அசல் - நகல் எனப் பிரித்தறிய முடியாதவாறு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ஆதாம்-ஏவாள் கடவுளால் வைக்கப்பட்ட சிங்காரவனம், இயேசு வாழ்ந்த காலப்பகுதியில் ஜெருசலேமின் வெவ்வேறு இடங்களையும் இயேசு செபித்த ஜெஸ்தமெனித் தோட்டம், ஜெருசலேம் ஆலயம், தலைமைக் குருக்களின் செனற் சபை, பிலாத்து அரண்மனை, ஏரோதின் அரண்மனை, கல்வாரி மலை என்பனவற்றை ஒரே மேடையில் சமநேரத்தில் பார்வையாளர்கள் முன் காண்பித்தது சிறப்பம்சமாகும். நீண்ட மேடையின் எல்லையை வரையறுப்பதுபோல ஒருபக்கம் ஜெஸ்தமெனித் தோட்டமும், மறுகரையில் கல்வாரி மலையும் பெருங்காட்சிப் பண்புகளுடன் கூடிய அரங்கவிதானிப்பில் எல்லைக்கோடுகள் ஆயின.



இறைவனால் அனுப்பப்பட்ட - மரியன்னையின் உதிரத்தில் பிறந்த - இயேசுவின் வரலாற்று ஆற்றுகையானது வெறுமனே வரலாற்றைப் படம் பிடித்துகாட்டுவதாக இல்லாது, ஆற்றுகை நடைபெறும் இடத்தின், பிரதேசத்தின், நாட்டின் சமூக, பொருளாதார அரசியல் நிலைமைகளை உள்வாங்கி உருவாக்கம் பெறும்போதுதான் ஆற்றுகையை நடைமுறை வாழ்வியலிற்குள் புகுத்த முடியும். நடைமுறை வாழ்வையும், சமூகத் தேவைகளையும் புறந்தள்ளிவிட்டு ஒரே வரலாற்றைத் தொடர்ந்து ஆற்றுகை செய்வதனால் ஆகும் பயன் என்ன? வரலாறு ஒன்றாக இருந்த போதிலும் சமகால நிகழ்வுகளுக்கு இணைப்பை ஏற்படுத்தி மேடையேறும் ஒவ்வொரு படைப்பும் ஒவ்வொரு தடவையும் புதிதாகப் பரிணமித்து புதிய பிறப்பு எடுக்கிறது.

கடற்கோள் அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டவர்கள் ‘இந்த சுனாமி எமக்கு இறைவனின் தண்டனையா? பாதிக்கப்படாத மற்றெல்லோரையும் விட நாம் பாவிகளா? இது இயற்கையின் சீற்றம் என்றால் இறைவன் என்று ஒருவன் உண்மையில் இல்லையா? இறைவனை நம்பியிருந்து நாம் ஏமாந்து போனோம்...’ என பலவாறு கேள்விகள் கேட்டுக் கொண்டிருக்கும் வேளையில் அவர்களை ஆற்றுப்படுத்த முன்வந்த எல்லோருமே ‘கடவுள்’ பற்றி அவர்களிடம் மௌனம் சாதித்தனரே தவிர எதுவும் பேசவில்லை.



இவ்வாறிருக்கும் போது ‘குருதி கழுவிய குவலயம்’ எனும் நாடக ஆற்றுகை இதுவிடயத்தில் மௌனமாக இருக்க வில்லை. நாடகத்தின் தொடக்கக் காட்சிகளில் ‘சுனாமி’ முக்கியத்துவம் பெற்றது. சுனாமி நிகழ்வை படம் பிடித்துக் காட்டுவதுபோல கடல் அலைகளின் கொந்தளிப்பும் மக்கள் அலையினால் இழுத்துச் செல்வது போன்ற காட்சியும் சித்தரிக்கப்பட்ட விதம் மெய்சிலிர்க்க வைத்த அதிசயமான அரங்கநிகழ்வாக அமைந்திருந்தது. பழைய ஏற்பாட்டில் நோவாவின் காலத்தில் பெருவெள்ளத்தின் மூலம் அழிக்கப்பட்ட பூமி புதிதாகப் பிறந்தாலும் மீண்டும் அக்கிரமங்கள் நிறைந்துபோனதால் அது (பூமி) ‘*மீண்டும் கழுவப்படுவதற்காகக் காத்துக்கிடந்தது.....*’ என நாடக ஆசிரியர் குறிப்பிடுவது பொருத்தமான இணைப்பாக உள்ளது. ‘*கடல் அலையில் அள்ளுண்டு போனவர்கள் உயிருடன் இருக்கும் மற்றெல்லோரையும் விடப் பாவிகளா? ... இல்லை! இவர்களின் இறப்பு இருப்பவர்களுக்கு எச்சரிக்கை.*’

ஆற்றுகையின் போது அரங்கில் ஒலித்த இவ்வார்த்தையைக் கடற்கோள் அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட ஒருவன் கேட்டிருந்தால் அவன் இதுவரை தன்னில் கொண்டிருந்த தேவையற்ற குற்றப் பழி உணர்வு நிலையிலிருந்து விடுபட்டு, அவன் மனதிற்கு அது அமைதி தருவதாக இருந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஆற்றுகையால் இத்தகைய மனவிடுதலையைக் கொடுக்க முயன்ற நாடக ஆசிரியரின் நெறியாளுகை நுட்பம் விதந்துரைக்கப்பட வேண்டியதாகும். சுனாமிக்குப்பின் நாடக ஆற்றுகையில் அதனைத் திறமையுடன் எடுத்தாண்ட ஒரே நாடக ஆசிரியர் இவராகத் தான் இருக்கமுடியும். உண்மையில் இத்தகைய சமூக குணமாக்கல் ரீதியான அரங்கியல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவது காலத்தின் தேவையாக உள்ளது.

[illegible]
3ஆம் வருடம்
உளவியல் சிறப்புக்கலை
யாழ்.பல்கலைக்கழகம்



# ஆழிப் பேரலையால் பாதிப்புற்ற எமது மக்களைத் தங்குநிலை வாழ்க்கைக்குத் தயார் செய்யாதீர்!

ஆழிப் பேரலை அச்சத்தை முன்வைத்து நெய்தல் நில மக்களை அவர்களது பூர்வீக வாழிடங்களிலிருந்து அப்புறப்படுத்துவதைச் சென்ற வாரம் இப்பத்தி கேள்விக்குள்ளாக்கியிருந்தது. அச்சமும் மனக்காயங்களும் சுமந்து, வேற்றிடங்களில் ‘நெய்தலர்’ (நெய்தல் நிலத்தவர்) அனுபவிக்கும் வேதனைகள் சொல்லி மாளா. பொதுவாக, தமது வாழிடங்களிலிருந்து பெயர்க்கப்பட்டவர்கள் அனைவருக்குமே இந்த வேதனைகளும், வலிகளும் சதா இருந்து கொண்டேயுள்ளன.

பாதிப்புற்ற மக்கள் வாழும் பகுதியில் ஒரு சம்பவம். ஒரு நிறை மாதக் கர்பிணித்தாய். ஏலவே தனது ஒரேயொரு பெண் குழந்தையை ஆழிப்பேரலைக்குக் காவு கொடுத்துவிட்டு, அந்த மனக்காயங்களை நெஞ்சில் தாங்கி, அதனால் மனநிலைப் பாதிப்புக்கு உட்பட்டிருப்பவர். தமது சொந்த வாழிடம் அழிந்துபோக, அரச சார்பற்ற நிறுவனமொன்று அமைத்த தற்காலிக் கூடாரங்கள் ஒன்றில் வேறொரு இடத்தில் தங்கியிருக்கிறார். நெருக்கடிமிக்க, ரயில் பெட்டிகள் போன்று தொடராயமைந்த கூடாரங்களுள் ஒன்றில்தான் அவரும் வாழ்கிறார்.

முகாம் அமைந்த காணிக்கு அருகே இருக்கும் வளவொன்றில் நான்கு தடிகளை நட்டு, சேலைகளால் மறைப்பொன்றை ஏற்படுத்தியிருந்தனர் இப் பெண்ணின் உறவினர்கள். திடீரென பிரசவம் நேர்ந்தால், அதை எதிர்கொள்வதற்கு அவர்களுக்கு உதித்த முன் யோசனை இதுதான்.

மறுநாள் வளவு உரிமையாளர் வந்தார். எல்லாவற்றையும் பிடுங்கி எறிந்தார். பிரசவத்துக்குத் தனது வளவு தான் கிடைத்ததா எனச் சீறிப் பாய்ந்தார், போய் விட்டார். தற்செயலாகப் பிரசவம் நேர்ந்தால் என்ன செய்வது என்ற எண்ணத்தில் இப்போது அவர்களது உறவினர்கள்.

இதே போல பெண்களின் இயற்கையான உபாதைகள் – சிக்கல்கள் தொடர்பில் பல பிரச்சினைகள் உணரப்படுகின்றன. அகன்ற எல்லையற்ற கடலின் ஓரத்தில் சுதந்திரமாக வாழ்ந்தவர்களின் நிலையோ, பட்டிகளில் அடைக்கப்பட்ட கால் நடைகளின் வாழ்க்கை போல் ஆகிவிட்டது.

இன்னொரு சம்பவம். ஒரு சிறுமி பேரலை ஏற்படுத்திய மனப்பாதிப்பின் பின்னர் அந்தச் சிறுமிக்கு நீரென்றாலே பயம்; அதிருப்தி. முகம் கழுவ, குளிக்கக் கூட மறுக்கும் அளவுக்குப் பயம். உள்ளூர் ஆற்றுப் படையாளியான ஒரு பெண், அக் குழந்தையோடு பேசி, பழகி, ஆறுதலளித்து அச்சிறுமியின் பயத்தை, மன இறுக்கத்தை அகற்றினாள். அப்பிள்ளைக்குப் பாடங்களைக் கற்பித்து வழிப்படுத்தினாள். அப்பிள்ளை பாடசாலைக்குச் செல்ல மறுத்தது. ஆனால், இந்தப் பெண் கற்பிப்பதை விரும்பியது. அப் பெண் யாழ்ப்பாணத்திலுள்ள உளவளத் துணையளிக்கும் அரச சார்பற்ற நிறுவனமொன்றை சேர்ந்தவள்.

## யாரோடு நோவோம்...?

அச்சிறுமி தங்கியிருக்கும் முகாமை நிர்வகிப்பது இன்னொரு அரச சார்பற்ற நிறுவனம். இப்போது அந்த பெண்ணைப் பணிக்கு வரவேண்டாமென முகாமை நிர்வகிக்கும் அ.சா.நிறுவனம் அறிவித்து விட்டது.

உண்மையில் அரசசார்பற்ற நிறுவனங்கள், அது உள்ளூர் அமைப்புகளாயினுஞ் சரி, சர்வதேச நிறுவனங்களாயினுஞ் சரி அவற்றில் மிகப் பலவும் தமது ஆதிக்க விஸ்தரிப்பு வலையமைப்பை உருவாக்குவதிலேயே குறியாக உள்ளன என்பதைக் காண முடிகிறது. இது அந்தந்த அமைப்புக்களின் செயற்பாட்டுத்திறன் தொடர்பான உயர்ந்த மதிப்பீடுகளைப் பெறவும், அதன் வழியாக சர்வதேச உதவிகளைப் பெறவுமே வழி கோலும். இங்கே நிர்வாக அதிகாரம் என்பது ஏதிலிகளான மக்களை மேலும் மேலும் மனோரீதியாகப் பாதிக்கும் என்பதை யாரும் உணர்வதில்லை. அதுமட்டுமல்லாது, அவர்களது இயல்பான வாழ்க்கையின் சீர்குலைவென்பது தங்கி வாழும் நிலைமைக்கு மெல்லமெல்ல அவர்களை இட்டுச் சென்று விடும். இரவு வேளை, கடலுக்குச் சென்றவர்கள் காலையில் கரை திரும்பும் போது அவர்களுக்குத் தேநீர் தந்து, வள்ளத்தைக் கரையேற்றும் பணியில் மனைவி, பிள்ளைகள், அயலவர்கள் எனப் பலரும் ஈடுபட்டிருப்பர். வலையினுள் அகப்பட்டிருக்கும் மீன்களை– குறிப்பாக குஞ்சு மீன்களை – அகற்றுவதென்பது பெரியவேலை. குஞ்சு குருமான்கள் முதல் குடும்பத்தினர் அனைவருமே இந்தப் பணியில் ஈடுபட்டிருப்பர்.

கடற்கரைகளுக்குத் தொலைவாக வேறிடங்களில் – தங்கியிருந்து, மீன் பிடித்தல் சாத்தியமற்றது என்பதற்கு மேற்சொன்ன விடயம் நல்ல சான்றாகும்.

அன்றியும் ‘நிவாரணமும் இதர உதவிகளும் கிடைக்கும், அவற்றை வாங்கி உண்டு கால் நீட்டி உட்காரலாம்’ என்ற தங்குநிலை மனோபாவத்தை இந்த முகாம் வாழ்க்கை ஏற்படுத்தி விடும் என்று அஞ்சவேண்டியுள்ளது. இந்த அச்சத்தைப் பாதிக்கப்பட்டவர்கள் தமது மனம் திறந்து கூறி வருவதை பத்திரிகையில் அடிக்கடி படிக்கிறோம். ஏற்கனவே, உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டு முகாம்களில் வதியும் மக்களின் வாழ்நிலையை முன்னுதாரணமாகக் கொள்வது நல்லது.

உலக வல்லரசுகள் வருவதை ‘தங்கு நிலை’ வாழ்க்கையை வளர்முக நாடுகளில் உருவாக்கவே விரும்புகின்றன. அதற்கு நாமும் ஆமோதித்தல் தகுமோ? எமது மக்களின் எதிர்காலத்தை மனதிற்கொண்டு மிக ஆழ்ந்து சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய விடயம் இது.

— *ஏகலைவன்* —



# யாழ்ப்பாணத்துப் பத்திரிகைகள் – சில நினைவுகள்

'பேப்பர் .... பேப்பர்.... உலகில் நடப்பதை ஒவ்வொரு நாளும் அறிவிக்கும்...... பேப்பர்...'

– இப்படியாக ஒரு படத்தில் நகைச்சுவை நடிகர் கே.பி. சந்திரபாபு கூவிக் கூவி பத்திரிகைகள் விற்பவராக வருகிறார். ஆமாம், இந்த வாரமும் பத்திரிகை விற்பனை சம்பந்தமாகவே எழுதுகிறேன்.

சைக்கிள்களில் விநியோகம் நடைபெற்றுக்கொண்டிருந்த அந்தக் காலத்திலேயே பத்திரிகைகளைக் காவிச் சென்று விற்பனை செய்துகொண்டிருந்த பல 'சந்திர பாபு' க்களையும் எமது பிரதேசத்திலும் காணமுடிந்தது. அவர்கள் பேருந்து நிலையங்கள், வைத்தியசாலைகள், இன்னும் மக்கள் கூடும் இடங்களுக்கெல்லாம் சென்று பத்திரிகைகளைக் கூவிக்கூவி விற்பார்கள். தலைப்புச் செய்திகளையும் வாய்விட்டுக் கத்திக் சொல்லுவார்கள்.

பத்திரிகைகளை மக்கள் தேடிச் சென்று வாங்குவார்கள் என்று நம்பியிராது அவர்களைத் தேடிச் சென்று பத்திரிகைகளைச் செலுத்துவதில் அவர்களும் பெரும் பங்காற்றினார்கள். சில கட்சித் தொண்டர்களும் தங்கள் கட்சிப் பத்திரிகைகளை அந்த முறையில் அப்போது விற்பனை செய்தார்கள். அட அப்பா, அவர்களிடமிருந்து 'தப்பினாலே போதும்' என்றிருக்கும்!

1959 ஆம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாணத்திலிருந்து வாரம் இருமுறையாக வெளிவந்து கொண்டிருந்த 'ஈழநாடு' 1961 மாசியிலிருந்து தினசரியாக வெளிவரத்தொடங்கியது. யாழ்ப்பாணம் கச்சேரி முன் தமிழரசுக் கட்சியின் மறியல் போராட்டம் 1961 மாசி 20ஆம் திகதி ஆரம்பமானது. அன்று கச்சேரியில் நடந்த நிகழ்வுகளை வைத்து 'ஈழநாடு' பிந்திய பதிப்பொன்றும் வெளியிட்டு மக்கள் மத்தியில் இடம் பிடித்துக்கொண்டது. அதனால் 'ஈழநாட்டை சத்தியாக்கிரகத்தில் முளைத்த பத்திரிகை' என்று சிலர் வர்ணித்தது உண்டு.

அதே போல கோகிலாம்பாள் வழக்கு விசாரணைகளை விலாவாரியாக வெளியிட்டதன் மூலமும் ஈழநாடு தனது பிரபல்யத்தை அதிகரித்துக் கொண்டதாம். அதனால் 'கோகிலாம்பாள் புகழ்...' என்றும் வேறு சிலர். அடைமொழி போடுவது உண்டு.

உண்மையில் "......சத்தியாக்கிரகத்தின் போது 'ஈழநாடு' விற்பனையானதை விட கோகிலாம்பாள் வழக்கு விசாரணையின் போது மிக அதிகமான பிரதிகள் விற்பனையாகின" என்று தான் அதன் ஆசிரியராகவிருந்த கோபு தமது 'பத்திரிகைப் பணியில் அரை நூற்றாண்டு' நூலில் குறிப்பிடுவது சரியாகவிருக்கும்.

சந்தர்ப்ப சூழ்நிலைகளும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளும் சில பத்திரிகைகளின் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் காரணமாக அமைந்துள்ளமை உண்மைதான். அதனை வேறொரு கோணத்திலும் பார்க்கலாம்.

அப்பொழுதெல்லாம் புனிதலிங்கம் என்பவர் 'மக்கள் குரல்' என்றும் அனலைச் செழியன் என்பவர் 'இனமுழக்கம்' என்றும் பத்திரிகைகள் நடத்தியதுண்டு. முன்னவருக்கு சினிமா – நாடக உலகத் தொடர்புகளும் பின்னவருக்குத் திராவிட இயக்கத் தொடர்புகளும் இருந்தது. பத்திரிகையைக் கவர்ச்சியாக வடிவமைப்பதில் இருவருமே கெட்டிக்காரர்கள் என்றாலும், இதழ்கள் என்னவோ ஒழுங்காக வெளிவந்ததில்லை. சத்தியாக்கிரகம், தமிழாராய்ச்சி மாநாடு, தமிழரசுக் கட்சி மாநாடுகள், கோட்டை மைதானத்தில் நடைபெறும் மாபெரும் கூட்டங்கள் இவைகளைப் பயன்படுத்தி இவர்களும் தங்கள் பத்திரிகைகளைத் திடீரென்று வெளியிட்டு அதிசயிக்க வைப்பார்கள். பத்திரிகை வார இதழா, மாத இதழா என்பதற்கு விளக்கம் இராது. எத்தனையாவது குரல் என்றோ எத்தனையாவது முழக்கம் என்றோதான் இருக்கும்.....

## கச்சேரி மறியல் போராட்டம் மறக்க முடியாதது.

கச்சேரி மறியல் போராட்டம் மக்கள் போராட்டமாகத் தொடர்ந்து கொண்டிருந்தது... அங்கு எந்த நேரமும் எக்கச்சக்கமான மக்கள் கூட்டம் ... வெள்ளம்... அந்த இடத்திலே கூட்டத்தைப் பயன்படுத்திக் கூவிக்கூவிப் பத்திரிகைகள் விற்பவர்களுக்கும் குறைவில்லை. போராட்டத்தின் ஒரு திருப்பமாகச் சித்திரை




11ஆம் திகதியன்று முத்திரை வெளியிட்டுத் தனியான தபாற் சேவையும் ஆரம்பிக்கப்பட்டு விட்டது. இனியும் அரசு பார்த்துக் கொண்டிருக்காது; எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்ற நிலை...

அந்த நேரத்தில் கச்சேரிக் கூட்டத்தைப் பயன்படுத்திப் 'புதுச் செய்தி' என்றொரு புதிய மாலைப் பத்திரிகை ஐந்து சதத்துக்கு வெளிவந்தது. அதனைப் பத்திரிகை என்பதை விட இரண்டாக மடிக்கப்பட்ட துண்டுப் பிரசுரம் என்றே சொல்லவேண்டும். அதுவும் சில தினங்களே வெளிவந்தது. அதனை வரதர் வெளியீடு என்று அப்போது பேசிக் கொள்ளப்பட்டது. ஆனால், அதனைத் தாங்கள் வெளியிடவில்லை. தங்கள் அச்சகத்திலேதான் 'அது' அடிக்கப்பட்டது என்று திரு.தி.ச.வரதராசன் (வரதர்) இப்பொழுது நினைத்துச் சொல்லுகிறார்.

அந்தப் பிரசுரம் கூட ஒரு 'வரலாறு படைத்திருக்கிறது' என்பதற்காகவே இதனைக் குறிப்பிடுகிறேன். 17ஆம் திகதி வெளிவந்த அப்பிரசுரத்திலே யாரும் முந்தித்தராத ஒரு 'ஸ்கூப்' செய்தியாக **'இன்று ஏதோ நடக்கப்போகிறதாம்'** என்றவாறாக ஒரு புதுச்செய்தி வெளியாகி இருந்தது. அன்று நள்ளிரவுதான் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுத் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டு 56 நாள்களாக நடந்துவந்த அறப்போராட்டம் இராணுவத்தால் முறியடிக்கப்பட்டது.

தலைப்புச் செய்திகளைச் சொல்லிப் பத்திரிகை விற்பனை செய்தவர்களில் அவரும் ஒருவர். சந்திரபாவுவை நினைவுபடுத்தும் தோற்றம். அவரது பெயர் அதை ஏன் உங்களுக்கு ... வைரமாளிகை (Diamond house) என்றாலே அது அவரைத்தான் குறிக்கும். நகை மாளிகையின் பெயரை முன்னாலும் பின்னாலும் பொறித்த மேலாடைகளை அவருக்கு உபயமாகக் கொடுத்திருந்ததாம். அந்த நிறுவனம் அவரும் எப்பொழுதும் கூத்துக்களில் வருவது போன்று "வந்தேனே" எனக் கட்டியம் கூறியபடி நாடக மாந்தர் தோன்றுவது போலத் தன்னை அறிமுகம் செய்தவாறே பேருந்துகளில் ஏறி இறங்குவார். பஸ் இலக்கம், அதுபோகும் இடங்கள் எல்லாவற்றையும் சொல்லியவாறே தனது காரியங்களை முடித்துக்கொள்வார். அவர் பத்திரிகைகள் மட்டுமல்லாது பஞ்சாங்கம், சுவிற் ரிக்கெற் என்றும் மாறிமாறி விற்பனை செய்வார். ஆங்கிலமும் சரளமாகப் பேச வல்லவர். ஆங்கில எழுத்தாளர்கள் கவிஞர்களின் ஆக்கங்களைத் தண்ணீர் பட்டபாடாக மளமள என்று பொழிந்து தள்ளுவார். அவர் நடப்பதும் பேசுவதும் ஒரு ரகம். ஒரு நாடக நடிகன் தோற்றுவிடும் அளவுக்குத் தனக்ரிய விற்பனையாளர் பாத்திரத்தை லாவகமாகச் செய்வார்.

மீண்டும் சந்திர பாபுவின் அந்தப் பாடல் வரிகள்....

'மையிலை நனைத்து பேப்பரில் அடித்தால் மறுத்துப்பேச ஆளில்லை...பேப்பர்...' ஓ! பேப்பர்...!

சண் அங்கிள்

---

## தேடல்....

வகை தொகையற்ற
வஞ்சனைகளின் நடுவே,
வசந்தங்கள் தொலைந்து போக
விரல்களின் இடையில்
பொத்தி வைத்திருந்த பொறுமை,
பொசுங்கிப் போனது!

அருகிலுள்ளவரை
மதிக்கப்படாத மானுடங்கள்,
தொலை தூரத்தில்
பேசப்படலாயிற்று

வல்லமைகளின் ஆதிக்கத்தில்
உண்மைகள் நசுங்கிப்போக,
உரிமை புதைந்து போயாயிற்று!

ஊகங்களும் உண்மையாயிற்று!
ஆம்,
நிஜமாகவே உறுதியாயிற்று!
கட்டளைகளை
உடைத்தெறிந்து
கற்பனைகளைக் கச்சிதமாக்கி
என்னுயிர்
வெளியில் சஞ்சரிக்கிறது
மனிதத்தைத் தேடி!!(?)

நிம்மி

---



## ரோபோ டைனோசர்

'டைனோசர்' இன்று உலகில் காணமுடியாத விலங்கினமாகும். படத்தில் காணப்படும் இவ்விரு டைநோசர்களும் ஜப்பானின் 'நககுட்' நகரில் இடம்பெற்ற 'ஜச் எக்ஸ்போ றொட்' என்ற தொழில் நுட்பக் கண்காட்சியில் காட்சிக்கு வைக்கப்பட்ட ரோபோக்களாகும். ஒன்றரை மீற்றர் உயரமும் மூன்றரை மீற்றர் நீளமும் கொண்ட இந்த ரோபோ டைனோசர்கள் ஒவ்வொன்றும் 87கிலோ நிறை கொண்டவையாகும். இவ்வகை ரோபோ டைனோசர்கள் மிக விரைவில் விற்பனைக்காகச் சந்தைக்கு வரவுள்ளன.

---

## சுடு நீர் ஸ்நானம்



சுடு நீரில் குளிக்கும் குரங்குகள் வாழும் ஒரே நாடு ஜப்பானாகும். குளிர் கால நிலை நிலவும் வேளையில் இயற்கையில் உஷ்ண நீர் நிறைந்த அருவிகளில் இறங்கி உடலை உஷ்ணப்படுத்த இக் குரங்குகள் பழகியுள்ளன.



---

## கோழி வியாபாரம்



வாழ்க்கைத் தேவைக்காக பல பேர் பல தரப்பட்ட தொழில் முயற்சிகளை மேற் கொள்கின்றனர். ஒருத்தருக்குப் பொருத்தமான தொழில் இன்னொருத்தருக்குப் பொருத்தமற்றதாக அமையக்கூடும். ஆனால், எல்லோரும் வாழ்க்கைத் தேவைக்காக ஏதோ ஒரு தொழில் ஈடுபடவே வேண்டியுள்ளது. படத்தில் காணப்படுபவர் கம்பூச்சியாவில் கோழி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள நபராவார். தான் வளர்க்கும் கோழிகளை மோட்டார் சைக்கிளில் கட்டி எடுத்து வந்து வாடிக்கையாளர்களை எதிர்பார்த்துக் காத்திருப்பது அவரது நாளாந்த நடவடிக்கையின் ஒரு பகுதியாக அமைகிறது.

---

## 2012 ஒலிம்பிக் போட்டிகள்



உலகில் மிகப்பெரிய அளவில் நடத்தப்படுவது ஒலிம்பிக் போட்டிகளாகும். நான்காண்டுகளுக்கு ஒருமுறை இடம்பெறும் இப்போட்டிகள் வரிசையில் 2012 ஆம் ஆண்டின் ஒலிம்பிக் போட்டிகளை ரஷ்ய நாட்டின் தலைநகர் மொஸ்கோவில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. போட்டிகளை நடத்தும் பொருட்டு ரஷ்ய அரசு உருவாக்கவுள்ள ஒலிம்பிக் கிராமத்தினதும் போட்டிகள் நடைபெறவுள்ள ஸ்ரேடியத்தினதும் மாதிரி அமைப்புகளே இவை.